# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - மார்ச் 2022

www.tnpscthervupettagam.com













SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy in India

SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 13
தமிழ்நாடு செய்திகள் ........ 22
பாக் வளைகுடா துகாங் (கடல் பசு) வளங்காப்பகம் ........ 22
உங்களில் ஒருவன் ........ 23
தெரு விலங்குகளுக்கான அவசர ஊர்திச் சேவை ........ 23
நான் முதல்வன் திட்டம் ........ 24
பதவிப் பிரமாணம் ........ 24
சென்னை மேயர் ........ 24
அதிக கடன்பெறும் மாநிலம் – தமிழ்நாடு ........ 25
தந்தத்தினாலான செவ்வக வடிவப் பகடை ........ 25
வங்காள விரிகுடாவில் உருவான அரிய காற்றழுத்தத் தாழ்வு நிலை ........ 26
மதுபானக் கடைகள் ........ 26
திருநங்கைகளுக்கு இட ஒதுக்கீடு ........ 26
மேயர் தேர்தல் ........ 27
தமிழகத்தின் ஒட்டு மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறன் ........ 28
மாளிகைமேடு அகழாய்வு ........ 28
ஆவடி காவல் ஆணையரகம் - பெண்கள் தலைமை ........ 29
இந்தியாவின் முதல் அறைகலன் பூங்கா ........ 30
தமிழ்நாட்டில் மிதக்கும் சூரியசக்தி ஆலை ........ 30
பேரறிவாளனுக்கு ஜாமீன் வழங்கல் ........ 31
வளர்ப்பு மாடுகளைக் காடுகளுக்குள் அனுமதித்தல் தொடர்பான தீர்ப்பு ........ 31
ஔவையார் விருது 2022 ........ 31
முதலமைச்சரின் கூட்டு ஆராய்ச்சித் திட்டம் ........ 32
தமிழ்நாடு பெட்ரோலியப் பொருட்கள் நிறுவனம் ........ 32
தமிழகத்தில் சொத்துப் பதிவு ........ 33
தி ஸ்பாட்டட் ராயல் வண்ணத்துப்பூச்சி ........ 33
தமிழ்நாடு கோவிட்-19 இறப்புப் பதிவு ........ 34
ஐஸ்கிரீம் தொழிற்சாலை ........ 34
மேம்பட்ட எந்திர மனித அறுவைச் சிகிச்சை மையம் ........ 35
தமிழ்நாடு தரவுக் கொள்கை ........ 35
தமிழக நிதிநிலை அறிக்கை – சிறப்பம்சங்கள் ........ 36
மீனா சுவாமிநாதன் ........ 37
தமிழக நிதிநிலை அறிக்கை 2022 - முக்கிய அம்சங்கள் ........ 37
தமிழ்நாடு வேளாண் நிதிநிலை அறிக்கை ........ 40
நரசிங்கப்பேட்டை நாகஸ்வரம் ........ 41

பல்நோக்கு மருத்துவமனை ........ 42
பசுமை சான்றிதழிலளிப்புத் திட்டம் ........ 42
தமிழ்நாடு வேளாண் நிதிநிலை அறிக்கை – 2022 முக்கிய அம்சங்கள் ........ 42
நெல் சாகுபடிப் பரவல் ........ 43
மேகதாது அணைத் திட்டத்திற்கு எதிரான தீர்மானம் ........ 44
முதல் பெண் துபாசி ........ 44
வள்ளுவர் தெரு ........ 44
உலகப் பத்திரிகைப் புகைப்படக் கலைஞர் விருது ........ 45
21 அறிஞர்களுக்கு விருது ........ 45
அந்நிய நேரடி முதலீடு - தமிழ்நாடு ........ 46
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ........ 46
தமிழகத்தில் அமேசான் நிறுவனத்தின் மிகப்பெரிய அலுவலகம் ........ 46
தேசியச் செய்திகள் ........ 47
சர்வதேச வான்வழிப் போக்குவரத்துச் சங்கத்தின் புதிய தளம் ........ 47
நிஷான் ........ 48
நிலையான நகரங்கள் திட்டம் ........ 48
தேசிய போலியோ தடுப்பு மருந்து வழங்கீட்டுத் தினம் ........ 48
குடியரசுத் தலைவரின் கடற்படை மதிப்பாய்வு 2022 ........ 49
குவாண்டம் விசை வழங்கீட்டு இணைப்பு ........ 49
மத்ஸ்யா 6000 ........ 50
பாஷா சான்றிதழ் – செல்ஃபி பிரச்சாரம் ........ 51
இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை/சுகாதார ஆராய்ச்சித் துறைக் கொள்கை ........ 51
புதிய மேம்பாட்டு வங்கி ........ 52
“வண்டியால் மோதி விட்டு நிற்காமல் சென்றால்” தரவேண்டிய இழப்பீடு ........ 52
பதப்படுத்தப்படாத பழங்களின் ஏற்றுமதி ........ 53
கோப்ரா வாரியர் 22 – இந்தியா விலகல் ........ 53
சர்வதேச பருவமழைத் திட்ட அலுவலகம் ........ 54
இருதரப்பு பரிமாற்று ஒப்பந்தம் ........ 54
இந்திய-பெல்ஜிய அரசுமுறை உறவுகள் ........ 55
தேசியப் பாலினக் குறியீடு ........ 55
மகளிர் தின வாரம் ........ 55
குப்பையில்லா நகரங்களுக்கான சமூக நிறுவனங்கள் குறித்த தேசிய மாநாடு ........ 56
பாலியெஸ்டர் துணியில் தேசியக் கொடிகள் ........ 56
இந்தியாவின் சுற்றுச்சூழல் நிலை அறிக்கை ........ 57
வாயு சக்திப் பயிற்சி ........ 58
குறைகரிமத் தொழில்நுட்பங்கள் குறித்த தேசியப் புத்தாக்க மாநாடு ........ 59
ரூர்க்கி நீர்வள மாநாடு – 2022 ........ 59
புலம்பெயர்ந்தோர் மற்றும் தாய்நாடு திரும்பியோருக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத் திட்டம் ........ 60

பாலினப் பங்கெடுப்பு குறித்த பியூ சென்டர் அறிக்கை ........ 60
சாகர் பராக்கிரமம் திட்டம் ........ 61
சுவச் சர்வேக்சன் ........ 62
திறன்மிக்க ரீதியில் நிர்வகிக்கப்படும் மின்சார வாகன மின்னேற்ற நிலையம் ........ 62
கங்கையைத் தூய்மைப்படுத்துவதற்கான தேசியத் திட்டம் ........ 62
தேசியப் போர் நினைவுச்சின்னம் ........ 63
இந்தியா மற்றும் நெதர்லாந்து – 75 ஆண்டுகள் ........ 63
சுகாதார பாரம்பரிய நடைபயணப் பிரச்சாரம் ........ 64
தொகுப்பு நாடு ஒப்பந்தம் ........ 64
புனே மெட்ரோ இரயில் திட்டம் ........ 65
SLINEX 2022 ........ 65
HANSA-NG ........ 66
மிதவைச் சேமிப்பு மற்றும் இயற்கை எரிவாயுவாக்கல் அலகு ........ 66
கோதுமை ஏற்றுமதி ........ 67
சூரிய மின்சக்தி உற்பத்தித் திறன் – 2021 ........ 67
சுந்தரவனப் புலிகள் பற்றிய அறிக்கை ........ 68
இந்திய-பசிபிக் இராணுவ நலப் பரிமாற்ற மாநாடு ........ 68
SAMARTH ........ 69
ஓய்வூதியத்தைத் தானமளிக்கும் முன்னெடுப்பு ........ 69
இந்திய உலக மன்றத்தின் வருடாந்திர உச்சி மாநாடு ........ 70
தேசிய கனிம மேம்பாட்டுக் கழகம் ........ 70
கவச் அமைப்பு ........ 71
சத்ரபதி சிவாஜி மகாராஜா சிலை ........ 72
கன்யா சிக்சா பிரவேஷ் உத்சவ் ........ 72
சுவச்சகிரஹா நிகழ்வு ........ 73
அசிட்டா புலாரியா ஜலகான்யகே ........ 73
மனாஸ் தேசியப் பூங்கா – புலி மற்றும் காண்டாமிருகங்களின் எண்ணிக்கை ........ 74
123PAY ........ 74
புத்தர் சிலை ........ 75
5 மாநிலத் தேர்தல் முடிவுகள் ........ 75
பாரம்பரிய மருத்துவத்திற்கான உலக சுகாதார அமைப்பின் உலக மையம் ........ 76
உலகின் சுதந்திரம் அறிக்கை 2022 ........ 76
ஜரோக்கா ........ 77
மோட்டார் வாகன ஒப்பந்தம் ........ 78
சர்வதேச தேர்தல் பார்வையாளர் நிகழ்ச்சி 2022 ........ 78
தேசிய நிலப் பணமாக்கல் கழகம் ........ 79
புசா கிருஷி விக்யான் மேளா ........ 79
இந்திய நீர்வள மேம்பாடு (பிட்ச் – பைலட்) மாதிரி புத்தாக்க நிறுவன மாநாடு ........ 79
சார்தாம் திட்டக் குழுவின் தலைவர் ........ 80

அளவு மற்றும் பிராந்திய அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட சிறந்த விமான நிலையங்கள் .......... 80
AARC மற்றும் CLAWS கூட்டுறவு .......... 81
மக்கக் கூடிய நுண் துகள்கள் .......... 81
மெய்நிகர் திறன்மிகு கட்டுப்பாட்டு அறிவு மையம் மற்றும் புத்தாக்கப் பூங்கா .......... 82
தேசிய இளையோர் பாராளுமன்ற விழா .......... 82
சாகித்யோத்சவ் இலக்கிய விழா .......... 83
ஜன் அவுசதி பால் மித்ரா நிகழ்ச்சி .......... 84
தென்னிந்தியாவின் நீளமான வில்வடிவப் பாலம் .......... 84
கல்விக்காக ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட அளவிலானத் தகவல் அமைப்பு பிளஸ் அறிக்கை .......... 84
ராஷ்டிரிய ரக்சா பல்கலைக்கழகம் .......... 85
வின்கோவ்-19 .......... 85
அடவி தயாரிப்பு .......... 86
கிராமீனா ஹப்பா .......... 86
இளம் விஞ்ஞானி திட்டம் .......... 87
இணையவழிப் பொருள் விநியோகத்தில் உலக முதலீடு 2021 .......... 88
இந்தியப் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு புள்ளிவிவரங்கள் 2020-21 .......... 88
மூலதன முதலாளித்துவ முன்னெடுப்பு .......... 89
புவிசார் குறியீடு பெற்ற காஷ்மீரிக் கம்பளம் .......... 90
லிவ்குயிக் .......... 90
ஜென்டர் சாம்வாத் .......... 91
பார்ச்சூன் இந்தியா அமைப்பின் தி நெக்ஸ்ட் 500 பட்டியல் 2022 - இரயில்டெல் .......... 91
உக்ரைனில் உள்ள இந்தியத் தூதரகம் .......... 92
இந்தியாவில் தாய்மார்கள் இறப்பு விகிதம் .......... 92
ஊட்டச்சத்து மருந்துகள் .......... 93
எரிபொருள் கலன் பொருத்திய மின்சார வாகனம் .......... 93
உலக அமைதி மையம் .......... 94
சிறப்பு இருக்கை .......... 94
M.V. ராம் பிரசாத் பிஸ்மில் .......... 95
ஆசானி புயல் .......... 95
உலகின் மிகப்பெரிய சூரியசக்தி மரம் .......... 95
கோவிட்-19 முற்காப்புத் தவணை .......... 96
கிளைகோஸ்மிஸ் அல்பிகார்பா .......... 96
அறிவியல் ஆராய்ச்சிக்கான G.D. பிர்லா விருது .......... 97
13 நதிகளுக்கான புணரமைப்புத் திட்டம் .......... 97
ஆர்க்டிக் கொள்கை .......... 98
தேசிய இரயில் திட்டம் – 2030 .......... 99
ரஷ்ய எண்ணெய் இறக்குமதி .......... 99
இளம் பெண்களுக்கான STEM மற்றும் நிதி கல்வியறிவு மீதான நாரிசக்தி வர்தா .......... 99
இந்தியத் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் 25வது ஆண்டு நிறைவு .......... 100

இந்தியாவின் விரைவு இரயில் வழித்தடம் ..... 101
விமானக் கட்டுப்பாட்டு அமைப்பு ஒருங்கிணைப்பு வளாகம் ..... 101
இணையம் உபயோகிக்காத பயனர்களுக்கு பணவழங்கீட்டு வசதி ..... 102
சூரஜ்கண்ட் சர்வதேச கைவினைப் பொருட்கள் பொருட்காட்சி ..... 102
LAMITIYE – 2022 ..... 103
தேசிய இ-விதான் செயலித் திட்டம் ..... 103
இந்தியா - ஆஸ்திரேலியா மெய்நிகர் உச்சி மாநாடு ..... 104
வளைகுடா வணிக உச்சிமாநாடு ..... 104
ஒல் சிகி ..... 104
WINGS INDIA – 2022 ..... 105
EX-DUSTLIK ..... 106
சுரக்சா கவச் 2 பயிற்சி ..... 106
BRICS தடுப்பு மருந்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் ..... 107
உலக வீட்டு விலைக் குறியீடு Q4 - 2021 ..... 107
உலக காற்றுத் தர அறிக்கை 2021 ..... 108
காசநோயை ஒழிப்பதற்கான நடவடிக்கை – உலக காசநோய் தின உச்சி மாநாடு ..... 108
2025 ஆம் ஆண்டிற்குள் புதிய விமான நிலையங்கள் நிறுவுதல் ..... 109
பிப்லோபி பாரத் கலைக் காட்சியகம் ..... 109
பொதுப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு ..... 109
பருவநிலை அபாயங்கள் இணையப் புத்தகம் மற்றும் பாதிப்பு குறித்த இணைய வரைபடம் ..... 110
இந்திய மனநலச் சங்கத்தின் தேசிய மாநாடு ..... 110
சுஜாலாம் 2.0 பிரச்சாரம் ..... 111
முடக்கு வாதத்திற்கான ஆயுர்வேத மருத்துவப் பரிசோதனை ..... 111
செங்கோட்டைத் திருவிழா ..... 112
ஸ்ரீநகர் துலிப் திருவிழா ..... 113
2வது ஏற்றுமதி தயார்நிலைக் குறியீடு ..... 113
இந்தியக் காசநோய் அறிக்கை 2022 ..... 114
உத்தரப் பிரதேச முதல்வர் ..... 114
‘Dare to Erade TB’ திட்டம் ..... 114
தேசிய டால்பின் தினம் ..... 115
யோகா மஹோத்சவ் 2022 ..... 115
ஜஎன்எஸ் வல்சுரா ..... 116
மாநிலச் சட்டமன்றங்கள் லாட்டரிகள் மீது வரி விதிப்பு ..... 117
அஹிர் படைப் பிரிவுக்கான கோரிக்கை ..... 117
கிரண் மஜும்தார்-ஷா ..... 118
துருவ அறிவியல் மற்றும் தாழ்வெப்ப மண்டலம் குறித்த ஆராய்ச்சித் திட்டம் ..... 118
“சம்பவ்” மற்றும் ”ஸ்வாவ்லம்பன்” ..... 119
பெண்களின் நிலை மீதான ஐக்கிய நாடுகள் ஆணையம் ..... 119
பேரிடர் மேலாண்மைச் சட்டவிதிமுறைகள் ..... 120

நெகிழ்திறன்மிக்க பயிர்கள் ........ 120
சர்வதேசப் புவியியல் மாநாடு ........ 120
ராஷ்டிரிய சான்ஸ்கிருதி மஹோத்சவ் 2022 ........ 121
800 அத்தியாவசிய மருந்துகளின் விலை உயர்வு ........ 122
C40 நகரங்களின் வலையமைப்பு ........ 122
இந்தியாவில் மருத்துவர் மற்றும் மக்கள்தொகை விகிதம் ........ 123
குற்றவியல் நடைமுறை (அடையாளம் காணுதல்) மசோதா, 2022 ........ 123
இந்தியாவின் முதல் எஃகு சாலை ........ 124
பிரஸ்தான் பயிற்சி ........ 125
50,000 திறந்தவெளிக் கழிப்பிடமற்ற பிளஸ் கிராமங்கள் ........ 125
TEJAS திறன் திட்டம் ........ 126
யமுனோத்சவ் ........ 126
சர்வதேசச் செய்திகள் ........ 127
உக்ரைனின் விமானப்படைத் தளங்கள் ........ 127
மின்ஸ்க் ஒப்பந்தங்கள் ........ 127
கைபர் – பஸ்டர் ஏவுகணை ........ 128
ரசாசா ஏரி ........ 129
ரஷ்யாவின்  படையெடுப்பிற்கு சர்வதேச ஒலிம்பிக் குழுவின் பதிலடி ........ 129
மிரியா ........ 129
யிலான் பள்ளம் ........ 130
மந்தாரைப் பூக்களின் (ஆர்க்கிட்) புதிய இனம் ........ 130
சவுதி அரேபியா நிறுவன தினம் ........ 131
சபோரிஜியா அணுமின் நிலையம் ........ 131
ரஷ்ய நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்த ஐ.நா. மனித உரிமைகள் சபை வாக்களிப்பு ........ 132
அவசர ஐ.நா. பொதுச் சபை அமர்வு ........ 132
உலக கைபேசி மாநாடு 2022 ........ 132
பாகிஸ்தான் - சாம்பல்நிறப் பட்டியல் ........ 133
நெகிழிப் புத்தாக்க மையம் ........ 133
என்டியூரன்ஸ் கப்பல் ........ 134
தென்கொரிய அதிபர் ........ 134
பணிநலன் குறித்த அறிக்கை ........ 135
வி-டெம் நிறுவனத்தின் ஜனநாயக அறிக்கை 2022 ........ 135
சவுதி அரேபியா – மிக அதிக அளவில் மரணதண்டனை ........ 136
ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை ........ 137
ஐரோப்பிய ஒன்றிய கார்பன் வரம்புக் கட்டணம் ........ 138
பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் பணி புரியும் பெண்கள் ........ 138
பழங்கற்காலக் கலாச்சாரம் கண்டுபிடிப்பு ........ 138
அதிகளவில் தடை விதிக்கப்பட்ட நாடு ........ 139
ஐக்கிய நாடுகள் உலக மகிழ்ச்சி அறிக்கை 2022 ........ 139

கோல்டு ரெஸ்பான்ஸ் 2022 ........ 140
போயிங் 737 - 800 விபத்து ........ 140
மான்டரியக்ஸ் உடன்படிக்கை ........ 141
ஹிசாஷி டேகுச்சி ........ 141
BIMSTEC சாசனம் ........ 142
பெர்ஷாமா ஷீல்டு 2022 ........ 142
பருவநிலை முன்னெச்சரிக்கை அமைப்புகள் ........ 143
ஆப்பிரிக்கக் காண்டாமிருகத்தினைப் பாதுகாக்க வனவிலங்கு பத்திரம் ........ 143
நிதி உதவி அணுகலைக் கோரி தீர்மானம் ........ 144
ஆப்கானிஸ்தானிற்கான ஐக்கிய நாடுகள் உதவித் திட்டம் ........ 144
ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் வருடாந்திர எல்லை அறிக்கை 2022 - சிறப்பம்சங்கள் ........ 145
தரவுப் பரிமாற்ற ஒப்பந்தம் மீதான அமெரிக்க – ஐரோப்பிய ஒன்றிய உடன்படிக்கை ........ 145
கில்பெர்ட் ஹௌங்போ ........ 146
பாதரசம் மீதான மினமாட்டா உடன்படிக்கை COP-4 ........ 146
பொருளாதாரச் செய்திகள் ........ 147
T + 1 பங்கு ஒப்பந்தம் ........ 147
சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் – பிப்ரவரி ........ 147
60 மில்லியன் டீமேட் கணக்குகள் ........ 148
சொத்து அறிக்கை 2022 ........ 148
தேசிய நிதியியல் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி ........ 149
வருங்கால வைப்பு நிதிகள் மீதான வட்டி விகிதம் ........ 149
ரிசர்வ் வங்கிப் புத்தாக்க மையம் ........ 150
டெல்லியின் பொருளாதார ஆய்வறிக்கை ........ 150
டாலர் ஆதிக்கத்தில் சரிவு ........ 151
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 152
கடல் டிராகனின் புதைப் படிமம் ........ 152
விண்ணில் ஏவப்பட்ட 22 செயற்கைக் கோள்கள் ........ 152
தியோமார்கரிட்டா மேக்னிபிஃகா ........ 152
PARAM கங்கை ........ 153
பிளாஸ்மா (அயனிமம்) ........ 153
கிலோநோவா ........ 154
5000 புறக் கோள்கள் ........ 155
TRAPPIST – 1 அமைப்பு ........ 155
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 156
பருவநிலை மாற்றம் குறித்த ஐ.நா. அறிக்கை ........ 156
IPCC மதிப்பீட்டு அறிக்கை ........ 157
தேனுண்ணுங்கரடி ........ 158
உலக நெகிழி ஒப்பந்தம் ........ 158

பெருந்தடுப்பு பவளப் பாறைப் பகுதியில் வாழும் மீன்களின் வண்ணம் குன்றுதல் ..... 159
வருடாந்திர எல்லை அறிக்கை 2022 ..... 160
மாநிலச் செய்திகள் ..... 161
பயஞ்சனா துவாதசி ..... 161
பத்ரா மேல்நிலை நீர்ப்பாசனத் திட்டம் ..... 161
கொச்சின் சர்வதேச விமான நிலைய நிறுவனம் ..... 162
லச்சத் போர்புகன் ..... 162
கின்னஸ் சாதனை – உஜ்ஜைன் ..... 163
ஹேரத் திருவிழா ..... 163
ஒட்டகப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக் கொள்கை ..... 164
மத்தியப் புலனாய்வு அமைப்பிற்கான இசைவு திரும்பப் பெறல் ..... 164
உயர்நீதிமன்றம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ..... 164
கோனார்க் கோவில் நகரம் ..... 165
மைக்ரோசாஃப்ட் தரவு மையம் ..... 165
கௌசல்ய மாத்ரித்வ யோஜனா ..... 166
ஆமா யோஜனா மற்றும் பாகினி திட்டம் ..... 166
பால் – தத்வவ் படுகொலை ..... 166
மாத்ருசக்தி உதய்மிதா திட்டம் ..... 167
இந்திர தனுஷ் திட்டம் ..... 167
முந்தைய ஓய்வூதியத் திட்டம் ..... 168
துதாலா கிராமம் – குஜராத் ..... 168
சிறுத்தைகள் சரணாலயம் ..... 168
முக்கிய மந்திரி சா ஸ்ராமி கல்யாண் பிரகல்பா திட்டம் ..... 169
ஆளில்லா விமானப் பயிற்சிப் பள்ளி - குவாலியர் ..... 169
சிறார்களுக்கான நிதிநிலை அறிக்கை - மத்தியப் பிரதேசம் ..... 169
இந்திரயானி மருத்துவ நகரம் ..... 170
செயற்கை நுண்ணறிவு & எந்திரனியல் தொழில்நுட்பப் பூங்கா ..... 170
எண்ணிம தண்ணீர் வங்கி ..... 170
மும்பை பருவநிலை செயல் திட்டம் ..... 171
பயிர் பல்வகைப்படுத்தல் முறைகள் ..... 171
மாத்ருபூமி ..... 172
நில உரிமையைக் கண்காணிப்பதற்கான இயக்க வரைபடம் ..... 173
ஹரியானா மதமாற்ற எதிர்ப்பு மசோதா ..... 173
புதிய கடல் இனங்களை அடையாளம் காணுதல் ..... 173
கஹிர்மாதா அரிபாடா ..... 174
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ..... 174
மாதாபி பூரி புச் ..... 174
தீபம் சட்டர்ஜி எழுதிய புதிய புத்தகம் ..... 175
ஜுனாயத் கமல் அஹ்மத் ..... 175

போல்ட்ஸ்மேன் பதக்கம் ..... 176
ஷேன் வார்ன் ..... 176
பத்திரிகையாளர் அமிதவ் குமார் எழுதிய புத்தகம் ..... 177
உஷா உதுப் வாழ்க்கை வரலாறு ..... 177
23வது இந்தியப் பெண் கிராண்ட் மாஸ்டர் ..... 178
நாரிசக்தி புரஷ்கர் ..... 179
நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் புதியத் தலைவர் ..... 179
விஷ்வகர்மா ராஷ்டிரிய புரஷ்கர் மற்றும் தேசியப் பாதுகாப்பு விருதுகள் ..... 180
பருவநிலைப் படைப்பிரிவு – அண்டார்டிகா ஆய்வுப் பணி ..... 180
Role of Labour in india's Development புத்தகம் ..... 181
ஃபார்ச்சூன் இந்தியா 2021 ஆம் ஆண்டு ஆண்டின் மிக அதிகாரம் வாய்ந்த 50 பெண்மணிகள் பட்டியல் ..... 181
சர்வதேச தைரியமிக்க பெண்கள் விருது ..... 182
அபினவ் சந்திரசூட் எழுதிய புத்தகம் ..... 183
Tomb of Sand புத்தகம் ..... 183
பிரபா நரசிம்மன் ..... 184
BAFTA விருதுகள் 2022 ..... 184
K அபய் எழுதிய புத்தகம் ..... 185
ரோசா போன்ஹூயர் ..... 186
ஆண்டின் சிறந்த ஆசிய வங்கி ..... 186
உலக அழகி 2021 ..... 187
ராகுல் பஜாஜின் வாழ்க்கை வரலாறு ..... 187
இந்தியாவை மாற்றியமைக்கும் பெண்மணிகள் விருது ..... 188
ஜெயதி கோஷ் ..... 188
G.R. விஷ்வநாத் எழுதிய புத்தகம் ..... 189
ஆஷ்லே பார்டி ..... 189
ஏபெல் பரிசு 2022 ..... 190
ரிச்சா மிஷ்ரா எழுதிய புத்தகம் ..... 190
தேவேந்திர ஜஜாரியா ..... 191
"The Little Book of Joy" புத்தகம் ..... 191
ஸ்டீபன் வில்ஹைட் ..... 192
மேடெலின் ஆல்பிரைட் ..... 193
ஸ்டாக்ஹோம் தண்ணீர் பரிசு 2022 ..... 193
கோவிட் சாம்பியன் விருது ..... 194
94வது அகாடமி (ஆஸ்கார்) விருதுகள் ..... 194
TIME100 தாக்கம் (இம்பாக்ட்) விருதுகள் 2022 ..... 195
விளையாட்டுச் செய்திகள் ..... 196
அதிவேக அரைசதம் - ஒரு நாள் போட்டி ..... 196
சர்வதேச சிங்கப்பூர் பளுதூக்குதல் போட்டி – 2022 ..... 196

பனித்தள ஹாக்கி சாம்பியன்சிப் போட்டி 2022 ....... 196
மாற்றுத் திறனாளிகளுக்கான உலக வில்வித்தை சாம்பியன்சிப் போட்டி ....... 197
புரோ கபடி லீக் ....... 197
ISSF உலகக் கோப்பை ....... 198
ஸ்ட்ராண்ட்ஜா நினைவு குத்துச்சண்டைப் போட்டி ....... 198
ICC மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பை – 2022 ....... 198
இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் பொது மேலாளர் ....... 199
ரவிச்சந்திரன் அஷ்வின் ....... 199
மிதாலி ராஜ் ....... 200
ரவீந்திர ஜடேஜா ....... 200
மிதாலி ராஜ் தலைமைத்துவம் ....... 201
S. L. நாராயணன் ....... 201
ஜெர்மன் ஓபன் சூப்பர் 30 ....... 202
டியூப்ளான்டிஸ் உலக□□ சாதனை ....... 202
ISSF உலகக் கோப்பை 2022 ....... 203
ஜூலன் கோஷ்வாமி ....... 203
ரிசப் பந்த் - அதிவேக 50 ....... 204
R. அஷ்வின் - டெஸ்ட் போட்டிகளில் எடுத்த விக்கெட்டுகள் ....... 204
ஆசியப் பில்லியர்ட்ஸ் பட்டம் ....... 205
சிறந்த விளையாட்டு வீரர் விருது ....... 205
ஸ்போர்ட் ஸ்டார் ஏசஸ் 2022 ....... 206
Road to 1000 புத்தகம் ....... 206
மாற்றுத் திறனாளிகளுக்கான உலக கிராண்ட் பிரிக்ஸ் போட்டி ....... 207
FIFA உலகக் கோப்பை மற்றும் BYJU's நிறுவனம் ....... 207
ஐபிஎல் போட்டி 2022 ....... 208
ஸ்டீவ் ஸ்மித் ....... 208
புதிய உலக டிரிபிள் ஜம்ப் சாதனை ....... 209
SAFF U-18 மகளிர் கால்பந்து சாம்பியன்சிப் போட்டி ....... 209
முக்கிய தினங்கள் ....... 210
பாகுபாடின்மை தினம் – மார்ச் 01 ....... 210
ஜன் அவுசதி திவாஸ் 2022 – மார்ச் 01 முதல் மார்ச் 07 வரை ....... 210
உலக குடிமைப் பாதுகாப்பு தினம் – மார்ச் 01 ....... 211
பொதுக் கணக்குகள் தினம் 2022 – மார்ச் 02 ....... 211
உலக வனவிலங்கு தினம் – மார்ச் 03 ....... 212
குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தின் நினைவுச் சின்ன வாரம் 2022 – பிப்ரவரி 28 முதல் மார்ச் 06 வரை ....... 212
உலக செவித் திறன் (கேட்டல்) தினம் – மார்ச் 03 ....... 213
பணியாளர் மதிப்பேற்ற (பாராட்டு) தினம் – மார்ச் 04 ....... 213
உலக உடல்பருமன் தினம் – மார்ச் 04 ....... 214

தேசியப் பாதுகாப்பு தினம் – மார்ச் 04 ....................214
தேசிய காத்தல் தினம் – மார்ச் 04 ....................214
ஜன் அவுசதி திவாஸ் - மார்ச் 07....................215
சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 08....................215
புகைப்பிடித்தல் தடை தினம் 2022 – மார்ச் 09 ....................216
53வது மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படை நிறுவன தினம் – மார்ச் 10....................216
சர்வதேச பெண் நீதிபதிகள் தினம் – மார்ச் 10....................217
உலக சிறுநீரக தினம் – மார்ச் 10....................217
இணையத் தணிக்கைக்கு எதிரான உலக தினம் - மார்ச் 12 ....................218
உலக ரோட்ராக்ட் தினம் - மார்ச் 13....................218
சர்வதேச கணித தினம் – மார்ச் 14....................219
நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினம் – மார்ச் 14....................219
உலக குளுக்கோமா தினம் - மார்ச் 12 ....................219
தேசியக் குற்ற ஆவணப்பதிவு வாரியத்தின் நிறுவன தினம் - மார்ச் 12....................220
உலக நுகர்வோர் உரிமைகள் தினம் - மார்ச் 15 ....................220
நிலையான மேம்பாட்டிற்கான உலகப் பொறியியல் தினம் - மார்ச் 04....................221
உலக தொடர்பு தினம் - மார்ச் 15....................221
தேசிய தடுப்பூசி தினம் - மார்ச் 16 ....................221
இஸ்லாமோஃபோபியாவை எதிர்ப்பதற்கான சர்வதேச தினம் - மார்ச் 15 ....................222
உலக உறக்க தினம் 2022 – மார்ச் 18....................222
உலக மறுசுழற்சி தினம் – மார்ச் 18....................223
ஆயுதத் தொழிற்சாலைகள் தினம் – மார்ச் 18....................223
சர்வதேச மகிழ்ச்சி தினம் - மார்ச் 20 ....................223
உலக சிட்டுக்குருவி தினம் - மார்ச் 20 ....................224
உலக வாய் சுகாதார தினம் - மார்ச் 20 ....................224
ஐ.நா. பிரெஞ்சு மொழி தினம் - மார்ச் 20 ....................225
சர்வதேச இளம்பருவத்தினர் ஆரோக்கிய வாரம் - மார்ச் 20 முதல் 26 வரை....................225
மத்திய சேமக் காவல் படையின் 83வது எழுச்சி தினம் - மார்ச் 19 ....................225
சர்வதேச இனப் பாகுபாடு ஒழிப்பு தினம் - மார்ச் 21....................226
சர்வதேசக் காடுகள் தினம் - மார்ச் 21....................227
உலகப் பொம்மலாட்ட தினம் - மார்ச் 21....................227
உலக மனநலிவு நோய் தினம் - மார்ச் 21....................227
உலக தண்ணீர் தினம் – மார்ச் 22....................228
பீகார் திவாஸ் - மார்ச் 22 ....................228
உலக கவிதை தினம் – மார்ச் 21....................228
உலக வானிலை தினம் – மார்ச் 23....................229
தியாகிகள் தினம் – மார்ச் 23 ....................229
பாகிஸ்தான் தினம் – மார்ச் 23....................230
உலக காசநோய் தினம் – மார்ச் 24 ....................230

சர்வதேச உண்மைக்கான உரிமை தினம் – மார்ச் 24 ..... 230
கருவில் உள்ள குழந்தைக்கான சர்வதேச தினம் - மார்ச் 25 ..... 231
அடிமைத்தனம் மற்றும் அட்லாண்டிக் நாடுகளுக்கிடையிலான அடிமை வர்த்தகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு தினம் - மார்ச் 25 ..... 231
புவி நேரம் 2022 - மார்ச் 26 ..... 231
உலக நாடக தினம் - மார்ச் 27 ..... 232
உலக இட்லி தினம் – மார்ச் 30 ..... 232
திருநங்கையரைக் காணும் நிலையைக் கொண்ட சர்வதேச தினம் – மார்ச் 31 ..... 233

# TNPSC துளிகள்

- அமெரிக்க அதிபர் ஜோ பிடன் நீதிபதி கேதான்ஜி ப்ரவுன் ஜாக்சனை அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிப்பதற்குப் பரிந்துரை செய்தார்.
  - உச்ச நீதிமன்றத்தில் பணியாற்றத் தேர்வு செய்யப்பட்ட முதல் கருப்பினப் பெண் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- ரஷ்யாவிற்கு எதிரான தனது விண்ணப்பத்தினை உக்ரைன் சர்வதேச நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.
- விஜய் மல்லையா, நீரவ் மோடி மற்றும் மெகுல் சோக்சி ஆகியோரிடமிருந்து 18,000 கோடி ரூபாய் தொகையானது வங்கிகளால் திரும்பப் பெறப்பட்டுள்ளது.
- இந்திய அரசானது சமீபத்தில் கங்கை நடவடிக்கை என்று பெயரிடப்பட்ட ஒரு மீட்பு நடவடிக்கையினைத் தொடங்கியுள்ளது.
  - இது ரஷ்ய-உக்ரைன் நாடுகளுக்கு இடையே நிலவும் பதற்றநிலை காரணமாக உக்ரைனிலிருந்து இந்தியக் குடிமக்களை வெளியேற்றச் செய்வதற்கான ஒரு நடவடிக்கையாகும்.
- 2022 ஆம் ஆண்டு மாஸ்கோ உஷூ ஸ்டார்ஸ் சாம்பியன்சிப் போட்டியின் இளையோர் போட்டிப் பிரிவில் இந்திய உஷூ வீரர் சாதியா தாரிக் தங்கப் பதக்கத்தினை வென்று உள்ளார்.
  - 15 வயதான சாதியா தாரிக் ஜம்மு & காஷ்மீரின் ஸ்ரீநகரைச் சேர்ந்தவர்.
- உலக சுகாதார அமைப்பின் கோவாக்ஸ் அமைப்பின் மூலம் உலகளவில் அமெரிக்கா வழங்கிய கோவிட்-19 தடுப்பு மருந்துகளை அதிகம் பெற்ற நாடு வங்காளதேசம் ஆகும்.
- டாடா சன்ஸ் குழுமம் வழங்கிய புதிய ஏர் இந்தியா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பொறுப்பிற்கான வாய்ப்பினை இல்கர் அய்சி நிராகரித்துள்ளார்.
- தன்னைத் தானே காயப்படுத்திக் கொள்ளுதல் பற்றிய ஒரு விழிப்புணர்வு தினமானது உலகம் முழுவதும் மார்ச் 01 அன்று அனுசரிக்கப் படுகிறது.
  - ‘வெட்டிக் கொள்தல்’ மற்றும் வேண்டுமென்றே செய்து கொள்ளும் இதர பிற சுய தீங்கு முறைகள் போன்ற செயல்கள் குறித்த ஒரு விழிப்புணர்வைப் பரப்பச் செய்வதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள், புதுடெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ‘ஆரோக்கிய வனத்தினை’ திறந்து வைத்தார்.
  - ஆயுர்வேத தாவரங்களின் முக்கியத்துவத்தினையும் மனித உடலின் மீது அவை ஏற்படுத்தும் தாக்கங்களையும் ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவைக் குழுவானது, இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் தானியங்கு முறை மூலமான 20% என்ற அளவிலான அந்நிய நேரடி முதலீட்டிற்கு ஒப்புதல் வழங்க முடிவு செய்துள்ளது.
  - இவ்வாறு செய்வதால் இந்தியாவின் மிகப்பெரிய ஆயுள் காப்பீட்டு நிறுவனமானது தனது முதலீட்டைப் பங்கு விலக்கம் செய்து கொள்வதை எளிதாக்கும் என அரசு நம்புகிறது.

- மத்தியக் கல்வித் துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் அன்னபூர்ணா தேவி 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய தகவல் மற்றும் தொழில்நுட்ப விருதுகளை வழங்கினார்.
  - இந்த விருதானது இந்தியா முழுவதும் உள்ள 49 ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.
- உலக கைபேசிப் பொருளாதார அறிக்கையானது ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் நடைபெற்ற உலக கைபேசி மாநாட்டில் காட்சிப்படுத்தப் பட்டது.
  - உலகளவிலுள்ள 5G கைபேசி இணைப்புகளின் மொத்த எண்ணிக்கையானது 2022 ஆம் ஆண்டில் 1 பில்லியனை எட்டும் என இந்த அறிக்கை கூறுகிறது.
- லுப்தான்சா நிறுவனத்தின் ஒரு துணை நிறுவனமான சுவிஸ் ஏர்லைன்ஸ், சூரியசக்தி எரிபொருளை பயன்படுத்த உள்ள உலகின் முதல் விமான நிறுவனமாக மாற உள்ளது.
  - இதன் பயன்பாட்டினைச் சந்தைப்படுத்துவற்காக வேண்டி லுஃப்தான் மற்றும் ஸ்விஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களும் சின்ஹீலியன் நிறுவனத்துடன் உத்திசார் ஒத்துழைப்பினை மேற்கொண்டுள்ளன.
- ஸ்திரீ மனோரக்சா என்ற திட்டமானது NIMHANS பெங்களூரு என்ற நிறுவனத்துடன் இணைந்து மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
  - இந்தியா முழுவதும் உள்ள பெண்களின் மனநலனை மேம்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டமானது தொடங்கப்பட்டது.
- 2009 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 04 ஆம் தேதியன்று பாலியல் சுரண்டலுக்கெதிரான போராட்ட தினமாக அனுசரிக்கப்படுகிறது.
  - இது பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பெருமளவில் பாதிக்கச் செய்யும் பாலியல் சுரண்டலுக்கு எதிராக ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு தினமாகும்.
- ஜெட் ஏர்வேஸ் நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக சஞ்சீவ் கபூர் நியமிக்கப் பட்டுள்ளார்.
  - ஜலன் கர்லோக் கன்சார்டியம் என்ற நிறுவனம் ஜெட் ஏர்வேஸ் நிறுவனத்தின் புதிய ஊக்குவிப்பு நிறுவனம் ஆகும்.
- தற்போதைய விலை நிலவரத்தில் தனிநபர் நிகர மாநில உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில், 1 கோடிக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட மாநிலங்களில் தெலுங்கானா மாநிலம் நாட்டிலேயே மிக உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளது.
  - புள்ளியியல் மற்றும் திட்டங்கள் அமலாக்கத் துறை அமைச்சகத்தின் சமீபத்திய தரவுகளில் இத்தகவலானது கூறப்பட்டுள்ளது.
- ரஷ்யப் படைகள், தெற்கு உக்ரைனிலுள்ள ஒரு முக்கியத் துறைமுக நகரத்தினைக் கைப்பற்றி உள்ளன.
  - ரஷ்யப் படைகளால் கைப்பற்றப்பட்ட முதல் பெரிய நகரம் கெர்சன் ஆகும்.
- ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனமானது, தனது புதிய வளர்ந்து வரும் இயங்குதிறன் கண்டுபிடிப்புகள் மற்றும் வரவிருக்கும் மின்சார வாகனங்கள் தயாரிப்பிற்காக 'விடா' எனப்படும் புதிய தயாரிப்பினை அறிமுகம் செய்துள்ளது.
  - இது துபாய் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது (விடா என்றால் வாழ்க்கை என்று பொருள்)

- எகிப்தின் கெய்ரோ நகரில் நடைபெற்ற ISSF உலகக் கோப்பைப் போட்டியின் மகளிர் 10 மீ ஏர் பிஸ்டல் குழுப்போட்டியில் இந்தியாவின் ஸ்ரீநிவேதா, ஈஷா சிங் மற்றும் ருச்சிதா விநேர்கர் ஆகியோர் தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளனர்.
    - இரண்டு தங்கம் மற்றும் ஒரு வெள்ளி உட்பட மூன்று பதக்கங்களுடன் இந்தப் போட்டியின் பதக்கப் பட்டியலில் இந்தியா முன்னணியில் உள்ளது.
- மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படையின் 53வது எழுச்சி (ஸ்தாபன) தின விழா 2022 ஆம் ஆண்டு மார்ச் 06 அன்று உத்தரப் பிரதேசத்தின் காஜியாபாத்தில் ஏற்பாடு செய்யப் பட்டது.
    - தன் தலைமையகத்தினைப் புது தில்லியில் கொண்டுள்ள, மத்தியத் தொழில் துறைப் பாதுகாப்புப் படையானது உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்தியாவின் ஆறு துணை ராணுவப் படைகளில் ஒன்றாகும்.
- ஸ்வதந்த்ரா சைனிக் சம்மான் யோஜனா மற்றும் அதன் உட்பிரிவுத் திட்டங்களை 2021-22 முதல் 2025-26 வரையிலான நிதியாண்டுகளுக்குத் தொடரச் செய்வதற்கு வேண்டி அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
    - இந்தத் திட்டத்தின் கீழ், விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதி சார்ந்தச் சலுகைகள் மற்றும் ஓய்வூதியமானது வழங்கப் படும்.
- ஆஸ்திரேலியாவின் மெல்போர்னிலுள்ள ராயல் மெல்போர்ன் தொழில்நுட்பக் கல்வி பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பம் சார்ந்த முப்பரிமாண அச்சிடல் முறையிலான வினையூக்கியை உருவாக்கியுள்ளனர்.
    - மீயொலி விமானத்திலுள்ள அதிவெப்பமடைதல் பிரச்சினையைத் தீர்ப்பதே இந்த முப்பரிமாண அச்சிடல் முறையிலான வினையூக்கிகளின் முக்கியப் பயன்பாடு ஆகும்.
- தலித் பந்து என்பது தெலுங்கானா அரசின் முதன்மைத் திட்டமாகும்.
    - இது அந்த மாநிலத்திலுள்ள தலித் குடும்பத்தினருக்கு அதிகாரமளிப்பதற்கான ஒரு நலத் திட்டமாக இருப்பதோடு ஒரு குடும்பத்திற்கு 10 லட்சம் ரூபாய் நேரடி பயன் பரிமாற்றத் தொகையை வழங்குவதன் மூலம் அவர்களிடையே உள்ள தொழில் முனைவோரை வெளிக்கொணர்வதற்கும் வேண்டி இது உதவும்.
- இந்தியாவிலேயே முதல்முறையாக முழுவதும் பெண்களாலேயே இயக்கப்படும் FLO தொழில்துறைப் பூங்கா எனப் பெயரிடப்பட்ட ஒரு தொழில்துறைப் பூங்காவானது தெலுங்கானாவின் ஹைதராபாத் நகரில் திறக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் மூலம் வழங்கப்படும் வீடுகள் இனி குடும்பத் தலைவிகளின் பெயரில் மட்டுமே வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.
    - தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியமானது முன்னதாக குடிசை மாற்று வாரியம் என அழைக்கப்பட்டது.
- வீரமங்கை வேலுநாச்சியார் பெயரிலான விருதானது தகுதி வாய்ந்த மாணவிகளுக்கு வழங்கப் படும் என சென்னைப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டு WAN-IFRA தெற்காசிய டிஜிட்டல் ஊடக விருது விழாவில், இந்துக் குழுமம் தொடர்ந்து 2வது ஆண்டாக, "ஆண்டின் சிறந்தப் பதிப்பாளர் நிறுவனம்" என்ற ஒரு விருதினைப் பெற்றுள்ளது.

- உலகப் பத்திரிகை வெளியீட்டு நிறுவனங்கள் சங்கமானது உலகப் பத்திரிகை நிறுவனங்களின் ஒரு உலக அமைப்பாகும்.

❖ இந்த ஆண்டு முழுவதும் தான் பங்கு பெறும் டென்னிஸ் போட்டிகளில் பெறும் பரிசுத் தொகையை உக்ரைனுக்கான UNICEF நிதிக்கு வழங்குவதாக ஆன்டி முர்ரே என்பவர் கூறி உள்ளார்.

❖ SKOCH என்ற ஆளுகை நிலைமைக்கானத் தரவரிசையில் தொடர்ந்து 2வது ஆண்டாக ஆந்திரப் பிரதேசம் தனது முதல் இடத்தினைத் தக்க வைத்துள்ளது.

- இதில் மேற்கு வங்காளம் 2வது இடத்திலும் ஒடிசா 3வது இடத்திலும் உள்ளது.

❖ முதல்முறையாக ஜெய்ப்பூர் – டெல்லி – ஆக்ரா – நெடுஞ்சாலையில் பசுமை மின்னேற்ற மையத்தினை மின்சார வாகனங்களுக்கான தேசிய நெடுஞ்சாலை அமைப்பானது கட்டமைத்து வருகிறது.

- மின்சார வாகனங்களுக்கான தேசிய நெடுஞ்சாலை அமைப்பானது நாட்டின் போக்குவரத்து அமைப்புகளின் மின்மயமாக்கலை மேம்படுத்துவதற்கான ஒரு அமைப்பாகும்.

❖ மும்பையில், ஜியோ உலக மையத்தினை நிறுவ உள்ளதாக ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

- இது ஒரு வணிகம், வர்த்தகம் மற்றும் கலாச்சார மையமாக செயல்பட உள்ளது.

❖ அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் போஜ்பூரி மொழியைச் சேர்ப்பதற்கான ஒரு நீண்ட கால கோரிக்கையை தமது அரசாங்கம் மீண்டும் வற்புறுத்தத் தொடங்கும் என்று பீகார் முதல்வர் நிதீஷ்குமார் கூறியுள்ளார்.

- அந்த மாநில அமைச்சரவையானது இது தொடர்பான ஒரு முன்மொழிதலை 2017 ஆம் ஆண்டில் மத்திய அரசிற்கு அனுப்பியது.

❖ பிரபல கோல்ஃப் விளையாட்டு வீரரான அமெரிக்காவின் டைகர் உட்ஸ் உலக கோல்ப் புகழ் மன்றத்தில் (World Golf Hall of Fame) சேர்க்கப்பட்டுள்ளார்.

❖ இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் (IRDAI) புதிய தலைவராக தேபாசிஷ் பாண்டா நியமிக்கப்பட்டுள்ளார்.

- இவர் ஒரு முன்னாள் நிதிச் சேவைச் செயலர் ஆவார்.

❖ மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் நாராயண் ரானே மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான புதுமையான திட்டம் (பாதுகாப்பு, வடிவமைப்பு மற்றும் அறிவுசார் சொத்துரிமை) மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஐடியா ஹேக்கத்தான் 2022 ஆகியவற்றைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளார்.

- இந்தத் திட்டங்கள் தொழில்முனைவோருக்குப் புதிய தொழில்களைத் தொடங்க உதவும் என்று அவர் கூறினார்.

❖ அசாம் மாநிலத்தில் 1958 ஆம் ஆண்டு ஆயுதப் படைகள் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தினை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்து அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

- இந்த அறிவிப்பு பிப்ரவரி 28 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது.

❖ ஹரியானா முதல்வர் மனோகர் லால் கட்டார் அம்மாநில நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த போது, பெண்களுக்கான சுஷ்மா சுவராஜ் விருதினை அறிவித்துள்ளார்.

- சர்வதேச மற்றும் தேசியத் துறைகளில் பெண்கள் ஆற்றும் குறிப்பிடத்தக்கச் சாதனைகள் அல்லது வாழ்வின் பல்வேறு துறைகளில் ஆற்றும் பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.

❖ பொலிவிய நாட்டு வீரரான மரியோ டெரான் சலாசர், கிழக்கு பொலிவியாவிலுள்ள சான்டா க்ரஷ் டி லா சியெரா என்னுமிடத்தில் தனது 80வது வயதில் காலமானார்.

- இவர் 1967 ஆம் ஆண்டில் அர்ஜென்டினா – கியூப நாட்டுக் கொரில்லா முறையின் எர்னெஸ்டோ "சே" குவேராவினைக் கொன்றவராகக் கருதப்படுகிறார்.

❖ மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் 2022 ஆம் ஆண்டின் 3வது NIC தொழில்நுட்ப மாநாட்டினைத் தொடங்கி வைக்க உள்ளார்.

❖ கேரள அரசானது M.S. விஸ்வநாதன் அவர்களுக்கு நினைவிடம் அமைப்பதற்காக 1 மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளது.

❖ அகமதாபாத்தில் உள்ள சர்தார் படேல் மைதானத்தில் 11வது கேல் மஹாகும்ப் என்ற போட்டியை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைத்தார்.

- கேல் மஹாகும்ப் என்ற போட்டியின் இந்தப் பதிப்பில் 36 பொதுப் பிரிவு விளையாட்டுகளும் 26 பாரா (மாற்றுத் திறனாளிகளுக்கான) விளையாட்டுகளும் அடங்கும்.

❖ ஜம்மு மற்றும் காஷ்மீர் வங்கிக்கு "2020-21 ஆம் நிதியாண்டிற்கான சிறந்த செயல் திறனுக்கான தேசிய விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது.

- சுய உதவிக் குழுவின் வங்கிக்கான இணைப்பில் அதன் சிறந்த செயல்திறனுக்காக இந்த விருதானது வழங்கப்பட்டது.

❖ இந்தியாவின் முதல் மெய்நிகர் திறன்மிக்க கட்டமைப்பு அறிவு மையமானது ஹரியானா மாநிலத்தில் உள்ள மனேசரில் திறக்கப்பட்டது.

❖ இந்தியாவின் பங்குச் சந்தையானது சந்தை மூலதனத்தில் முதன்முறையாக உலகின் ஐந்தாவது இடத்தை எட்டியது.

- தற்போது அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகளுக்கு அடுத்த படியாக இந்தியா 5வது இடத்தில் உள்ளது.

❖ டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் N. சந்திரசேகரன் ஏர் இந்தியா நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், N. சந்திரசேகரன் டாடா சன்ஸ் நிறுவனத்தின் ஐந்தாண்டு கால தலைவர் பதவிக்கு இரண்டாவது முறையாக மீண்டும் நியமிக்கப் பட்டார்.

❖ 2022 ஆம் ஆண்டு ஜெர்மன் ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்திய ஷட்லர்(பூப்பந்தாட்ட வீரர்) லக்சயா சென் வெள்ளி வென்றார்.

- இவர் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த குன்லவுட் விடிட்சார்னிடம் தோல்வியுற்றார்.

❖ கல்வி நிறுவனங்களில் ஹிஜாப் அணிவதற்குத் தடை விதிக்கப்பட்டதை எதிர்த்துத் தொடரப் பட்ட பல்வேறு மனுக்களை கர்நாடக உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

- கர்நாடக உயர் நீதிமன்றம், ஹிஜாப் அணிவது இஸ்லாத்தின் இன்றியமையாத மத நடைமுறை அல்ல என்றும் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

❖ தமிழகத்தில் மாபெரும் புத்தகப் பூங்கா அமைக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

- அரசாங்கம் அதற்கான நிலத்தைக் கண்டறிந்து, அதில் பூங்காவை உருவாக்கத் தேவையான ஆதரவை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

❖ இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் சென்னையில் 44வது சதுரங்க ஒலிம்பியாட் போட்டி நடைபெறவுள்ளது.

- சர்வதேசச் சதுரங்கக் கூட்டமைப்புச் சபையானது, போட்டி நடைபெறும் இடத்தை மாஸ்கோவிலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற முடிவு செய்திருந்தது.

❖ ராஷ்டிரிய இந்திய ராணுவக் கல்லூரியானது, 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் அதன் 100 ஆண்டுகால வரலாற்றில் முதல் முறையாக பெண் மாணவர்களைச் சேர்க்க உள்ளது.

- 2022 ஆம் ஆண்டில் ஐந்து பெண் மாணவிகள் அந்தக் கல்லூரியில் சேர உள்ளனர்.

❖ மகாநதி கோல் ஃபீல்ட்ஸ் (நிலக்கரிச் சுரங்கம்) லிமிடெட் என்ற ஒரு நிறுவனமானது நாட்டின் மிகப்பெரிய நிலக்கரி உற்பத்தி நிறுவனமாக மாறியுள்ளதாக அறிவித்து உள்ளது.

- 2021-22 ஆம் நிதியாண்டில், இந்நிறுவனம் 157 மில்லியன் டன்கள் என்ற அளவிற்கு நிலக்கரியை உற்பத்தி செய்ததாக அறிவித்தது.

❖ தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள சிறப்பு மருத்துவத் துறையில் முதுகலை மருத்துவப் படிப்புகளில் பயில 50 சதவீத இடஒதுக்கீடுகளைத் தொடர்ந்து அரசு மருத்துவர்களுக்கு வழங்கிடச் செய்ய வேண்டி தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

❖ பஞ்சாப் மாநிலத்தின் 18வது முதலமைச்சராக பகவந்த் மான், பகத் சிங்கின் நினைவு ஆலயத்திற்குப் புகழ் பெற்ற இடமான கட்கர் கலான் என்ற இடத்தில் பதவி ஏற்றார்.

❖ சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவினைக் குறிக்கும் வகையில் மடகாஸ்கரில் மகாத்மா காந்தி பசுமை முக்கோணமானது திறக்கப்பட்டுள்ளது.

- இந்த முக்கோணத்திலுள்ள பசுமை என்ற வார்த்தையானது நிலையான மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மீதான அந்நாட்டின் அர்ப்பணிப்பைக் குறிக்கிறது.

❖ மத்திய அமைச்சர் நிதின் கட்கரி, மேம்படுத்தப்பட்ட பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் கலன் பொருத்தப்பட்ட ஒரு மின்சார வாகனமான டொயோட்டா மிராய் என்ற ஒரு மகிழுந்தினை புதுடெல்லியில் அறிமுகப்படுத்தினார்.

- டொயோட்டா மிராய் என்பது முழுவதும் ஹைட்ரஜனால் ஆற்றலூட்டப்பட்ட இந்தியாவின் முதலாவது எரிபொருள் கலன் பொருத்தப்பட்ட ஒரு மின்சார வாகனமாகும்.

❖ இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமானது, தனது புதிய சிறுசெயற்கைக் கோள் ஏவு ஊர்தியின் திட எரிபொருள் சார்ந்த உந்துநிலையின் ஒரு நிலமட்டச் சோதனையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

- இது ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்த சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் மேற்கொள்ளப்பட்டது.

❖ உக்ரைனில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு சர்வதேச நீதிமன்றம் ரஷ்யாவிற்கு உத்தரவிட்டுள்ளது.

- ரஷ்யா தனது தாக்குதலை பிப்ரவரி 24 அன்று தொடங்கியது.

- ஹைதராபாத் நகரில் அமைக்கப்பட உள்ள சர்வதேசக் குறைதீர்ப்பு மற்றும் நடுவண் மையத்திற்கான அடிக்கல்லினை இந்தியத் தலைமை நீதிபதி N.V. ரமணா அவர்கள் நாட்டினார்.
    - இந்த மையமானது ஒரு மாற்று வகையில் குறைதீர்ப்புக்கான இந்தியாவின் முதல் நடுவர் மையமாகும்.
- ஆயுதப் பாதுகாப்புப் படைகளுக்கான ஒரே பதவி, ஒரே ஓய்வூதியம் என்ற திட்டத்தினைப் பற்றிய மத்திய அரசின் முடிவிற்கு உச்சநீதிமன்றம் ஆதரவு அளித்து உள்ளது.
    - இந்த திட்டம் அமல்படுத்தப்படுவதில் எந்தவித அரசியலமைப்பு மீறலும் இல்லை என்று உச்சநீதிமன்றம் கூறியது.
- ஸ்மிருதி இராணி, தேசியக் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் 17வது நிறுவன தினத்தில் (2022ஆம் ஆண்டு மார்ச் 01) அதன் புதிய முழக்கத்தினை அறிமுகப் படுத்தினார்.
    - குழந்தைகளின் நலனிலேயே தேசத்தின் வலுவான ஒரு அடித்தளம் உள்ளதால் நமது குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்கச் செய்வதை இந்தப் புதிய முழக்கம் ஊக்குவிக்கிறது.
- இந்தியாவின் கலாச்சாரப் பாரம்பரியத்தினைப் பாதுகாத்து மேம்படுத்துவதில் உதவி வழங்குவதற்காக இந்தியத் தங்கும் விடுதிகள் நிறுவனமானது (Indian Hotels Company Ltd) யுனெஸ்கோவுடன் கை கோர்த்துள்ளது.
- மார்ச் 20 ஆம் தேதியன்று சர்வதேச லா ஃபிராங்கோஃபோனி தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
    - இது 1970 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் தேதியன்று, நியாமி எனும் உடன்படிக்கை கையெழுத்தான நாளை நினைவு கூறும் ஒரு தினமாகும்.
- ஈரானின் புத்தாண்டான சர்வதேச நவ்ரூஸ் தினம் என்பது மார்ச் 21 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.
    - நவ்ரூஸ் என்பது வசந்த காலத்தின் முதல் நாளைக் குறிக்கச் செய்வதோடு இந்தத் தினமானது வானியல் இளவேனிற் சம இரவு நாளில் கொண்டாடப்படுகிறது.
- இந்தியக் கடலோரக் காவல்படையின் ஐந்தாவது கடல் ரோந்துக் கப்பலான ‘சாக்சம்’ என்ற கப்பலை கோவாவில் பாதுகாப்புத் துறைச் செயலாளர் அஜய் குமார் படையில் இணைத்தார்.
    - 105 மீட்டர் நீளமான இந்த கடல் ரோந்துக் கப்பலானது கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தின் மூலம் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப்பட்டது.
- 2வது இந்தியா-இந்தோனேசியா நாடுகளுக்கிடையே பாதுகாப்புப் பேச்சுவார்த்தை ஜகார்த்தா நகரில் நடத்தப் பட்டது.
    - இந்தோனேசியாவின் அரசியல், சட்டம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்புத் துறை அமைச்சர் முகமது மஹ்ஃபுத் மற்றும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோர் இணைந்து இதற்குத் தலைமை தாங்கினர்.
- இந்திய அமெரிக்கப் பொதுச் சுகாதார நிபுணரான டாக்டர் ஆசிஷ் ஜா அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் நிர்வாகத்தில் கோவிட்-19 எதிர்ப்பு நடவடிக்கைக்கான ஒருங்கிணைப்பாளராகப் பொறுப்பேற்க உள்ளார்.
- பாஜகவின் N. பிரேன் சிங் மணிப்பூரின் முதலமைச்சராகத் தொடர்ந்து இரண்டாவது முறையாக, பதவியேற்றார்.

- கர்நாடக வங்கியானது, தனியார் துறை வங்கிகள் பிரிவில் "ஆண்டின் சிறந்த குறு, சிறு மற்றும் நடுத்தர வங்கி" என்ற விருதினை வென்றுள்ளது.
  - இந்த விருதானது புதுடெல்லியில் ASSOCHAM அமைப்பினால் தொடங்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான 8வது சிறந்த குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் விருது வழங்கும் விழா மற்றும் உச்சி மாநாட்டில் வழங்கப் பட்டது.
- 14வது இந்திய-ஜப்பானிய வருடாந்திர உச்சி மாநாடானது புதுடெல்லியில் நடத்தப் பட்டது.
  - இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜப்பானியப் பிரதமர் ஃபுமியோ கிஷிடா ஆகியோர் இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்றனர்.
- கால்பந்து விளையாட்டில் ஹைதராபாத் FC அணியானது இந்தியன் சூப்பர் லீக் என்ற போட்டியில் தனது முதல் பட்டத்தை வென்றது.
  - இந்த அணி பெனால்டி சுற்றில் கேரளா பிளாஸ்டர்ஸ் அணியை வீழ்த்தியது.
- களவு போன நூற்றாண்டு காலப் பழமையான சுமார் 29 கலைப் பொருட்களை ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியா மீட்டுள்ளது.
  - இந்த கலைப்பொருட்கள் அந்தந்த மாநிலங்களின் கோயில்களிடம் ஒப்படைக்கப் படும்.
- குவைத் நாட்டில் நிலவும் வெப்பநிலை 53.2 டிகிரி செல்சியசை (127.7 டிகிரி பாரன்ஹீட்) எட்டியது.
  - இதனால் இந்த நாடு புவியின் வெப்பமான நாடுகளுள் ஒன்றாக மாறியது.
- பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் புஷ்கர் சிங் தாமி, தொடர்ந்து 2வது முறையாக உத்தரகாண்ட் மாநிலத்தின் முதல்வராகப் பதவியேற்க உள்ளார்.
  - தாமி இந்த மலைப்பாங்கான மாநிலத்தின் 13வது முதல்வர் ஆவார்.
- மத்திய அமைச்சர் பாரதி பிரவின் பவார், மகாராஷ்டிராவின் நாசிக் நகரில் அமைக்கப் பட்டுள்ள இந்தியாவின் முதல் உயிரிப் பாதுகாப்பு நிலை-3 கட்டுப்பாடு கொண்ட ஒரு நடமாடும் ஆய்வகத்தினைத் தொடங்கி வைத்துள்ளார்.
  - இந்த நடமாடும் ஆய்வகமானது, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்திடம் சிறப்புப் பயிற்சி பெற்ற அறிவியலாளர்கள் புதிதாக உருவாகும் மற்றும் திரும்பத் திரும்ப உருவாகும் வைரஸ் தொற்றுகளைப் பற்றி ஆய்வு செய்வதற்கு உதவும்.
- கார்பன் நடுநிலைமிக்க வேளாண் முறைகளை அறிமுகம் செய்த முதல் இந்திய மாநிலமாக கேரளா மாறியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டின் கைது செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன ஊழியர்களுடன் ஒன்றிணைவதற்கான சர்வதேச தினமானது மார்ச் 25 அன்று அனுசரிக்கப்படுகிறது.
  - இந்த தினமானது நடவடிக்கையைத் ஒன்று திரட்டவும், நீதியைக் கோரவும், ஐ.நா. அமைப்பின் ஊழியர்கள் மற்றும் அமைதி காக்கும் படையினர், அரசு சாரா சமூகம் மற்றும் பத்திரிகை நிறுவனங்களில் பணி புரியும் நமது சக ஊழியர்களைப் பாதுகாப்பதற்குமான நமது உறுதியை வலுப்படுத்துவதற்கான ஒரு தினமாகும்.
- 2021-22 ஆம் நிதியாண்டில், திட்டமிடப்பட்ட இலக்கு காலத்தை விட முன்பாகவே சரக்கு ஏற்றுமதியில் 400 பில்லியன் டாலர் என்ற இலக்கை இந்தியா அடைந்துள்ளது.
- சர்வதேச சாதனையாளர் தினமானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.

- இது சாதனையாளர்களையும் அவர்களின் வலுவான நோக்கம் மற்றும் நம்பிக்கை போன்றவற்றைக் கொண்டாடுவதற்கான ஒரு தினமாகும்.

❖ சிலி நாட்டின் மத்திய வங்கியின் ஆளுநரான மரியோ மார்ஷல் 2022 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கிகள் விருது வழங்கும் விழாவில் ஆண்டின் சிறந்த ஆளுநருக்கான விருதினை வென்றுள்ளார்.

- பான்கோ சென்ட்ரல் டி சிலி (Banco Central de Chile) என்பது சிலி நாட்டின் மத்திய வங்கியின் பெயராகும்.

❖ வடகொரிய நாடானது ஹவாசாங் – 17 (Hwasong-17) எனப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் உந்து விசை ஏவுகணையினை பரிசோதனை செய்துள்ளது.

- இந்த ஏவுகணையானது உலகின் மிகப்பெரிய, திரவ எரிபொருளால் இயங்கும் வகையிலான கண்டம் விட்டு கண்டம் பாயும் உந்துவிசை ஏவுகணையாகும்.

❖ 5வது வருடாந்திர மங்களூரு கம்பளா பந்தயமானது பங்க்ரா குளூர் எனுமிடத்திலுள்ள கோல்டு பின்ச் நகர மைதானத்தில் நடைபெற உள்ளது.

- இது கர்நாடகாவில் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஒரு எருமைப் பந்தயமாகும்.

❖ 'எந்த ஒரு ஆணாயினும் அல்லது கணவனாயினும் வன்புணர்வு என்பது வன்புணர்வு தான்' என திருமணம் ரீதியான பலாத்காரம் தொடர்பான ஒரு வழக்கில் கர்நாடக உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

- திருமணம் என்பது ஒரு கொடூரமான மிருகத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கான உரிமம் அல்ல என்று கர்நாடக உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

❖ கோவா மாநில முதல்வராக இரண்டாவது முறையாக பிரமோத் சாவந்த் என்பவரை நியமிப்பதாக பாரதிய ஜனதா கட்சி அறிவித்துள்ளது.

❖ ஏழை மக்களுக்கு 5 கிலோ அளவில் உணவு தானியங்களை இலவசமாக வழங்கும் ஒரு திட்டத்தினை செப்டம்பர் 30 வரையில் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

- இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் பொது முடக்கம் அறிவிக்கப்பட்ட போது தொடங்கப்பட்ட இத்திட்டமானது மார்ச் 31 அன்று முடிவடைய இருந்தது.

❖ இந்தியாவில் முதல்முறையாக சிம்லா நகரில் மலையேற்ற சைக்கிள் போட்டி மற்றும் மோட்டார் பொருத்திய சைக்கிள் பந்தயம் போன்றவற்றிற்காக இந்திய விளையாட்டு ஆணையத்தின் ஒரு சிறப்புத் தேசிய மையத்தினை விளையாட்டு அமைச்சகம் நிறுவ உள்ளது.

- இமாச்சலப் பிரதேச அரசுடன் இணைந்து இது நிறுவப்படும்.

❖ உக்ரைனில் மாஸ்கோ மேற்கொண்ட எதிர்பாராத படையெடுப்பு மற்றும் போர் நடவடிக்கையைத் தொடர்ந்து அந்தக் கண்டத்தின் முதன்மையான மனித உரிமைகள் அமைப்பிலிருந்து ரஷ்யாவினை ஐரோப்பியச் சபை வெளியேற்றியுள்ளது.

- இதன் மூலம், இக்குழுவில் ரஷ்யாவின் 26 வருட உறுப்பினர் பொறுப்பு முடிவிற்கு வந்தது.

❖ சுவிஸ் ஓபன் சூப்பர் 300 பேட்மிண்டன் என்ற போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் இந்திய நாட்டைச் சேர்ந்த பி.வி. சிந்து வெற்றி பெற்றார்.

- இவர் தாய்லாந்து நாட்டின் புஷனன் ஒம்பாம்ருங்பன் என்பவரை வீழ்த்தி இந்தப் பட்டத்தை வென்றார்.

- இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, நடுத்தர வரம்புடைய, நிலம் விட்டு வானில் பாயும் வான்வழிப் பாதுகாப்பு ஏவுகணையினை வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.
    - இந்தப் பரிசோதனையானது ஒடிசாவின் பாலசோர் என்னுமிடத்தில் மேற்கொள்ளப் பட்டது.
- டெல்லி, ஹரியானா, இராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் ஒரு ஒருங்கிணைந்த பொதுப் பரிமாற்றப் போக்குவரத்து ஒப்பந்தங்களில் கையெழுத்து இட்டுள்ளன.
    - இது பேருந்துகள், வாடகை டாக்சிகள் மற்றும் ஆட்டோ ரிக்சா போன்றவற்றின் ஒரு தடையற்ற இயக்கத்திற்கு உதவுகின்றது.
- அரசுப் பணியாளர் தர்ஷன் சிங் மற்றும் இரயில்வே துறைப் பணியாளர் வர்ஷா தேவி ஆகியோர் முறையே நாடுகளுக்கிடையிலான தேசிய சாம்பியன்சிப் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் வெற்றி பெற்றனர்.
    - 10KM கொண்ட இந்த தடகள சாம்பியன்சிப் போட்டியானது நாகலாந்தின் கொஹிமா என்னுமிடத்தில் நடத்தப் பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## பாக் வளைகுடா துகாங் (கடல் பசு) வளங்காப்பகம்

- பாக் வளைகுடா பகுதியில் இந்தியாவின் முதல் துகாங் வளங்காப்பகத்தினை நிறுவச் செய்வதற்கான பணிகளைத் தமிழக அரசு தொடங்கியுள்ளது.
- கடல்பசுக்கள் என்பவை 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் 1வது அட்டவணையின் கீழ் பாதுகாக்கப்பட்ட ஒரு அருகிவரும் இனமாகும்.
- இந்த வளங்காப்பகமானது பாக் வளைகுடாவின் வடக்குப் பகுதியில் அதிராமப் பட்டினம் முதல் அமாப்பட்டினம் வரையில் சுமார் 500 சதுர கி.மீ. பரப்பளவில் அமைய உள்ளது.
- துகாங் என்பவை கடல் பசுக்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.



## உங்களில் ஒருவன்

- காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்களுடைய சுயசரிதையை வெளியிட்டார்.
- “உங்களில் ஒருவன்” என்பது இந்தப் புத்தகத்தின் பெயர் ஆகும்.
- இந்தப் புத்தகத்தின் முதல் பிரதியை மாநில நீர்வளத்துறை அமைச்சரும் மூத்த திமுக தலைவருமான துரைமுருகன் பெற்றுக் கொண்டார்.
- மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டின் 8வது முதல்வர் ஆவார்.




## தெரு விலங்குகளுக்கான அவசர ஊர்திச் சேவை




- இந்தியாவின் முதலாவது தெரு விலங்குகளுக்கான அவசர ஊர்திச் சேவையானது தமிழகத்தின் சென்னை நகரில் தொடங்கப் பட்டுள்ளது.
- இது ‘Four Paw” எனும் சர்வதேச விலங்குநல அமைப்புடன் இணைந்து இந்திய நீலச் சிலுவைச் சங்கத்தினால் தொடங்கப்பட்டுள்ளது.
- தெரு விலங்குநலத் திட்டம் என்பது காயப்பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு அந்தந்த இடங்களிலேயே சிகிச்சையளிப்பதற்காக ஒரு கால்நடை மருத்துவரும் இடம் பெற்ற ஒரு ‘சக்கரங்களில் (வாகனங்களில்) மருத்துவமனையாக’ செயல்படும்.

## நான் முதல்வன் திட்டம்




- தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 'நான் முதல்வன்' என்ற திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- ஆண்டுதோறும் தமிழக மாநிலத்திலுள்ள சுமார் 10 லட்சம் இளைஞர்களை நாட்டின் நலனுக்காக அவர்களின் திறமையை உணர உதவும் வகையிலான திறன்களுடன் அவர்களைப் பொருந்தச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்தத் திட்டமானது அரசினால் நடத்தப்படும் மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் திறமையான மாணாக்கர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு கல்வி சார்ந்த வழிகாட்டுதல்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பதவிப் பிரமாணம்



- சென்னை மாநகராட்சிக் கழகத்தின் 200 மாமன்ற உறுப்பினர்களுக்கு மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- 102 பெண்கள் மற்றும் 98 ஆண்கள் உறுப்பினர்களாகப் பதவியேற்றனர்.

## சென்னை மேயர்

- தி.மு.க.வினைச் சேர்ந்த 29 வயதான R. பிரியா சென்னையின் மேயர் பொறுப்பினை ஏற்க உள்ள முதல் தலித் சமூகப் பெண்மணி ஆவார்.
- தாரா செரியன் மற்றும் காமாட்சி ஜெயராமன் ஆகியோரையடுத்து மூன்றாவது பெண்மணியாக சென்னையின் மேயராக பிரியா பதவி ஏற்கிறார்.
- பிரியா, 74வது வார்டு ஆன மங்கலபுரத்தின் உறுப்பினராக பதவி ஏற்கிறார்.

- வடசென்னையின் முதல் மேயரும் இவரே ஆவார்.



## அதிக கடன்பெறும் மாநிலம் – தமிழ்நாடு


- 2022 ஆம் ஆண்டு நடப்பு நிதியாண்டில் அதிகளவு கடன் பெறும் மாநிலங்களில் தமிழக அரசு முன்னிலையிலுள்ளது.
- ஒட்டு மொத்தமாக, 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் – பிப்ரவரி மாத காலத்தில் மாநில மேம்பாட்டுக் கடன்கள் எனப்படும் பத்திரங்களை வெளியிட்டதன் மூலம் 65,400 கோடி நிதியை தமிழகம் திரட்டியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் இருந்த 79500 கோடி என்ற கடன் அளவினை விட இது 18 சதவிகிதம் குறைவாகும்.
- தமிழகத்தையடுத்து, மகாராஷ்டிரா, கர்நாடகா, உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## தந்தத்தினாலான செவ்வக வடிவப் பகடை

- தந்தத்தினாலான 4.5 செ.மீ. அளவுடைய செவ்வக வடிவப் பகடையானது கீழடி அகழாய்வின் எட்டாம் கட்ட அகழாய்வின் போது கண்டறியபட்டது.
- கீழடியின் 4 ஆம் கட்ட அகழாய்வு மேற்கொண்டதிலிருந்து தமிழக தொல்லியல்துறை முதல்முறையாக இந்தச் செவ்வக வடிவப் பகடையைக் கண்டு திகைத்துள்ளது.
- எனினும் தந்தம் மற்றும் சுடுமண்களால் ஆன செவ்வக மற்றும் கனசதுர வடிவப் பகடைகள் கீழடி அகழாய்வின் முதல் இரு கட்டங்களில் கண்டறியப் பட்டன.



## வங்காள விரிகுடாவில் உருவான அரிய காற்றழுத்தத் தாழ்வு நிலை




- வங்காள விரிகுடாவில் மார்ச் மாதத்தில் அரிதான ஒரு காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது.
- மார்ச் மாதத்தில் உருவான, அசாதாரணமாகக் கருதப்படும் இத்தகையத் தாழ்வு நிலை மண்டலங்கள் இனி மேற்கொள்ள இருக்கும் வானிலை கணிப்புகளில் ஒரு புதிய சாதனையினைப் பதிவு செய்துள்ளது.
- கடந்த 130 ஆண்டுகளில், வங்காள விரிகுடாவில் மார்ச் மாதத்தின் போது இரண்டு காற்றழுத்தத் தாழ்வு நிலைகள் உருவாகியுள்ளன.
- இவை 1938 மற்றும் 1994 ஆகிய ஆண்டுகளில் உருவாகின.


## மதுபானக் கடைகள்

- 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகளில் (கடைகள் மற்றும் பார்களில்) திருத்தம் செய்துள்ளதாக தமிழக மாநில அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தது.
- இந்த விதிமுறைகள் 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் என்பதின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளன.
- இதன் மூலம், மதுக்கடைகள் அமைக்கப்பட உள்ள இடம் தொடர்பாக வழங்கப்படும் ஆட்சேபணை மிக்க கருத்துகளை, ஆட்சியர்கள் பரிசீலித்து, அதன்பிறகு அந்த இடத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற விதியானது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய திருத்தப் பட்ட ஒரு விதிமுறையானது, மாநில அரசால் நடத்தப் படும் எந்த ஒரு மதுபானக் கடையின் அமைவிடமும் மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப் படாத வரை தனது வணிகத்தை ஆரம்பிக்க முடியாது.

## திருநங்கைகளுக்கு இட ஒதுக்கீடு

- எதிர்காலத்தில் வழங்கப்படும் பொது வேலைவாய்ப்புகளில் திருநங்கைகள்/மூன்றாம் பாலினத்தவர்களுக்கான சிறப்பு இடஒதுக்கீட்டிற்கென ஒரு குறிப்பிட்ட சதவீத இட ஒதுக்கீட்டை வழங்குமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் வலுவாகப் பரிந்துரைத்துள்ளது.

- சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் இதர தளர்வுகள் மற்றும் சலுகைகள் போன்றவற்றைத் தவிர்த்து கூடுதலாக இந்தப் பரிந்துரை வழங்கப் பட்டது.
- மூன்றாம் பாலினத்தவருக்கு ஏதேனும் இட ஒதுக்கீடு, சலுகைகள் மற்றும் தளர்வுகளை வழங்கும் போது, மற்ற சமூகம் மற்றும் பொருளாதார ரீதியாக பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கு இதே போன்ற சலுகைகளை வழங்குவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட விகிதத்தைக் கணக்கில் கொண்டு வேண்டும்,
- திருநங்கைகளுக்கான இந்தச் சலுகைகளை நிர்ணயிப்பதற்காக மாநில அரசு இதே முறையைப் பின்பற்ற வேண்டும்.




## மேயர் தேர்தல்

- தமிழகத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 12,800 நகர்ப்புற ஆட்சிப் பிரிவுகளின் மாமன்ற உறுப்பினர்கள் (வார்டு கவுன்சிலர்கள்) பதவிப் பிரமாணம் செய்து கொண்டு உள்ளனர்.
- மாநகராட்சிக் கழகத்தின் மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிகளுக்கான மறைமுக தேர்தலானது மார்ச் 4 ஆம் தேதியன்று மாநிலம் முழுவதும் நடைபெற்றது.
- ஒரு ஆறு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 489 நகரப் பஞ்சாயத்துகளுக்கு (பேரூராட்சிகள்) பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- 20 மேயர் பதவிகளில் 11 இடங்களைப் பெண்களுக்கும், 9 இடங்களை ஆண்களுக்கும் தி.மு.க. அரசானது ஒதுக்கியுள்ளது.

| Tamilnadu list | | | |
|---|---|---|---|
| **Chennai Corporation** | **Tambaram Corporation** | **Salem Corporation** | **Karur Corporation** |
| Mayor: R Priya M.Com | Mayor: Vasanthakumari Kamalakanan B.Tech | Mayor: A Ramachandran | Mayor: Kavitha Ganesan M.sc., B.Ed., |
| Deputy Mayor: Mukesh kumar BA | Deputy Mayor: G. Kamaraj | **Tirupur Corporation** | Deputy Mayor: Dharani B. Saravanan B.Sc., |
| **Madurai Corporation** | **Kancheepuram Corporation** | Mayor: N Dinesh Kumar M.B.A., | **Hosur Corporation** |
| Mayor: Indirani B.A., M.L.I.S., | Mayor: Mahalakshmi Yuvaraj B.E., M.B.A., | **Erode Corporation** | Mayor: S Sathya |
| **Tiruchy Corporation** | **Vellore Corporation** | Mayor: Nagarathinam | Deputy Mayor: C Anandhaiyya |
| Mayor - M Anbazhagan M.A., | Mayor: Sujatha Anandakumar | Deputy Mayor: Selvaraj | **Dindigul Corporation** |
| Deputy Mayor: Divya Dhanakodi B.Com | Deputy Mayor: Mr Sunil | **Tutucorin Corporation** | Mayor: Elamathi B.B.A., |
| **Tirunelveli Corporation** | **Cuddalore Corporation** | Mayor: NB Jegan, M.Com., | Deputy Mayor: Rajappa |
| Mayor: BM Saravanan B.A., | Mayor: Mrs. Sundari | Deputy Mayor: Jenita Selvaraj | **Sivakasi Corporation** |
| Deputy Mayor: KR Raju B.A.,D.Lit., | **Tanjavur Corporation** | **Avadi Corporation** | Mayor: Sangeetha Inbam B.A., |
| **Coimbatore Corporation** | Mayor : SN Raamanathan M.B.A., | Mayor: G Udhayakumar | Deputy Mayor: Vignesh Priya M.Sc, |
| Mayor: Kalpana | Deputy Mayor: Anjugam Boopathi M.B.B.S., M.D., | **Nagercoil Corporation** | |
| Deputy Mayor: R Vetriselvan | **Kumbakonam Corporation** | Mayor: Magesh B.A, B.L., | |
| | Deputy Mayor: Tamizazhagan | Deputy Mayor: Mary Princy M.A., | |

## தமிழகத்தின் ஒட்டு மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறன்

- ஒட்டு மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறனில் கர்நாடகாவை விஞ்சி, தமிழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளதாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சகம் கூறியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஜனவரி 31 அன்றைய நிலவரப்படி, தமிழகத்தின் முழு அளவு புதுப்பிக்கத் தக்க எரிசக்தி உற்பத்தித் திறனானது 15,914 மெகாவாட் ஆக உள்ளது.
- கர்நாடகாவின் மொத்த தூய எரிசக்தி திறன் 15,795 மெகாவாட் ஆகும்.
- சமீப ஆண்டுகளில், கர்நாடகாவுக்குப் பதிலாக முதலிடத்தை மீண்டும் பெறுவதற்காக சூரிய மற்றும் காற்றாலை எரிசக்திப் பிரிவுகளில் தனது உற்பத்தித் திறனை தமிழகம் அதிகரித்துள்ளது.

## மாளிகைமேடு அகழாய்வு

- அரியலூரில் தங்கம் மற்றும் தாமிரத்தால் ஆன உடைந்த வளையல், ஒரு செங்கல்லால் ஆன அமைப்பு மற்றும் சீனப் பானை ஓடுகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.
- கங்கை கொண்ட சோழபுரம் அருகே அமைந்த மாளிகைமேடு பகுதியின் தெற்குப்

பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் கட்ட அகழாய்வின் போது இவை கண்டு எடுக்கப் பட்டன.

- 7.920 கிராம் எடையுள்ள 4 மி.மீ. தடிமண் கொண்ட தாமிரம் மற்றும் தங்கத்தால் ஆன உடைந்த வளையல் ஆனது இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட முதல் தொல்பொருள் ஆகும்.
- தங்கம் மற்றும் இதர உலோகங்களால் கலந்து செய்யப்பட்ட பொருள்கள் இங்கு கிடைத்திருப்பது இங்கு ஓர் அரச அரண்மனை இருந்ததைக் குறிக்கிறது.




## ஆவடி காவல் ஆணையரகம் - பெண்கள் தலைமை

- சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டுப் பெண் பணியாளர்களின் பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில், ஆவடி காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட அனைத்துக் காவல் நிலையங்களின் பொறுப்பும், ஒரு நாளிற்குப் பெண் அதிகாரிகளுக்கு வழங்கப் பட உள்ளது.
- இந்தியாவிலேயே முதல்முறையாக ஒரு ஆணையரகத்திற்குட்பட்ட அனைத்து காவல் நிலையங்களுக்கும் பெண் அதிகாரிகள் தலைமை ஏற்கின்றனர்.
- இது நமது சீருடைப் பணியாளர் பணிகளில் மகளிரின் பங்கினை அங்கீகரித்து, அவர்களைக் கௌரவித்துக் கொண்டாடுவதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.



## இந்தியாவின் முதல் அறைகலன் பூங்கா

- தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ள இந்தியாவின் முதல் சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு (furniture park) தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.
- 70-80% மூலப்பொருள் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலான ஒரு சிறப்பானச் சூழலமைப்பினை உருவாக்குவதே இந்தப் பூங்கா அமைக்கப்படுவதன் நோக்கமாகும்.




## தமிழ்நாட்டில் மிதக்கும் சூரியசக்தி ஆலை



- தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் மிதக்கும் சூரியசக்தி ஆலையினை முன்னணி உர உற்பத்தி நிறுவனமான சதர்ன் பெட்ரோகெமிக்கல் தொழில்துறைக் கழக நிறுவனமானது (Southern Petrochemical Industries Corporation) நிறுவியுள்ளது.
- இந்த ஆலையானது, தமிழகத்தில் அமைந்துள்ள இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் முதல் மிதக்கும் சூரியசக்தி ஆலையாகத் திகழும்.
- இந்த ஆலையானது, AM இன்டர்நேஷனல் என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான கிரீனம் எனர்ஜி என்ற ஒரு நிறுவனத்திற்குச் சொந்தமாகும்.
- ஆண்டிற்கு 42.0 மில்லியன் அலகு மின்னாற்றலை இந்த ஆலை உற்பத்தி செய்யும்.

## பேரறிவாளனுக்கு ஜாமீன் வழங்கல்



- ❖ ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளியான AG பேரறிவாளனுக்கு உச்சநீதிமன்றம் ஜாமீன் வழங்கியுள்ளது.
- ❖ ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன் ஆயுள் தண்டனையை அனுபவித்து வருகிறார்.
- ❖ இவர் இதுவரையில், 32 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையை அனுபவித்துள்ளார்.
- ❖ 2014 ஆம் ஆண்டில் இரண்டு இலங்கைத் தமிழர்களான முருகன் மற்றும் சாந்தன் ஆகியோருடன் இவருக்கும் சேர்த்து உச்ச நீதிமன்றமானது, அவர்களின் கருணை மனுக்கள் மீதான முடிவினை நீண்ட நாள் மேற்கொள்ளாததால் அவர்களது மரணத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றியது.
- ❖ 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசின் அமைச்சரவைக் குழுவானது இந்திய அரசியலமைப்பின் விதி 161 (மன்னிக்கும் அதிகாரம்) என்பதின் கீழ் ஆளுனரிடம் பேரறிவாளனின் விடுதலையினைப் பரிந்துரை செய்தது.

## வளர்ப்பு மாடுகளைக் காடுகளுக்குள் அனுமதித்தல் தொடர்பான தீர்ப்பு

- ❖ தமிழகம் முழுவதும் உள்ள வனப்பகுதிகளில் வளர்ப்பு மாடுகளை மேய்ச்சலுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கக் கூடாது என மாநில வனத்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு இட்டுள்ளது.
- ❖ வனங்களை வனவிலங்குகளுக்கு மட்டும் உரித்தானதாக மாற்றுவதற்கும், வளர்ப்பு மாடுகள் அங்கு உள்நுழைவதால் அவை எதிர்கொள்ளும் பல்வேறு அச்சுறுத்தல்களைத் தடுப்பதற்கும் வேண்டி இந்தத் தீர்ப்பானது வழங்கப் பட்டுள்ளது.

## ஔவையார் விருது 2022

- ❖ 2022 ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை சமூக சேவகர் கிரிஜா குமார் பாபுவிற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.
- ❖ மகளிர் மற்றும் குழந்தைகளின் நலனுக்காக இவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- ❖ இந்த விருது 8 கிராம் தங்கப் பதக்கம், 1 லட்சம் மதிப்புள்ள காசோலை, ஒரு சால்வை மற்றும் ஒரு பாராட்டுப் பத்திரம் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- ❖ 2020 – 21 ஆம் ஆண்டிற்கான பாரத் ரத்னா டாக்டர். M.G.R. பாரம்பரிய அரிசி வகை வளங் காப்பு விருதினையும் திரு. முதல்வர் அவர்கள் வழங்கினார்.

- இந்த விருதானது திருநெல்வேலியைச் சேர்ந்த K. பொன்னு புதியவன், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த S. மூர்த்தி மற்றும் திருநெல்வேலியைச் சேர்ந்த P. லக்ஷ்மி தேவி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.



## முதலமைச்சரின் கூட்டு ஆராய்ச்சித் திட்டம்

- 2022-24 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சரின் கூட்டு ஆராய்ச்சித் திட்டத்தை (TNCMFP) செயல்படுத்துவதற்கான ஆணைகளை மாநில அரசு வெளியிட்டுள்ளது.
- இதில் அடையாளம் காணப்பட்ட 12 கருப்பொருள் பகுதிகளில் ஆராய்ச்சி செய்வதற்கு 24 நபர்கள் பெல்லோஷிப் (தோழமை உதவி) பெறுவார்கள்.
- இந்தக் கொள்கையானது, செயல்திறன் குறித்து ஆராயவும், இடைவெளிகளைக் கண்டறியவும், கொள்கை மற்றும் நிரல் விளைவுகளுக்கு சர்வதேச அளவில் குறிப்பிடப் பட்ட அளவுகோல்களை உருவாக்கவும், அறிவு மற்றும் செயல் சார்ந்த வளங்களின் ஒரு தொகுப்பை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- திருச்சியில் உள்ள பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனமானது இந்த தோழமை உதவி அல்லது பெல்லோஷிப்களுக்கான ஒரு கல்விப் பங்குதாரராக முன் மொழியப் பட்டுள்ளது.

Research will be done in 12 areas to: 1) augment water resources, 2) increase agricultural production and create marketing linkages, 3) provide housing for all, 4) improve educational standards, 5) boost health indicators, 6) achieve social inclusion, 7) upgrade infrastructure and facilitate industrial development, 8) provide skill development and entrepreneurship development, 9) facilitate institutional credit, 10) protect heritage and culture, 11) achieve ecological balance and 12) enhance data governance.

## தமிழ்நாடு பெட்ரோலியப் பொருட்கள் நிறுவனம்

- தமிழ்நாடு பெட்ரோலியப் பொருட்கள் நிறுவனமானது ரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சகத்தின் வேதிப்பொருட்கள் மற்றும் பெட்ரோலிய வேதிப் பொருட்கள் துறையிலிருந்து அதன் தயாரிப்பான லீனியர் அல்கைல்பென்சீனுக்கு (LAB) இந்தியத் தரநிலைகள் வாரியத்தின் (BIS) சான்றிதழைப் பெற்றுள்ளது.
- இந்தச் சான்றிதழுடன், இந்தியச் சந்தையில் லீனியர் அல்கைல்பென்சீனின் அங்கீகரிக்கப் பட்ட ஒரு விற்பனையாளராக தமிழ்நாடு பெட்ரோலியப் பொருட்கள் நிறுவனம் முன்வருகிறது.


- BIS 12795:2020 என்ற ஒரு சான்றிதழுடன் அங்கீகாரம் பெற்ற உலகின் முதல் லீனியர் அல்கைல்பென்சீன் உற்பத்தியாளராகவும் இது மாறியுள்ளது.




## தமிழகத்தில் சொத்துப் பதிவு

- இந்த நிதியாண்டின் 2வது வாரம் வரையில் 12,700 கோடி ரூபாய் வருவாய் கிடைத்து உள்ளதையடுத்து சொத்துப் பதிவு மூலம் கிடைத்த வருவாய் ஒரு புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.
- 2019–20 மற்றும் 2020–21 ஆகிய ஆண்டுகளில் பதிவான 1,672 கோடி மற்றும் 2,057 கோடிகள் வருவாயினைப் பொறுத்தவரையில் இது மிக அதிக உயர்வாகும்.
- சென்னை மற்றும் கோயம்பத்தூர் மண்டலங்கள் ஒருசேர இணைந்து இதன் மொத்த வருமானத்தில் 60% வரை பங்களித்துள்ளன.
- செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய சென்னை மண்டலம் மொத்த வருமானத்தில் 45% பங்கினை அளித்துள்ளது.

## தி ஸ்பாட்டட் ராயல் வண்ணத்துப்பூச்சி



- ஸ்பாட்டட் ராயல் (தாஜூரியா மாகுலேட்டா) என்ற வண்ணத்துப் பூச்சியானது, நீலகிரி மாவட்டத்தில் மீண்டும் கண்டறியப்பட்டுள்ளது.
- இது ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நீலகிரியில் தென்படாமலிருந்தது
- இது வின்டர் பில்த் சங்கத்தினைச் சேர்ந்த உறுப்பினர்களால் (Wynter-Blyth Association) மீண்டும் கண்டுபிடிக்கப் பட்டது.

- ❖ இவை இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் தென்படுவதாக அறியப்படுகிறது.
- ❖ ஸ்பாட்டட் ராயல் என்பது அதற்கு உணவளிக்கும் லோராந்தஸ் இனத்தை (Loranthus species) சேர்ந்த ஒரு தாவரத்திற்கு அருகில் வாழ்கிறது.

## தமிழ்நாடு கோவிட்-19 இறப்புப் பதிவு

- ❖ ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழகத்தில் மார்ச் 11 அன்று கோவிட்-19 இறப்பு எதுவும் பதிவாகவில்லை.
- ❖ 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இதுவரையில் தமிழகத்தில் 38,023 கோவிட் இறப்புகள் பதிவாகியுள்ளன.
- ❖ மதுரையில் உள்ள இராஜாஜி அரசுப் பொது மருத்துவமனையில் 2020 ஆம் ஆண்டு மார்ச் 25 அன்று முதலாவது கோவிட் இறப்பு பதிவானது.

## ஐஸ்கிரீம் தொழிற்சாலை

- ❖ மதுரையில் உள்ள ஆவின் பால் பண்ணையில் ஒரு புதிய ஐஸ்கிரீம் (பனிக்கூழ்) தொழிற்சாலையைத் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- ❖ தேசியப் பால் வாரியம் சார்பில் 30,000 லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட ஒரு புதிய ஐஸ்கிரீம் ஆலையை முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- ❖ சென்னைக்கு அடுத்தபடியாக தமிழகத்தின் 2வது ஆவின் ஆலை இங்கு அமைக்கப் பட்டுள்ளது.



## மேம்பட்ட எந்திர மனித அறுவைச் சிகிச்சை மையம்




- ஓமந்தூரார் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசுப் பல்நோக்கு மருத்துவமனையில் ஒரு மேம்பட்ட எந்திர மனித அறுவைச் சிகிச்சை மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
- இரண்டு கட்டுப்பாட்டு நிலையங்கள் கொண்ட எந்திர இயக்க அமைப்புகளானது தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகம் மூலம் வாங்கப்பட்டது
- தமிழ்நாடு அரசுப் பல்நோக்கு மருத்துவமனையில் நிறுவப்பட்ட டா வின்சி என்ற எந்திர மனித அறுவை சிகிச்சை முறையானது குறைந்தபட்ச வளர்ச்சியைப் பெற்று வரும் அறுவை சிகிச்சை முறையின் ஒரு மேம்பட்ட வடிவமாகும்.
- இந்த எந்திர மனித அறுவைச் சிகிச்சையானது அறுவைச் சிகிச்சை நிபுணர்களுக்கு ரோபோ (எந்திர மனிதன்) கருவிகளைப் பயன்படுத்தி மிகச் சிக்கலான மிகப்பெரிய அறுவை சிகிச்சைகளை எளிதாகச் செய்ய உதவும்.
- இந்த மையம் நாட்டில் அரசிற்கு சொந்தமாக அரசால் ஏற்படுத்தப்பட்ட முதல் மையம் ஆகும்.

## தமிழ்நாடு தரவுக் கொள்கை


- தமிழ்நாடு அரசானது, திறம்பட்ட சில முடிவுகளை மேற்கொள்வதற்காக வேண்டி தரவுகளைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு தரவுக் கொள்கையினை உருவாக்கியுள்ளது.
- இது கொள்கை உருவாக்கம், திட்ட அமலாக்கத்தினை மேம்படுத்துதல், மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளை ஊக்குவித்தல், சேவைகளுக்கான அணுகல் மற்றும் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை ஆதரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

- தலைமைச் செயலாளரின் தலைமையிலான மாநில அளவில் அதிகாரம் பெற்ற ஒரு தரவு நிர்வாகக் குழுவானது, தரவுக் கொள்கைக் கட்டமைப்பிற்கான ஒரு மூலோபாய வழிகாட்டுதலை வழங்கும்.
- தமிழ்நாடு மின் ஆளுகை முகமையின் (TNeGA) தலைமை நிர்வாக அதிகாரியின் தலைமையிலான துறைகளுக்கு இடையேயான ஒரு தரவு குழுவானது, கொள்கையின் வழியிலான செயல்பாட்டு நிலை முடிவுகளை மேற்கொள்ளும்.
- தமிழ்நாடு மின் ஆளுகை முகமையின் தலைமை நிர்வாக அதிகாரி, மாநிலத்தின் முதன்மைத் தரவு அதிகாரியாகச் செயல்படுவார்.






## தமிழக நிதிநிலை அறிக்கை – சிறப்பம்சங்கள்




- தமிழக நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், 2022 – 23 ஆம் ஆண்டிற்கான பொது நிதிநிலை அறிக்கையினை 2022 ஆம் ஆண்டு மார்ச் 18 அன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.
- இது தி.மு.க அரசின் 2வது நிதிநிலை அறிக்கையாகும்.
- இது மின்னணு முறையில் தாக்கல் செய்யப்பட்டது.
- பருவநிலை மாற்றம் மற்றும் பசுமை முன்னெடுப்புகளுக்காக ஒரு தனி அமைப்பானது நிறுவப்படும்.
- தமிழகத்தின் மாநில விலங்கினைப் பாதுகாத்து வளங்காப்பதற்காக வேண்டி நீலகிரி வரையாடு திட்டத்தினை அரசு அறிவித்துள்ளது.

- தமிழகத்திலுள்ள அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையில் பயின்ற அனைத்துப் பெண் மாணவிகளுக்கும் இளங்கலைப் பட்டப்படிப்பு, பட்டயப் படிப்பு மற்றும் தொழில்துறைக் கல்விப் படிப்புகளைத் தடையின்றி முடிக்கும் வரை அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக மாதம் ரூ.1000 செலுத்தப்படும்.
- புலம்பெயர் தொழிலாளர்களுக்காக நடமாடும் தகவல் வழங்கீட்டு மையங்களானது தொடங்கப் படும்.
- அரசுப் பள்ளிகளை நவீனமயமாக்குவதற்காக வேண்டி பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டமானது தொடங்கப்படும்.
- அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு மாநிலப் புத்தாக்க நிறுவன மையமானது சென்னையின் நுங்கம்பாக்கத்தில் தமிழ்நாடுத் தொழில்துறை மேம்பாட்டுக் கழகத்தினால் நிறுவப்படும்.

## மீனா சுவாமிநாதன்

- குழந்தைநல ஆர்வலரான மீனா சுவாமிநாதன் வயது முதிர்வு காரணமாக சமீபத்தில் காலமானார்.
- இவர் 89 வயதானவராவார்.
- இவர் வேளாண் அறிவியலாளர் M.S. சுவாமிநாதன் அவர்களின் மனைவி ஆவார்.



## தமிழக நிதிநிலை அறிக்கை 2022 - முக்கிய அம்சங்கள்

- வருவாய் பற்றாக்குறையானது 4.61 சதவீதத்தில் இருந்து 3.80 சதவீதமாக குறைந்து ₹7,000 கோடி ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- 2014 ஆம் ஆண்டு முதல் அபாயகரமான அளவில் அதிகரித்து வரும் இந்த வருவாய்ப் பற்றாக்குறையானது இந்த ஆண்டில் தலைகீழான மாற்றத்தைச் சந்திக்கும்.
- திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டில் 2021-22 ஆம் ஆண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை ஆனது ₹58,692.68 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்றைய நிலவரப்படி தமிழகத்தின் நிலுவைக் கடன் தொகை ₹6,53,348.73 கோடியாக இருக்கும்.
- இது 2022-23 ஆம் ஆண்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 26.29% ஆகும்.
- நிதிப் பற்றாக்குறையானது, கடந்த ஆண்டில் இருந்த 4.61 சதவீதத்தில் இருந்து 3.8 சதவீதமாகக் குறையும்.

- தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக, பள்ளிக் கல்வித்துறைக்கு மாநில நிதிநிலை அறிக்கையில் அதிகபட்சமாக ரூ.36,895.89 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



*முக்கிய முன்னெடுப்புகள்*

- பெண்களின் திருமணத்திற்குத் தங்கம் மற்றும் நிதியுதவி வழங்கி வந்த 'தாலிக்கு தங்கம்' என முன்பு அழைக்கப்பட்ட ஒரு திட்டமானது, உயர்கல்வி உறுதித் திட்டமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
- பெரியாரின் நூல்கள் மற்றும் படைப்புகளைப் பிற மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்வதற்காக ₹5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- தரமான மனநலச் சேவைகளை வழங்குவதற்காக, சென்னையின் கீழ்ப்பாக்கத்தில் உள்ள மனநலக் கழகத்தை மேம்படுத்தச் செய்வதன் மூலம், தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்தை நிறுவுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.
- இந்த ஆண்டில், விழுப்புரம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அருங்காட்சியகங்கள் கட்டப்படும்.
- கிண்டி சிறுவர் பூங்காவை மறுவடிவமைத்து பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், விலங்குகள் ஆகியவை அதில் உள்ளடங்கும் வகையில் ஒரு குழந்தைகள் இயற்கைப் பூங்கா அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- சென்னையில் உள்ள பேரிடர் முன்னெச்சரிக்கை அமைப்பை மேம்படுத்த மாநில அரசு ₹10 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.
- இந்தியாவில் ஒரு மாநில அரசால் மேற்கொள்ளப்பட்ட இது போன்ற முதல் வகை முன்னெடுப்பு இதுவாகும்.
- அரசுப் பள்ளி மாணவர்களை இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், இந்திய அறிவியல் கல்வி நிறுவனம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனம் போன்ற முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் சேரத் தூண்டும் வகையில், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த மாணவர்களின் இளங்கலைக் கல்விக்கான முழுச் செலவையும் தமிழக அரசே ஏற்கும்.
- மதுரவாயல் - சென்னைத் துறைமுகத்தின் மேம்படுத்தப்பட்ட வழித்தடத் திட்டத்தை தமிழக அரசு புதுப்பித்துச் செயல்படுத்தும்.
- மாநிலத்தில் சிறப்பு சமூக ஊடகக் கண்காணிப்புப் பிரிவுகள் அமைக்கப்படும்.

- இது சமூக ஊடகத் தளங்களில் பரவும் போலிச் செய்திகள் மற்றும் தவறான தகவல்களைத் தடுப்பதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.
- பிரபலத் தமிழ் துறவியும் கவிஞருமான இராமலிங்க அடிகள் அல்லது வள்ளலாரின் 200வது பிறந்தநாளை நினைவு கூரும் வகையில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆதரவற்ற விலங்குகளைப் பராமரிக்க வழிவகுக்கச் செய்யும் வகையில் 'வள்ளலார் பல்லுயிர்க் காப்பகங்கள்' திட்டத்தை அரசு தொடங்கவுள்ளது.
- தென்காசி மாவட்டத்தின் குற்றாலத்தில் உள்ள பழங்குடியினர் உள்தள அருங்காட்சியகம், திருவள்ளூர் மாவட்டத்தின் பூண்டியில் உள்ள முந்தைய வரலாற்றுக் காலப் பொருட்களின் உள்தள அருங்காட்சியகம், தருமபுரி மாவட்டத்தில் உள்ள நடுகற்கள் கொண்ட உள்தள அருங்காட்சியகம் ஆகியவை மேம்படுத்தப்படும்.
- ஜெர்மனியின் KfW என்ற வங்கியின் உதவியுடன் அமல்படுத்தப்படும் 'தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் இயங்கும் பேருந்துகளைப் பருவநிலைக்கு ஏற்ப நவீன மயம் செய்தல்' என்ற திட்டத்தின் கீழ், 2,213 BS-VI ரக புதிய டீசல் பேருந்துகள் மற்றும் 500 புதிய மின்சாரப் பேருந்துகள் வாங்கப்படும்.


***குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை***

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSMEs) துறைக்கான ஒதுக்கீடானது கிட்டத்தட்ட 48% வரை உயர்த்தப்பட்டது.
- குறு நிறுவனங்களின் தொகுதிகளுக்கு உதவச் செய்யும் நோக்கில், ஒரு புதிய "குறு நிறுவனங்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டமானது" தொடங்கப்பட உள்ளது.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் நரிக்குறவர்களால் மேற்கொள்ளப்படும் செயற்கை ஆபரணங்கள் தயாரிப்புத் தொழில், மதுரை மாவட்டத்தில் பொம்மைத் தயாரிப்புத் தொகுதிகள், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சமையல் பாத்திரங்கள் தயாரிப்புத் தொகுதிகள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் உள்ள முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலைத் தொகுதிகள், உள்ளிட்ட 20 சிறு குறு நிறுவனங்கள் தொகுதிகளை மேம்படுத்துவதற்கு ₹50 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டு உள்ளது
- கோயம்புத்தூரில் தமிழ்நாடு தென்னை நார் தொழில் வளர்ச்சிக் கழகம் ஆனது அமைக்கப் படும்.
- கோயம்புத்தூர், பெரம்பலூர், மதுரை, வேலூர் மற்றும் திருவள்ளூர் போன்ற மாவட்டங்களில் பரவலான ஒரு தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் புதிய தொழில் பூங்காக்களை அரசு அமைக்க உள்ளது.
- மின்னணுப் பொருட்கள் உற்பத்திக்காக வேண்டி பிள்ளைப்பாக்கம் மற்றும் மணலூரில் இரண்டு பிரத்தியேக உற்பத்தித் தொகுதிகள் உருவாக்கப்படும்.
- போக்குவரத்தை எளிதாக்கவும், கனரக வாகனங்கள் நிறுத்துமிடங்களை முறைப் படுத்தவும் செய்யாறு மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் சரக்குந்து முனைய வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- பட்டியலிடப்பட்ட சாதி/பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சமுதாயத்தினைச் சேர்ந்த தொழில் முனைவோருக்கு அரசு மேற்கொள்ளக் கூடிய கொள்முதலில் 5% ஒதுக்குவது தொடர்பான முன்னெடுப்பு மற்றொரு குறிப்பிடத்தக்க முயற்சியாகும்.

## தமிழ்நாடு வேளாண் நிதிநிலை அறிக்கை

- ❖ தமிழ்நாடு வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் M.R.K. பன்னீர் செல்வம் தனது முதலாவது முழு அளவிலான 2022-2023 ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தார்.
- ❖ விவசாய நிலப்பரப்பை 53.50 லட்சம் ஏக்கராக அரசு உயர்த்தியுள்ளது.
- ❖ மேலும், இயற்கை வேளாண்மைக்கு 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததோடு, தினை உற்பத்தியை அதிகரிக்க சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தவும் முடிவு செய்யப் பட்டது.
- ❖ வேளாண் சார்ந்த தொழில்களைத் தொடங்க 200 படித்த இளைஞர்களுக்கு ரூ.1 லட்சம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ 71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கவுள்ளது.
- ❖ பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் சமுதாயத்தினைச் சேர்ந்த விவசாயிகளுக்கான மானியத்தை 20% உயர்த்தி, அதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.
- ❖ சேலம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் துவரம் பருப்புச் சாகுபடிக்காக சிறப்பு மண்டலங்கள் அமைக்கப்படும்.
- ❖ மயிலாடுதுறையில் ரூ.75 லட்சம் மதிப்பீட்டில் புதிய மண் பரிசோதனை மையம் அமைக்கப் படும்.
- ❖ விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க தமிழக அரசு 5,157 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது.
- ❖ மயிலாடுதுறையில் NPKR. ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மீண்டும் திறக்கப் படும்.
- ❖ பாரம்பரிய வகை காய்கறிகளைச் சாகுபடி செய்வதற்கு புத்துயிர் அளிப்பதற்காக ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ❖ பருவம் சாராத தக்காளி சாகுபடிக்கு, 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ❖ மாநிலத்தில் பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக 10 லட்சம் பனை விதைகளை விநியோகிக்க அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ இந்த ஆண்டில், 126 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியை எட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ❖ 381 கோடி ரூபாய் செலவில் தேனி, திண்டிவனம், மணப்பாறை ஆகிய இடங்களில் மூன்று உணவுப் பூங்காக்கள் அமைக்கப்படும்.
- ❖ வெல்லம் உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபடுத்தப்படுவர்.
- ❖ தமிழக முதல்வரின் திட்டத்தின் கீழ் 3,000 சூரிய ஒளியில் இயங்கும் பம்புகள் அமைக்கப் படும்.
- ❖ டிஜிட்டல் வேளாண்மைக்கு ரூ.8 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ❖ விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறையைப் போக்கச் செய்வதற்காக இயந்திரங்கள் வாங்குவதற்கு 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ விவசாயிகள் சந்திக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண தமிழக தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு சிறப்புக் குழுவானது அமைக்கப்படும்.

- விவசாயத்தில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு மாநில அரசு விருது வழங்கப்படும்.
- மாநில மற்றும் மாவட்ட அளவில் தினை திருவிழாக்கள் நடத்தப்படும்.
- விதைப்பு முதல் விற்பனை வரையிலான விவரங்களை அறிந்து கொள்ளும் வகையில் விவசாயிகளுக்காக ஒரு செயலியை அரசு வடிவமைத்துள்ளது.
- தனியார் நிறுவனங்களுடன் இணைந்து கோயம்புத்தூர், தேனி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் காய்கறி சந்தை வளாகம் அமைக்கப்படும்.




## நரசிங்கப்பேட்டை நாகஸ்வரம்

- நரசிங்கப்பேட்டை நாகஸ்வரம் 15 ஆம் வகுப்பு வகையிலான இசைக்கருவிகளின் கீழ் புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
- இந்த நாகஸ்வரத்தின் தனிச்சிறப்பு அதன் உற்பத்தி செயல்முறையாகும்.
- இது இயந்திரத்தினால் தயார் செய்யப்பட்ட மற்ற நாகஸ்வரங்களைப் போல் அல்லாமல், தஞ்சாவூரில் உள்ள நரசிங்கப்பேட்டை கிராமத்தில் கையால் செய்யப் படுகிறது.
- நாகஸ்வரம் செய்யும் கைவினைஞர்கள் அதற்கான மரத்தைப் புத்திசாலித்தனமாக தேர்வு செய்கிறார்கள்.
- இதற்காக 200 ஆண்டுகள் பழமையான ஒரு வகையான கருங்காலி மரம் பயன்படுத்தப் படுகிறது.
- இதன் குழல்கள் உள்நாட்டில் விளையும் 'நாணல்' (ஒரு வகை மூங்கில்) என்ற ஒரு தாவரத்தின் இலைகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.



## பல்நோக்கு மருத்துவமனை




- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கிண்டியில், அமைக்கப்பட உள்ள பல்நோக்கு மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்.
- 1000 படுக்கைகள் வசதி கொண்ட ஒரு பல்நோக்கு மருத்துவமனைக்கான அடிக்கல் நாட்டு விழா சென்னையிலுள்ள கிங் நிறுவன வளாகத்தில் நடத்தப்பட்டது.

## பசுமை சான்றிதழிலளிப்புத் திட்டம்

- தமிழக அரசானது பசுமைச் சான்றிதழிலளிப்புத் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இது பருவநிலை மாற்றத்திற்கான ஏற்பு மற்றும் தணிப்பு சார்ந்த நடவடிக்கை போன்ற முன்னெடுப்புகளில் இளைஞர்களைத் துடிப்பான முறையில் ஈடுபடுத்துவதற்கானத் திட்டமாகும்.
- கொள்கைகளினால் கிடைத்தப் பயன்களைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல், அதன் தாக்கங்களைப் பற்றி தகவல் அளித்தல் மற்றும் சிறப்பானச் சேவைகளை வழங்குதல் போன்ற பணிகளை இவர்கள் மேற்கொள்வர்.
- ஒரு மாவட்டத்திற்கு ஒன்று மற்றும் மாநில அளவில் இரண்டு என மொத்தம் 40 பசுமைப் பங்களிப்பாளர்கள் இதில் இருப்பர்.

## தமிழ்நாடு வேளாண் நிதிநிலை அறிக்கை – 2022 முக்கிய அம்சங்கள்

- 2022-23 ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கைத் திட்டத்திற்காக இந்த ஆண்டு 33,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு வேளாண் துறைக்காக, கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட 32,775.78 கோடி ரூபாயிலிருந்து ரூ.231.90 கோடி ரூபாய் தொகை உயர்த்தப்பட்டுள்ளது.
- தமிழக அரசானது மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரம் வழங்க முடிவு செய்து அதற்காக 5,157.56 கோடி ரூபாயினை ஒதுக்கி உள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தி இலக்கு 126 லட்சம் மெட்ரிக் டன்களாகும்.

- பருத்தி மகசூலை அதிகரிப்பதற்காக, மத்திய மற்றும் மாநில அரசு நிதியுடன் சேர்த்து, 15.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலையானப் பருத்திச் சாகுபடி என்ற திட்டமானது அமல்படுத்தப்படும்.
- தமிழகத்தின் தஞ்சாவூர், சேலம், திருவள்ளூர், நெல்லை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் சோயா அவரைச் சாகுபடியை அதிகரிப்பதற்கு வேண்டி சில சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்துடன் இணைக்கப்பட்ட 3,204 கிராமப் பஞ்சாயத்துகளில் 300 கோடி ரூபாய் செலவில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டுத் திட்டமானது அமல்படுத்தப்பட்டது.
- மொத்தம் 10 கோடி ரூபாய் செலவில் தர்மபுரி, நாகப்பட்டினம், வேலூர், மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் 4 புதிய உழவர் சந்தைகள் நிறுவப்படும்.
- மாநில மரமான பனை மரத்தின் எண்ணிகையை அதிகரிப்பதற்காக 10 லட்சம் பனை விதைகளை மாநில அரசு விநியோகம் செய்யும்.
- கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு மானியமாக மெட்ரிக் டன்னிற்கு ரூ.195 மானியம் வழங்கப் பட உள்ளதால் அதன்மூலம் 1.2 லட்சம் விவசாயிகள் பயனடைவர்.
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்துடன் இணைந்து “தமிழ் மண் வளம்” என்ற ஒரு பிரத்தியேக தளமானது உருவாக்கப்படும்.




## நெல் சாகுபடிப் பரவல்

- தமிழகத்தில் 2021-22 ஆம் நிதியாண்டில் நெல் சாகுபடி புதிய உச்சத்தை எட்டியது.
- மொத்தச் சாகுபடிப் பரப்பானது 21.65 லட்சம் ஹெக்டேர்களாகும்.
- கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு நெல் சாகுபடியானது இந்த அளவிற்குப் பரவியுள்ளது.
- இதற்கு முன்பாக 2015-16 ஆம் ஆண்டில் 20 லட்சம் ஹெக்டேர் என்ற ஒரு அளவிலேயே சாகுபடி இருந்தது.

## மேகதாது அணைத் திட்டத்திற்கு எதிரான தீர்மானம்

- மேகதாது அணைத் திட்டத்திற்காக கர்நாடக அரசு சமர்ப்பித்த ஒரு விரிவானத் திட்ட அறிக்கையினை காவிரி நீர் மேலாண்மை ஆணையம் பரிசீலிக்கக் கூடாது என்று தமிழக சட்டசபையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதியளிக்கக்கூடாது எனவும் இத்தீர்மானத்தில் வலியுறுத்தப் பட்டது.

## முதல் பெண் துபாசி

- இராஜலட்சுமி, 1990 ஆம் ஆண்டில் ஓர் உதவியாளராக சட்டசபையில் இணைந்தார்.
- இவர் அடுத்த மே மாதத்தில் ஓய்வு பெற உள்ளார்.
- இவர் தற்போது துபாசி ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தமிழ்நாடு சட்டசபையின் இந்த மாதிரியான பதவியில் பெண் ஒருவர் நியமிக்கப் படுவது இதுவே முதல்முறையாகும்.



## வள்ளுவர் தெரு

- திருவள்ளுவரை கௌரவிக்கும் வகையில் அமெரிக்காவில் ஒரு தெருவிற்கு வள்ளுவர் தெரு என பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- அமெரிக்காவில் வெர்ஜினியா மாநிலத்தில் உள்ள பேர்பேக்ஸ் மாகாணத்தில் உள்ள ஒரு தெருவிற்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- இந்தத் தெரு ஆங்கிலத்தில் 'Valluvar Way' எனவும், தமிழில் வள்ளுவர் தெரு எனவும் அழைக்கப் படும்.



## உலகப் பத்திரிகைப் புகைப்படக் கலைஞர் விருது

❖ மதுரையைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர் R.செந்தில் குமரன் புகழ்பெற்ற உலகப் பத்திரிகைப் புகைப்படக் கலைஞர் விருதை வென்றுள்ளார்.

❖ 'எல்லைகள்: மனித-புலி மோதல்' என்ற தலைப்பில் அவர் சமர்ப்பித்த ஒரு புகைப்பட அறிக்கைக்காக இவர் இந்த விருதினை வென்றுள்ளார்.



## 21 அறிஞர்களுக்கு விருது

Awards Details:

Ayyan Thiruvalluvar Award for the year 2022 (late) Mr. M. Meenakshi Sundaram

Thantai Periyar Award – K. Thirunavukarasu

Annal Ambedkar Award – Justice Chandru

Grandfather Anna Award – Nanjil Sampath

Chief Kamarasar Award – Dr. Kumari Ananthan

Mahakavi Bharathiar Award – Bharathi Krishnakumar

Pavender Bharathi Dasan Award – Puluvar Senthalai Gauthaman

Muthamil police constable K.A.P. Viswanatham Award – Dr. M. Rasendran

Kambar Award – Mrs. Bharathi Bhaskar

Sollin Selver Award – Surya Xavier

Jiu Pope Award – A.S. Panneerselvan

Umarupulavar Award – Na.Mammadu

Youngsters Award – Nellai Kannan

Devanayap Pawanar Award – Ku. அரசேந்திரன்

Singaravelar Award – Poet Madhukur Ramalingam

Maraimalai Adigalar Award – Suki Sivam

Arutperunjyothi Vallalar Award – Dr. Ira. சஞ்சீவிராயர்

Ayodhya Pandit Award – Gnana Aloysius

Chief Minister Computer Tamil Award for the year 2020 – Dr. V. Dhanalakshmi

C.P. Adithyanar Monday Award – Uyirmai Magazine

Tamil Thai Award – Malaysian Tamil Writers Association, Malaysia

❖ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 21 தமிழ் அறிஞர்களுக்கு தமிழக அரசின் விருதினை வழங்கினார்.

❖ சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கில் தமிழ் மேம்பாட்டுத் துறையின் சார்பாக நடைபெற்ற விழாவில் தமிழக அரசின் சார்பாக விருது, காசோலை மற்றும் தங்கப் பதக்கம் ஆகியவற்றினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

## அந்நிய நேரடி முதலீடு - தமிழ்நாடு

- தமிழகத்தில் அந்நிய நேரடி முதலீட்டின் அளவு 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் – டிசம்பர் மாதங்களில் சுமார் 41.5% உயர்ந்து 17,696 கோடியாக (சுமார் 2.4 பில்லியன் டாலர்) உள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டின் அதே கால கட்டத்தில் (கோவிட்-19 பெருந்தொற்று தொடங்கிய போது) இருந்த 12,504 கோடி (சுமார் 1.7 பில்லியன் டாலர்) என்ற அளவிலிருந்து உயர்ந்து உள்ளது.
- இவற்றுள், 2021-22 ஆம் நிதியாண்டில் 3வது காலாண்டான அக்டோபர் – டிசம்பர் (2021) கால கட்டத்தில் 53% அல்லது 9,332 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.
- நாட்டின் மொத்த அந்நிய நேரடி முதலீட்டில் தமிழகத்தினுடையப் பங்கு 4 சதவீதம் என்ற அளவிலிருந்து 5% ஆக உயர்ந்துள்ளதாக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் தரவுகள் கூறுகின்றன.
- மகாராஷ்டிரா, கர்நாடகா, குஜராத் மற்றும் டெல்லி ஆகியவற்றையடுத்து தமிழகம் இதில் 5வது இடத்தில் உள்ளது.
- 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் – செப்டம்பர் கால கட்டத்தில் தமிழகத்தில் 8,364 கோடி அந்நிய நேரடி முதலீடுகள் மேற்கொள்ளப் பட்டன.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்

- பேராசிரியர் V. கீதாலட்சுமி என்பவரைத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக ஆளுநர் R.N. ரவி அவர்கள் நியமித்துள்ளார்.
- இவர் இப்பல்கலைக் கழகத்தின் முதல் பெண் துணை வேந்தராவார்.
- இவர் 26 வருடங்கள் ஆசிரியப் பணி அனுபவத்தினையும் முனைவர் பட்டத்திற்காக 14 ஆராய்ச்சி அறிஞர்களுக்கு வழிகாட்டிய அனுபவமும் உடையவராவார்.



## தமிழகத்தில் அமேசான் நிறுவனத்தின் மிகப்பெரிய அலுவலகம்

- தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ள அமேசான் நிறுவனத்தின் மிகப்பெரிய அலுவலகத்தினை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
- இந்த அலுவலகமானது சென்னைப் பெருங்குடியிலுள்ள இராஜீவ் காந்தி சாலையின் தகவல் தொழில்நுட்ப வழித்தடத்தில் அமைந்த உலக வர்த்தக மையத்தில் அமைக்கப் பட்டு உள்ளது.

- இந்த நவீனக் கட்டிடமானது அமேசான் நிறுவனத்தின் எகோ சாதனத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழுவினையும் உள்ளடக்கியிருக்கும்.



# தேசியச் செய்திகள்

## சர்வதேச வான்வழிப் போக்குவரத்துச் சங்கத்தின் புதிய தளம்

IATA
International Air Transportation Association

- உலகளாவிய ஒரு வங்கிக் குழுமமான ஸ்டான்டர்டு சார்டர்டு, சர்வதேச வான்வழிப் போக்குவரத்துச் சங்கத்துடன் (International Air Transport Association – IATA) இணைந்து உள்ளது.
- இது இந்தியாவின் விமானப் போக்குவரத்து தொழில்துறையில் ஒரு பணவழங்கீட்டுத் தளத்தினைத் தொடங்குவதற்கான ஒரு கூட்டிணைவாகும்.
- IATA Pay என்ற தளத்தைப் பிரயோகிக்கும் விமான நிறுவனங்களுக்கு, UPI வருடி & பண வழங்கீடு மற்றும் UPI வரவு (பண வழங்கீட்டிற்கான கோரிக்கை) போன்ற உடனடிக் கட்டண வசதிகளை வழங்குவதற்கு இது உதவுகிறது.

## நிஷான்

- இராணுவ அதிகாரிகளின் தலைமை அதிகாரி M.M. நரவானே, பெங்களூருவின் வான்குடை மிதவைப் பிரிவின் பயிற்சி மையத்தில் வான்குடை மிதவைப் பிரிவினைச் சேர்ந்த 4 படைப் பிரிவுகளுக்கு குடியரசுத் தலைவரின் வண்ணம் என்ற விருதினை வழங்கினார்.
- குடியரசுத் தலைவரின் வண்ணம் (அ) நிஷான் என்ற விருதானது, போர் மற்றும் அமைதிகாப்பு ஆகிய இரு காலங்களின் போதும் தேசத்திற்கு சிறப்பானச் சேவையை ஆற்றும் இராணுவப் பிரிவிற்கு வழங்கப்படும் உயரிய விருதுகளுள் ஒன்றாகும்.

## நிலையான நகரங்கள் திட்டம்

- உலகப் பொருளாதார மன்றம் மற்றும் தேசிய நகர்ப்புற விவகாரங்களுக்கான கல்வி நிறுவனம் ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இது கூட்டாக இணைந்து வடிவமைக்கப்பட்ட நிலையான நகரங்கள் என்ற ஒரு திட்டத்திற்கு ஒத்துழைப்பு (Sustainable Cities India program) வழங்குவதற்கான ஒரு ஒப்பந்தமாகும்.
- இது ஆற்றல், போக்குவரத்து மற்றும் கட்டமைப்பு சூழல் போன்ற துறைகளில் கார்பன் நீக்கத்திற்கான தீர்வுகளை உருவாக்குவதில் நகரங்களுக்கு உகந்த ஒரு சூழலை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசிய போலியோ தடுப்பு மருந்து வழங்கீட்டுத் தினம்




- 2022 ஆம் ஆண்டின் தேசிய போலியோ தடுப்பு மருந்து வழங்கீட்டுத் தினமானது, பிப்ரவரி 27 ஆம் தேதியன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்பட்டது.

- இந்தியாவில் ஒவ்வொர் ஆண்டும் ஒரு தேசிய அளவிலான தடுப்பு மருந்து வழங்கீட்டுத் தினமும் தேசிய அளவிற்கு முந்தைய அளவில் இரண்டு தடுப்பு மருந்து வழங்கீட்டுத் தினங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.
- இது தீவிர போலியோ வைரசிற்கு எதிரான எதிர்ப்புச் சக்தியை மக்களிடையேத் தோற்றுவிக்கவும், போலியோ இல்லாத ஒரு நிலைமையை நாட்டில் நிலை பெறச் செய்யவும் மேற்கொள்ளப் படும் ஒரு முயற்சியாகும்.
- இத்தினத்தின் போது 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசத்தின் 735 மாவட்டங்களில் 15 கோடிக்கும் அதிகமான அளவில் குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து வழங்கப் பட்டது.

## குடியரசுத் தலைவரின் கடற்படை மதிப்பாய்வு 2022





- விசாகப் பட்டினத்தின் கிழக்குக் கடற்படைப் பிரிவானது 2022 ஆம் ஆண்டிற்கான குடியரசுத் தலைவரின் கடற்படை மதிப்பாய்வினை நடத்தியது.
- இது உலகம் முழுவதும் உள்ள கடற்படைகளால் பின்பற்றப்படும் ஒரு நீண்டகால மரபு ஆகும்.
- இது அரசிற்கும் அரசின் இறையாண்மைக்குமான தனது விசுவாசத்தினையும் பற்று உறுதியினையும் வெளிப்படுத்தும் நோக்கில், முன்பே அறிவிக்கப்பட்ட ஒரு இடத்தில் கப்பல்கள் ஒன்று கூடும் ஒரு நிகழ்வாகும்.
- நாடு முழுவதும் "ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்" என்ற நிகழ்வாகக் கொண்டாடப் படும் இந்தியாவின் 75வது சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்வின் போது இது நடத்தப் பட்டதால் இந்த 12வது கடற்படை மதிப்பாய்வானது சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.
- பிரசிடென்ஸ் யாச்ட் என்பது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட கடற்படையின் ஒரு கடலோர ரோந்துக் கப்பலாகும்.
- INS சுமித்திரா இந்த மதிப்பாய்வின் அணிவகுப்பிற்குத் தலைமையேற்கும்.

## குவாண்டம் விசை வழங்கீட்டு இணைப்பு

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவற்றின் அறிவியலாளர் குழுவானது, உத்தரப் பிரதேசத்திலுள்ள பிரயாக்ராஜ் மற்றும் விந்த்யாச்சல் ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு குவாண்டம் விசை வழங்கீட்டு இணைப்பினை முதல்முறையாக வெற்றிகரமாக செயல் விளக்கிக் காட்டியுள்ளனர்.

- இதற்கான தூரம் 100 கி.மீ.க்கும் மேலாகும்.




## மத்ஸ்யா 6000

- மத்ஸ்யா 6000 நீர்மூழ்கி வாகனமானது, சமுத்திரயான் என்ற திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டில் தயாராக இருக்கும்.
- இது 3 மனிதர்களை 6000 மீட்டர் ஆழம் வரைக் கொண்டு செல்லும் திறன் கொண்டது.
- மத்ஸ்யா 6000 என்பது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தினால் வடிவமைக்கப் பட்ட ஒரு கடலடி நீர்மூழ்கு வாகனமாகும்.
- இது ஆழ்கடல் ஆய்வுத் திட்டத்தின் கீழ் புவி அறிவியல்துறை அமைச்சகத்தினால் உருவாக்கப் பட்டதாகும்.
- ஆழ்கடல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு மனிதர்களை அனுப்புவதே சமுத்திரயான் திட்டத்தின் நோக்கமாகும்.



## பாஷா சான்றிதழ் – செல்ஃபி பிரச்சாரம்

- ❖ பாஷா சான்றிதழ் செல்ஃபி (சுயப் புகைப்படம்) என்ற பிரச்சாரமானது கல்வித் துறை அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ ஏக் பாரத் ஸ்ரேஸ்த பாரத் என்ற உணர்வினை வளர்ப்பதற்காக பன்மொழித் தன்மையை மேம்படுத்துதல் மற்றும் கலாச்சாரப் பன்முகத் தன்மையை ஊக்குவித்தல் போன்ற நோக்கத்துடன் இது தொடங்கப்பட்டது.
- ❖ MyGov India மற்றும் கல்வி அமைச்சகம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட பாஷா சங்கம் கைபேசிச் செயலியின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் ஒரு நோக்கத்துடனும் வேண்டி இந்த முன்னெடுப்பானது தொடங்கப்பட்டது.




## இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை/சுகாதார ஆராய்ச்சித் துறைக் கொள்கை

- ❖ மருத்துவ வல்லுநர்கள், அறிவியலாளர்கள் மற்றும் மருத்துவம், பல்மருத்துவம் ஆகிய துறைகளின் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்காக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகமானது உயிரி மருத்துவப் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு மீதான இந்திய மருத்துவ ஆராய்ச்சி / சுகாதார ஆராய்ச்சித் துறைக் கொள்கையினை வெளியிட்டுள்ளது.



- இந்தக் கொள்கையானது, உள்நாட்டிலேயே தயாரித்தல், புத்தாக்க நிறுவனம் இந்தியா திட்டம் மற்றும் ஆத்ம நிர்பர் பாரத் முன்னெடுப்புகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலம் நாடு முழுவதும் உள்ள மருத்துவக் கல்வி நிறுவனங்களில் பல்துறை ஒத்துழைப்பினை உறுதி செய்து, புத்தாக்க நிறுவனக் கலாச்சாரத்தினை ஊக்குவித்து, புத்தாக்கம் சார்ந்த ஒரு சூழலமைவினை உருவாக்கும்.

## புதிய மேம்பாட்டு வங்கி

GUJARAT INTERNATIONAL FINANCE TEC-CITY

- குஜராத் சர்வதேச நிதித் தொழில்நுட்ப நகரில் தனது அலுவலகத்தினைத் திறந்த முதல் பன்னாட்டு முகமை, புதிய மேம்பாட்டு வங்கியாகும் (New Development Bank).
- இதன் இந்திய அலுவலகமானது மிகப் பொருத்தமான திட்டங்களை அடையாளம் காண்பதில் உதவி வழங்குவதோடு, வங்கிக்கான ஒரு சாத்தியமான நிதி வளத்தை உருவாக்குவதற்கு முயற்சிக்கும்.
- மேலும் இந்த வங்கி, இந்தியாவிலுள்ள முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்காக புதியதாகத் தொடங்கப்பட்ட தேசிய உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதி வங்கியுடன் கை கோர்க்க முயல்கிறது.

## "வண்டியால் மோதி விட்டு நிற்காமல் சென்றால்" தரவேண்டிய இழப்பீடு





- வரும் ஏப்ரல் 01 ஆம் தேதி முதல், வண்டியால் மோதி விட்டு நிற்காமல் சென்றதால் உயிரிழந்த நபர்களின் குடும்பங்களுக்குத் தரவேண்டிய இழப்பீட்டினை 8 மடங்கு என்ற அளவிற்கு உயர்த்தி ரூ. 2 லட்சமாக வழங்குவதற்குச் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- வண்டியால் மோதி விட்டு நிற்காமல் சென்றதால் பலத்த காயமடைந்த நபர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடானது 12,500 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

## பதப்படுத்தப்படாத பழங்களின் ஏற்றுமதி




- இந்தியாவிலிருந்து பதப்படுத்தப்படாத பழங்களின் ஏற்றுமதியானது மிகப் பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- பதப்படுத்தப்படாத பழங்கள் ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய நாடுகள்: நெதர்லாந்து, வங்காள தேசம், ஐக்கிய ராஜ்ஜியம், ஐக்கிய அரபு அமீரகம், ஈரான், நேபாளம், சவுதி அரேபியா, ரஷ்யா, கத்தார் மற்றும் ஓமன் ஆகியனவாகும்.
- 2013-14 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான காலக்கட்டத்தில் 0.58 மில்லியன் டாலர்களாக பதிவான கொய்யா ஏற்றுமதியானது 2021-22 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான காலகட்டத்தில் 2.09 மில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது.
- 2013-14 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான காலக்கட்டத்தில் 10 மில்லியன் டாலர்களாகப் பதிவான பன்னீர் (பாலாடைக்கட்டி) மற்றும் தயிர் ஏற்றுமதி என்பது 2021-22 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான காலக் கட்டத்தில் 30 மில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது.

## கோப்ரா வாரியர் 22 – இந்தியா விலகல்




- ஐக்கிய இராஜ்ஜியத்தில் நடைபெறும் பலதரப்பு வான்படைப் பயிற்சியான கோப்ரா வாரியர் 22 என்ற பயிற்சியில் பங்கு பெறுவதற்கு தனது விமானங்களை அனுப்புவதாக இல்லை என இந்திய விமானப் படை முடிவு செய்துள்ளது.

- உக்ரைனில் ரஷ்ய இராணுவம் மேற்கொண்ட தாக்குதல்களால் தீவிரமடைந்த ஒரு நெருக்கடி நிலையின் காரணமாக இந்த முடிவானது மேற்கொள்ளப்பட்டது.
- இந்தப் பயிற்சியானது, 2022 ஆம் ஆண்டு மார்ச் 06 முதல் 27 வரையில் ஐக்கிய இராஜ்ஜியத்தின் வாடிங்டன் நகரில் நடைபெற உள்ளது.

## சர்வதேச பருவமழைத் திட்ட அலுவலகம்

- 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய அறிவியல் தினத்தன்று சர்வதேச பருவமழைத் திட்ட அலுவலகத்தினை அரசு தொடங்கியுள்ளது.
- இந்த பருவமழை அலுவலகமானது நாட்டின் பொருளாதாரத்திற்குப் பருவமழையின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதற்காக நிறுவப்பட்டது.
- உலக பருவநிலை ஆராய்ச்சித் திட்டம் மற்றும் உலக வானிலை ஆராய்ச்சித் திட்ட அமைப்பு ஆகியவற்றின் தலைமையின் கீழ் இந்த அலுவலகமானது பணியாற்றும்.
- இந்த அலுவலகமானது சர்வதேச பருவமழை ஆராய்ச்சி தொடர்பான இணைப்புகள் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்தும்.
- தொடக்கத்தில், 5 ஆண்டுகளுக்கு புனேயிலுள்ள இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனத்தில் இந்த அலுவலகம் செயல்படும்.




## இருதரப்பு பரிமாற்று ஒப்பந்தம்




- ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் ஒரு இருதரப்புப் பரிமாற்று ஒப்பந்தத்தினை புதுப்பித்துள்ளன.
- இதன் மதிப்பு 75 பில்லியன் டாலர் ஆகும்.

- இது அமெரிக்க டாலருக்கு ஈடாக இரு நாடுகளும் தங்களது உள்நாட்டு நாணயங்களை மாற்றிக் கொள்ளும் வகையிலான ஒரு இருவழி ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தமானது முதலில் 2018 ஆம் ஆண்டில் ஜப்பான் வங்கிக்கும் இந்திய ரிசர்வ் வங்கிக்கும் இடையே கையெழுத்தானது.

## இந்திய-பெல்ஜிய அரசுமுறை உறவுகள்

- இந்தியா-பெல்ஜியம் ஆகியவற்றுக்கு இடையிலான அரசுமுறை உறவின் 75வது ஆண்டு நிறைவினை நினைவு கூறும் வகையில் ஒரு சிறப்பு சின்னமானது வெளியிடப் பட்டது.
- இந்தியாவுடன் இருதரப்பு உறவினை நிறுவிய முதல் ஐரோப்பிய நாடு பெல்ஜியம் ஆகும்.
- இதன் சின்னம் மயில் ஆகும்.
- இரு நாடுகளின் தேசியக் கொடிகளும் இந்த மயிலின் இருபுறத்திலும் பொறிக்கப் பட்டு உள்ளன.
- இந்தியா, பெல்ஜிய நாட்டின் தயாரிப்புகளை இறக்குமதி செய்வதில் 2வது பெரிய நாடாகவும் அதற்கான ஏற்றுமதியில் 5வது பெரிய நாடாகவும் திகழ்கிறது.

## தேசியப் பாலினக் குறியீடு

- நிதி ஆயோக் அமைப்பானது, தேசியப் பாலினக் குறியீட்டினை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.
- பாலின முன்னேற்றத்தை அளவிடச் செய்வது, பாலினச் சமத்துவத்திலுள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து மற்றும் தகவலறிந்த கொள்கை முடிவுகளை எடுப்பது ஆகியவையே இந்தக் குறியீட்டின் நோக்கமாகும்.
- வரையறுக்கப்பட்ட பாலின அளவீடுகளில் இந்திய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் முன்னேற்றத்தினை அளவிடுவதற்கும், நேர்மறையான ஓர் அடித் தளத்தினைக் கட்டமைப்பதற்கும் இந்தக் குறியீடு ஒரு கருவியாக செயல்படும்.
- இந்தத் தகவலானது நிதி ஆயோக் அமைப்பின் 2021 – 22 ஆம் ஆண்டு வருடாந்திர அறிக்கையில் வெளியிடப்பட்டது.

## மகளிர் தின வாரம்

- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது, சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின் ஓர் அங்கமாக மார்ச் 01 ஆம் தேதி முதல் சர்வதேச மகளிர் தின வாரத்தினைக் கொண்டாடுகிறது.

- பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் போன்றவற்றை அடையும் முன்னேற்றப் பாதையைக் கொண்டாடும் நிகழ்வை இது குறிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் 03 அன்றையக் கொண்டாட்டங்களுக்கான கருத்துரு, "நாளைய உலகின் பெண்கள்" (Women of Tomorrow) என்பதாகும்.
- மார்ச் 08 ஆம் தேதியன்று நாரி சக்தி புரஷ்கர் விருதானது வழங்கப்படும்.
- மேலும் அன்று அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் பெண் காவலர்களுக்கான சர்வதேச மகளிர் தின மாநாடும் நடத்தப்பட உள்ளது.

## குப்பையில்லா நகரங்களுக்கான சமூக நிறுவனங்கள் குறித்த தேசிய மாநாடு

- 'குப்பையில்லா நகரங்களுக்கான சமூக நிறுவனங்கள் குறித்த தேசிய மாநாடு: ராய்ப்பூரின் கழிவு மேலாண்மையில் பெண் தொழில்முனைவோரை ஊக்குவித்தல்' மாநாடானது நடத்தப்படுகிறது.
- இது சத்தீஸ்கர் அரசுடன் இணைந்து சுவச் பாரத் திட்டம் – நகர்ப்புறம் 2.0 திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- இந்த மாநாட்டிற்கான ஒரு கருத்துரு பாடலாக "சுவச்சதா ஜாரி ஹை" என்ற ஒரு பாடலும் வெளியிடப்பட உள்ளது.





## பாலியெஸ்டர் துணியில் தேசியக் கொடிகள்

- இந்திய அரசானது பாலியெஸ்டர் துணிகளைக் கொண்டு எந்திரங்களால் தயாரிக்கப் படும் தேசியக் கொடிகளை உற்பத்தி செய்யவும் அவற்றை இறக்குமதி செய்யவும் அனுமதி வழங்கியுள்ளது.
- இதற்காக வேண்டி 2002 ஆம் ஆண்டின் இந்தியக் கொடிக்கான நெறிமுறையானது திருத்தப் பட்டுள்ளது.

- முந்தைய விதிகளானது, கையினால் நூற்கப்பட்ட மற்றும் நெய்யப்பட்ட கம்பளி, பருத்தி அல்லது பட்டு காதித் துணிகளால் ஆன கொடிகளை மட்டுமே அனுமதித்தது.
- அதே சமயம் எந்திரங்களால் தயாரிக்கப்படும் கொடிகளின் இறக்குமதிக்கு 2019 ஆம் ஆண்டில் தடை விதிக்கப்பட்டது.
- தேசியக் கொடிகளானது கையினால் நூற்கப்பட்ட மற்றும் கையால் நெய்யப்பட்ட (அ) எந்திரங்களால் தயாரிக்கப்பட்ட பருத்தி, பாலியெஸ்டர், கம்பளி, பட்டு காகிதத் துணி ஆகியவற்றால் செய்யப் படலாம் என்று சமீபத்திய திருத்தமானது அங்கீகரித்தது.




## இந்தியாவின் சுற்றுச்சூழல் நிலை அறிக்கை



- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் சுற்றுச்சூழல் நிலை அறிக்கையானது மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவினால் வெளியிடப்பட்டது.
- பசியின்மை, நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு, பாலினச் சமத்துவம் மற்றும் நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் உள்ளிட்ட 11 நிலையான மேம்பாட்டு இலக்குகளில் நிறைந்துள்ள கணிசமான சவால்களினால் இந்தியாவின் தரவரிசை குறைந்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- இந்தியா, கடந்த ஆண்டிலிருந்த 117வது இடத்திலிருந்து 3 இடங்கள் சரிந்து 120வது இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் ஒட்டு மொத்த நிலையான மேம்பாட்டு இலக்குகளின் மதிப்பு 100-க்கு 66 ஆகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடைவதற்குக் குறைந்த அளவே தயாராக உள்ள மாநிலங்களாக ஜார்க்கண்ட் மற்றும் பீகார் ஆகியவை உள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- மேலும், மாநிலங்கள் பிரிவில் கேரளா முதலிடத்திலும், தமிழ்நாடு மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியவை முறையே 2வது மற்றும் 3வது இடத்தில் உள்ளன.
- ஒன்றியப் பிரதேசங்கள் பிரிவில் சண்டிகர் முதலிடத்தினைப் பெற்றுள்ளது.


## வாயு சக்திப் பயிற்சி




- இந்திய விமானப் படையானது ராஜஸ்தானின் ஜெய்சால்மர் நகரில் உள்ள பொக்ரான் தளத்தில் வாயு சக்தி என்ற பயிற்சியை நடத்த உள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடி இந்த நிகழ்ச்சிக்கு ஒரு சிறப்பு விருந்தினராகப் பொறுப்பேற்க உள்ளார்.
- இந்திய விமானப் படையின் 148 விமானங்கள் இந்தப் பயிற்சியில் பங்கேற்க உள்ளன.
- ரஃபேல் விமானமானது முதன்முறையாக இந்தப் பயிற்சியில் ஈடுபட உள்ளது.
- இந்திய விமானப்படையானது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த வாயுசக்திப் பயிற்சியினை நடத்துகிறது.
- இதற்கு முன்பாக இந்தப் பயிற்சி 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.


## குறைகரிமத் தொழில்நுட்பங்கள் குறித்த தேசியப் புத்தாக்க மாநாடு

- எரிசக்தி செயல்திறன் வாரியமானது, குறைகரிமத் தொழில்நுட்பங்கள் குறித்த தேசியப் புத்தாக்க மாநாட்டினை நடத்துவதன் மூலம் தனது 20வது நிறுவன தினத்தை கொண்டாடியது.
- தொழில்துறை மற்றும் வணிகம் போன்ற சில துறைகளில் பெருமளவில் இந்த மாதிரியான தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப் படும் போது கிடைக்கப் பெறும் ஆற்றல் சேமிப்பு மற்றும் பசுமை இல்ல வாயு உமிழ்வின் குறைப்புத் திறன் போன்ற நன்மைகளை வழங்கும் புத்தாக்கப் படைப்புகளை முன் வைப்பதற்கான ஒரு தளம் இந்த மாநாடாகும்.
- இந்த மாநாடானது குறைகரிமப் புத்தாக்கத்திலுள்ள வணிகமயமாக்கல் மற்றும் உற்பத்தி அளவை அதிகரிப்பதற்கான நிதித் தேவை போன்ற சவால்கள் குறித்து கவனம் செலுத்துகிறது.




## ரூர்க்கி நீர்வள மாநாடு – 2022

- 2022 ஆம் ஆண்டு 2வது ரூர்க்கி நீர்வள மாநாட்டினை மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் தொடங்கி வைத்தார்.
- இது ரூர்க்கியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் தேசிய நீரியல் கல்விக் கழகம் ஆகியவற்றால் இணைந்து நடத்தப்படுகிறது.
- இந்த மாநாடானது நீர்வளப் பாதுகாப்பு பற்றி புரிதல் குறித்தும், சமூக மேம்பாட்டின் ஒரு முக்கிய அங்கமாக நிலையான நீர் வளமேலாண்மையை ஆதரிக்கும் நீர்வளப் பாதுகாப்பின் பல அம்சங்களைப் பற்றிய புரிதல் குறித்தும் கவனம் செலுத்தும்.
- இந்த மாநாட்டின் கருத்துரு, “நிலையான மேம்பாட்டிற்கான நீர்வளப் பாதுகாப்பு” (Water Security for Sustainable Development) என்பதாகும்.




## புலம்பெயர்ந்தோர் மற்றும் தாய்நாடு திரும்பியோருக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத் திட்டம்

- இத்திட்டத்தின் கீழ், 2021-22 முதல் 2025-26 வரையிலான காலகட்டத்திற்கு ஏற்கனவே உள்ள 7 துணைத் திட்டங்களைத் தொடர்வதற்கான முன்மொழிதலுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- முதன்மைத் திட்டத்தின் கீழான உதவிகள், உள்துறை அமைச்சகத்தின் மூலம் பயனாளிகளைச் சென்றடைவது தொடரும் என்ற உறுதிப்பாட்டினை இந்த ஒப்புதல் உறுதி செய்ய முயல்கிறது.
- இடம்பெயர்தலால் பாதிக்கப்பட்டுள்ள தாய்நாடு திரும்பியோர் மற்றும் புலம் பெயர்ந்தோர், நியாயமான முறையில் வருவாய் ஈட்டவும் முக்கியப் பொருளாதார நடவடிக்கைகளில் அவர்கள் தங்களை இணைத்துக் கொள்ளவும் வேண்டி இந்தத் திட்டம் உதவுகிறது.

## பாலினப் பங்கெடுப்பு குறித்த பியூ சென்டர் அறிக்கை

- பியூ ஆராய்ச்சி மையமானது சமீபத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டது.
- இந்த ஆய்வறிக்கையானது 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் 29,999 இந்திய பருவ வயதினரிடம் நேருக்கு நேராகச் சென்று மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பினை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- பதின்பருவ வயதினை அடைந்த இந்தியர்கள், ஏக மனதாக ஆண்களைப் போலவே பெண்களுக்கும் உரிமைகள் இருக்கின்றது என்றும் 10ல் 8 ஆண்கள் இது மிகவும் முக்கியம் என்று கூறுவதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.
- ஆனால் 80% ஆண்கள், "எப்பொழுது சில குறைவான வேலைவாய்ப்புகளே இருக்கச் செய்கையில், பெண்களை விட ஆண்களுக்கே அதிக உரிமை இருக்க வேண்டும்" என்று கூறுகின்றனர்.




## சாகர் பராக்கிரமம் திட்டம்




- மத்திய மீன்வாழ் கால்நடை மற்றும் பால்வளத் துறை அமைச்சர் பர்சோத்தம் ரூபாலா, சாகர் பராக்கிரமம் திட்டத்தினைத் தொடங்கி வைக்க உள்ளார்.
- இந்தத் திட்டமானது மீன்வளத்துறை மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் ஆகியவற்றால் மீன்வளத்துறை, இந்தியக் கடலோரக் காவற்படை, இந்திய மீன்வள ஆய்வு அமைப்பு, குஜராத் கடல்சார் வாரியம் மற்றும் மீனவர் பிரதிநிதிகள் ஆகியவற்றுடன் இணைந்து நடத்தப்படுகிறது.
- இது அனைத்துக் கடலோர மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களிலுள்ள அனைத்து மீனவர்கள், மீன் பண்ணையாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடனான ஒற்றுமையைப் பறைசாற்றுவதற்காக வேண்டி, முன்பே தீர்மானிக்கப்பட்ட ஒரு கடல் பாதையில் மேற்கொள்ளப்படும் கடற்பயணம் ஆகும்.
- கடலோர மீனவச் சமூகத்தினரின் வாழ்வாதாரம் மற்றும் நாட்டின் உணவுப் பாதுகாப்பினைப் பாதுகாக்கச் செய்வதற்காக வேண்டி கடல்மீன்வளங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு இடையிலான நிலையானச் சமநிலை மீது இந்தத் திட்டம் கவனம் செலுத்தும்.

## சுவச் சர்வேக்சன்





- வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது சுவச் சர்வேக்சன் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இது உலகின் மிகப்பெரிய நகரத் தூய்மைக் கணக்கெடுப்பின் 7வது தொடர் பதிப்பு ஆகும்.
- இந்தத் திட்டமானது, "மக்களுக்கே முன்னுரிமை" என்ற ஒரு கருத்தை அதன் இயக்கத் தத்துவமாகக் கொண்டு, முன்களப் பணியாளர்களின் நலன் மற்றும் நல்வாழ்வுக்காக நகரங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளைத் திரட்டுவதற்காக வடிவமைக்கப் பட்டு உள்ளது.

## திறன்மிக்க ரீதியில் நிர்வகிக்கப்படும் மின்சார வாகன மின்னேற்ற நிலையம்

- ரிலையன்ஸ் இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர்ஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான SES யமுனா பவர் லிமிடெட் (BYPL - BSES Yamuna Power Limited) இந்தியாவின் முதலாவது 'திறன்மிக்க ரீதியில் நிர்வகிக்கப்படும் ஒரு மின்சார வாகன மின்னேற்ற நிலையத்தினை' புது டெல்லியில் தொடங்கியுள்ளது.
- BYPL ஆனது பம்பாய் புறநகர் மின்சார விநியோகத்தின் (BSES - Bombay Suburban Electric Supply) மூலம் மின் ஆற்றலைப் பெறுகிறது.
- BYPL நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் முதல் திறன்மிகு மின்சார வாகன மின்னேற்ற நிலையமாக இது திகழும்.
- திறன்மிக்க ரீதியில் நிர்வகிக்கப்படும் மின்சார வாகன மின்னேற்ற நிலையத்தில் (smart-managed EV charging station) ஒரே நேரத்தில் ஐந்து மின்சார வாகனங்களுக்கு மின்னேற்றம் செய்ய இயலும்.

## கங்கையைத் தூய்மைப்படுத்துவதற்கான தேசியத் திட்டம்

- 7வது இந்தியத் தொழில்துறை நீர்வள மாநாடு மற்றும் 9வது FICCI நீர்வள விருதுகளின் 'சிறப்பு சான்றாய (ஜூரி) விருதானது' கங்கையைத் தூய்மைப்படுத்துவதற்கான தேசியத் திட்டத்திற்கு (NMCG - National Mission for Clean Ganga) வழங்கப்பட்டுள்ளது.
- கங்கை நதியைப் புதுப்பித்தல், நீர் மேலாண்மையில் முன்னுதாரண மிக்க மாற்றத்தை ஏற்படுத்திய முயற்சிக்காக கங்கையைத் தூய்மைப்படுத்துவதற்கான ஒரு தேசியத் திட்டத்திற்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- கங்கையைத் தூய்மைப்படுத்துவதற்கான தேசியத் திட்டத்தின் புதிய தலைமை இயக்குநராக G. அசோக் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.




## தேசியப் போர் நினைவுச்சின்னம்

- தேசியப் போர் நினைவுச் சின்னத்தின் 3வது ஆண்டு விழா 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 அன்று அனுசரிக்கப்பட்டது.
- தேசியப் போர் நினைவுச் சின்னம் ஆனது 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 அன்று பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- தேசியப் போர் நினைவுச் சின்னமானது, சுதந்திர இந்தியாவில் நடைபெற்ற ஆயுதம் ஏந்திய மோதல்களில் பங்கேற்றுப் போராடிய அனைத்து வீரர்களையும் கௌரவிக்கும் வகையில் கட்டப்பட்ட இந்தியாவின் முதல் போர் நினைவுச் சின்னம் ஆகும்.
- 1962 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய-சீனப் போரிலும், 1947, 1965 மற்றும் 1971 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் போர்களிலும், 1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற கார்கில் போரிலும் வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாக இந்த நினைவிடம் திகழ்கிறது.



## இந்தியா மற்றும் நெதர்லாந்து – 75 ஆண்டுகள்

- இந்தியா மற்றும் நெதர்லாந்து ஆகியவற்றுக்கு இடையிலான அரசுமுறை உறவுகள் நிறுவப் பட்டதன் 75வது ஆண்டு நிறைவானது இந்த ஆண்டு அனுசரிக்கப்பட்டது.

- இந்த நிகழ்வை நினைவு கூறுவதற்காக ஒரு முத்திரையானது வெளியிடப்பட்டது.
- இந்த முத்திரையில் இரு நாடுகளின் தேசிய மலர்களான தாமரை மற்றும் துலிப் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- இந்த முத்திரையின் மையப்பகுதியிலுள்ள ஒரு சக்கரம் இரு நாடுகளின் நட்பினைப் பிரதிபலிக்கிறது.
- இந்தக் கொடியின் நிறமானது இந்தியர்களுக்கும் டச்சு மக்களுக்கும் இடையேயுள்ள உறவுகளை வலியுறுத்துகிறது.

## சுகாதார பாரம்பரிய நடைபயணப் பிரச்சாரம்

- 10 நகரங்களில் ஜன் அவுசதி திவாஸ் நிகழ்வின் ஒரு வாரக் கொண்டாட்டத்தின்போது சுகாதாரப் பாரம்பரிய நடைபயணப் பிரச்சாரமானது மேற்கொள்ளப்பட்டது.
- இது உடற்பயிற்சி மற்றும் நடைப்பயிற்சி மூலம் பெறப்படும் நன்மைகள் பற்றிய செய்தியையும் ஜன் அவுசதி கேந்திராக்களிலிருந்துப் பெறப்படும் மலிவு விலையில் மற்றும் தரமான மரபியல் மருந்துகள் பற்றிய தகவலையும் பரப்புவதற்கானதாகும்.

## தொகுப்பு நாடு ஒப்பந்தம்

- இந்திய அரசானது சர்வதேசத் தகவல்தொடர்பு ஒன்றியத்துடன் தொகுப்பு நாடு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- இது புதுடெல்லியில் சர்வதேசத் தகவல்தொடர்பு ஒன்றியத்தின் வட்டார அலுவலகம் மற்றும் புத்தாக்க மையத்தினை நிறுவுவதற்கான ஒரு ஒப்பந்தமாகும்.
- இந்த அலுவலகம் மற்றும் புத்தாக்க மையமானது ஆப்கானிஸ்தான், பூடான், ஈரான், மாலத்தீவு, நேபாளம், இலங்கை மற்றும் இந்தியா ஆகியவற்றை உள்ளடக்கிய ஆசிய நாடுகளுக்குத் தனது சேவையை வழங்கும்.

## புனே மெட்ரோ இரயில் திட்டம்




- புனே மெட்ரோ இரயில் திட்டத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- புனே மெட்ரோ இரயிலானது அலுமினியத்தினால் ஆன பெட்டிகளைக் கொண்டுள்ள நாட்டின் முதல் மெட்ரோ திட்டமாகும்.
- இவை இந்தியாவின் உள்நாட்டிலேயே தயாரித்தல் என்ற ஒரு கொள்கையின் கீழ் உள்நாட்டிலேயே தயாரிக்கப் படுகின்றன.
- புனே மாநகராட்சி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் சிலையையும் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

## SLINEX 2022

- இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் கடற்படைகளுக்கு இடையிலான இரு தரப்புக் கடல்சார்ப் பயிற்சியான 9வது SLINEX (இலங்கை - இந்தியக் கடற்படைப் பயிற்சி) பயிற்சியானது விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது.
- இந்தப் பயிற்சியானது இரண்டு கட்டங்களாக நடத்தப்படுகிறது.
- துறைமுகப் பயிற்சி நிலை விசாகப்பட்டினத்திலும், கடல்சார்ப் பயிற்சி நிலை வங்காள விரிகுடாவிலும் நடைபெறும்.
- 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் SLINEX பயிற்சியின் முந்தையப் பதிப்பானது (8வது) திருகோணமலையில் நடத்தப்பட்டது.



## HANSA-NG

- 'HANSA-NG' என்ற பயிற்சி விமானம் புதுச்சேரியில் அதன் கடல்சார் சோதனைகளை வெற்றிகரமாக நிறைவு செய்தது.
- இது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் பயிற்சி விமானம் ஆகும்.
- பெங்களூரில் இருந்து புதுச்சேரிக்கு 1.5 மணி நேரத்தில் 155 கிமீ வேகத்தில் 140 நாட்டிகல் மைல் தூரத்தை HANSA-NG விமானம் பயணித்தது.
- இந்த விமானத்தை அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிச் சபையின் கீழ் செயல்படும் தேசிய வானியல் ஆய்வகமானது வடிவமைத்து உருவாக்கியுள்ளது.




## மிதவைச் சேமிப்பு மற்றும் இயற்கை எரிவாயுவாக்கல் அலகு

- மஹாராஷ்டிராவில் உள்ள எச்-ஜெய்கர் எனர்ஜி நிறுவனத்தின் முனையத்தில் இந்தியா தனது முதல் மிதவைச் சேமிப்பு மற்றும் இயற்கை எரிவாயுவாக்கல் அலகினைப் (floating storage and regasification unit) பெற்றுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 அன்று, மிதவைச் சேமிப்பு மற்றும் இயற்கை எரிவாயுவாக்கல் அலகானது ஹோயிக் ஜெயின்ட் கப்பலானது, சிங்கப்பூரில் உள்ள கெப்பல் எனும் கப்பல் கட்டும் தளத்தில் இருந்து புறப்பட்டு மகாராஷ்டிராவில் உள்ள ஜெய்கர் முனையத்தை வந்தடைந்தது.
- இது மிதவைச் சேமிப்பு மற்றும் இயற்கை எரிவாயுவாக்கல் அலகு அடிப்படையிலான திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவினைப் பெறும் இந்தியாவின் முதல் முனையம் ஆகும்.




## கோதுமை ஏற்றுமதி




- இந்த நிதியாண்டில், இந்தியா சுமார் 7 மில்லியன் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய உள்ளது.
- இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட அதிக கோதுமை ஏற்றுமதிகளில் இதுவும் ஒன்றாக இருக்கும்.
- உலகளாவிய கோதுமை உற்பத்தியில் 13.53% கொண்டுள்ள வகையில் இந்திய நாடானது, கோதுமை உற்பத்தியில் உலகின் இரண்டாவது பெரிய உற்பத்தியாளராக உள்ளது.
- ஆனால் இந்தியாவின் உலகளாவிய கோதுமை ஏற்றுமதி வெறும் 1% மட்டுமேயாகும்.
- இந்திய நாடானது ஆண்டுக்கு 108 மில்லியன் டன் கோதுமையை உற்பத்தி செய்கிறது.
- கோதுமை உற்பத்தியில் உலகின் முதலாவது பெரிய உற்பத்தியாளராக சீனா உள்ளது

## சூரிய மின்சக்தி உற்பத்தித் திறன் – 2021




- ஆண்டுக்கு 212 சதவீதம் அதிகரிப்பு என்ற அளவில் 2021 ஆம் ஆண்டில் இந்தியா 10 ஜிகா வாட் திறன் அளவில் சூரிய மின் உற்பத்தி சக்தியை நிறுவியது.
- இது மெர்காம் இந்தியா ஆராய்ச்சி என்ற ஒரு அமைப்பின் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர இந்திய சூரியசக்திச் சந்தைப் புதுப்பிப்பு என்ற அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

- 2021 ஆம் ஆண்டில், கூரையில் சூரியசக்தித் தகடுகள் நிறுவப்படுவது 138 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி, ராஜஸ்தான், கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவை பெரிய அளவிலான ஒட்டு மொத்த சூரிய சக்தி உற்பத்தி அடிப்படையில் முதல் மூன்று இடங்களில் உள்ளன.

## சுந்தரவனப் புலிகள் பற்றிய அறிக்கை

- இந்திய வனவிலங்கு நிறுவனத்திடம் (WII) மனித-விலங்கு மோதல் தொடர்பான அதிகரித்து வருதல் தொடர்பான வழக்குகள் குறித்த ஒரு அறிக்கையைத் தயாரிக்கும் பொறுப்பு அளிக்கப் பட்டுள்ளது.
- இது தொடர்பாக, இந்திய வனவிலங்கு நிறுவனமானது சமீபத்தியப் புலிகள் கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒரு முதற்கட்ட அறிக்கையை வெளியிட்டது.
- மேற்கு வங்காளத்தின் சுந்தரவனப் பகுதியில் உள்ள புலிகளின் எண்ணிக்கையானது அதன் தாங்கும் திறனை எட்டியிருக்கலாம் என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.
- பகைமை வாய்ந்த நிலப்பரப்பில் 100 சதுர கி.மீ.க்கு மூன்று முதல் ஐந்து புலிகள் வரை இருப்பதற்கான திறன் இருப்பதாக மேற்கு வங்க மாநில வனத்துறையிடம் இந்திய வன விலங்கு நிறுவனம் தகவல் அளித்தது.
- ஆனால் சுந்தரவனத்தின் பல தொகுதிகளில் உள்ள புலிகளின் எண்ணிக்கையானது தெரிவித்த அளவை விட அதிகமாக உள்ளது.
- இந்த அதிக எண்ணிக்கையானது புதியப் பகுதிகளை தேடி புலிகள் காடுகளை விட்டு வெளியேற வழி வகுக்கும்.
- சமீபத்தில், சுமார் எட்டு புலிகள் சுந்தரவனத்தில் உள்ள கிராமங்களுக்குள் நுழைந்த நிலையில் அவை அனைத்தும் பிடிக்கப்பட்டு காட்டில் விடப்பட்டன.
- புலிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ள வனப்பகுதிகளில் அந்த பிடிபட்ட புலிகளை விடுவிக்குமாறு மேற்கு வங்க மாநில வனத்துறைக்கு இந்திய வனவிலங்கு நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

## இந்திய-பசிபிக் இராணுவ நலப் பரிமாற்ற மாநாடு

- நான்கு நாட்கள் அளவிலான இந்திய பசிபிக் இராணுவ சுகாதாரப் பரிமாற்ற மாநாட்டினைப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.
- இந்த மாநாடானது அமெரிக்க இந்திய-பசிபிக் படை மற்றும் ஆயுதப் படைகள் மருத்துவச் சேவை அமைப்பு ஆகியவற்றினால் இணைந்து நடத்தப்படுகிறது.
- "நிரந்தரமற்ற, நிலையற்ற, சிக்கலான மற்றும் தெளிவற்ற உலகில் இராணுவ நலன்" (Military Healthcare in a Volatile, Uncertain, Complex and Ambiguous (VUCA) World) என்பதே இந்த மாநாட்டின் கருத்துருவாகும்.
- இராணுவ மருத்துவத்தில் ஒரு கூட்டு தலைமைத்துவம் மற்றும் ஒத்துழைப்பினை மேம்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.





## SAMARTH

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் துறை அமைச்சகமானது பெண்களுக்காக "SAMARTH" எனப்படும் ஒரு சிறப்புத் தொழில்முனைவு ஊக்குவிப்பு இயக்கத்தினைத் தொடங்கியுள்ளது.
- பெண்களுக்குத் திறன் மேம்பாடு மற்றும் சந்தை மேம்பாட்டு உதவி ஆகியவற்றை வழங்குவதும் 2022-23 ஆம் நிதியாண்டில் கிராமப்புற மற்றும் சிறுநகரப் பகுதிகளில் உள்ள 7500க்கும் மேற்பட்ட பெண்களுக்குப் பயிற்சி அளிப்பதுவுமே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.



## ஓய்வூதியத்தைத் தானமளிக்கும் முன்னெடுப்பு

- மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்-தன் என்ற திட்டத்தின் கீழான 'ஓய்வூதியத்தைத் தானமளித்தல் முன்னெடுப்பு' என்ற இயக்கத்தினைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்தப் புதிய முன்னெடுப்பின் கீழ், குடிமக்கள் தங்களது காப்பீட்டு நிதியை, வீட்டுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், உதவியாளர்கள் போன்ற உடனடித் தேவை ரீதியில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு வழங்க இயலும்.




## இந்திய உலக மன்றத்தின் வருடாந்திர உச்சி மாநாடு

- இந்திய உலக மன்றத்தின் வருடாந்திர உச்சி மாநாடானது கர்நாடகாவின் பெங்களூரு நகரில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இந்த உச்சி மாநாடானது, தொழில்நுட்பத்தினால் ஏற்படும் சீர்குலைவின் மேம்பட்ட அம்சங்களையும் தனித்துவ மன்றத்தில் இணைந்த அமைப்புகள், மத்திய அரசின் அமைச்சர்கள், கொள்கைத் தயாரிப்பாளர்கள் மற்றும் உலகளாவிய ரீதியிலான வணிகத் தலைவர்களையும் ஒன்றிணைக்கும்.
- இதன் முந்தைய உச்சி மாநாடானது துபாய் மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்தில் நடத்தப் பட்டது.
- பெங்களூருவில் நடைபெறும் முதல் இந்திய உலக மன்ற மாநாடு இதுவாகும்.




## தேசிய கனிம மேம்பாட்டுக் கழகம்

- 2018-19 மற்றும் 2020-21 ஆகிய ஆண்டுகளுக்கான இஸ்பாத் ராஜ்பாஷா விருது விழாவில் தேசிய கனிம மேம்பாட்டுக் கழகமானது முதல் பரிசினைப் பெற்றது.
- இந்த நிறுவனமானது 2019-20 ஆம் ஆண்டிற்கான இஸ்பாத் ராஜ்பாஷா பிரேரனா என்ற ஒரு விருதினையும் பெற்றது.
- தேசிய கனிம மேம்பாட்டுக் கழகமானது எஃகுத் துறை அமைச்சகத்தின் கீழான ஒரு நவ ரத்தினப் பொதுத்துறை நிறுவனமாகும்.
- இது இந்தியாவிலுள்ள, சுற்றுச்சூழலுக்கு உகந்த சுரங்க நிறுவனம் மற்றும் மிகப்பெரிய இரும்புத் தாது உற்பத்தி நிறுவனம் ஆகும்.

NMDC

### கவச் அமைப்பு




- பிரதமரின் ஆத்மநிர்பார் பாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2022-23 ஆம் ஆண்டில் பாதுகாப்பு மற்றும் திறன் பெருக்கத்திற்கான கவச் அமைப்பின் கீழ் 2000 கி.மீ நீள இரயில்வே கட்டமைப்பானது கொண்டு வரப்படும்.
- தெலுங்கானாவில் குல்லாகுடா மற்றும் சித்கிடா போன்ற ரயில்வே நிலையங்களுக்கு இடையேச் செயல்பட்டு வரும் 'கவச்' அமைப்பின் சோதனையை மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் ஆய்வு செய்தார்.
- கவச் என்பது இரயில்கள் ஆபத்து மிக்க சிக்னல்களைக் கடக்கையில் மோதல்களைத் தடுப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது இரயில் ஓட்டுநர் வேகக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப ஒரு இரயிலைக் கட்டுப்படுத்தத் தவறினால், ஒரு இரயிலின் நிறுத்தக் கருவி அமைப்பினைத் தானாகச் செயல்படுத்தச் செய்வதன் மூலம், கவச் அமைப்பு பொருத்தப்பட்ட இரு இரயில் எஞ்சின்களுக்கு இடையிலான மோதல்களைத் தடுக்கிறது.

## சத்ரபதி சிவாஜி மகாராஜா சிலை

- ❖ பிரதமர் நரேந்திர மோடி, மகாராஷ்டிராவின் புனே நகரில் அமைக்கப் பட்டுள்ள மராட்டியப் போர் வீரர் சத்ரபதி சிவாஜி அவர்களின் சிலையைத் திறந்து வைத்து உள்ளார்.
- ❖ சுமார் 9.5 அடி உயரம் கொண்ட இந்த சிலையானது 1850 கிலோகிராம் எடையுள்ள துப்பாக்கி உலோகத்தினால் ஆனது.
- ❖ மேலும் புனேயிலுள்ள முலா-முதா நதித் திட்டங்களுக்கான புதுப்பித்தல் மற்றும் மாசு குறைபாட்டுத் திட்டப் பணிகளுக்கான ஒரு அடிக்கல்லினையும் பிரதமர் அவர்கள் நாட்டினார்.



## கன்யா சிக்சா பிரவேஷ் உத்சவ்




- ❖ இது பள்ளிப்படிப்பைப் பெறாத இந்திய இளம்வயது சிறுமிகளை வெளிக் கொணர்ந்து முறையான கல்வி மற்றும் திறன் முறைகளுக்கு மீண்டும் கொண்டு வருவதற்கான ஒரு பிரச்சாரமாகும்.
- ❖ பள்ளிகளில் இளம்பருவ சிறுமிகளின் (11 முதல் 14 வயது சிறுமிகள்) சேர்க்கை மற்றும் தக்க வைப்பு எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதை இப்பிரச்சாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தப் பிரச்சாரமானது மத்திய மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் பேடி பச்சாவ் பேடி பத்தாவ் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக அமல்படுத்தப்படும்.

## சுவச்சகிரஹா நிகழ்வு

- "சுவச்சதா, சுவதிந்தா மற்றும் சுலப்" பற்றிய ஒரு விழிப்புணர்வை பரப்பச் செய்வதை இந்நிகழ்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சுவச்சதா பிரச்சாரமானது உலகின் மிகப்பெரிய மற்றும் அதிக செயல்திறன் வாய்ந்த ஒரு பெருமக்கள் இயக்கமான சத்தியாக் கிரகத்தினை மாதிரியாகக் கொண்டு உருவாக்கப் பட்டது.
- நிலையான தூய்மைக் கலாச்சாரத்தினை உருவாக்குவதே இந்தப் பிரச்சாரத்தின் ஒரு நோக்கமாகும்.
- இளம் குடிமக்களை மற்றும் இளம் தலைவர்களை உருவாக்கச் செய்வதற்காக ஊக்கம் அளிப்பதன் மூலம் சுவச் பாரத் அபியான் என்ற திட்டத்தை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## அசிட்டா புலாரியா ஜலகான்யகே

- இது இந்தியாவில் புதிதாக கண்டறியப்பட்ட ஒரு கடல்பாசியாகும்.
- இது பஞ்சாப் மத்தியப் பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த ஒரு இந்திய அறிவியலாளர் குழுவால் அந்தமான் நிகோபர் தீவுத் திரளில் கண்டறியப்பட்டது.
- அறிவியலாளர்கள் 2019 ஆம் ஆண்டில் மேற்கொண்ட அந்தமான் பயணத்தின் போது இந்த இனத்தைக் கண்டறிந்தனர்.



## மனாஸ் தேசியப் பூங்கா – புலி மற்றும் காண்டாமிருகங்களின் எண்ணிக்கை




- அசாமிலுள்ள மனாஸ் தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தில் உள்ள புலிகள் மற்றும் காண்டாமிருங்களின் எண்ணிக்கையானது அதிக அளவில் உயர்ந்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, 48 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 60க்கும் மேல் உயரும் என தேசியப் பூங்காவின் அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.
- இந்தப் பூங்காவின் காண்டாமிருகங்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.
- யுனெஸ்கோவின் உலக இயற்கைப் பாரம்பரியத் தளம் என்ற அந்தஸ்து வழங்கப்பட்ட மனாஸ் தேசியப் பூங்காவானது ஒரு யானைகள் காப்பகம், புலிகள் திட்டக் காப்பகம் மற்றும் உயிர்க் கோளக் காப்பகம் ஆகியனவாகும்.
- அசாமின் இமாலய அடிவாரத்தில் அமைந்துள்ள இந்தப் பூங்கா பூடானின் ராயல் மனாஸ் தேசியப் பூங்காவின் ஒரு தொடர் பகுதியாகவும் உள்ளது.

## 123PAY




- இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்தி காந்ததாஸ் அவர்கள், “UPI123Pay” எனப்படும் சிறப்பம்ச கைபேசிகளுக்காக (feature phones) வேண்டி ஒரு ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தினை வெளியிட்டார்.
- UPI ‘123pay’ என்பது சிறப்பம்ச கைபேசிகளைப் பயன்படுத்தச் செய்வோருக்கான சேவைகளைத் தொடங்கிச் செயல்படுத்துவதற்கான 3 அடுக்கு செயல்முறை ஆகும்.
- “வருடுதல் மற்றும் பணவழங்கீடு” (scan and pay) என்ற ஒரு தெரிவினைத் தவிர பிற அனைத்து வகைப் பரிமாற்றங்களையும் “UPI123pay” முறையின் உதவியோடு ஒரு

சிறப்பம்ச கைபேசியினால் செய்ய இயலும்.

- ❖ "UPI123pay" முறையைப் பயன்படுத்துவதற்கு அந்த சிறப்பம்ச கைபேசியுடன் வங்கிக் கணக்கு இணைக்கப் பட்டிருக்க வேண்டும்.
- ❖ இதில் பரிமாற்றத்தினைத் தொடங்கிச் செயல்படுத்துவதற்கு இணையதள இணைப்பு என்பது அவசியமில்லை.

## புத்தர் சிலை

- ❖ இந்தியாவின் மிகப்பெரிய சயனநிலையில் உள்ள புத்தர் சிலையானது புத்தகயாவில் கட்டமைக்கப்பட்டு வருகிறது.
- ❖ இது புத்தர் சர்வதேச நலத்திட்ட அமைப்பினால் கட்டமைக்கப்படுகிறது.
- ❖ இதன் நீளம் 100 அடி மற்றும் உயரம் 30 அடியாகும்.



## 5 மாநிலத் தேர்தல் முடிவுகள்




- ❖ உத்தரப் பிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட், கோவா மற்றும் மணிப்பூர் ஆகிய 5 மாநிலங்களில் வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- ❖ பஞ்சாப் மாநிலம் தவிர, இதர மாநிலங்களில் பா.ஜ.க வெற்றி பெற்றுள்ளது.
- ❖ பஞ்சாபில் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சி வெற்றி பெற்று உள்ளது.
- ❖ உத்தரப் பிரதேசத்தில் 1985 ஆம் ஆண்டின் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு தனது ஆட்சியினைத் தக்க வைத்த முதல் முதல்வர் யோகி ஆதித்ய நாத் ஆவார்

## பாரம்பரிய மருத்துவத்திற்கான உலக சுகாதார அமைப்பின் உலக மையம்




- குஜராத்தின் ஜாம் நகரில் பாரம்பரிய மருத்துவத்திற்கான உலக சுகாதார அமைப்பின் ஒரு உலக மையத்தினை நிறுவுவதற்கு வேண்டி பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மையமானது ஆயுஷ் (ஆயுர்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத்துவம், சோவா-ரிக்பா மற்றும் ஹோமியோபதி) அமைச்சகத்தின் கீழ் நிறுவப் படுகிறது.
- பாரம்பரிய மருத்துவத்திற்கான முதல் மற்றும் ஒரே உலகப் புற மையம் (அலுவலகம்) இதுவாகும்.


## உலகின் சுதந்திரம் அறிக்கை 2022

- ஜனநாயகம் மற்றும் சுதந்திரமான சமூகம் என்பதன் அடிப்படையில் "பகுதியளவு சுதந்திரம் மிக்க" நாடாகத் தொடர்ந்து 2வது ஆண்டாக இந்தியா குறிப்பிடப் பட்டு உள்ளது.
- "உலகில் சுதந்திரம் 2022 – உலகளவில் சர்வாதிகார ஆட்சியின் விரிவாக்கம்" என்ற ஒரு தலைப்பில் ஃப்ரீடம் ஹவுஸ் என்ற அமைப்பு வெளியிட்ட ஒரு அறிக்கையில் இந்தத் தகவலானது கூறப் பட்டுள்ளது.
- ஃப்ரீடம் ஹவுஸ் என்பது அரசியல் உரிமைகள் மற்றும் மக்கள் சுதந்திரம் ஆகியவற்றை மதிப்பிடுகின்ற அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமாகும்.
- 2022 ஆம் ஆண்டு மதிப்பீட்டில் இந்தியா 100 மதிப்புக்கு 66 மதிப்புகளைப் பெற்றுள்ளது.
- 2021 ஆம் ஆண்டின் மதிப்பீட்டில் இந்தியா 67 மதிப்புகளைப் பெற்றிருந்தது.
- 2020 ஆம் ஆண்டில் 71 மதிப்புகளுடன் இந்தியா ஒரு சுதந்திரமிக்க நாடாகத் திகழ்ந்தது.

- இணையச் சுதந்திரத்தில் இந்தியா 49 மதிப்புகளைப் பெற்றுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், 85 நாடுகள் சுதந்திர நாடுகளாகவும், 56 நாடுகள் பகுதியளவு சுதந்திர நாடுகளாகவும், 69 நாடுகள் மிகக் குறைவான சுதந்திரமுள்ள நாடுகளாகவும் குறிப்பிடப் பட்டுள்ளன.




## ஜரோக்கா




- கலாச்சாரத் துறை அமைச்சகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சகமானது "இந்திய கைவினைப் பொருள்கள்/கைத்தறி, கலை மற்றும் கலாச்சாரத்திற்கான ஜரோக்கா தொகுப்பு" என்ற ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளன.
- இது பாரம்பரிய இந்தியக் கைவினைப் பொருட்கள், கைத்தறிகள் மற்றும் கலை & கலாச்சாரத்தினைக் கொண்டாடுவதற்கானதாகும்.
- இந்தக் கொண்டாட்டங்களின் கீழான முதல் நிகழ்ச்சியானது மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரில் உள்ள இராணி கம்லாபதி இரயில்வே நிலையத்தில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- ஜரோக்கா என்பது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின் ஓர் அங்கமாக 13 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலுள்ள 16 இடங்களில் நடத்தப்படும் இந்தியா முழுவதுமான ஒரு நிகழ்ச்சியாகும்.

## மோட்டார் வாகன ஒப்பந்தம்




- 2015 ஆம் ஆண்டில் 4 BBIN நாடுகளால் (வங்காளதேசம், பூடான், இந்தியா மற்றும் நேபாளம்) கையெழுத்திடப்பட்ட மோட்டார் வாகன ஒப்பந்தமானது இன்னும் செயல் படுத்தப் படாமல் இருந்தது.
- இந்த ஒப்பந்தமானது தங்களது நாடுகளில் இக்குழுமத்தின் ஒவ்வொரு நாடுகளின் வாகனங்களும் சரக்கு மற்றும் பயணப் பயன்பாட்டிற்காக இயக்கப்படுவதற்கு வேண்டி அனுமதி வழங்கும்.
- சமீபத்தில், இந்தியாவின் புதுடெல்லி நகரில் நடைபெற்ற ஒரு சந்திப்பில் இந்த ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா, வங்காள தேசம் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் கையெழுத்திட்டன.

## சர்வதேச தேர்தல் பார்வையாளர் நிகழ்ச்சி 2022




- 2022 ஆம் ஆண்டு சர்வதேச தேர்தல் பார்வையாளர் நிகழ்ச்சியினை கிட்டத்தட்ட 32 நாடுகள் மற்றும் 4 சர்வதேச அமைப்புகளின் தேர்தல் மேலாண்மை அமைப்புகளுக்காக இந்திய தேர்தல் ஆணையம் நடத்தியது.
- இணைய வழியில் பங்கு பெற்ற 150க்கும் மேற்பட்ட தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் மணிப்பூர், கோவா, உத்தரகாண்ட், பஞ்சாப் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் சமீபத்திய சட்டசபைத் தேர்தல்கள் பற்றிய மேலோட்டப் பார்வையானது அளிக்கப்பட்டது.

## தேசிய நிலப் பணமாக்கல் கழகம்




- முழுவதும் இந்திய அரசிற்குச் சொந்தமான நிறுவனமாக தேசிய நிலப் பணமாக்கல் கழகத்தினை நிறுவுவதற்கு வேண்டி மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தக் கழகமானது, மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்களின் உபரி நிலம் மற்றும் கட்டிடச் சொத்துகளைப் பணமாக்கும் ஒரு செயல்முறையை மேற்கொள்ளும்.
- தற்போது மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள், நிலம் மற்றும் கட்டிடங்களாக கணிசமான உபரி அளவில், பயன்படுத்தப்படாத மற்றும் அதிகம் பயன்படாத பல முக்கியமற்ற சொத்துகளைக் கொண்டுள்ளன.

## புசா கிருஷி விக்யான் மேளா

- 2022 ஆம் ஆண்டு புசா கிருஷி விக்யான் மேளாவானது புசா கல்வி நிறுவனத்தின் மேளா மைதானத்தில் மார்ச் 09 முதல் மார்ச் 11 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த வேளாண் ஆராய்ச்சிச் சபையின் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கல்வி நிறுவனமானது இந்த 3 நாட்கள் அளவிலான மேளாவினை ஏற்பாடு செய்கிறது.
- 'தொழில்நுட்ப அறிவு மூலம் தன்னிறைவு பெறும் விவசாயி' (Self-reliant farmer through technical knowledge) என்பதே இந்த கண்காட்சியின் ஒரு மையக் கருத்துருவாகும்.

## இந்திய நீர்வள மேம்பாடு (பிட்ச் – பைலட்) மாதிரி புத்தாக்க நிறுவன மாநாடு

- இந்தத் தேசிய அளவிலான மாநாடானது புதுடெல்லியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தினால் நடத்தப்படுகிறது.
- இந்த மாநாடானது நீர்வளத்துறையின் புத்தாக்க நிறுவனங்களுடனான ஒரு தகவல் தொடர்பினைத் தொடங்கும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப் படுகிறது.
- இதில் நகர்ப்புற நீர்ப் பிரச்சனைகளுக்கான புதுமைமிக்கத் தீர்வுகளானது 50க்கும் மேற்பட்ட புத்தாக்க நிறுவனங்களின் மூலம் முன்மொழியப் படும்.




## சார்தாம் திட்டக் குழுவின் தலைவர்




- நீதிபதி (ஓய்வு) A.K. சிக்ரியை சார்தாம் திட்டத்தின் (பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி) உயர் அதிகாரக் குழுவின் தலைவராக இந்திய உச்ச நீதிமன்றம் நியமித்துள்ளது.
- சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மற்றும் சார்தாம் திட்டத்துடன் தொடர்புடைய இன்ன பிற சிக்கல்களைத் தீர்ப்பதில் இந்த உயர் அதிகாரக் குழு ஈடுபடும்.
- இந்தக் குழு முழு இமயமலைப் பள்ளத்தாக்குப் பகுதியில் சார்தாம் திட்டத்தின் ஒட்டு மொத்த மற்றும் அதன் தனித் தனித் தாக்கத்தைப் பற்றியும் ஆராயும்.

## அளவு மற்றும் பிராந்திய அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட சிறந்த விமான நிலையங்கள்

- 'அளவு மற்றும் பிராந்தியத்தின் அடிப்படையில் இந்தியாவில் இருந்து, ஆறு விமான நிலையங்கள் சிறந்த விமான நிலையங்கள் பட்டியலில்' இடம் பெற்றுள்ளன.
- சர்வதேச விமான நிலையங்கள் சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான விமான நிலையச் சேவைகளுக்கான தரக் கணக்கெடுப்பில் இந்த விமான நிலையங்கள் அங்கீகரிக்கப் பட்டுள்ளன.
- வாடிக்கையாளர் அனுபவத்தில் விமான நிலையத்தின் சிறப்பை அங்கீகரிக்க வேண்டி, பயணிகள் வசதிகள் தொடர்பான 33 அளவுருக்களை இந்த விருதுகள் கணக்கில் எடுத்துக் கொள்கின்றன.

**The six Indian airports include:**

**Category – Over 40 million passengers per year**

- Chhatrapati Shivaji Maharaj International Airport (CSMIA), Mumbai (5th consecutive year)
- Indira Gandhi International Airport, New Delhi (4th consecutive year)

**Category – 15 to 25 million passengers per year**

- Rajiv Gandhi International airport, Hyderabad

**Category – 5 to 15 million passengers per year**

- Cochin International Airport, Cochin
- Sardar Vallabhbhai Patel International Airport, Ahmedabad

**Category – 2 to 5 million passengers per year**


- Chandigarh Airport, Chandigarh

## AARC மற்றும் CLAWS கூட்டுறவு


- ஆஸ்திரேலிய ராணுவத் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் ரிச்சர்ட் பர் நிலப் போர் ஆய்வுகளுக்கான மையத்திற்கு (CLAWS - Centre for Land Warfare Studies) வருகை தந்தார்.
- நிலப் போர் ஆய்வுகளுக்கான மையம் என்பது புது தில்லியில் உள்ள இந்திய ராணுவச் சிந்தனைக் குழுவாகும்.
- ஆஸ்திரேலிய இராணுவ ஆராய்ச்சி மையம் (AARC) மற்றும் நிலப் போர் ஆய்வுகள் மையம் (CLAWS) ஆகியவற்றுக்கு இடையே கல்வி ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாட்டை உருவாக்குவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

## மக்கக் கூடிய நுண் துகள்கள்

- கான்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் மக்கக் கூடிய நுண்துகளை உருவாக்கியுள்ளனர்.
- பாக்டீரிய மற்றும் பூஞ்சைப் பாதிப்புகளிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கான வேதிப்பொருள் சார்ந்த பூச்சிக்கொல்லிகளுக்கு மாற்றாக இதனைப் பயன்படுத்தச் செய்யலாம்.
- இது நுண்துகள்கள் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து, பயிர்த் தொற்று ஏற்படும் அபாயத்தினையும் குறைக்கும்.




## மெய்நிகர் திறன்மிகு கட்டுப்பாட்டு அறிவு மையம் மற்றும் புத்தாக்கப் பூங்கா




- மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் R.K. சிங், மெய்நிகர் திறன்மிகுக் கட்டுப்பாட்டு அறிவு மையம் மற்றும் புத்தாக்கப் பூங்காவினைத் திறந்து வைத்தார்.
- இது சுதந்திரத் திருநாள் பெருவிழாக் கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாகத் தொடங்கப் பட்டது.
- POWERGRID அமைப்பானது அதிநவீன திறன்மிகு கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பங்களை முன்வைக்கவும் அதனை மேம்படுத்தவும் வேண்டி திறன்மிகுக் கட்டுப்பாட்டு அறிவு மையத்தினை நிறுவியது.

## தேசிய இளையோர் பாராளுமன்ற விழா

- மக்களவைச் செயலகத்துடன் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு துறை அமைச்சகம் இணைந்து 3வது தேசிய இளையோர் பாராளுமன்ற விழாவினை ஏற்பாடு செய்துள்ளன.
- வரும் ஆண்டுகளில் பல்வேறு தொழில்துறைகளில் நுழைய உள்ள 18 முதல் 25 வயதிற்குட்பட்டவர்கள் வரையிலான இளையோர்களின் கருத்தினைக் கேட்பதே இந்த விழாவின் நோக்கமாகும்.

- தேசிய அளவில் வெற்றி பெறும் முதல் 3 இளம் வெற்றியாளர்களுக்கு அதன் பாராட்டு விழாவின் போது மக்களவைச் சபாநாயகரின் முன்பு உரையாற்றுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.




## சாகித்யோத்சவ் இலக்கிய விழா




- சாகித்திய அகாடமியின் 'சாகித்யோத்சவ்' என்றழைக்கப்படும் ஒரு கடிதத் திருவிழா என்பது இந்தியாவின் மிக உள்ளார்ந்த ஒரு இலக்கியத் திருவிழாவாகும்.
- இந்த விழாவானது இந்தியாவின் 75வது சுதந்திர விழாக் கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக விளங்கும்.
- இந்த நிகழ்ச்சிகள் சுதந்திரம் அல்லது சுதந்திர இயக்கம் என்ற ஒரு கருத்துருவைக் கொண்டு நடத்தப்படுகிறது.
- இந்தக் கண்காட்சியானது அகாடமியின் சாதனைகள் மற்றும் முந்தைய ஆண்டில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் பற்றி எடுத்துரைக்கும்.
- அகாடமியினால் அங்கீகரிக்கப்பட்ட 24 இந்திய மொழிகளின் பிரதிநிதியாக 26 இளம் எழுத்தாளர்கள் (The Rise of Young India) 'இளம் இந்தியாவின் எழுச்சி' என்ற நிகழ்ச்சியில் பங்கேற்பார்கள்.

## ஜன் அவுசதி பால் மித்ரா நிகழ்ச்சி


- ஜன் அவுசதி திவாஸ் வாரக் கொண்டாட்டத்தின் 3வது நாளான மார்ச் 14 அன்று நாடு முழுவதும் 75 இடங்களில் ஜன் அவுசதி பால் மித்ரா நிகழ்ச்சியானது நடத்தப்பட்டது.
- ஜன் அவுசதி திட்டத்துடன், பால் மித்ராக்களாக குழந்தைகளை ஈடுபடுத்துவதற்காக வேண்டி இந்த நிகழ்ச்சியானது ஏற்பாடு செய்யப்பட்டது.
- பரியோஜனா, சேமிப்பு, ஜன் அவுசதி சேவா பி ரோஸ்கர் பி ஆகியவற்றின் பலன்கள், ஜன் அவுசதி மருந்துகள் மற்றும் காப்புரிமைப் பெற்ற மருந்துகள் ஆகியவற்றின் விலையிலுள்ள வேறுபாடு ஆகியவற்றினைப் பற்றி அவர்களுக்கு கற்பிப்பதற்காக இது ஏற்பாடு செய்யப்பட்டது.

## தென்னிந்தியாவின் நீளமான வில்வடிவப் பாலம்

- ஆலப்புழாவினையும் கொல்லத்தினையும் இணைக்கும் தென்னிந்தியாவின் நீளமான வில்வடிவப் பாலமானது வலியழீக்கல் எனுமிடத்தில் திறக்கப்பட உள்ளது.
- இந்தப் பாலம் கொல்லத்திலுள்ள அலப்பாடுப் பஞ்சாயத்திற்கும் ஆலப்புழாவிலுள்ள வலியழீக்கல் எனுமிடத்திற்கும் இடையிலான பயணத் தூரத்தை 28 கி.மீ. வரை குறைக்கும்.
- இது 1.23 கி.மீ. நீளம் உடைய ஒரு பாலமாகும்.



## கல்விக்காக ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட அளவிலானத் தகவல் அமைப்பு பிளஸ் அறிக்கை



- இந்தியாவின் பள்ளிக் கல்வி பற்றிய 2020-21 ஆம் ஆண்டிற்கான கல்விக்காக ஒருங்கிணைக்கப் பட்ட மாவட்ட அளவிலான ஒரு தகவல் அமைப்பு பிளஸ் என்ற ஒரு அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது 2012-13 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது பள்ளிக் கல்வி மீதான மிகப்பெரிய மேலாண்மை தகவல் அமைப்புகளுள் ஒன்று ஆகும்.
- UDISE+ என்பது கல்விக்காக ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட அளவிலான ஒரு தகவல் அமைப்பின் மேம்படுத்தப்பட்ட அமைப்பாகும்.
- இதில் பள்ளிகள் குறித்த தகவல்கள் இணையத்திலும் நிகழ்நேரத்திலும் சேகரிக்கப் படுகிறது.
- UDISE என்ற அமைப்பிலுள்ள தரவுகளிலுள்ள பிழைகள் மற்றும் தாமதங்கள் போன்றச் சிக்கல்களை இது தீர்க்கும்.

## ராஷ்டிரிய ரக்சா பல்கலைக்கழகம்

- பிரதமர் மோடி அவர்கள் ராஷ்டிரிய ரக்சா என்ற பல்கலைக்கழகத்தினைத் திறந்து வைத்தார்.
- இவர் அகமதாபாத்தில் அந்தப் பல்கலைக் கழகத்திற்கான அதன் முதல் பட்டமளிப்பு உரையை ஆற்றினார்.
- இந்தப் பல்கலைக்கழகமானது, காவல் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு கல்விப் படிப்புகளை மாணவர்கள் பயில வாய்ப்பு அளிக்கும்.

## வின்கோவ்-19

- வின்கோவ்-19 எனப் பெயரிடப்பட்ட உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கோவிட்-19 சிகிச்சைக்கான முதல் மருந்தானது விரைவில் பொதுமக்களுக்குக் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மையத்தின் செல்லியல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையம், வின்ஸ் பயோப்ராடக்ட்ஸ் மற்றும் ஹைதராபாத் பல்கலைக் கழகம் ஆகியவை இணைந்து 'வின்கோவ்-19' என்ற மருந்தை உருவாக்கி உள்ளன.

❖ இந்த மருந்தை உருவாக்க, SARS-CoV-2 என்ற ஒரு வைரஸ் செயலிழக்கச் செய்யப்பட்டு ஏற்பிகளுக்குள் செலுத்தப்படுகிறது.




## அடவி தயாரிப்பு

❖ கேரளாவின் நிலம்பூர் பழங்குடியினரால் உற்பத்தி செய்யப்படும் காட்டுத் தேன் போன்ற சிறு குறு வனப் பொருட்கள், இப்போது அடவி என்ற ஒரு பெயரில் சந்தைப் படுத்தப் படும்.

❖ தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் ஜன் ஷிக்சன் சன்ஸ்தான் ஆகியவை இணைந்து நிலம்பூரில் நடைபெற்றப் பழங்குடியினர் திருவிழாவில் அடவி என்ற தயாரிப்பினை அறிமுகப்படுத்தியுள்ளன.




## கிராமீனா ஹப்பா

❖ கிராமீனா ஹப்பா என்பது கிராமப்புற கைவினைஞர்கள் தங்களது கைவினைப் பொருட்கள், விவசாயம் மற்றும் கைத்தறிப் பொருட்களை விற்பனை செய்வதற்கான ஒரு தளமாகும்.

❖ பெங்களூருவில் உள்ள தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் கர்நாடக மண்டல அலுவலகமானது இந்த நிகழ்ச்சியை நடத்தியது.

- இந்த நிகழ்வில் கர்நாடகா மற்றும் இந்தியா முழுவதிலும் உள்ள பல மாவட்டங்களில் இருந்து கைத்தறிப் புடவைகள், கையால் செய்யப்பட்ட கலைப் பொருட்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள் மற்றும் கையால் நெய்யப்பட்ட ஆடைப் பொருட்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன.
- இந்தப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானமானது கை வினைக் கலைஞர்களிடம் நேரடியாகச் சேரும்.




## இளம் விஞ்ஞானி திட்டம்



- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது பள்ளி மாணவர்களுக்காக வேண்டி "யுவ விஞ்ஞானி கார்யக்ரம்" (யுவிகா) அல்லது "இளம் விஞ்ஞானி திட்டம்" என்ற ஒரு சிறப்புத் திட்டத்தைத் தொடங்குகிறது.
- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் வளர்ந்து வரும் போக்குகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி மற்றும் தொழிலைத் தொடர்வதற்கு அதிக மாணவர்களை ஊக்குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இணையவழிப் பொருள் விநியோகத்தில் உலக முதலீடு 2021


- இணையவழிப் பொருள் விநியோக நிறுவனங்களுக்கான இரண்டாவது பெரிய உலகளாவிய துணிகர மூலதன முதலீட்டு மையமாக இந்தியா உள்ளது.
- லண்டன் & பார்ட்னர்ஸ் என்ற நிறுவனத்தின் டீல் ரூம் இணை முதலீட்டுத் தரவுப் பகுப்பாய்வின் படி இது கூறப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் உலக அளவில், அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் இருந்தது.
- இந்தியாவினுள் பெங்களூரு முதலிடத்தில் உள்ளது.




## இந்தியப் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு புள்ளிவிவரங்கள் 2020-21

- மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, 2020-21 ஆம் ஆண்டிற்கான இந்தியப் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு புள்ளி விவரங்களை வெளியிட்டார்.

- இது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சகத்தின் வருடாந்திர வெளியீடு ஆகும்.
- இது இந்தியாவின் பெட்ரோலியம் மற்றும் எரிவாயுத் துறையின் ஒரு ஒட்டு மொத்தக் கண்ணோட்டத்தினை வழங்குகிறது.
- இந்தியா தனது கச்சா எண்ணெய்த் தேவையில் கிட்டத்தட்ட 85 சதவீதத்தை இறக்குமதி மூலம் பெறுகிறது.
- எனவே, 2020-21 ஆம் ஆண்டில் இந்தியாவின் பெட்ரோலியப் பொருட்களுக்கான தன்னிறைவு விகிதமானது 15.6% ஆக இருந்தது.
- தெற்காசிய நாடுகளிலேயே இந்தியாவில் தான் பெட்ரோல், டீசல் விலை அதிகமாகும்.
- இந்தியா தனது 54% அளவிற்கு இயற்கை எரிவாயுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இறக்குமதியைச் சார்ந்துள்ளது.




## மூலதன முதலாளித்துவ முன்னெடுப்பு

- இது தீன தயாள் உபாத்தியாயா கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ், ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் நிதியளிக்கப்பட்ட ஒரு திட்டமாகும்.
- இந்த முன்னெடுப்பின் மூலம், தொழில்துறையின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.
- இந்த முயற்சி தொழில்துறைக்கு ஒரு குறிப்பிடத்தக்க ஊக்கத்தை அளிக்கும்.

## புவிசார் குறியீடு பெற்ற காஷ்மீரிக் கம்பளம்

- ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசானது, அங்கு உள்ள புவிசார் குறியீடு பெற்ற காஷ்மீரிக் கம்பளத்திற்கான விரைவுக் குறியீட்டை (QR code) அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது கையால் நெய்யப்பட்டக் கம்பளங்களின் நுணுக்கத்தினையும் அதன் நம்பகத் தன்மையையும் பாதுகாப்பதற்கான ஒரு முயற்சியாகும்.
- விரைவுக் குறியீடு பதிக்கப்பட்டச் சீட்டினை நகலெடுக்கவோ அல்லது தவறாகப் பயன்படுத்தவோ முடியாது என்பதால், இது பெருநிறுவனங்களால் தயாரிக்கப்படும் போலிக் கம்பளங்களின் உற்பத்தியைத் தடுக்கும்.
- இதற்கிடையில், புவிசார் குறியீடு பெற்ற கையால் நெய்யப்பட்டக் கம்பளங்களின் (தரை விரிப்புகளின்) முதல் சரக்குப் பெட்டகமானது இந்த மார்ச் மாதத்தில் புது டெல்லியில் இருந்து ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.





## லிவ்குயிக்

LIVQUIK

- முன்பண வழங்கீட்டுக் கருவி (PPI - prepaid payment instrument) தயாரிப்பு நிறுவனமான லிவ்குயிக், ரிசர்வ் வங்கியின் ஆணையின் படி, அதன் முன்பண வழங்கீட்டுக் கருவிகளுக்கான ஒரு முழு இயங்கும் தன்மையை அடைந்துள்ளதாக அறிவித்தது.
- இந்த நிறுவனத்தின் கூற்றுப்படி, ஒரு முழு இயங்குநிலையை அடைந்த முதல் முன் பண வழங்கீட்டுக் கருவித் தயாரிப்பு நிறுவனம் இதுவாகும்.
- லிவ்குயிக் என்பது மும்பையைச் சேர்ந்த நிதித் தொழில்நுட்ப ரீதியிலான ஒரு புத்தாக்க நிறுவனம் ஆகும்.

## ஜென்டர் சாம்வாத்




- 34 மாநிலங்களைச் சேர்ந்த 3000க்கும் மேற்பட்ட மாநிலப் பணி ஊழியர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் (SHGs) உறுப்பினர்கள் 3வது 'ஜென்டர் சாம்வாத்' (Gender Samwaad) நிகழ்வில் கலந்து கொண்டனர்.
- இது ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா- தேசியக் கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது பாலினம் என்ற கண்ணோட்டத்தில் நாடு முழுவதும் செயலில் உள்ள திட்டத்தின் செயல்பாடுகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தேசிய அளவிலான காணொளி வாயிலான ஒரு நிகழ்ச்சியாகும்.
- மகளிர் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை மேம்படுத்துவதே இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும்.
- இந்த நிகழ்வானது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா வாரக் கொண்டாட்டத்தின் ஒரு நினைவு கருப்பொருளான 'நயே பாரத் கி நாரி'என்பதின் ஒரு பகுதியாக நடத்தப் பட்டது.

## பார்ச்சூன் இந்தியா அமைப்பின் தி நெக்ஸ்ட் 500 பட்டியல் 2022 - இரயில்டெல்




- இந்திய இரயில்வே நிறுவனத்திற்குச் சொந்தமான இந்திய இரயில்டெல் (இரயில்வே தொலைத் தொடர்பு) கழக நிறுவனமானது பார்ச்சூன் இந்தியா அமைப்பின் 8வது தி நெக்ஸ்ட் 500 (2022 ஆம் ஆண்டு பதிப்பு) பட்டியலில் இந்தியாவில் இயங்கும் சிறந்த நடுத்தர நிறுவனங்களில் 124வது இடத்தைப் பிடித்துள்ளது.

- இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள இந்திய அரசின் ஒரே தொலைத்தொடர்பு பொதுத் துறை நிறுவனம் இதுவாகும்.
- இரயில்டெல் தவிர, 309வது இடத்தில் உள்ள IRCTC மட்டுமே இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரே இரயில்வே பொதுத்துறை நிறுவனமாகும்.

## உக்ரைனில் உள்ள இந்தியத் தூதரகம்




- உக்ரைனில் உள்ள இந்தியத் தூதரகத்தைத் தற்காலிகமாக போலந்து நாட்டிற்கு இடம் மாற்றம் செய்ய இந்தியா முடிவு செய்துள்ளது.
- போரினால் பாதிக்கப்பட்ட உக்ரைன் நாட்டில் பாதுகாப்பு நிலைமைகள் வேகமாக மோசமடைந்து வருவதைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையானது மேற் கொள்ளப் படுகிறது.
- உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் பல முக்கிய நகரங்கள் மீது ரஷ்யப் படையின் தாக்குதல்கள் அதிகரித்து வரும் நிலையில் இந்த முடிவானது மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

## இந்தியாவில் தாய்மார்கள் இறப்பு விகிதம்

- தாய் மற்றும் குழந்தைப் பேறு ஆரோக்கியத்தில் கேரள மாநிலம் மீண்டும் முதல் இடத்தில் உள்ளது.
- நாட்டிலேயே மிகக் குறைவாக 30 என்ற அளவில் தாய்மார்கள் இறப்பு விகிதமானது இந்த மாநிலத்தில் (ஒரு லட்சம் பிறப்புகளுக்கு) பதிவாகியுள்ளது.
- 2017-19 ஆம் ஆண்டின் காலக் கட்டத்தில் இந்தியாவில் பதிவான தாய்மார்கள் இறப்பு விகிதமானது 103 ஆக உயர்ந்துள்ளதாக சமீபத்தியத் தரவுகள் தெரிவித்துள்ளன
- இந்தியாவில் கேரளா, தெலுங்கானா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் மிகக் குறைந்த அளவிலேயே தாய்மார்கள் இறப்பு விகிதம் பதிவாகியுள்ளது.
- மேற்கு வங்கம், ஹரியானா, உத்தரகாண்ட் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் தாய்மார்கள் இறப்பு விகிதம் மோசமாகியுள்ளது.
- உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் தாய்மார்கள் இறப்பு விகிதம் வெகுவாக முன்னேறியுள்ளது.
- இத்தாலி, நார்வே, போலந்து, பெலாரஸ் ஆகிய நாடுகளில் உலகிலேயே மிகக் குறைந்த அளவிலான தாய்மார்கள் இறப்பு விகிதமே பதிவாகியுள்ளது.




## ஊட்டச்சத்து மருந்துகள்




- பிரதான் மந்திரி பாரதிய ஜன அவுசதி பரியோஜனா கேந்திராக்கள் (விற்பனை நிலையங்கள்) தங்கள் தயாரிப்புப் பொருட்கள் அடங்கிய விற்பனைப் பட்டியலில் ஊட்டச்சத்து மருந்துகளைச் சேர்த்துள்ளன.
- ஊட்டச்சத்து (Nutraceuticals) மருந்துகள் என்பது ஆரோக்கியம் மற்றும் மருத்துவ நலன்களை வழங்கும் உணவு சார்ந்தப் பொருட்கள் ஆகும்.
- ஊட்டச்சத்து மருந்து என்பதில் புரதச் சூரணங்கள், புரதத் திண்பண்டங்கள், மால்ட் (மாவு) அடிப்படையிலான உணவுப் பொருட்கள், நோய் எதிர்ப்புச் சக்தி தரும் திண்பண்டங்கள், வைட்டமின் நிரப்பிகள் போன்றவை அடங்கும்.

## எரிபொருள் கலன் பொருத்திய மின்சார வாகனம்

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, ஹைட்ரஜனை அடிப்படையாகக் கொண்ட ஒரு மேம்பட்ட எரிபொருள் கலன் பொருத்திய மின்சார வாகனத்திற்கான ஒரு மாதிரித் திட்டத்தைத் தொடங்கி வைக்க உள்ளார்.
- மேலும், அவர் டயோட்டா மிராய் எரிபொருள் கலன் பொருத்தப் பட்ட ஒரு மின்சார வாகனத்திற்கான செயல் விளக்கத்தினையும் வெளியிட உள்ளார்.
- இத்திட்டம் இந்தியாவில் செயல்படுத்தப்படும் இது போன்ற முதல் வகைத் திட்டமாகும்.
- இது ஹைட்ரஜன், எரிபொருள் கலன் பொருத்திய மின்சார வாகனத் தொழில்நுட்பம்

பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதையும், நாட்டில் ஹைட்ரஜன் அடிப்படையிலான ஆற்றலைப் பயன்படுத்தும் சமுதாயத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் அதன் நன்மைகளைப் பரப்புவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## உலக அமைதி மையம்

- அஹிம்சா விஸ்வ பாரதி அமைப்பானது ஹரியானா மாநிலத்தின் குருகிராம் நகரில் இந்தியாவின் முதல் உலக அமைதி மையத்தை நிறுவவுள்ளது.
- உலகில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்டும் பணியில் 'உலக அமைதி மையம்' ஈடுபடும்.
- அஹிம்சா விஸ்வ பாரதி அமைப்பானது, ஒரு புகழ்பெற்ற மற்றும் அமைதித் தூதரான ஜைனாச்சாரிய டாக்டர் லோகேஷ் முனி அவர்களால் நிறுவப்பட்டது.

## சிறப்பு இருக்கை



- இந்திய ஒன்றியச் சேவை நிறுவனத்தில் மறைந்த ராணுவப் படைத் தலைவர் ஜெனரல் பிபின் ராவத் நினைவாக ஓர் இருக்கையினை இந்திய இராணுவம் அர்ப்பணித்துள்ளது.
- தேசியப் பாதுகாப்புத் துறையில் நிபுணத்துவம் பெற்ற மூத்த முப்படைகள் மற்றும் குடிமக்களுக்கு இந்த இருக்கையில் வாய்ப்பு அளிக்கப்படும்.

## M.V. ராம் பிரசாத் பிஸ்மில்

- M.V. ராம் பிரசாத் பிஸ்மில் என்பது கங்கை முதல் பிரம்மபுத்திரா வரையில் பயணித்த ஒரு மிக நீளமான கப்பலாகும்.
- இது ஹால்தியாவிலுள்ள சியாமா பிரசாத் முகர்ஜி துறைமுகத்திலிருந்து கவுகாத்தி என்ற நகரத்திலுள்ள பாண்டு துறைமுகம் வரையில் கனரக சரக்குப் போக்குவரத்துப் பயணத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.



## ஆசானி புயல்

- 2022 ஆம் ஆண்டின் முதல் புயலான ஆசானி புயல் என்பது, 2022 ஆம் ஆண்டு, மார்ச் 21 அன்று அந்தமான் நிகோபர் தீவுகளைத் தாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- அந்தமான் நிகோபர் தீவினைத் தாக்கிய பிறகு, அது மியான்மர் மற்றும் வங்காளதேசம் ஆகிய பகுதிகளை நோக்கி நகரும்.
- வங்காள விரிகுடாவின் தென்கிழக்குப் பகுதியில் உருவான தாழ்வு அழுத்த மண்டலம் என்பது மார்ச் 21 தேதிக்குள் ஒரு தீவிரப் புயலாக வலுவடையலாம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## உலகின் மிகப்பெரிய சூரியசக்தி மரம்



- உலகின் மிகப்பெரிய ஒரு சூரியசக்தி மரம் நிறுவப்பட்டதை கின்னஸ் உலக சாதனை நிறுவனம் உறுதி செய்துள்ளது.
- இது பஞ்சாபில் உள்ள லூதியானா என்னுமிடத்தில் உள்ள சிறப்பு இயந்திர மையத்தில் கட்டமைக்கப் பட்டுள்ள 309.83 மீ2 அளவிலான சூரியசக்தி தகடு பரப்பினைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.
- இது மத்திய இயந்திரப் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்டது.

## கோவிட்-19 முற்காப்புத் தவணை




- 12 முதல் 14 வயதிற்குட்பட்டக் குழந்தைகளுக்கு கோவிட்-19 தடுப்பு மருந்து செலுத்தும் பணியானது 2022 ஆம் ஆண்டு மார்ச் 16 அன்று தொடங்கியது.
- குறிப்பிட்ட வயது கொண்ட குழந்தைகளுக்கு கார்பிவாக்ஸ் கோவிட்-19 தடுப்பு மருந்து வழங்கப் படும்.
- கார்பிவாக்ஸ் என்பது ஹைதராபாத் நகரில் அமைந்துள்ள பயோலாஜிகல்-இ என்ற ஒரு நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட ஒரு மருந்தாகும்.
- கோவிட்-19 முற்காப்புத் தவணையானது 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு வழங்கப் படும்.

## கிளைகோஸ்மிஸ் அல்பிகார்பா




- இந்தியத் தாவரவியல் ஆய்வு அமைப்பினைச் சேர்ந்த அறிவியலாளர்கள் குழுவானது கிளைகோஸ்மிஸ் அல்பிகார்பா எனப்படும் ஒரு புதிய ஜின் பெர்ரி இனத்தினை (gin berry species) கண்டறிந்துள்ளனர்.
- இது தமிழ்நாட்டிலுள்ள கன்னியாகுமரி வனவிலங்குச் சரணாலயத்தில் கண்டறியப் பட்டது.
- இந்த இனமானது மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்குப் பகுதியில் மட்டுமே காணப் படுகிறது.
- இந்த இனமானைது ரூட்டாசியே எனப்படும் ஆரஞ்சு குடும்பத்தினைச் சேர்ந்ததாகும்.

## அறிவியல் ஆராய்ச்சிக்கான G.D. பிர்லா விருது

- அறிவியல் ஆராய்ச்சிக்கான 31வது G.D. பிர்லா விருதிற்கு பேராசிரியர் நராயன் பிரதான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- பருப்பொருள் அறிவியல் துறையில் இவர் ஆற்றிய ஒரு சிறப்பானப் பங்களிப்பிற்காக வேண்டி இவருக்கு இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- சிறிய ஒளிரும் பொருட்களின் சில புதிய வடிவங்களை வடிவமைப்பதற்கு உதவும் படிக மாதிரிகளில் இவர் தனது நிபுணத்துவத்தினை நிரூபித்துள்ளார்.
- ஒளி உமிழும் குறை கடத்தி நுண்படிகங்களின் வேதியியல் மற்றும் இயற்பியலைப் புரிந்து கொள்வதில் பிரதானின் ஆராய்ச்சிப் பணி கவனம் செலுத்துகிறது.




## 13 நதிகளுக்கான புணரமைப்புத் திட்டம்




- வனம், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகமானது நாட்டிலுள்ள 13 முக்கிய நதிகளைப் புணரமைப்பதற்கான ஒரு திட்டத்தினை அறிவித்துள்ளது.
- இத்திட்டத்தில் உள்ளடங்கும் 13 நதிகளாவன
    - இமாலய நதிகள் : ஜீலம், செனாப், ராவி, பியாஸ், சட்லஜ், யமுனை மற்றும் பிரம்ம புத்திரா ஆகியனவாகும்.
    - தக்காணம் (அ) பீடபூமி ஆறுகள் : நர்மதை, கோதாவரி, மகாநதி, கிருஷ்ணா மற்றும் காவேரி ஆகியனவாகும்.
    - உள்நாட்டு நீர்வடிகால் வகை நதி : லூனி
- இந்த 13 நதிகள், இந்தியாவின் புவியியல் பரப்பில் கிட்டத்தட்ட 57.45% பரவியுள்ளன.

## ஆர்க்டிக் கொள்கை

- 'இந்தியா மற்றும் ஆர்க்டிக்: நிலையான மேம்பாட்டிற்கான கூட்டுறவினை கட்டமைத்தல்' என்று தலைப்பிடப்பட்ட ஆர்க்டிக் கொள்கையினை மத்திய அரசு வெளியிட்டது.
- இது ஆர்க்டிக் பகுதியுடன் அறிவியல் மற்றும் ஆய்வு, பருவநிலை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கனிம வளத்தின் பயன்பாடு மற்றும் கடல்சார் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பில் தேசிய செயல்திறன் மற்றும் போட்டித்திறன்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆர்க்டிக் சபையில் இந்தியாவின் பங்கேற்பினை அதிகரித்தல் மற்றும் அப்பகுதியின் சிக்கலான ஆளுகை அமைப்புகளின் புரிதலை மேம்படுத்துவதில் இக்கொள்கை ஈடுபாடு செலுத்தும்.
- ஆர்க்டிக் சபையில் பார்வையாளர் நாடுகளாக உள்ள 13 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.



## தேசிய இரயில் திட்டம் – 2030




- இந்திய இரயில்வே நிறுவனமானது இந்திய நாட்டிற்காக 2030 ஆம் ஆண்டு தேசிய இரயில்வே திட்டத்தினைத் தயாரித்துள்ளது.
- இது 2030 ஆம் ஆண்டிற்குள் எதிர்காலத்திற்குத் தயாரான இரயில்வே அமைப்பினை உருவாக்குவதற்கான திட்டமாகும்.
- சரக்குப் போக்குவரத்தில் இரயில்வேயின் மாதிரிப் பங்கினை 45% ஆக உயர்த்தச் செய்வதற்காக செயல்பாட்டுத் திறன் மற்றும் வணிகக் கொள்கை முன்னெடுப்புகள் ஆகியவற்றின் அடிப்படையிலான உத்திகளை உருவாக்குவதை இந்தத் திட்டம் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ரஷ்ய எண்ணெய் இறக்குமதி

- இந்தியன் ஆயில் கழகமானது ரஷ்யாவிடமிருந்து 3 மில்லியன் பீப்பாய் எண்ணெய்யை வாங்கியுள்ளது.
- நடைமுறையிலுள்ள ஒரு சர்வதேச விலை வீதத்திற்கு எதிராக ரஷ்யா அதிக அளவில் தள்ளுபடியை வழங்கியுள்ளது.
- தனது கச்சா எண்ணெய்யை விற்று, காப்பீடு மற்றும் போக்குவரத்துச் செலவுகளை சமாளிப்பதற்காக ரஷ்யா வழங்கும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, 15 மில்லியன் பீப்பாய் அளவிலான கச்சா எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்யலாம்.

## இளம் பெண்களுக்கான STEM மற்றும் நிதி கல்வியறிவு மீதான நாரிசக்தி வர்தா

- யுனிசெப் யுவாஹ் என்ற அமைப்பானது இளம் பெண்களுக்கான STEM மற்றும் நிதி கல்வியறிவு மீதான நாரிசக்தி வர்தா என்ற பேச்சுவார்த்தையைத் தொடங்கியது.
- STEM என்பதன் விரிவாக்கம் 'அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்' (Science, Technology, Engineering, and Mathematics) என்பதாகும்.

- இந்த நிகழ்வானது, சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின் கீழான சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டத்தினை மேற்கொள்ளும் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் சிறப்பு வாரத்தின் ஓர் அங்கமாகும்.
- STEM சார்ந்த துறைகளில் தொழில்முறை வாய்ப்பினை எய்துவதற்கு ஏதுவாக இளம் பெண்களை எவ்வாறு ஊக்கப்படுத்துவது என்று இதில் பங்கேற்ற உறுப்பினர்கள் விவாதித்தனர்.
- 2018 - 2019 ஆம் ஆண்டின் அனைத்திந்திய உயர்கல்வி ஆய்வின்படி, இந்தியாவிலுள்ள சுமார் 43% STEM பட்டதாரிகள் பெண்களே ஆவர்.
- இது உலகிலேயே மிக அதிகமாகும்.
- ஆனால் இந்தியாவிலுள்ள STEM துறை சார்ந்த வேலைவாய்ப்புகளில் இவர்களுக்கான பங்கு 14% மட்டுமே ஆகும்.





## இந்தியத் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் 25வது ஆண்டு நிறைவு

- மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் 25வது ஆண்டு நிறைவு: பங்குதாரர்களுக்கான முன்னோக்குச் செயல்முறைகள் (தொலைத் தொடர்பு, ஒளிபரப்பு, தகவல் தொழில்நுட்பம், விமான நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் ஆதார்) மீதான கருத்தரங்கத்தினைத் தொடங்கி வைத்தார்.
- தொலைத் தொடர்பு குறைதீர்ப்பு மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தினால் இந்தக் கருத்தரங்கமானது ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது இந்தியத் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் 25 ஆண்டு காலப் பயணத்தினை நினைவு கூறுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.
- தொலைத் தொடர்பு, ஒளிபரப்பு தகவல் தொழில்நுட்பம், விமான நிலைய உள் கட்டமைப்பு மற்றும் ஆதார் துறைகளில் உள்ள பங்குதாரர்களிடையேயான சர்ச்சைத் தீவு உள்ளிட்ட சில ஒழுங்குமுறை வழிமுறைகள் தொடர்பான ஒரு விழிப்புணர்வை மேம்படுத்துவதே இந்தக் கருத்தரங்கின் ஒரு நோக்கமாகும்.




## இந்தியாவின் விரைவு இரயில் வழித்தடம்




- ❖ டெல்லி-மீரட் விரைவு இரயில் பாதைக்கானப் பெட்டிகளைத் தேசியத் தலைநகரப் பிராந்தியப் போக்குவரத்துக் கழகம் அறிமுகம் செய்துள்ளது.
- ❖ முதலாவது பிராந்திய விரைவு இரயில் போக்குவரத்து அமைப்பு வழித்தடத்திற்காக சவ்லி உற்பத்தித் தொழிற்சாலையில் இருந்து மொத்தம் 210 பெட்டிகள் வழங்கப்படும்.
- ❖ பிராந்திய விரைவு இரயில் போக்குவரத்து அமைப்பு வழித்தடம் என்பது 180 கிமீ வேகத்தில் இரயில்கள் இயக்கப்படும் முதல்-வகை அமைப்பாகும்.

## விமானக் கட்டுப்பாட்டு அமைப்பு ஒருங்கிணைப்பு வளாகம்

- ❖ பெங்களூருவில் உள்ள வான்வெளி மேம்பாட்டு நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள ஏழு அடுக்கு விமானக் கட்டுப்பாட்டு அமைப்பு ஒருங்கிணைப்பு வசதியைப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்.
- ❖ போர் விமானங்களை இயக்கும் விமானிகள் இந்த வளாகத்தில் ஒரு மாதிரிப் பயிற்சியையும் பெறுவார்கள்.




## இணையம் உபயோகிக்காத பயனர்களுக்கு பணவழங்கீட்டு வசதி

- பாரத் பெட்ரோலியம் எண்ணெய் நிறுவனமானது அல்ட்ரா கேஷ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
- இது பாரத் எரிவாயு நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு LPG சிலிண்டர்களை முன் பதிவு செய்வதற்காக வேண்டி குரல் பதிவு அடிப்படையிலான ஒரு எண்ணிமக் கட்டண வசதியை வழங்குவதற்கான ஒரு கூட்டிணைவாகும்.
- திறன்பேசி அல்லது இணைய அணுகல் வசதி இல்லாத வாடிக்கையாளர்கள் இந்த அம்சத்தைப் பயன்படுத்தி சிலிண்டர்களை முன்பதிவு செய்து 'UPI 123PAY' அமைப்பு மூலம் பணம் செலுத்தலாம்.

## சூரஜ்கண்ட் சர்வதேச கைவினைப் பொருட்கள் பொருட்காட்சி




- ஹரியானா ஆளுநர் பண்டாரு தத்தாத்ரேயா மற்றும் ஹரியானா முதல்வர் மனோஹர் லால் கட்டார் ஆகியோர் இணைந்து உலகப் புகழ்பெற்ற 35வது சூரஜ்கண்ட் சர்வதேச கைவினைப் பொருட்கள் பொருட்காட்சியினை ஹரியானாவின் ஃபரிதாபாத் மாவட்டத்தில் உள்ள சூரஜ்கண்ட் நகரில் தொடக்கி வைத்தனர்.

- 2022 ஆம் ஆண்டில், ஜம்மு & காஷ்மீர் கருத்துரு மாநிலமாகவும் உஸ்பெகிஸ்தான் பங்குதார நாடாகவும் உள்ளன.
- இந்தப் பொருட்காட்சியானது, இந்தியா முழுவதும் உள்ள கைவினைக் கலைஞர்கள் இந்தியாவின் கைவினைப் பொருட்கள், கைத்தறி மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தின் செழுமையையும் பன்முகத் தன்மையையும் அவர்களது திறமையையும் காட்சிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகிறது.

## LAMITIYE – 2022

- இந்திய ராணுவமும் செசல்ஸ் நாட்டின் பாதுகாப்புப் படையும் இணைந்து செசல்சிலுள்ள செசல்ஸ் பாதுகாப்பு அகாடமியில் LAMITIYE – 2022 எனப்படும் 9வது கூட்டு இராணுவப் பயிற்சியினை மேற்கொண்டன.
- இந்தப் பயிற்சியில் இந்திய இராணுவம், செசல்ஸ் பாதுகாப்புப் படை மற்றும் நிறுவன தலைமைத்துவம் ஒன்றிணைந்து ஈடுபடுகின்றன.
- பகுதியளவு நகர்ப்புறச் சுற்றுச்சூழலில் எதிர்ப்படைகளுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட பல்வேறு நடவடிக்கைகளிலிருந்து பெற்ற அனுபவங்களைப் பகிர்வதும் கூட்டு நடவடிக்கைகளை நடத்துவதற்கான திறன்களை மேம்படுத்தச் செய்வதுமே இந்தப் பயிற்சியின் ஒரு நோக்கமாகும்.
- இந்திய ராணுவத்தின் படைப்பிரிவில் 2/3 கோர்கா ரைபில்ஸ் குழுவினை (PIRKANTHI படைப் பிரிவு) சேர்ந்த வீரர்கள் அடங்குவர்.



## தேசிய இ-விதான் செயலித் திட்டம்



- முழுவதும் காகிதமற்ற நாடாக மாறும் முயற்சியில் தேசிய இ-விதான் செயலி என்றத் திட்டத்தினை அமல்படுத்திய முதல் மாநிலச் சட்டசபையாக நாகாலாந்து மாநிலம் வரலாறு படைத்துள்ளது.
- இது ஆங்கிலத்திலும் பிராந்திய மொழியிலும் என இரு மொழிகளில் கேள்விப் பட்டியல், வணிகப் பட்டியல், அறிக்கைகள் போன்ற பல்வேறு ஆவணங்களை எளிதில் அணுகுவதற்கான வசதியைக் கொண்டுள்ள ஒற்றைக் குறியீட்டுப் புகார் கொண்ட ஒரு மென்பொருளாகும்.
- இந்தச் செயலியானது "ஒரு நாடு – ஒரு செயலி" என்ற கொள்கையை முன்னிறுத்தச் செய்கிறது.

## இந்தியா - ஆஸ்திரேலியா மெய்நிகர் உச்சி மாநாடு

- இந்த உச்சி மாநாட்டில் முக்கிய முதலீடு, முக்கியக் கனிமங்கள், புலம்பெயர்தல், பாதுகாப்பு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் டிஜிட்டல் (எண்ணிம) துறைகள் பற்றி விவாதிக்கப் பட்டன.
- பிரதமர் மோடி மற்றும் ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசன் இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்றனர்.
- முதலாவது மெய்நிகர் மாநாடானது 2020 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.




## வளைகுடா வணிக உச்சிமாநாடு

- ஹாங்காங், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 33 நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஸ்ரீநகர் வந்தடைந்தனர்.
- ஜம்மு & காஷ்மீரில் பல்வேறு துறைகளில் முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்வது குறித்து விவாதிக்கும் ஒரு நோக்கில் இந்தப் பிரதிநிதிகள் இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொண்டனர்.
- முதல்முறையாக சவுதி அரேபிய நாட்டினைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் ஜம்மு & காஷ்மீரில் நிலவும் வணிக வாய்ப்புகளின் மீது ஆர்வம் காட்டியுள்ளனர்.

## ஒல் சிகி

- இந்திய அரசியலமைப்பானது முதன்முறையாக ஒல் சிகி என்ற வரி வடிவில் எழுதப் பட்ட சந்தாலி மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.
- இந்த வரி வடிவமானது ஒல் செமெத், ஒல் மற்றும் சிகி எனவும் அழைக்கப்படுகிறது.

- ஒல் சிகி வரி வடிவமானது சந்தாலி மொழியை எழுதப் பயன்படுத்தப் படுகிறது.
- ஒல் சிகி வரி வடிவத்தினைத் தோற்றுவித்தவர் பண்டிட் இரகுநாத் முர்மு (குரு கோம்கி) என்பவராவார்.
- சந்தாலி என்பது 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தினைச் சேர்ந்த இலக்கியத்தினைக் கொண்ட மற்றும் தனக்கென சிறப்புப் பண்புகளைக் கொண்ட ஒரு மொழியாகும்.



## WINGS INDIA – 2022

- இது ஹைதராபாத்தின் பேகம்பேட் விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் மற்றும் இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு ஆகியவற்றினால் நடத்தப்பட்டு வருகிறது.
- இது பொது, வணிகம் மற்றும் வர்த்தக ரீதியிலான போக்குவரத்து மீது ஈடுபாடு செலுத்தும் ஆசியாவின் மிகப்பெரிய ஒரு நிகழ்ச்சியாகும்.
- மேலும், முதலீடுகள், புதிய வர்த்தகம், ஈட்டுதல், பிராந்திய இணைப்பு மற்றும் கொள்கை உருவாக்கம் ஆகியவை மீதும் இதில் கவனம் செலுத்தப்படும்.
- நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறைக்கு உத்வேகம் அளிப்பது குறித்தும் இது ஆய்வு செய்யும்.
- இந்த ஆண்டு நிகழ்ச்சிக்கான கருத்துரு, “India@75 : New Horizon for Aviation” என்பதாகும்.



## EX-DUSTLIK




- இது இந்தியா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் இராணுவங்களுக்கு இடையில் நடத்தப் படும் ஒரு கூட்டுப் பயிற்சியாகும்.
- 3வது EX-DUSTLIK பயிற்சியானது உஸ்பெகிஸ்தானின் யாங்கியாரிக் நகரில் நடத்தப் பட்டு வருகிறது.
- முந்தையப் பயிற்சியானது 2021 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில், உத்தரகாண்டின் ராணிகேட் நகரில் நடத்தப் பட்டது.
- இப்பயிற்சியில் குண்டுவீச்சுப் படைப் பிரிவானது இந்தியப் படைப்பிரிவின் சார்பாக பங்கேற்கிறது.
- இந்தப் படைப்பிரிவானது இந்திய இராணுவத்தின் மிகவும் போற்றத்தக்கப் படைப் பிரிவுகளுள் ஒன்றாகும்.
- இந்தப் படைப்பிரிவானது சுதந்திரத்திற்கு முன்பும், பிறகும் இந்திய இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளில் அதிகளவில் பங்காற்றியப் பெருமைக்குரியது.

## சுரக்சா கவச் 2 பயிற்சி

- இந்திய இராணுவத்தின் அக்னிபாஷ் பிரிவிற்கும் மகாராஷ்டிரா காவல்துறைக்கும் இடையிலான கூட்டுப் பயிற்சியான சுரக்சா கவச் 2 பயிற்சியானது புனேயின் லுல்லா நகரில் நடத்தப் பட்டது.
- இந்திய இராணுவத்தின் தீவிரவாத எதிர்ப்புப் படைப்பிரிவு, மகாராஷ்டிரா காவல் துறையில் தீவிரவாத எதிர்ப்புப் படை, மோப்ப நாய்கள் படை, விரைவு நடவடிக்கைக் குழுக்கள் மற்றும் இராணுவத்தின் வெடிகுண்டு அகற்றும் குழு மற்றும் காவல்துறை ஆகியோர் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டனர்.
- புனேயில் பயங்கரவாதத் தாக்குதல்களை எதிர்கொள்வதற்காக காவல்துறை மற்றும் ராணுவம் மேற்கொண்டுள்ள நடைமுறைகள் மற்றும் பயிற்சிகள் போன்றவற்றை ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் இந்தப் பயிற்சியானது நடத்தப்பட்டது.

## BRICS தடுப்பு மருந்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம்

- மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் மான்சுக் மாண்டவ்யா BRICS தடுப்பு மருந்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தினைத் தொடங்கி வைத்துள்ளார்.
- புதிதாக தொடங்கப்பட்ட இந்த மையமானது பரஸ்பர நன்மைகளுக்காக நாடுகளுக்கு இடையில் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு ஒத்துழைப்பு மேற்கொள்ள முயலும்.
- சீனாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் வாங் சிகாங் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.
- உலக சுகாதார அமைப்பின் 65-70% தடுப்பு மருந்துத் தேவையினை இந்தியா பூர்த்தி செய்வதோடு 150க்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் தடுப்பு மருந்துகளை விநியோகம் செய்கிறது.
- BRICS நாடுகளுக்காகவும் உலகின் பிற நாடுகளுக்காகவும் தடுப்பு மருந்துகளை உருவாக்கச் செய்வதற்கு வேண்டி இந்தியா தனது தடுப்பு மருந்து உற்பத்தி தொழில் துறையை அர்ப்பணிக்கும்.

## உலக வீட்டு விலைக் குறியீடு Q4 - 2021

- 2021 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிற்கான உலக வீட்டு விலைக் குறியீட்டில், இந்தியா 5 இடங்கள் முன்னேறி 51வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- சொத்து விற்பனை நிறுவனமான நைட் பிராங்க் இந்த அறிக்கையினை வெளியிட்டது.
- 2020 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் இந்தியா 56வது இடத்தில் இருந்தது.
- 2020 ஆம் ஆண்டின் 4வது காலாண்டை விட 2021 ஆம் ஆண்டின் அக்டோபர்-டிசம்பர் காலாண்டின் போது இந்தியா வீட்டு விலை வீதமானது ஆண்டிற்கு 2.1% உயர்வைக் கண்டது.
- 2021 ஆம் ஆண்டின் 4 ஆம் காலாண்டில் துருக்கி 59.6 சதவிகிதம் மூலம் அதிகமான வருடாந்திர விலை வளர்ச்சி விகிதத்தைக் கண்டது.
- 2021 ஆம் ஆண்டில் மலேசியா, மால்டா மற்றும் மொராகோ ஆகிய நாடுகளில் வீட்டு விலைகள் முறையே 0.7%, 3.1%, மற்றும் 6.3% வரை குறைவைக் கண்டன.

**KNIGHT FRANK GLOBAL HOUSE PRICE INDEX Q4 2021**

| Rank | Country/Territory | Nominal Price Growth |
|---|---|---|
| 1 | Turkey | 59.6% |
| 2 | New Zealand | 22.6% |
| 3 | Czech Republic | 22.1% |
| 4 | Slovakia | 22.1% |
| 5 | Australia | 21.8% |
| 6 | Netherlands | 20.3% |
| 7 | United States | 18.8% |
| 8 | South Korea | 18.4% |
| 9 | Jersey | 18.4% |
| 10 | Estonia | 17.3% |
| 51 | India | 2.1% |
| 52 | Indonesia | 1.5% |
| 53 | Cyprus | 1.2% |
| 54 | Malaysia | -0.7% |
| 55 | Malta | -3.1% |
| 56 | Morocco | -6.3% |

*Source: Knight Frank Research*

## உலக காற்றுத் தர அறிக்கை 2021




- 2021 ஆம் ஆண்டில், காற்று சுகாதாரமற்ற நிலையை எட்டியதாக உலக காற்றுத் தர அறிக்கை கூறுகிறது.
- "IQ Air" எனும் சுவிட்சர்லாந்து நிறுவனம் இந்த அறிக்கையைத் தயார் செய்தது.
- மேலும், தொடர்ந்து 4வது ஆண்டாக, உலகின் மிகவும் மாசுபட்ட நகரமாக புதுடெல்லி திகழ்கிறது.
- 2021 ஆம் ஆண்டில் மிக மோசமான காற்றுத் தரம் கொண்ட நகரங்கள் பட்டியலில் 35 இந்திய நகரங்கள் இடம் பெற்றுள்ளன.
- இராஜஸ்தானின் பிவாதி இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ள நிலையில் அதனைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசத்தின் காசியாபாத் நகரம் உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், உலக சுகாதார அமைப்பின் காற்றுத் தர நிலைகளை எந்த உலக நாட்டினாலும் பூர்த்தி செய்ய இயலவில்லை என அறிக்கை கூறுகிறது.

## காசநோயை ஒழிப்பதற்கான நடவடிக்கை – உலக காசநோய் தின உச்சி மாநாடு




- மத்திய சுகாதாரத் துறை அமைச்சர், டாக்டர் மான்சுக் மாண்டவ்யா, "காசநோயை ஒழிப்பதற்கான நடவடிக்கை - உலக காசநோய் தின உச்சி மாநாட்டினை" துவக்கி வைத்தார்.
- இது உலக காசநோய் தினத்தன்று ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த உச்சி மாநாட்டில் இந்தியாவின் தேசியக் காசநோய் ஒழிப்புத் திட்டங்களின் வெற்றிகள் மற்றும் கற்றல் அனுபவங்கள் பற்றி எடுத்துரைக்கப் படும்.

## 2025 ஆம் ஆண்டிற்குள் புதிய விமான நிலையங்கள் நிறுவுதல்




- 2025 ஆம் ஆண்டுக்குள் 220 என்ற அளவில் புதிய விமான நிலையங்களை உருவாக்க இலக்கு ஒன்றை நிர்ணயித்துள்ளதாக மத்தியப் பொது விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதித்ராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.
- அடுத்த சில ஆண்டுகளில், எளிதில் வீணாகும் உணவுப் பொருட்களுக்கான சரக்கு விமானங்கள் 30% ஆக உயர்த்தப்பட்டு அதன் எண்ணிக்கை 133 ஆக உயர்த்தப்படும்.

## பிப்லோபி பாரத் கலைக் காட்சியகம்


- கொல்கத்தாவில் உள்ள விக்டோரியா நினைவு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள பிப்லோபி பாரத் கலைக் காட்சியகத்தினை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைத்தார்.
- இது ஷாஹீத் திவாஸ் விழாவின் போது திறக்கப் பட்டது.
- ஒரு காணொளி விழா மூலம் இந்தத் திறப்பு விழா நடத்தப் பட்டது.
- இந்தப் புதிய கலைக் காட்சியகத்தின் ஒரு முக்கிய நோக்கம், 1947 வரையில் நடைபெற்ற நிகழ்வுகளைப் பற்றிய ஒரு முழுமையான காட்சியை வழங்குவதாகும்.
- புரட்சியாளர்கள் ஆற்றிய முக்கியப் பங்கையும் இது எடுத்துரைக்கிறது.



## பொதுப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு

- பொதுப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு என்பது நாடு முழுவதும் உள்ள 45 மத்தியப் பல்கலைக் கழகங்களில் சேர்க்கைக்காக நடத்தப்படும் கணினிமயமாக்கப்பட்ட ஒரு நுழைவுத் தேர்வாகும்.

- இந்தத் தேர்விற்கு, ஒரு விண்ணப்பதாரரின் 12 ஆம் வகுப்பு மதிப்பெண்கள் முக்கியம் இல்லை.
- தேர்வுகள் நடத்தப்பட்ட பிறகு, தேசியத் தேர்வு முகமை ஒரு தகுதிப் பட்டியலைத் தயாரித்து, அதன் அடிப்படையிலேயே சேர்க்கை வழங்கப்படும்.
- இதற்கென பொதுக் கலந்தாய்வு அமர்வுகள் நடத்தப்படாது.




## பருவநிலை அபாயங்கள் இணையப் புத்தகம் மற்றும் பாதிப்பு குறித்த இணைய வரைபடம்

- "இந்தியாவின் பருவநிலை அபாயங்கள் மற்றும் பாதிப்பு வரைபடம் - மாநிலம்: தமிழ்நாடு" என்ற தலைப்பில் ஒரு இணையப் புத்தகத்தினை இந்திய வானிலை ஆய்வுத் துறை வெளியிட்டது.
- உலக வானிலை தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இப்புத்தகமானது வெளியிடப் பட்டது.
- இந்த இணைய வரைபடமானது, பேரிடர் மேலாண்மை முகமைகள் தாங்கள் எதிர் கொள்ளக் கூடிய எந்தவொருப் பேரிடர்களுக்கும் எதிரான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவும்.


## இந்திய மனநலச் சங்கத்தின் தேசிய மாநாடு

INDIAN PSYCHIATRIC SOCIETY

- இந்திய மனநலச் சங்கத்தின் 73வது ஆண்டு தேசிய மாநாடு விசாகப்பட்டினத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இதற்கு முந்தைய தேசிய மாநாடு 37 ஆண்டுகளுக்கு முன்பு விசாகப் பட்டினத்தில் நடத்தப் பட்டது.

- சமூகத்தில் போதைப் பொருள் மற்றும் மது துஷ்பிரயோகம், மாணவர்களிடையே மன அழுத்தம் மற்றும் அதிகரித்து வரும் தற்கொலைகள், மனச்சோர்வு மற்றும் பதட்டம், முதுமைப் பிரச்சினைகள் மற்றும் மறதி நோய் ஆகியவை குறித்து இந்த மாநாட்டில் கலந்தாலோசிக்கப் படும்.
- இந்த ஆண்டில் இந்த மாநாட்டிற்கான கருத்துரு, 'மனங்களை இணைத்து... தலைமுறைகளை இணைத்தல்' (Bridging minds ... Connecting generations) என்பதாகும்.

## சுஜாலாம் 2.0 பிரச்சாரம்





- மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் இந்தப் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தார்.
- கழிவுநீர் மறுசுழற்சி மேலாண்மைக்காக இந்தப் பிரச்சாரமானது தொடங்கப் பட்டு உள்ளது.
- இந்தப் பிரச்சாரத்தின் கீழ், கழிவுநீர் மேலாண்மையில் உதவுவதற்காக பள்ளிகள், பஞ்சாயத்துகள் மற்றும் அங்கன்வாடிகள் போன்ற அமைப்புகளை அணி திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது.
- 'நிலத்தடி நீர்: புலப்படாததைப் புலப்படச் செய்தல்' என்பது இந்தப் பிரச்சாரத்தின் (Groundwater: making the invisible visible) கருத்துரு ஆகும்.

## முடக்கு வாதத்திற்கான ஆயுர்வேத மருத்துவப் பரிசோதனை

- முடக்கு வாதத்திற்கான சிகிச்சையில் ஆயுர்வேதத்தின் செயல்திறனை மதிப்பிடும் உலகின் முதல் பல்முகமை மருத்துவ பரிசோதனையின் மூன்றாம் கட்டச் சோதனையை ஆயுஷ் அமைச்சகம் தொடங்கியுள்ளது.
- கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற வாத நோய் நிபுணரான டாக்டர் டேனியல் எரிக் ஃபர்ஸ்ட் இந்தச் சோதனையை மேற்பார்வை செய்வார்.

- ஆரிய வைத்யா மருந்து நிறுவனத்துடன் (கோயம்புத்தூர்) இணைந்த AVP ஆராய்ச்சி அறக்கட்டளை மற்றும் ஆயுஷ் அமைச்சகத்தின் மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி மையம் (CCRAS - Central Council for Research in Ayurveda) ஆகியவை இந்தச் சோதனைகளை மேற்கொள்ளும்.
- பெங்களூருவில் உள்ள வளர்சிதை மாற்றக் கோளாறுகளுக்கான மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், கோயம்புத்தூரில் உள்ள AVP ஆராய்ச்சி அறக்கட்டளை மற்றும் மும்பையில் உள்ள ராஜா ராம்தேவ் ஆனந்தி லாலா மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் இந்த மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.



## செங்கோட்டைத் திருவிழா

- மார்ச் 25 முதல் ஏப்ரல் ஆம் தேதி வரையில் செங்கோட்டைத் திருவிழா-பாரத் பாக்ய விதாதா என்ற திருவிழாவானது கொண்டாடப்படுகிறது.
- இந்த 10 நாட்கள் அளவிலான திருவிழாவானது ஒன்றியக் கலாச்சாரத் துறை அமைச்சகத்துடன் இணைந்து நடத்தப்படுகிறது.
- சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவினை நினைவு கூறும் விதமாக இந்த நிகழ்வு நிகழ்த்தப் படுகிறது.
- இந்த நிகழ்வானது செங்கோட்டையின் மானுமென்ட் மித்ரா அமைப்பு, ஒன்றியக் கலாச்சாரத் துறை அமைச்சகம் மற்றும் டால்மியா பாரத் லிமிடெட் ஆகியவற்றால் உருவாக்கப் பட்டது.



## ஸ்ரீநகர் துலிப் திருவிழா

- ஆசியாவின் மிகப்பெரிய துலிப் தோட்டமானது காஷ்மீரின் ஸ்ரீநகரில் அமைந்துள்ளது.
- இத்தோட்டத்தில் மில்லியனுக்கும் மேலான துலிப் மலர்கள் உள்ளன.
- கடந்த 9 மாதங்களாக மூடப்பட்டிருந்த இந்தத் தோட்டமானது மார்ச் 23 அன்று பொது மக்கள் பார்வைக்காக மீண்டும் திறக்கப்பட்டது.
- நடைபெற உள்ள துலிப் திருவிழாவினை முன்னிட்டு இத்தோட்டம் மீண்டும் திறக்கப் பட்டுள்ளது.



## 2வது ஏற்றுமதி தயார்நிலைக் குறியீடு

- இந்தக் குறியீட்டினை நிதி ஆயோக் அமைப்பு தயார் செய்து வெளியிட்டுள்ளது.
- போட்டித்தன்மை நிறுவனத்துடன் இணைந்து இந்த அறிக்கையானது வெளியிடப் பட்டது.
- இந்தக் குறியீட்டில், தொடர்ந்து 2வது முறையாக குஜராத் முதலிடத்தைப் பெற்று உள்ளது.
- இதனைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- பெரும்பாலான நாடுகளின் கடலோர மாநிலங்கள் சிறந்த செயல்திறன் மிக்க பகுதிகளாக திகழ்கின்றதாக சமீபத்திய அறிக்கை குறிப்பிடுகிறது.



## இந்தியக் காசநோய் அறிக்கை 2022

- 2021 ஆம் ஆண்டில், இந்தியாவில் பதிவான காசநோய் பாதிப்புகளின் எண்ணிக்கை என்பது கடந்த ஆண்டை விட 19% உயர்ந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு இந்தியக் காசநோய் அறிக்கையில் இந்த தகவலானது தெரிவிக்கப் பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் பதிவான மொத்தக் காசநோய் பாதிப்புகளின் எண்ணிக்கை என்பது 19,33,381 ஆகும்.
- 2020 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 16,28,161 ஆக இருந்தது.
- இந்தியாவில் 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கிடையில் அனைத்து வகையான காசநோய் பாதிப்பினால் ஏற்பட்ட உயிரிழப்பு வீதமானது 11% உயர்ந்துள்ளது.
- காசநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் 61% நபர்கள் ஆண்கள் மற்றும் 39 சதவீதத்தினர் பெண்கள் ஆவர்.
- குறிப்பிடப்பட்ட நோயாளிகள் 6% பேர் குழந்தைகளாவர்.
- டெல்லியில் அதிக காசநோய் பதிவாகியுள்ளது.
- குஜராத்தில் மிகக் குறைவாகவே காசநோய்ப் பாதிப்பு பதிவாகியுள்ளது.

## உத்தரப் பிரதேச முதல்வர்

- யோகி ஆதித்யநாத், உத்தரப் பிரதேசத்தின் முதல்வராக 2வது முறை பதவி ஏற்கிறார்.
- கேசவ் பிரசாத் மௌரியா மற்றும் பிரஜேஷ் பதாக் ஆகியோர் புதிய அரசின் துணை முதல்வர்களாகப் பொறுப்பேற்றனர்.
- 37 ஆண்டுகளாக இந்த மாநிலத்தில் வேறு எந்த ஒரு முதல்வரும் ஆட்சியைத் தொடர்ந்து இரண்டாம் முறை உருவாக்க முடியாத நிலையில், யோகி ஆதித்யநாத் தலைமையிலான பா.ஜ.க அரசானது ஆட்சியைப் பிடித்து வரலாறு படைத்துள்ளது.




## 'Dare to Erade TB' திட்டம்

- 2022 ஆம் ஆண்டின் உலகக் காசநோய் தினத்தன்று, மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்கள் 'Dare to Erade TB' என்ற திட்டத்தினைத் தொடங்க உள்ளதாக அறிவித்தார்.
- இந்தத் திட்டமானது இந்தியாவில் கிடைக்கப் பெறும் சில தரவுகளின் அடிப்படையில் தொடங்கப் படும்.

- இதில் ஒட்டு மொத்த மரபணு வரிசை முறை காசநோய்க் கண்காணிப்பிற்கான மரபணு வரிசை முறை மன்றமும் நிறுவப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.




## தேசிய டால்பின் தினம்

- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகமானது அக்டோபர் 5 ஆம் தேதியினைத் தேசிய டால்பின் (ஓங்கில்) தினமாக அறிவித்துள்ளது.
- இது இந்த ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் கடைபிடிக்கப்படும்.
- தேசிய வனவிலங்கு வாரியத்தின் நிலைக்குழு அக்டோபர் 5 ஆம் தேதியைத் தேசிய டால்பின் தினமாக அறிவிப்பதற்கான இந்த முடிவை எடுத்தது.
- கங்கை டால்பின் உள்ளிட்ட டால்பின் இனங்களின் பாதுகாப்புத் திட்டங்களின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக அவற்றின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த செய்வதில் இந்த நாள் கவனம் செலுத்துகிறது.
- கங்கை டால்பின்கள் உயிர்வாழும் வகையில் கங்கை மற்றும் அதன் துணை நதிகளின் நீரின் தரம் மற்றும் அதன் ஓட்டத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும்.




## யோகா மஹோத்சவ் 2022

- இது 100 நாட்களுக்கு, 100 இடங்களில், 100 அமைப்புகளை உள்ளடக்கி நடத்தப்படும் ஒரு பிரச்சாரம் ஆகும்.
- இந்தப் பிரச்சாரம் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் தேதி வரையில் நடத்தப்படும்.
- இது யோகா மற்றும் அதன் பயன்பாடு குறித்து விளம்பரம் செய்தல் மற்றும் அதனை ஊக்குவித்தல் என்ற நோக்கத்துடன் தொடங்கப்பட்டதாகும்.





## ஐஎன்எஸ் வல்சுரா

- இந்தியக் கடற்படைக் கப்பலான (ஐஎன்எஸ்) வல்சுராவுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களால் மதிப்புமிக்க குடியரசுத் தலைவரின் வண்ணம் என்ற ஒரு விருதானது வழங்கப் பட்டது.
- இது இந்தியாவின் ராணுவப் பிரிவுகளுக்கு வழங்க கூடிய மிக உயர்ந்த விருது அல்லது கௌரவமாகும்.
- இந்த விருது "நிஷான்" என்றும் அழைக்கப்படுகிறது.
- போர் மற்றும் அமைதி நடவடிக்கை ஆகிய இரு சமயங்களிலும் நாட்டிற்கு ஆற்றிய சிறப்பானச் சேவையை அங்கீகரிப்பதன் அடையாளமாக ராணுவப் பிரிவுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.



## மாநிலச் சட்டமன்றங்கள் லாட்டரிகள் மீது வரி விதிப்பு

- இந்திய அரசு, மாநிலங்கள் அல்லது ஒரு மாநிலத்தால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் லாட்டரி முறையானது பந்தயம் மற்றும் சூதாட்டம் என்ற பெயருக்குள் அடங்கும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- எனவே, லாட்டரி முறை மீது வரி விதிக்கும் தகுதி மாநிலச் சட்டமன்றத்திற்கு உள்ளது.
- இந்திய அரசு அல்லது எந்தவொரு மாநில அரசு அல்லது ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் வேறு ஒரு முகமை அல்லது துணை நிறுவனம் மூலம் நடத்தப்படும் சூதாட்டத்திற்கு மட்டுமல்ல, மாநிலத்திற்குள் ஒரு தனியார் நிறுவனத்தால் நடத்தப்படும் லாட்டரி முறைக்கும் இது பொருந்தும்.




## அஹிர் படைப் பிரிவுக்கான கோரிக்கை

- அஹிரின் பெயரிடப்பட்ட ஒரு முழு அளவிலான காலாட்படைப் படைப் பிரிவுக்கான ஒரு கோரிக்கைக்கு அரசியல்வாதிகளிடமிருந்து ஆதரவைப் பெற்றது.
- 1962 ஆம் ஆண்டில் நடைபெற்ற ரெசாங் லா போரில் (இந்தியா-சீனா போர்) ஹரியானா மாநிலத்தின் அஹிர் துருப்புக்களின் (படை வீரர்களின்) துணிச்சலின் கதை பரவலாக அறியப்பட்ட பின்னர் அஹிர் சமூகம் தேசிய மக்களின் பார்வைக்குக் கொண்டு வரப் பட்டது.




- அஹிர்வால் பிராந்தியம் தெற்கு ஹரியானா மாவட்டங்களான ரேவாரி, மகேந்திரகர் மற்றும் குர்காவ்ன் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் நாயகன் அஹிர் நாயகர் ராவ் துலா ராம் (Rao Tula Ram) என்பவருடன் இந்தப் பகுதியானது தொடர்புடையதாகும்.


- ❖ இந்தப் பகுதியானது பாரம்பரியமாக இந்திய ராணுவத்திற்கு அதிக எண்ணிக்கையில் வீரர்களைப் பங்களித்து இருக்கின்றது.

## கிரண் மஜும்தார்-ஷா




- ❖ கிரண் மஜும்தார்-ஷா ஸ்காட்லாந்தில் உள்ள ராயல் சொசைட்டி ஆஃப் எடின்பர்க் (RSE - Royal Society of Edinburgh) நிறுவனத்தின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ❖ RSE என்பது உலகின் மிகவும் பழமையான மற்றும் மிகவும் மதிக்கப்படும் கல்வி நிறுவனங்களில் ஒன்றாகும்.
- ❖ தங்களைச் சுற்றியுள்ள உலகத்தை மேம்படுத்துவதில் அவர்கள் ஏற்படுத்திய ஒரு தாக்கத்தை அங்கீகரிக்கும் விதமாக அறிவியல், கலை, கல்வி, வணிகம் மற்றும் பொது வாழ்க்கை ஆகிய துறைகளில் இருந்து RSE நிறுவனத்தில் சேருவதற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

## துருவ அறிவியல் மற்றும் தாழ்வெப்ப மண்டலம் குறித்த ஆராய்ச்சித் திட்டம்




- ❖ துருவ மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையமானது துருவ அறிவியல் மற்றும் தாழ்வெப்ப மண்டலம் ஆராய்ச்சி (PACER - Polar Science and Cryosphere Research) திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது.
- ❖ இத்திட்டத்தில் இந்திய ஆர்க்டிக் திட்டம், அண்டார்டிக் திட்டம், தாழ் வெப்ப மண்டலம் மற்றும் காலநிலைத் திட்டம் மற்றும் தெற்கு பெருங்கடல் திட்டம் ஆகியவை அடங்கும்.
- ❖ துருவ மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையம் என்பது புவி அறிவியல்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு தன்னாட்சி நிறுவனம் ஆகும்.

## "சம்பவ்" மற்றும் "ஸ்வாவ்லம்பன்"




- "சம்பவ்" மற்றும் "ஸ்வாவ்லம்பன்" என்பது இந்தியாவில் நெகிழிக் கழிவு மாசுபாடு என்ற ஆபத்தினைச் சமாளிப்பதற்கான முன்னெடுப்புகளாகும்.
- மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் பானு பிரதாப் சிங் வர்மா இவற்றைத் தொடங்கி வைத்தார்.
- இது நெகிழி மறுசுழற்சி மற்றும் கழிவு மேலாண்மை குறித்த சர்வதேச உச்சி மாநாட்டில் தொடங்கப்பட்டது.
- இவை இளம் தொழில்முனைவோரைக் குறிப்பாக இந்தியாவின் உயர் லட்சிய மாவட்டங்களைச் சேர்ந்த தொழில்முனைவோரை ஊக்குவிப்பதன் நோக்கில் தொடங்கப் பட்டன.

## பெண்களின் நிலை மீதான ஐக்கிய நாடுகள் ஆணையம்




- மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி பெண்களின் நிலை மீதான ஐக்கிய நாடுகள் ஆணையத்தின் 66வது கூட்டத்தில் உரையாற்றினார்.
- இந்த ஆணையமானது பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகவே வேண்டி பிரத்தியேகமாக தொடங்கப்பட்ட ஒரு முதன்மையான, உலகளாவிய அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- 1946 ஆம் ஆண்டு ஜுன் 21 அன்று நிறுவப்பட்ட இந்த ஆணையமானது பொருளாதாரம் மற்றும் சமூகச் சபையின் (Economic and Social Council) செயல்பாட்டு ஆணையமாகும்.

## பேரிடர் மேலாண்மைச் சட்டவிதிமுறைகள்




- கோவிட் தடுப்பு நடவடிக்கைகளுக்காக விதிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்ட விதிமுறைகளை மத்திய அரசு ரத்து செய்துள்ளது.
- கோவிட்-19 பாதிப்புகளின் எண்ணிக்கையில் தொடர்ந்து சரிவு நிலையே உள்ளதை அடுத்து இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.
- முகக் கவசம் பயன்படுத்துதல் மற்றும் கைகளைச் சுத்தமாக வைத்திருத்தல் போன்ற கோவிட் தடுப்பு நடைமுறைகள் தொடர்ந்து அமலில் இருக்கக் கூடும்.

## நெகிழ்திறன்மிக்க பயிர்கள்

- இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவியலாளர்கள் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து, நெல் மற்றும் கோதுமை ஆகியவற்றின் 15,000 குறிப்பிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மூலவுயிர் முதலுகளை அடையாளம் கண்டுள்ளனர்.
- உணவு உற்பத்தி மீது பருவநிலை மாற்றத்தின் தீவிரமான தாக்கத்தினை தணிக்கச் செய்வதற்காக வெள்ளம், வறட்சி, அனல்காற்று மற்றும் நோய்களைத் தாங்கும் வகையிலான தாவர வகைகளை அடையாளம் கண்டுள்ளனர்.
- டெல்லியிலுள்ள தேசியத் தாவர மரபணு வள வாரியத்தினால் இயக்கப்படும் மரபணு வங்கியிடமிருந்து நெல் மற்றும் கோதுமை மரபணு வளங்களை வேளாண் ஆராய்ச்சி. விஞ்ஞானிகள் பெற்றுள்ளனர்.

## சர்வதேசப் புவியியல் மாநாடு

- 36வது சர்வதேசப் புவியியல் மாநாடானது 'புவி அறிவியல் நிலையான ஒரு வருங் காலத்திற்கான அடிப்படை அறிவியல்' என்ற ஒரு தலைப்பில் புதுடெல்லியில் நடத்தப் பட்டது.

- இந்த மாநாடானது சுரங்கம் மற்றும் புவி அறிவியல் அமைச்சகங்கள், இந்திய தேசிய அறிவியல் அகாடமி மற்றும் வங்காளதேசம், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் அறிவியல் அகாடமிகள் ஆகியவற்றிற்கு இடையிலான ஒரு ஒத்துழைப்பு ஆகும்.
- இந்த நிகழ்வானது புவி அறிவியல் அறிவு மற்றும் அனுபவப் பகிர்வு, தொழில்முறைக் கட்டமைப்பு ஆகியவற்றிற்கான ஒரு மன்றத்தினை வழங்குகிறது.
- 1964 ஆம் ஆண்டில், அதாவது 58 வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற முதலாவது சர்வதேசப் புவியியல் மாநாட்டின் 22வது அமர்வினை இந்தியா நடத்தியது.




## ராஷ்டிரிய சான்ஸ்கிருதி மஹோத்சவ் 2022



- இது ஆந்திரப் பிரதேசத்தின் இராஜமஹேந்திரவரம் என்னுமிடத்தில் உள்ள கலைக் கல்லூரி மைதானத்தில் தொடங்கப் பட்டது.
- முதலாவது ராஷ்டிரிய சான்ஸ்கிருதி மஹோத்சவ் ஆனது 2015 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.
- 1000க்கும் மேற்பட்டக் கலைஞர்கள் பங்கேற்கும் இந்த நிகழ்வானது, இந்தியாவின் நாட்டுப் புற, பாரம்பரிய, பழங்குடியின, செவ்வியல் மற்றும் பிரபலக் கலைகளை ஒரே இடத்தில் காண்பதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகிறது.

## 800 அத்தியாவசிய மருந்துகளின் விலை உயர்வு




- தேசிய மருந்து விலை நிர்ணய ஆணையமானது ஏப்ரல் 01 முதல் சுமார் 800 மருந்துகளின் விலையை உயர்த்துவதாக அறிவித்துள்ளது.
- இந்த மருந்துகள் தேசிய அத்தியாவசிய மருந்துகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- மொத்த விலைக் குறியீட்டின் அடிப்படையில் சுமார் 10.76% ஆக மருந்துகளின் விலை உயர்த்தப் பட்டுள்ளது.

## C40 நகரங்களின் வலையமைப்பு

- மகாராஷ்டிரா அரசானது C40 நகரங்கள் வலையமைப்பு என்ற ஒரு அமைப்புடன் இணைந்து மும்பைப் பருவநிலை நடவடிக்கைச் செயல்திட்டத்தை வெளியிட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது உலக வெப்பமயமாதலை 1.5°C என்ற அளவிற்குள் நிலை நிறுத்தச் செய்வதற்காக வேண்டி பாரீஸ் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பருவ நிலை இலக்குகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் உமிழ்வினைக் குறைத்தல் ஆகியவற்றிற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.
- 2005 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட C40 நகரங்கள் பருவநிலைத் தலைமைத்துவக் குழுமம் ஆனது, உலகம் முழுவதும் உள்ள 97 நகரங்களின் ஒரு சங்கமாகும்.
- இது பருவநிலை இடர்களைத் தணிப்பதற்காக வேண்டி பசுமை இல்ல வாயு உமிழ்வினைக் குறைத்தல் மற்றும் பருவநிலை மாற்றத்தை எதிர்த்துப் போரிடுவதை நோக்கமாகக் கொண்ட மேயர்களை உள்ளடக்கிய ஒரு உலகளாவிய வலையமைப்பு ஆகும்.


- C40 முன்னெடுப்பின் நோக்கம், இந்தப் பத்தாண்டுகளுக்குள் அதன் உறுப்பினர் நகரங்களின் உமிழ்வினைப் பாதியளவாகக் குறைப்பதேயாகும்.
- தற்போது 5 இந்திய நகரங்கள் இந்த அமைப்பின் உறுப்பினர்களாக உள்ளன.
- அவை டெல்லி, கொல்கத்தா, சென்னை, பெங்களூரு மற்றும் மும்பை ஆகியனவாகும்.




## இந்தியாவில் மருத்துவர் மற்றும் மக்கள்தொகை விகிதம்

- 2014 ஆம் ஆண்டிற்கு முன்பு 51,348 ஆக இருந்த மருத்துவக் கல்வி இடங்களின் எண்ணிக்கையானது தற்போது 89,875 ஆக உயர்ந்துள்ளது.
- இது 75% உயர்வாகும்.
- மருத்துவ முதுகலைக் கல்வி இடங்களில் எண்ணிக்கையானது 93% உயர்ந்துள்ளது.
- இந்தியாவில் உள்ள 80% பதிவு செய்த அல்லோபதி மருத்துவர்கள் மற்றும் 5.65 லட்சம் ஆயுஷ் மருத்துவர்களைக் கருத்தில் கொள்ளும் போது மருத்துவர் மற்றும் மக்கள் தொகை இடையிலான விகிதமானது 1 : 834 ஆக உள்ளது.

## குற்றவியல் நடைமுறை (அடையாளம் காணுதல்) மசோதா, 2022




- 2022 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை (அடையாளம் காணுதல்) மசோதாவானது மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது விழித்திரை மற்றும் கரு விழி ஸ்கேன்கள் உள்ளிட்ட உடலியல் மற்றும் உயிரியல் மாதிரிகளைச் சேகரித்து, சேமித்து, அதைப் பகுப்பாய்வு செய்வதற்கு காவல்துறை மற்றும்

சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கும்.

- மேலும் இது தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டுள்ள எல்லா நபர்களுக்கும் இந்த ஒரு விதிமுறையை உபயோகிக்கவும் முயல்கிறது.
- குற்றவியல் வழக்குகளில் அடையாளம் காணுதல் மற்றும் விசாரணைக்காக குற்றவாளிகள் மற்றும் மற்ற நபர்களின் உடல் அளவீடுகளை எடுத்தல் போன்ற சிலவற்றிற்கும் இது அதிகாரம் வழங்குகிறது.
- குற்றவாளிகள், கைது செய்யப்பட்ட நபர்கள் அல்லது கைதிகளுக்கு அப்பால் செயல் படுத்தப்படும் விரிவான "மற்ற நபர்கள்" என்பதை இது வரையறுக்கவில்லை.
- தலைமைக் காவலர் பதவி வரையிலான காவலர்கள் இதில் அளவீடுகளைப் பதிவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.
- தனியுரிமை உள்ளிட்ட குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலான இந்த மசோதாவானது நாடாளுமன்றத்தின் சட்டமியற்றும் திறனுக்கு அப்பாற்பட்டது என்று வாதிடப்படுகின்றது.
- இது அரசிலயமைப்பின் 20 (3) என்ற ஒரு சட்டப்பிரிவினை மீறுகிறது என்றும் வாதிடப் படுகின்றது.
- மேலும் இது ஐக்கிய நாடுகள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகள் என்ற விதிகளையும் மீறுகிறது என்றும் வாதிடப்படுகின்றது.

## இந்தியாவின் முதல் எஃகு சாலை




- குஜராத்தின் சூரத் நகரிலுள்ள ஹாஷிரா தொழில்துறைப் பகுதியானது இது போன்ற ஒரு சாலையை உருவாக்கியுள்ளது.
- இந்தச் சாலையானது எஃகு கழிவுகளிலிருந்து உருவாக்கப்பட்டது.
- அந்த வகையில் இது நீடித்த மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான சிறந்த எடுத்துக் காட்டுகளுள் ஒன்றாகும்.
- ஆர்செலர் மிட்டல் நிப்பான் ஸ்டீல் இந்தியா நிறுவனமானது, இந்திய அறிவியல் மற்றும்

தொழில்துறை ஆராய்ச்சிச் சபை, மத்தியச் சாலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நிதி ஆயோக் ஆகியவற்றுடன் இணைந்து இந்திய எஃகு கசடாலான சாலையை (steel slag road) உருவாக்கியுள்ளது.

- இந்தச் சாலையானது முழுக்க முழுக்கச் செயல்முறைக்கு உட்படுத்தப்பட்ட எஃகு கசட்டினைக் கொண்டு கட்டடமைக்கப்பட்டது.
- எஃகு கசடு என்பது, கழிவுப் பொருளாக கருதப்படுவதால் எஃகு தொழில்துறைக்கான பிரச்சினையின் ஒரு முக்கிய மூலமாக உள்ளது.

## பிரஸ்தான் பயிற்சி

- 'பிரஸ்தான்' என்பது மும்பையின் கடல்பகுதி மேம்பாட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட ஒரு கடல் பாதுகாப்புப் பயிற்சியாகும்.
- இந்தப் பயிற்சியானது, மேற்குக் கடற்படைப் பிரிவின் தலைமையக வளாகத்தில் நடத்தப் பட்டது.
- இந்தப் பயிற்சியானது 6 மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.
- இந்தப் பயிற்சி இந்தியக் கடற்படையின் தலைமையில் நடத்தப்பட்டது.
- மும்பையின் கடல்பகுதி பாதுகாப்புப் பகுதியில் உள்ள பல்வேறு படைப் பிரிவுகளுக்கான நடவடிக்கை மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளைச் செழுமைப் படுத்துவதற்காக நடத்தப்பட்டது.

## 50,000 திறந்தவெளிக் கழிப்பிடமற்ற பிளஸ் கிராமங்கள்

- 50,000 திறந்தவெளிக் கழிப்பிடமற்ற பிளஸ் கிராமங்களைக் கொண்டிருத்தல் என்ற ஒரு இலக்கினை இந்தியா கடந்துள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் சிறப்பாக செயல்பட்ட மாநிலம் தெலுங்கானா ஆகும்.
- இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவை உள்ளன.
- திறந்தவெளிக் கழிப்பிடமற்ற பிளஸ் கிராமங்கள் 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
- அவை எழுச்சியுறுதல், லட்சியமிக்கவை மற்றும் மாதிரி கிராமங்கள் ஆகியனவாகும்.




## TEJAS திறன் திட்டம்

- ஒன்றிய அமைச்சர் அனுராக் தாகூர் துபாயில் அமீரகத்தின் வேலைவாய்ப்பு மற்றும் திறன்களுக்கான பயிற்சி என்ற திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இது சர்வதேச அளவிலான திறன் இந்தியா திட்டத்தின் கீழான ஒரு முன்னெடுப்பாகும்.
- இத்திட்டமானது அயல்நாட்டிலுள்ள இந்தியர்களுக்கு திறன்மேம்பாடு, சான்றிதழ் அளிப்பு மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றை வழங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள பல்வேறு திறன் சார்ந்த மற்றும் சந்தைத் தேவைகளுக்கான திறன்களை இந்தியர்கள் பெற்றிருப்பதற்குத் தேவையான ஒரு பாதையை உருவாக்குவதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், ஆரம்பகால அமலாக்கத்தின்போது, ஐக்கிய நாடுகள் அமீரகத்தில் 10000 என்ற எண்ணிக்கையில் வலுவான இந்திய தொழிலாளர் வளமானது உருவாக்கப் படும்.

## யமுனோத்சவ்

- சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக தேசிய தூய்மைக் கங்கைத் திட்ட அமைப்பானது யமுனோத்சவ் என்ற ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்தது.
- இந்த நிகழ்வானது தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அடங்கிய ஒரு குழுவுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த நிகழ்ச்சியானது, புதுடெல்லியின் ITO என்ற தடுப்பணைப் பகுதியில் ASITA கிழக்கு ஆற்றுப் பிரிவு பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- யமுனை நதியின் பெருமையைக் கொண்டாடும் வகையில் இந்த நிகழ்ச்சியானது நடத்தப் பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## உக்ரைனின் விமானப்படைத் தளங்கள்




- ❖ ரஷ்ய நாட்டு சார்பிலான வான்வழி மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் உக்ரைனைச் சேர்ந்த 90க்கும் மேலான இராணுவத் தளங்களை அழித்துள்ளன.
- ❖ இதில் 14 வான்படைத் தளங்கள், கட்டளை வழங்கீட்டு முகாம்கள், ரேடார் நிலையங்கள் மற்றும் S-300 வான்பாதுகாப்பு அமைப்புகள் ஆகியவை அடங்கும்.
- ❖ லூட்ஸ்க் இராணுவ வான்படைத் தளம், இவானோ-பிரான்கிவிஸ்க் வான் படைத் தளம், மெலிட்டோபோல் வான்படைத் தளம், மைகோலைவ் வான்படைத் தளம், கோஸ்டோமெல் வான்படைத் தளம், மற்றும் செர்னிஹிவ் வான்படைத் தளம் போன்ற முக்கிய வான்படைத் தளங்கள் இதில் கடுமையாக தாக்கப்பட்டதால் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

## மின்ஸ்க் ஒப்பந்தங்கள்

- ❖ மின்ஸ்க் ஒப்பந்தங்கள் என்பவை 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில் பெலாரஸ் தலைநகர் மின்ஸ்கில் கையெழுத்தாகின.

***மின்ஸ்க் – I***

- ❖ உக்ரைன் மற்றும் ரஷ்ய ஆதரவு பெற்ற பிரிவினைவாத அமைப்புகள் 2014 ஆம் ஆண்டில் பெலாரஸ் தலைநகரில் 12 அம்ச போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்தன.
- ❖ இதில் கைதிகள் பரிமாற்றம், மனிதாபிமான உதவி வழங்கல் மற்றும் கனரக ஆயுதங்களைத் திரும்பப் பெறல் ஆகிய விதிகள் அடங்கும்.
- ❖ இரு தரப்பிலும் விதிமீறல்கள் ஏற்பட்டதால் இந்த ஒப்பந்தம் விரைவில் கைவிடப்பட்டது.

***மின்ஸ்க் - II***

- ❖ ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய நாட்டின் பிரதிநிதிகள், ஐரோப்பாவின் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்பின் பிரதிநிதிகள், இரண்டு ரஷ்யா சார்பு பிரிவினைவாத அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோர் 2015 ஆம் ஆண்டில் 13 அம்ச ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர்.

- அதே சமயத்தில் மின்ஸ்க் நகரில் கூடியிருந்த பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளின் தலைவர்கள் இந்த ஒப்பந்தத்திற்கு ஆதரவான ஓர் அறிவிப்பினை வெளியிட்டனர்.
- ரஷ்யா இந்த மோதலில் ஓர் அங்கம் இல்லை என்பதனால் அதன் விதிமுறைகள் தனக்கு பொருந்தாது என ரஷ்யாவின் வலியுறுத்துவது தான் இதில் மிகப்பெரிய ஒரு தடை ஆகும்.




## கைபர் – பஸ்டர் ஏவுகணை



- ஈரான் நாடானது கைபர்-பஸ்டர் எனப்படும் ஒரு புதிய ஏவுகணையை அறிமுகம் செய்துள்ளது.
- இது அருகிலுள்ள அமெரிக்க படைத் தளங்களையும் இஸ்ரேல் நாட்டினையும் தாக்கும் திறன் கொண்டதாகும்.
- இதன் வரம்பு 900 மைல்கள் ஆகும்.
- இந்த ஏவுகணை திட எரிபொருளால் இயங்குகிறது.
- இது ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளையும் தாக்கும் திறன் கொண்டது.

## ரசாசா ஏரி




- ரசாசா ஏரி ஆனது, ஈராக் நாட்டின் ஆளுகைக்குட்பட்ட அன்பர் மற்றும் கர்பாலா ஆகிய பகுதிகளுக்கு இடையே அமைந்த மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு ஏரியாகும்.
- இது மில்ஹ் ஏரி எனவும் அழைக்கப்படுகிறது.
- இது ஈராக் நாட்டின் 2வது மிகப்பெரிய ஏரியாகும்.
- யூப்ரடீஸ் ஏரியில் ஏற்படும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தச் செய்வதற்கும், பாசன நோக்கங்களுக்கான ஒரு பெரிய நீர்த்தேக்கமாக இதனைப் பயன்படுத்துவதற்கும் வேண்டி இந்த ஏரியானது கட்டப்பட்டது.
- தற்போது இந்த ஏரியின் நீர்மட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவில் நீர்நிலை குறைந்து வருகிறது.
- மேலும் இது மாசுபடுதலாலும் அதிகளவு உப்புத்தன்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யாவின் படையெடுப்பிற்கு சர்வதேச ஒலிம்பிக் குழுவின் பதிலடி


- உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினின் ஒலிம்பிக் ஆர்டர் என்ற விருதினை சர்வதேச ஒலிம்பிக் குழு திரும்பப் பெற்றுள்ளது.
- மேலும் ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாட்டின் விளையாட்டு வீரர்கள் மற்றும் அதிகாரிகளை சர்வதேச நிகழ்வுகளிலிருந்து விலக்குமாறு விளையாட்டுப் போட்டிகள் கூட்டமைப்புகள் மற்றும் அமைப்பாளர் நிறுவனங்களிடம் சர்வதேச ஒலிம்பிக் குழு வலியுறுத்தியது.

## மிரியா

- "உக்ரைனின் அன்டோனோவ் – 225 சரக்கு விமானம்" எனப்படும் உலகின் மிகப்பெரிய விமானத்தினை ரஷ்யா அழித்தது.
- கீவ் (Kyiv) பகுதிக்கு வெளியே இந்த விமானமானது அழிக்கப் பட்டது.
- AN – 225 மிரியா என்ற விமானத்தை மீண்டும் கட்டமைப்பதற்கு 3 பில்லியன் டாலர்கள் செலவாகும் என்றும் 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகலாம் என்றும் உக்ரோபோரான்ப்ராம் (Ukroboronprom) என்ற ஆயுத உற்பத்தி நிறுவனம் கூறுகிறது.
- இது பிப்ரவரி 27 அன்று அழிக்கப்பட்டது.
- இதற்கு உக்ரேனிய மொழியில் "கனவு" எனப் பொருள்படும் வகையில் மிரியா என்று பெயரிடப் பட்டது.



## யிலான் பள்ளம்




- “யிலான் பள்ளம்” என்ற ஒரு பள்ளத்தை புவியியலாளர்கள் குழு கண்டறிந்துள்ளது.
- இது சீனாவின் ஹீலோங்ஜியாங் மாகாணத்திலுள்ள யிலான் பகுதியின் வடமேற்கில் கண்டறியப் பட்டது.
- இது பூமியின் மீதுள்ள மிகப்பெரிய மற்றும் 100,000 ஆண்டுகள் பழமையான பள்ளம் ஆகும்.
- கார்பன் 14 காலக்கணக்கீட்டு படிமங்கள் மூலம், இந்தப் பள்ளமானது 46,000 முதல் 53,000 ஆண்டுகளுக்கு முந்தைய காலக்கட்டத்தில் உருவானது என்பது தெரிகிறது.
- 2020 ஆம் ஆண்டிற்கு முன்பு, லியோனிங் மாகாணத்தில் “சியுயன் பள்ளம்” (Xiuyan Crater) என்ற ஒரு பள்ளம் மட்டுமே கண்டறியப்பட்டது.

## மந்தாரைப் பூக்களின் (ஆர்க்கிட்) புதிய இனம்

- வடக்கு ஈக்வெடாரின் அடர்மழைக் காடுகளில் மந்தாரைப் பூக்களின் வியக்கத்தக்கப் புதிய இனங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இதற்கு அறிவியல் ரீதியாக மேக்சில்லேரியா அனகாடாலினா – போர்ட்டில்லே (Maxillaria anacatalina-portillae) என்று பெயரிடப்பட்டுள்ளது.

- இந்தத் தாவரமானது அதன் கவர்ச்சிகரமான அடர் மஞ்சள் பூக்களுக்காக வேண்டி ஒரு தனித்துவம் மிக்கதாக உள்ளது.



## சவுதி அரேபியா நிறுவன தினம்




- சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட சவுதி அரேபியா, பிப்ரவரி 22 அன்று முதல்முறையாக தனது நிறுவனத் தினக் கொண்டாட்டங்களை மேற்கொண்டது.
- இந்த ஆண்டு விழாவானது, 1727 ஆம் ஆண்டில் முதல் சவுதி அரசினைத் தோற்றுவித்த முகமது பின் சவுத் (Mohammed bin Saud), திரியா அமீரகத்தைக் கைப்பற்றிய தினத்தைக் குறிக்கிறது.
- திரியா அமீரகமானது தற்போது சவுதியின் தலைநகரான ரியாத் நகரின் வடமேற்கு முனையில் அமைந்துள்ள ஒரு தொலைதூர நகரமாகும்.

## சபோரிஜியா அணுமின் நிலையம்

- ரஷ்யப் படையானது உக்ரைனின் சபோரிஜியா அணுமின் நிலையத்தினைக் கைப்பற்றியுள்ளது.
- இது ஐரோப்பியாவிலுள்ள ஒரு மிகப்பெரிய அணுமின் நிலையமாகும்.
- இது நீப்பெர் நதியருகே (Dnieper River) உள்ள ஈரெஹோதார் நகரின் அருகே அமைந்து உள்ளது.

## ரஷ்ய நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்த ஐ.நா. மனித உரிமைகள் சபை வாக்களிப்பு

- உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை “மிக வன்மையாகக் கண்டிக்கும்” ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்திற்கான வாக்கெடுப்பில் இந்தியா வாக்களிக்கவில்லை.
- உக்ரைனில் ரஷ்யா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து விசாரிப்பதற்கு ஒரு சர்வதேச விசாரணைக் குழுவை அமைப்பதற்கு இந்தத் தீர்மானம் கோரியது.
- ஐ.நா.சபையின் உறுப்பினர் நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 47 உறுப்பினர்கள் கொண்ட சபையில், இந்த தீர்மானத்தினைப் புறக்கணித்த 13 நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாகும்.
- ரஷ்யா மற்றும் எரித்ரியா ஆகிய நாடுகள் மட்டுமே அந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்துள்ளன.

## அவசர ஐ.நா. பொதுச் சபை அமர்வு

- உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மீதான ஐ.நா. பொதுச் சபையின் ஓர் அரிய சிறப்பு அவசர அமர்வினைக் கூட்டுவதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறை வாக்கெடுப்பினை இந்தியா புறக்கணிப்பு செய்தது.
- இந்தியா, சீனா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை இந்த வாக்கெடுப்பினைப் புறக்கணிப்பு செய்தன.
- இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 11 வாக்குகள் பெறப்பட்டதால் இத்தீர்மானமானது நிறைவேற்றப்பட்டது.
- இது 1950 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்ட பொதுச் சபையின் 11வது அவசர அமர்வு ஆகும்.

## உலக கைபேசி மாநாடு 2022




- கைபேசி தகவல் தொடர்பிற்கான உலக அமைப்புகள் சங்கமானது, 2022 ஆம் ஆண்டின் உலக கைபேசி மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது.
- ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் இது நடைபெற்றது.
- 5ஜி தொழில்நுட்ப ஏற்பின் மூலம் உலகளவில் 5ஜி இணைப்புகள் 2022 ஆம் ஆண்டில், 1 பில்லியனை எட்டலாம் என்று உலக கைபேசிப் பொருளாதார அறிக்கை கூறுகிறது.

❖ 5G வலையமைப்பு இணைப்பின் அதிகரிப்பானது 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியை 5% அதிகரித்து $5 டிரில்லியன் வரை உயர்த்தும்.

## பாகிஸ்தான் - சாம்பல்நிறப் பட்டியல்





❖ சர்வதேச பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவிக் கண்காணிப்பு அமைப்பான நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் சாம்பல் நிறப் பட்டியலில் (grey list) ஜூன் மாதம் வரை பாகிஸ்தான் நாட்டின் பெயர் இருக்க வாய்ப்புள்ளது.

❖ 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் பாரீஸ் நகரில் அமைந்துள்ள நிதியியல் நடவடிக்கை பணிக்குழுவின் (FATF - Financial Action Task Force) சாம்பல் நிறப் பட்டியலில் பாகிஸ்தான் இடம் பெற்றுள்ளது.

❖ பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்ய வழிவகுத்த பணமோசடியைப் பாகிஸ்தான் சரி பார்க்கத் தவறியதற்காக சாம்பல் நிறப் பட்டியலில் இடம்பெற்றது.

## நெகிழிப் புத்தாக்க மையம்




❖ இந்திய-பசிபிக் பகுதியில் நெகிழிக் கழிவின் மாசுபாட்டினைக் குறைக்கும் ஒரு நோக்கத்துடன் ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் இணைந்து ஒரு கூட்டாண்மையை நிறுவியுள்ளன.

❖ இந்தக் கூட்டாண்மையானது, இந்தோனேசிய நீர்நிலைகள் மற்றும் பெருங்கடல்களில் நெகிழிக் கழிவினைக் குறைப்பதற்கான பல்வேறு தீர்வுகளை உருவாக்குவதற்காக வேண்டி புதுமைப் படைப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், மற்றும் பொது மற்றும் தனியார் துறை வணிகர்கள் உள்ளிட்ட முக்கியப் பங்குதாரர்கள் ஆகியோரை ஒன்றிணைக்கும்.

## என்டுயுரன்ஸ் கப்பல்

- இதுவரை கண்டுபிடிக்கப்படாத, 107 ஆண்டுகளாக கடலில் மூழ்கி இருந்த மிகப்பெரிய கப்பல் ஒன்றை அறிவியலாளர்கள் கண்டறிந்து படம் பிடித்துள்ளனர்.
- அண்டார்டிக் ஆய்வாளரான சர் எர்னெஸ்ட் சாக்லெட்டோனின் மூழ்கியக் கப்பலான தி என்டூயூரன்ஸ் கப்பலானது வெடெல் கடலின் அடிப்பகுதியில் கடந்த வார இறுதியில் கண்டறியப்பட்டது.
- இந்தக் கப்பலானது 1915 ஆம் ஆண்டில் கடல் பனிக்கட்டியில் மோதி கடலில் மூழ்கியது.
- தொலைந்து போன கப்பலைக் கண்டறிவதற்கான அந்தப் பணியானது, அகுல்ஹாஸ் II எனப்படும் ஒரு தென் ஆப்பிரிக்கப் பனி உடைப்புக் கப்பலைக் கொண்டு, ஃபால்க்லாண்ட்ஸ் கடல்சார் பாரம்பரிய அறக்கட்டளையின் மூலம் தொடங்கப்பட்டது.



## தென்கொரிய அதிபர்



- 2022 ஆம் ஆண்டு தென்கொரிய அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற யூன் சுக் – யோல் அந்நாட்டின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவரின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும்.
- இவர் அந்நாட்டின் தற்போதைய அதிபர் மூன் ஜே இன் என்பவரை அடுத்து பதவி ஏற்க உள்ளார்.

## பணிநலன் குறித்த அறிக்கை




- இது சர்வதேச தொழிலாளர் மன்றத்தினால் வெளியிடப்பட்டது
- இந்த அறிக்கையானது மகப்பேறு, மரபுவழி, பெற்றோர், குழந்தை மற்றும் நீண்ட காலப் பராமரிப்பு உள்ளிட்ட நலன்கள் தொடர்பான தேசியச் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய ஒரு உலகளாவியக் கண்ணோட்டத்தினை வழங்கச் செய்கிறது.
- இந்தச் சட்டப்பூர்வப் பாதுகாப்புகளின் வரம்புகளிலிருந்து சில தொழிலாளர்கள் எவ்வாறு விடுபடுகின்றனர் என்பதை இவ்வறிக்கை எடுத்துக் காட்டுகிறது.
- இந்த அறிக்கை மகப்பேறு வயதிலுள்ள பத்தில் 3 பெண்கள் அல்லது 649 மில்லியன் பெண்கள், மகப்பேறுப் பாதுகாப்பு மருத்துவ வசதியைத் தேவைக்கும் குறைவாகவே பெறுகின்றனர் என கண்டறிந்துள்ளது.
- இதன் பொருள் என்பது இந்த நிலை 2000 ஆம் ஆண்டு சர்வதேச தொழிலாளர் அமைப்பின் மகப்பேறுப் பாதுகாப்பு உடன்படிக்கையின் படி முக்கியத் தேவைகளைப் பூர்த்தி செய்யாத ஒரு நிலையாகும்.
- முதன்மையான மகப்பேறு வயதினைக் கொண்டுள்ள 1.2 பில்லியனுக்கும் அதிகமான ஆண்கள் தந்தைவழியிலான மகப்பேறு விடுப்பிற்கு எந்தவித உரிமையும் இல்லாத நாடுகளில் வாழ்கின்றனர்.

## வி-டெம் நிறுவனத்தின் ஜனநாயக அறிக்கை 2022

- சமீபத்திய ஜனநாயக அறிக்கையானது ஸ்வீடன் நாட்டின் கோதன்பர்க் பல்கலைக் கழகத்தில் உள்ள வி-டெம் என்ற நிறுவனத்தினால் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- 'ஜனநாயக அறிக்கை 2022: தன்னியக்கமயமாக்கல் (எதேச்சாதிகாரம்) இயற்கையை மாற்றுகிறதா?' என்ற தலைப்பில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது.

- சுதந்திர ஜனநாயகக் குறியீட்டின் மதிப்பெண்களின் அடிப்படையில் நாடுகளை நான்கு ஆட்சி வகைகளாக, தாராளவாத ஜனநாயகம், தேர்தல் ஜனநாயகம், தேர்தல் எதேச்சதிகாரம் மற்றும் சுதந்திரமற்ற எதேச்சதிகாரம் என்ற வகைகளில் இந்த அறிக்கை வகைப்படுத்துகிறது.
- இது இந்தியாவை சுதந்திர ஜனநாயகக் குறியீட்டில் இடம் பெற்ற 179 நாடுகளில் 93வது இடத்தில் வகைப்படுத்துவதோடு இந்தியாவினைத் தேர்தல் எதேச்சதிகார நாடாகவும் வகைப்படுத்துகிறது.
- உலகின் முதல் பத்து 'எதேச்சதிகார நாடுகளில்' இந்தியாவும் ஒன்று என்று இந்த அறிக்கை கூறுகிறது.

**Top 5 LDI Countries:**


1. Sweden
2. Denmark
3. Norway
4. Costa Rica
5. New Zealand

## சவுதி அரேபியா – மிக அதிக அளவில் மரணதண்டனை




- சவுதி அரேபியா நாட்டில் கொலைகள் முதல் தீவிரவாதக் குழுக்களைச் சேர்த்தல் வரையிலான குற்றங்களில் ஈடுபட்ட 81 குற்றவாளிகளுக்கு மரணத் தண்டனை விதிக்கப் பட்டது.
- இந்த நாட்டின் நவீனகால வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட மிகப்பெரிய மரணத் தண்டனை இதுவாகும்.
- இது 1979 ஆம் ஆண்டில் மெக்காவிலுள்ள மிகப்பெரிய மசூதியைக் கைப்பற்றியதாக குற்றம் சாட்டப்பட்ட 63 தீவிரவாதிகளுக்கு 1980 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் மரணத் தண்டனை நிறைவேற்றப்பட்ட ஒரு எண்ணிக்கையையும் முந்தியது.

## ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை




- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனமானது 2021 ஆம் ஆண்டுக்கான சர்வதேசப் பரிமாற்றத்தின் போக்குகள் குறித்த தனது சமீபத்திய அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2017-21 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்டக் காலக் கட்டத்தில் இந்தியாவும் சவுதி அரேபியாவும் மிகப்பெரிய ஆயுத இறக்குமதி நாடுகளாக உருவெடுத்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- உலக ஆயுத விற்பனையில் இந்த இரு நாடுகளும் 11% பங்கைக் கொண்டுள்ளன.
- இந்த அறிக்கையின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- இந்தக் காலக் கட்டத்தில், ரஷ்யா (46%), பிரான்ஸ் (27%), மற்றும் அமெரிக்கா (12%) ஆகிய நாடுகள் இந்தியாவுக்கு அதிக அளவில் ஆயுத ஏற்றுமதி செய்யும் முதல் மூன்று நாடுகளாக இருந்தன.
- 2017-21 என்ற காலக் கட்டத்தில் அமெரிக்காவானது 39% பங்குடன், உலகின் மிகப் பெரிய ஆயுத ஏற்றுமதியாளர் என்ற நிலையைத் தக்க வைத்துக் கொண்டது.
- 2017-21 என்ற காலக் கட்டத்தில், உலக ஏற்றுமதியில் வெறும் 0.2% பங்கு மட்டுமே கொண்டு இந்தியா 23வது பெரிய ஏற்றுமதி நாடாக இருந்தது.

## ஐரோப்பிய ஒன்றிய கார்பன் வரம்புக் கட்டணம்




- ❖ மாசுபடுத்தும் பொருட்களின் இறக்குமதி மீது உலகின் முதல் கார்பன்-டை-ஆக்சைடு உமிழ்வுக் கட்டணத்தினை விதிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் முடிவு செய்து உள்ளன.
- ❖ எஃகு, சிமெண்ட், உரங்கள், அலுமினியம் மற்றும் மின்சாரப் பொருட்களின் இறக்குமதி மீது கார்பன்-டை-ஆக்சைடு உமிழ்வுக் கட்டணத்தினை அறிமுகம் செய்ய ஐரோப்பிய ஒன்றியம் விழைகிறது.
- ❖ முறையற்ற சுற்றுச்சூழல் விதிகளைக் கொண்ட சில நாடுகளில் தயாரிக்கப்படும் மலிவான பொருட்களால் ஐரோப்பியச் சந்தை நிரம்பி காணப்படுவதால், ஐரோப்பியத் தொழில்துறையைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இந்தக் கட்டணமானது விதிக்கப் படுகிறது.

## பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் பணி புரியும் பெண்கள்

- ❖ பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் பணி புரியும் பெண்களின் எண்ணிக்கையில் தெற்காசியாவின் வங்காளதேசம் முதலிடத்தில் உள்ளது.
- ❖ இது சர்வதேச நிதிக் கழகம் மற்றும் தாக்கா பங்குச் சந்தை ஆகியவற்றால் மேற் கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் கூறப்பட்டுள்ளது.
- ❖ இது பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் தன்னிச்சை இயக்குநராகப் பணி புரியும் பெண்களின் எண்ணிக்கையாது 2000 ஆம் ஆண்டிலிருந்த 5 சதவீதம் என்பதிலிருந்து 6% ஆக உயர்ந்துள்ளதாக சமீபத்தியத் தரவுகள் கூறுகின்றன.


## பழங்கற்காலக் கலாச்சாரம் கண்டுபிடிப்பு

- ❖ சீனாவின் பெய்ஜிங் நகரிலிருந்து 100 மைல்கள் தொலைவில் அமைந்த 40,000 ஆண்டுகள் பழமையான கலாச்சாரம் தொடர்பான ஒரு சான்றினை அறிவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.

- இந்தக் கற்காலக் கலாச்சாரமானது தற்போதைய மனித இனத்தின் அழிந்து போன இனங்களுக்காக அறியப் படுகிறது.
- இந்த மனித இனமானது (ஹோமினின்ஸ்) ஓச்சர் எனும் நிறமியைக் கல்லிலிருந்து கத்தி போன்ற கருவிகளை உருவாக்கப் பயன்படுத்தினர்.
- இந்தத் தளமானது நிஹேவான் வடிகால் (Nihewan Basin) பகுதியில் அமைந்துள்ளது.
- இது சீனாவின் வடக்கு மலைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு பள்ளமான பகுதியாகும்.
- இது சியாமாபே என அழைக்கப்படுகிறது.

## அதிகளவில் தடை விதிக்கப்பட்ட நாடு

- உக்ரைன் மீதான அதன் படையெடுப்பின் காரணமாக, உலகிலேயே அதிகளவில் தடை விதிக்கப்பட்ட நாடாக ரஷ்யா மாறியுள்ளது.
- தற்போது விதிக்கப்பட்ட தடைகளின் எண்ணிக்கையில் ஈரான் மற்றும் வடகொரியா போன்ற நாடுகளையும் ரஷ்யா விஞ்சியுள்ளது.
- இதற்கு முன்பாக, அதிகளவில் தடை விதிக்கப்பட்ட நாடாக ஈரான் நாடு திகழ்ந்தது.




## ஐக்கிய நாடுகள் உலக மகிழ்ச்சி அறிக்கை 2022

- 2022 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் உலக மகிழ்ச்சி அறிக்கையில் இந்தியா மூன்று இடங்கள் முன்னேறி 136வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இது 2012 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி மேம்பாட்டுத் தீர்வுகளுக்கான பிணையத்தால் வெளியிடப் படுகின்றது.
- இந்த அறிக்கையானது 146 நாடுகளைத் தரவரிசைப் படுத்துகின்றது.
- 2021 ஆம் ஆண்டில், இந்தியாவின் தரவரிசை 139 ஆக இருந்தது.
- 2022 ஆம் ஆண்டு உலக மகிழ்ச்சி அறிக்கையில், தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக பின்லாந்து முதலிடம் பிடித்துள்ளது.
- உலகின் மகிழ்ச்சியற்ற நாடாக ஆப்கானிஸ்தான் 146வது இடத்தில் உள்ளது.





## கோல்டு ரெஸ்பான்ஸ் 2022




- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பானது "கோல்டு ரெஸ்பான்ஸ் 2022" எனப்படும் மாபெரும் இராணுவப் பயிற்சியினை நார்வேயில் ஏற்பாடு செய்துள்ளது.
- இந்தப் பயிற்சியானது வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு நாடுகள் மற்றும் அதன் பங்குதார நாடுகளுக்காக வேண்டி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நார்வேயில் நடத்தப் படுகிறது.
- கோல்டு ரெஸ்பான்ஸ் என்பது வெளிநாட்டு அச்சுறுத்தல்களுக்கு எதிராக நார்வே நாட்டினைப் பாதுகாப்பதற்காக நார்வே மற்றும் அதன் நட்பு நாடுகள் மேற்கொள்ளும் நீண்ட திட்டமிடப்பட்ட மற்றும் பாதுகாப்புப் பயிற்சியாகும்.

## போயிங் 737 - 800 விபத்து

- 132 பயணிகளை ஏற்றிச் சென்ற சீனா ஈஸ்டர்ன் என்ற விமானமானது சீனாவின் குவாங்சி பகுதியிலுள்ள ஒரு மலைப்பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.
- இந்த விமானம் குன்மிங் பகுதியிலிருந்து புறப்பட்டு, குவாங்குசுவோ நகரை நோக்கிப் பயணித்தது.
- இந்த விமானம் விபத்திற்குள்ளானதால், அந்த மலையில் மிகப்பெரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.




## மான்டரியக்ஸ் உடன்படிக்கை




- உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பதிலடியாக துருக்கி மான்ட்ரியக்ஸ் உடன்படிக்கையினைச் செயல்படுத்தியது.
- உக்ரைனில் சூழ்நிலை போர் நிலவரமாக மாறிவிட்டது என்ற அறிவிப்பானது, துருக்கி நாட்டிற்கு மான்ட்ரியக்ஸ் உடன்படிக்கையினைச் செயல்படுத்தி பாஸ்போரஸ் மற்றும் டார்டனெல்ஸ் ஆகிய நீர்ச்சந்திகள் வழியே ரஷ்யப் போர்க்கப்பல்கள் கருங்கடலினுள் நுழைவதைத் தடை செய்வதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.
- மான்ட்ரியக்ஸ் உடன்படிக்கை என்பது ஆஸ்திரேலியா, பல்கேரியா, பிரான்ஸ், கிரீஸ், ஜப்பான், ரோமானியா, யுகோஸ்லேவியா, ஐக்கிய இராஜ்ஜியம், சோவியத் ஒன்றியம் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளால் கையெழுத்திடப்பட்ட ஒரு சர்வதேச ஒப்பந்தம் ஆகும்.
- இது 1936 ஆம் ஆண்டு நவம்பர் முதல் அமலில் உள்ளது.

## ஹிசாஷி டேகுச்சி

- ஹிசாஷி டேகுச்சி (Hisashi Takeuchi - ஜப்பானைச் சேர்ந்தவர்) என்பவர் மாருதி சுசுகி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப் பட்டுள்ளார்.

- இவர் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் 3 ஆண்டுகளுக்கு இந்தப் பதவியில் இருப்பார்.
- கெனிச்சி ஆயுக்கவா என்பவரையடுத்து இவர் இந்தப் பொறுப்பினை ஏற்க உள்ளார்.



## BIMSTEC சாசனம்




- 5வது BIMSTEC உச்சி மாநாடானது மார்ச் 30 ஆம் தேதியன்று இலங்கையின் கொழும்பு நகரில் நடைபெற உள்ளது.
- BIMSTEC சாசனத்தினையும் உள்ளடக்கிய 6 ஆவணங்கள் இந்த மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டு கையெழுத்தாக உள்ளன.
- “நெகிழ்திறன்மிக்க பிராந்தியம், வளமானப் பொருளாதாரங்கள் மற்றும் நலமான மக்கள் ஆகியவற்றினை நோக்கி BIMSTEC” என்பதே 5வது BIMSTEC உச்சி மாநாட்டின் கருத்துருவாகும்.

## பெர்ஷாமா ஷீல்டு 2022

- மலேசியா தனது வருடாந்திரப் பெர்ஷாமா ஷீல்டு என்ற பயிற்சியில் 4 நாடுகளின் ஆயுதப் படைகளை ஈடுபடுத்த உள்ளது.
- அந்த 4 நாடுகளாவன ஆஸ்திரேலியா, நியுசிலாந்து, சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் ஆகியனவாகும்.
- இப்பயிற்சியானது BS22 (பெர்ஷாமா ஷீல்டு 2022) எனக் குறிப்பிடப்படுகிறது.
- பெர்ஷாமா என்பதற்கு மலேசிய மொழியில் ஒன்றிணைதல் என்று பொருளாகும்.

## பருவநிலை முன்னெச்சரிக்கை அமைப்புகள்




- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ், ஜெனீவா நகரிலுள்ள உலக வானிலை அமைப்புடன் இணைந்து இந்தத் திட்டத்தினை அறிவித்தார்.
- பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களின் காரணமாக, இயற்கைப் பேரிடர்கள் அடிக்கடி உருவாகுவதாலும் அவை மிக சக்தி வாய்ந்ததாக இருப்பதாலும் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் பூமியிலுள்ள ஒவ்வொருவரையும் வானிலை முன்னெச்சரிக்கை வரம்பிற்குள் இணைப்பதற்காக இத்திட்டமானது அறிவிக்கப்பட்டுள்ளது.
- பூமியின் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர், குறிப்பாக குறைவான அளவே வளர்ச்சியடைந்த நாடுகள், முன்னெச்சரிக்கை அமைப்பின் மூலம் பயன் பெறுவது இல்லை.
- ஆப்பிரிக்காவில் வாழும் 60% சதவீத மக்கள் இந்த அமைப்புகளின் மூலம் பலன் எதுவும் பெறுவதில்லை.

## ஆப்பிரிக்கக் காண்டாமிருகத்தினைப் பாதுகாக்க வனவிலங்குப் பத்திரம்



- அருகி வரும் உயிரினமான கருப்பு காண்டாமிருகங்களைப் பாதுகாப்பதற்கான தென் ஆப்பிரிக்காவின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக உலக வங்கியானது (சர்வதேச மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி) ஒரு வனவிலங்குப் பாதுகாப்புப் பத்திரத்தினை வெளியிட்டுள்ளது.
- இது “காண்டாமிருகப் பத்திரம் ” எனவும் அழைக்கப்படுகிறது.

- தென் ஆப்பிரிக்காவிலுள்ள இரண்டு பாதுகாக்கப்பட்டப் பகுதிகளிலுள்ள கருப்பு காண்டாமிருகங்களைப் பாதுகாப்பதற்கும் அவற்றின் எண்ணிக்கையை உயர்த்தச் செய்வதற்கும் இந்தப் பத்திரம் உதவி வழங்கும்.
- அந்த இரு பகுதிகளாவன - அடோ யானை தேசியப் பூங்கா மற்றும் கிரேட் ஃபிஷ் இயற்கை நதி வளங்காப்பகம் ஆகியனவாகும்.

## நிதி உதவி அணுகலைக் கோரி தீர்மானம்

- உக்ரைன் நாட்டினால் வரைவு செய்யப்பட்ட ஒரு தீர்மானத்தினை 193 உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொண்டன.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது உக்ரைனில் பொதுமக்கள் பாதுகாப்பிற்கும், மனிதாபிமான வசதி அணுகலுக்குமான ஒரு உறுதியினைப் பெருமளவில் கோரியது.
- இந்தத் தீர்மானத்திற்குச் சாதகமாக 140 வாக்குகள் அளிக்கப்பட்டன.
- ரஷ்யா, சிரியா, கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு, எரித்ரியா மற்றும் பெலாரஸ் ஆகிய 5 நாடுகள் அதற்கு எதிராக வாக்களித்தன மற்றும் 38 நாடுகள் வாக்களிப்பதைத் தவிர்த்தன.





## ஆப்கானிஸ்தானிற்கான ஐக்கிய நாடுகள் உதவித் திட்டம்

- ஐ.நா. பாதுகாப்புச் சபையானது, ஆப்கானிஸ்தானிற்கான ஐக்கிய நாடுகள் உதவித் திட்டத்திற்கான உத்தரவை 2023 ஆம் ஆண்டு மார்ச் 17 வரையில் ஓர் ஆண்டிற்கு நீட்டிப்பதற்கான தீர்மானத்தினை ஏற்றுக் கொண்டுள்ளது.
- ஆப்கானிஸ்தான் மக்களுக்கு ஆதரவான தங்களது உத்தரவுகளை ஆப்கானிஸ்தான் நாட்டிற்கான ஐக்கிய நாடுகள் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் முன்னோக்கிக் கொண்டு செல்வார் என தீர்மானம் 2626 முடிவு செய்துள்ளது.

UNAMA
UNITED NATIONS ASSISTANCE MISSION IN AFGHANISTAN

## ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் வருடாந்திர எல்லை அறிக்கை 2022 - சிறப்பம்சங்கள்

- உலகிலேயே மிகவும் இரைச்சல் நிறைந்த நகரமாக டாக்கா குறிப்பிடப்பட்டுள்ளது.
- இதனைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசத்தின் மொரதாபாத் நகரம் இடம் பெற்றுள்ளது.
- உலகின் மிகவும் இரைச்சல் நிறைந்த நகரங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ள 5 இந்திய நகரங்கள் பின்வருமாறு
    - அசன்சோல்
    - ஜெய்ப்பூர்
    - கொல்கத்தா
    - புது டெல்லி மற்றும்
    - மொராதாபாத்
- உலகின் மிகவும் அமைதியான ஒரு நகரமாக ஜோர்டானின் இர்பித் நகரம் குறிப்பிடப் பட்டுள்ளது.
- உலகின் மிகவும் இரைச்சல் நிறைந்த முதல் 3 நகரங்கள் பின்வருமாறு
    - டாக்கா, வங்காளதேசம் – 119 dB,
    - மொராதாபாத், இந்தியா – 114 dB,
    - இஸ்லாமாபாத், பாகிஸ்தான் – 105 dB.




## தரவுப் பரிமாற்ற ஒப்பந்தம் மீதான அமெரிக்க – ஐரோப்பிய ஒன்றிய உடன்படிக்கை

- நாடுகளுக்கிடையே தரவுப் பரிமாற்றத்திற்காக வேண்டி ஒரு புதியக் கட்டமைப்பினை உருவாக்குவாக்கும் நோக்கிலான ஓர் ஒப்பந்தத்தினை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை அறிவித்துள்ளன.
- கூகுள் மற்றும் மெட்டா போன்ற பல்வேறு தொழில்நுட்பப் பெருநிறுவனங்களுக்கான மிகவும் அவசியமான ஒரு நடவடிக்கையாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

- அமெரிக்காவுடன் ஐரோப்பாவின் தரவுகளைப் பகிர்ந்து கொள்வதற்கு வேண்டி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும் ஒரு முறை சாராத தனியுரிமைக் கவச அமைப்பினை மாற்றியமைக்கும் நோக்கத்தில் ஓர் ஒப்பந்தத்தினை ஓராண்டிற்கும் மேலாக அதிகாரிகள் திட்டமிட்டு வந்துள்ளனர்.

## கில்பெர்ட் ஹௌங்போ




- டோகோ நாட்டினைச் சேர்ந்த கில்பெர்ட் ஹௌங்போ, சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் அடுத்தத் தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்க உள்ளார்.
- இவர் டோகோவின் முன்னாள் பிரதமர் ஆவார்.
- ஐக்கிய இராஜ்ஜியத்தைச் சேர்ந்த, தற்போதையத் தலைமை இயக்குநரான கய் ரைடர் 2012 ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பதவியை வகித்து வந்தார்.

## பாதரசம் மீதான மினமாட்டா உடன்படிக்கை COP-4


- பாதரசம் மீதான மினமாட்டா உடன்படிக்கையின் 4வது உறுப்பினர்கள் மாநாட்டில், படிப்படியாக அகற்றச் செய்வதற்கு என்று திட்டமிடப்பட்டுள்ள பாதரசம் சேர்க்கப்பட்ட பொருட்களின் ஒரு பட்டியலை விரிவுபடுத்துவதற்கு இதில் பங்கேற்ற நாடுகள் ஒப்புக் கொண்டன.
- இந்த மாநாடானது இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெற்றது.
- இந்த மாநாடானது பாதரச வெளியீடு மற்றும் மனிதர்கள் வெளியிடும் கழிவுகள் ஆகியவற்றிலிருந்து சுற்றுச்சூழலையும் மனித ஆரோக்கியத்தையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



# பொருளாதாரச் செய்திகள்

## T + 1 பங்கு ஒப்பந்தம்

- சீனாவிற்கு அடுத்தப் படியாக T+1 பங்கு ஒப்பந்தத்தினை படிப்படியாக அமல்படுத்திய 2வது நாடாக இந்தியா மாறியுள்ளது.
- இதற்கு முன்பாக இந்தியாவில் பங்குகளுக்கான ஒப்பந்த காலமானது T+2 என்ற நிலையில், அதாவது பங்குகளை வாங்குவதற்கு/விற்பதற்கு 2 நாட்களுக்குப் பிறகு என்று இருந்தது.
- T என்பது வர்த்தக/பரிமாற்ற தினம் அதாவது, பங்குகள் வாங்கப்பட்ட/விற்கப்பட்ட ஒரு தினமாகும்.
- இங்கு T+1 என்றால் உண்மையான பங்கு ஒப்பந்தமானது அடுத்த நாளில் மேற் கொள்ளப்படும் என்று பொருளாகும்.




## சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் – பிப்ரவரி




- 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தின் சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் வசூலானது ரூ. 1,33, 026 கோடியாக உள்ளது.
- இது 2021ஆம் ஆண்டு பிப்ரவரி மாத வசூலை விட 18% அதிகம் ஆகும்.
- 5வது முறையாக சரக்கு மற்றும் சேவை வரி வசூல் ரூ.1.30 லட்சம் கோடி என்ற ஒரு வரம்பைக் கடந்துள்ளது.

- சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப் பட்டதிலிருந்து முதல் முறையாக ரூ. 10,000 கோடி என்ற வரம்பினை சரக்கு மற்றும் சேவைக்கான வரியின் மீதான வரி வசூலானது கடந்துள்ளது.

## 60 மில்லியன் டீமேட் கணக்குகள்




- இந்தியாவின் மத்திய வைப்புச் சேவை அமைப்பானது 6 கோடிக்கும் மேலான (60 மில்லியனுக்குச் சமம்) இயக்க நிலையிலுள்ள டீமேட் கணக்குகளைக் கொண்டு உள்ளதாக அறிவித்தது.
- டீமேட் கணக்கு என்பது பத்திரங்கள் மற்றும் பங்குகளின் இணையவழி நகல்களை வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒருவகைக் கணக்காகும்.

## சொத்து அறிக்கை 2022

- 2021 ஆம் ஆண்டில், உலகளவில் அதிகமான பில்லியனர்கள் எண்ணிக்கையினைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா 3வது இடத்தில் உள்ளது.
- "நைட் ஃபிராங்" என்ற அமைப்பினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டு சொத்து அறிக்கையில் இத்தகவலானது கூறப்பட்டுள்ளது.
- இந்தியாவிலுள்ள அதிஉயர் நிகரச் சொத்து மதிப்புள்ள தனிநபர்களின் (ultra-high-net-worth individuals) எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டில் 11% அதிகரித்து ஆண்டிற்கு 145 பில்லியனர்களாக உள்ளது.
- இது ஆசிய பசிபிக் பகுதியின் மிக அதிக சதவீத உயர்வு ஆகும்.
- அதிஉயர் நிகரச் சொத்து மதிப்புள்ள தனிநபர்கள் என்போர் 30 மில்லியன் டாலர் அல்லது அதற்கு மேற்பட்ட (ரூ. 226 கோடி) மதிப்பிலான நிகர சொத்துகளைக் கொண்டு உள்ளவர்கள் ஆவர்.
- இந்தப் பட்டியலில் அமெரிக்கா (748) மற்றும் சீனா (554) ஆகியவை முறையே முதல் இரு இடங்களைப் பெற்றுள்ளன.

- இந்தியாவில் 2021 ஆம் ஆண்டில் பெங்களூரு நகரில் அதி உயர் நிகரச் சொத்து மதிப்பு உள்ள தனிநபர்களின் எண்ணிக்கையானது அதிகளவில் உயர்ந்துள்ளது.
- இதனைத் தொடர்ந்து டெல்லி மற்றும் மும்பை ஆகியவை உள்ளன.




## தேசிய நிதியியல் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி

- தேசிய நிதியியல் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கியானது 1934 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் கீழ் ஓர் அனைத்திந்திய நிதியியல் நிறுவனமாக (All India Financial Institution) ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வையிடப்படும் என்று இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.
- தற்போது இந்திய ரிசர்வ் வங்கியின் கீழ், NABARD, NHB மற்றும் SIDBI மற்றும் EXIM வங்கி ஆகிய அனைத்திந்திய நிதியியல் நிறுவனங்கள் உள்ளன.
- தேசிய நிதியியல் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கியானது இந்திய ரிசர்வ் வங்கியின் கீழான 5வது அனைத்திந்திய நிதியியல் நிறுவனமாகும்.
- இது இந்தியாவில் நீண்டகால ரீதியில் உள்கட்டமைப்பு நிதி வழங்கீட்டின் மேம்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்கான ஒரு மேம்பாட்டு நிதியியல் நிறுவனமாக நிறுவப் பட்டுள்ளது.




## வருங்கால வைப்பு நிதிகள் மீதான வட்டி விகிதம்

- ஓய்வூதிய நிதி வழங்கீட்டு அமைப்பான, பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO - Employees Provident Fund Organisation) 2021-22 ஆம் ஆண்டிற்கான பணியாளர் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதத்தை 8.10% ஆகக் குறைத்துள்ளது.

- இந்த விகிதமானது முந்தைய ஆண்டின் வட்டி விகிதத்தை விட 0.4% குறைவாகும்.
- 2020-21 மற்றும் 2019-20 ஆகிய ஆண்டுகளில் வருங்கால வைப்புத்தொகை மீதான வட்டி விகிதமானது 8.5% ஆக இருந்தது.
- கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக விதிக்கப்பட்ட வட்டி விகிதங்களில் இது மிகக் குறைவானதாகும்.

| Financial Year | EPF Interest Rate (%) |
|---|---|
| 2013-14 | 8.75 |
| 2014-15 | 8.75 |
| 2015-16 | 8.80 |
| 2016-17 | 8.65 |
| 2017-18 | 8.55 |
| 2018-19 | 8.65 |
| 2019-20 | 8.50 |

## ரிசர்வ் வங்கிப் புத்தாக்க மையம்

- பெங்களூரு நகரில் அமைக்கப்பட்டுள்ள ரிசர்வ் வங்கியின் புத்தாக்க மையத்தினை சக்தி காந்த தாஸ் திறந்து வைத்தார்.
- இந்த மையமானது 100 கோடி ரூபாயைத் தொடக்க மூலதனப் பங்கீடாகக் கொண்டு, முழுவதுமாக இந்திய ரிசர்வ் வங்கியின் கிளை நிறுவனமாக நிறுவப்பட்டுள்ளது.
- இந்த மையத்திற்காக S. கோபாலகிருஷ்ணன் தலைமையில் ஒரு தன்னாட்சி வாரியம் என்பது அமைக்கப்பட்டுள்ளது.
- நாட்டிலுள்ள குறைவான வருமானமுடைய மக்கள் பல்வேறு நிதிப் பயன்கள் மற்றும் சேவைகளைப் பெறச் செய்து அவர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சூழலமைப்பினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


## டெல்லியின் பொருளாதார ஆய்வறிக்கை

- தனிநபர் வருமானத்தில் சிக்கிம் மற்றும் கோவாவுக்கு அடுத்தபடியாக டெல்லி மூன்றாவது இடத்தில் உள்ளது.
- டெல்லியின் 2021-22 ஆம் ஆண்டு பொருளாதார ஆய்வறிக்கையில் இந்தத் தகவலானது தெரிவிக்கப்பட்டுள்ளது.

- 2021-22 ஆம் நிதியாண்டில் டெல்லியின் தனிநபர் வருமானம் ஆண்டுக்கு ஆண்டு 16.81 சதவீதம் வளர்ந்துள்ளதாக இந்த ஆய்வறிக்கை கூறுகிறது.
- டெல்லியின் தனிநபர் வருமானம் 2021-22 ஆம் ஆண்டில் தேசிய சராசரியை விட மூன்று மடங்கு அதிகமாக இருந்தது.

## டாலர் ஆதிக்கத்தில் சரிவு

- உலகப் பண இருப்பில் டாலரின் பங்கானது கடந்த 20 ஆண்டுகளாக ஒரு நிலையான சரிவைக் கண்டுள்ளது.
- மத்திய வங்கிகள் தங்களது பங்குகளைப் பன்முகப்படுத்த ரென்மின்பி உள்ளிட்ட மரபு சாரா பணங்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளதே இதற்குக் காரணமாகும்.
- இருப்பு மேலாண்மை நிறுவனங்கள் டாலருக்குப் பதிலாக இருவேறு திசைகளில் ஒரு கால்பகுதியினை ரென்மின்பியை நோக்கியும் மற்ற 3 கால்பகுதிகளை சிறு நாடுகளின் பணங்களை நோக்கியும் நகர்த்தும் வகையில் திரும்பியுள்ளன.
- டாலர் ஆதிக்கத்தின் மறைமுகமானச் சரிவு : செயல்பாட்டிலுள்ள பன்முகப்படுத்தல் அமைப்புகள் மற்றும் மரபுசாரா இருப்பு பணங்களின் எழுச்சி என்று தலைப்பிடப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் புதிய ஆய்வறிக்கையில் இத்தகவலானது தெரிவிக்கப் பட்டுள்ளது.
- இந்த ஆய்வறிக்கையினைச் சர்வதேச நாணய நிதியத்தின் சேர்கான் அர்சலான்சல்ப், கலிபோர்னியாவின் பெர்க்கிலி பல்கலைக்கழகத்தின் பேரி எய்சென்கிரீன் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் சிமா சிம்சன் ஆகியோர் இணைந்துத் தயாரித்து உள்ளனர்.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கடல் டிராகனின் புதைப் படிமம்

- ஐக்கிய ராஜ்ஜியத்தினைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இச்தியோசார் என்ற ஒரு விலங்கின் 180 மில்லியன் ஆண்டுகள் பழமையான புதைப்படிவப் பகுதிகளை கண்டறிந்துள்ளனர்.
- இது "கடல் டிராகன்" என பிரபலமாக அழைக்கப்படுகின்றது.
- இந்தப் புதைப்படிவமானது ஐக்கிய இராஜ்ஜியத்தில் கண்டறியப்பட்ட மிகப்பெரிய மற்றும் மிக முழுமையான ஒரு எலும்பு அமைப்பு என்பதால் அப்பகுதியில் கண்டறியப் பட்ட மிக முக்கியமானவைகளுள் ஒன்றாக இதனை ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடச் செய்கின்றனர்.




## விண்ணில் ஏவப்பட்ட 22 செயற்கைக் கோள்கள்

- விண்வெளியில் 22 செயற்கைக் கோள்களை நிலை நிறுத்துவதற்காக லாங் மார்ச் 8 ஏவு ஊர்தியினை (ராக்கெட்) சீனா விண்ணில் செலுத்தியது.
- இதன் மூலம், ஒரே ராக்கெட் மூலம் அதிக செயற்கைக் கோள்களை ஏவிய சாதனையை சீனா படைத்துள்ளது.
- இந்த ராக்கெட் ஆனது, தெற்கு ஹைனான் மாகாணத்தில் உள்ள வென்சாங் விண்கல ஏவுதளத்திலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.
- இது லாங்க் மார்ச் தாங்கு ஏவு ஊர்தியின் 409வது விண்வெளிப் பயணத்தைக் குறிக்கச் செய்கிறது.

## தியோமார்கரிட்டா மேக்னிபிஃகா

- வெறும் கண்களாலேயே பார்க்கும் அளவில் உள்ள மிகப்பெரிய பாக்டீரியாவினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இதற்கு தியோமார்கரிட்டா மேக்னிபிஃகா என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தப் பெரிய இழை போன்ற பாக்டீரியாவானது 2 செ.மீ. நீளம் வரை வளரக் கூடியது.
- இது கரீபிய நாடுகளின் சதுப்பு நிலப் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்டவையாகும்.

- இது மற்ற நுண்ணுயிரிகளை விட கிட்டத்தட்ட 5000 மடங்கு பெரியதாகும்.




## PARAM கங்கை


- இது தேசிய மீத்திறன் கணினித் திட்டத்தின் கீழ் ரூர்க்கியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள, இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட பெட்டா படி முறையிலான ஒரு மீத்திறன் கணினியாகும் (Petascale supercomputer).
- இது 1.66 PFLOPS (Peta Floating-Point Operations per Second) திறன் உடையது.
- இது தேசிய மீத்திறன் கணினித் திட்டத்தின் கீழ், ஒரு மேம்பட்டக் கணினி முறையை உருவாக்குவதற்கான மையத்தினால் வடிவமைக்கப்பட்டு இயக்கப்பட்டது.




## பிளாஸ்மா (அயனிமம்)

- பிளாஸ்மா கதிர்களின் பின்னணியிலுள்ள அறிவியலை அறிவியலாளர்கள் வெளிக் கொணர்ந்துள்ளனர்.
- பிளாஸ்மா என்பது சூரியனின் குரோமோஸ்பியர் அடுக்கில் எல்லா இடங்களிலும் ஏற்படும் மின்னூட்டம் பெற்ற துகள்களைக் கொண்ட 4 ஆம் நிலைப் பொருளாகும்.

- ஜெட்ஸ் அல்லது ஸ்பிக்யூல்கள் (கதிர்கள்) மேற்பரப்பிலிருந்து தொடர்ந்து மேலே வீசப் பட்டு பின்னர் ஈர்ப்பு விசையினால் கீழே கொண்டு வரப்படுகின்ற மெல்லிய புல் போன்ற பிளாஸ்மா அமைப்புகளாகும்.
- இந்த ஸ்பிக்யூல்கள் அல்லது ஜெட்கள் சுமந்து செல்லும் ஆற்றல் மற்றும் உந்தத்தின் அளவானது சூரியன் மற்றும் பிளாஸ்மா வானியல் இயற்பியலில் ஓர் அடிப்படை ஆராய்ச்சி ஆர்வத்தைத் தூண்டுவதாக உள்ளது.
- புலப்படக்கூடிய சூரியனின் மேற்பரப்பிற்கு அடியில் உள்ள பிளாஸ்மாவானது சூடாக்கப் பட்ட பாத்திரத்தில் கொதிக்கும் தண்ணீரைப் போல, எப்போதும் வெப்பச் சலன நிலையிலேயே இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் விவரித்துக் கூறி உள்ளனர்.




## கிலோநோவா

- “கிலோநோவா” எனப்படும் மாபெரும் காஸ்மிக் (அண்ட) நிகழ்விலிருந்துப் பின்னொளி நிகழ்வினை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- கிலோநோவா (Kilonova) எனும் ஒரு நிகழ்வானது, சூப்பர்நோவா வெடிப்புகளின் போது அழிந்த நட்சத்திரங்களின் எச்சங்களான அதிக அடர்த்தி கொண்ட இரு நியூட்ரான் நட்சத்திரங்களுடன் மோதும் போது திகழ்கிறது.
- X-கதிரில் திகழும் இந்த மின்னொளி நிகழ்வானது GW 170817 எனக் குறிப்பிடப் படுகிறது.




## 5000 புறக் கோள்கள்




- ❖ நமது சூரியக் குடும்பத்திற்கு வெளியில் 65 புதியக் கோள்களை நாசா கண்டறிந்து உள்ளது.
- ❖ இந்தப் புதிய கண்டுபிடிப்பானது இது வரை கண்டறியப்பட்ட புறக்கோள்களின் எண்ணிக்கையினை 5000க்கு மேல் உயர்த்தியது.
- ❖ இவற்றுள் சில புவியை ஒத்துள்ளன.
- ❖ இந்தக் கோள்களின் மேற்பரப்பில் நுண்ணுயிரிகள், நீர், வாயு மற்றும் உயிரினங்கள் உள்ளனவா என்று அறிவதற்காக புதிதாக கண்டறியப்பட்ட இந்த 65 புறக்கோள்களில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

## TRAPPIST – 1 அமைப்பு

- ❖ TRAPPIST – 1 என்பது அக்வேரியஸ் விண்மீன் திரளிலுள்ள ஒரு செந்நிறக் குள்ள நட்சத்திரம் ஆகும்.
- ❖ 2 மைக்ரான் வானியல் கண்காணிப்பு கருவி மூலம் (2 MAIS) கண்டறியப்பட்டதால், இந்த அமைப்பு இதற்கு முன்பாக 2MASS J23062928 – 0502285 அல்லது K2-112 என்று அழைக்கப் பட்டது.
- ❖ இது 1999 ஆம் ஆண்டில் ஜான் கிஷிஸ் என்ற வானியலாளரால் கண்டறியப்பட்டது.
- ❖ இது 7.6 பில்லியன் ஆண்டுகள் பழமையானது என்பதால் இது சூரியக் குடும்பத்தை விட பழமையானதாகும்.
- ❖ இதன் நிறை சூரியனின் நிறையில் சுமார் 9% ஆகும்.
- ❖ மேலும் இதன் ஆரம் வியாழனின் ஆரத்தை விட சற்று பெரியதாகும்.
- ❖ இதன் மேற்பரப்பு வெப்பநிலை சுமார் 2,290°C.
- ❖ இது சூரியனிலிருந்து 29 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- ❖ ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியானது TRAPPIST – 1 அமைப்பை நோக்கி நிலை நிறுத்தப் படும்.
- ❖ இது TRAPPIST – 1 அமைப்பிலுள்ள கோள்களின் வளிமண்டலம் குறித்து ஆராயும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## பருவநிலை மாற்றம் குறித்த ஐ.நா. அறிக்கை


- ஐக்கிய நாடுகளின் பருவநிலை அறிவியல் குழுமமானது பருவநிலை மாற்றம் நமக்கு அப்பாற்பட்டதாக உள்ளதாகவும் மனிதச் சமூகம் அதற்குத் தயார் நிலையில் இல்லை என்றும் தனது முக்கிய அறிக்கையில் எச்சரித்தது.
- உலக மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் பருவநிலையின் தாக்கத்தின் ஏற்கனவே அபாயகரமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறி ஒரு மாபெரும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இந்த அறிக்கை அழைப்பு விடுத்தது.



- ❖ 2040 ஆம் ஆண்டுக்குள், இந்தப் பருவநிலை மாற்றமானது உலகைப் பசி நிறைந்த ஒன்றாகவும், நோய்கள் மிக்கதாகவும், மிக அபாயகரமான ஒன்றாகவும், இடர்களை அதிகரித்து மிகுந்த ஏழ்மை மிக்கதாகவும் மாற்றும் என எதிர்பார்க்கப்படுவதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- ❖ மேலும், மனிதனால் ஏற்படும் புவி வெப்பமயமாதல் நிகழ்வு மட்டுப்படுத்தப் படா விட்டால், பூமியானது 127 வழிகளில் சிதைந்து விடும்.
- ❖ தற்போது இது கொடிய தீ விபத்துகள், வெப்பம், வறட்சி மற்றும் வெள்ளங்கள் போன்ற சில முக்கிய மீள முடியாத நிகழ்வுகளால் வழக்கமாக ஒரு தொடர் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றது.

## IPCC மதிப்பீட்டு அறிக்கை

- ❖ ஒருவேளை பசுமை இல்ல வாயுவின் உமிழ்வு குறைந்தாலும், அடுத்த 20 ஆண்டுகளில் பருவநிலை மாற்றத்தினால் பல்வேறு இடர்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.
- ❖ பருவநிலை மாற்றம் மீதான அரசுகளுக்கிடையிலான குழு (Intergovermental Panel on Climate Change – IPCC) தொகுத்த ஒரு அறிக்கையில் இத்தகவலானது கூறப்பட்டுள்ளது.
- ❖ IPCCயின் 2வது அறிக்கையின்படி, இந்த உமிழ்வுக் குறைக்கப்படா விட்டால் இந்தியா மிகக் கடுமையாக பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.
- ❖ கடல்மட்ட உயர்வு மும்பை நகரத்திற்கு மிகுந்த ஆபத்தை விளைவிக்கும் என்றும், புயல் உருவாதல் கொல்கத்தா நகரத்திற்கு மிகுந்த அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.
- ❖ இந்தியாவின் அரிசி உற்பத்தி 10 முதல் 30% வரையிலும், சோள உற்பத்தி 25 முதல் 70% வரையிலும் குறையலாம் எனவும், வெப்பநிலை 1 முதல் 4°C வரை உயரலாம் எனவும் இந்த அறிக்கை கூறுகிறது.
- ❖ சிந்து, அமு தார்யா, சபர்மதி, கங்கை ஆகிய ஆற்றுப் படுகைகள் பருவநிலை மாற்றத்தின் காரணமாக கடுமையான நீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் என இந்த அறிக்கை கூறுகிறது.




## தேனுண்ணுங்கரடி

- தேனுண்ணுங் கரடி, புலி மற்றும் செந்நாய் ஆகிய விலங்குகள் சாலை கட்டுமானத்தின் காரணமாக உலகளவில் பெரும் பாதிப்பிற்குள்ளாகும் 36 உயர்மட்ட இரைப் பிடித்துண்ணிகளுள் உள்ளடங்கும்.
- தேனுண்ணுங்கரடிகளின் வாழ்விடமானது இந்தியத் துணைக் கண்டத்தில் காணப் படுவதால், இதுவே அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு இரைப்பிடித்துண்ணியாகும்.
- இந்தியாவில் 2012 முதல் 2017 வரையில் 15 தேனுண்ணுங்கரடிகள் சாலை விபத்தில் கொல்லப் பட்டுள்ளன.
- தேனுண்ணுங்கரடிக்கு அடுத்தபடியாக செந்நாய் (அ) ஆசியக் காட்டு நாயும் அதனைத் தொடர்ந்து புலி, ஆசியக் கருங்கரடி, படைச் சிறுத்தை, சூரியக் கரடி மற்றும் சுண்டா படைச் சிறுத்தை ஆகியவை உள்ளன.
- முதல் 10 இடங்களிலுள்ள உயர்மட்ட இரைப்பிடித்துண்ணிகளுள் 10 விலங்குகள் ஆசிய வாழ்விடங்களினூடே செல்லும் சாலைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.




## உலக நெகிழி ஒப்பந்தம்

- ஒரு மிகப்பெரிய பலதரப்பு சுற்றுச்சூழல் ஒப்பந்தத்தில், "உலக நெகிழி ஒப்பந்தம்" எனப்படும் ஒரு சட்டப்பூர்வப் பிணைப்பு ஒப்பந்தத்திற்கு 175 நாடுகள் ஒப்புதல் அளித்து உள்ளன.
- இது ஒட்டு மொத்த பொருள் விநியோகச் சங்கிலியினை அதைச் சரிசெய்வதன் மூலம் நெகிழி மாசுபாட்டு நெருக்கடியினை ஒரு முடிவுக்குக் கொண்டு வருதலுக்கான ஒரு ஒப்பந்தமாகும்.
- முதல் ஒப்பந்தம் மீதான ஒரு தீர்மானமானது கென்யாவின் நைரோபியில் உள்ள ஐ.நா. சுற்றுச்சூழல் சபையின் சந்திப்பில் நிறைவேற்றப்பட்டது.
- முதல் ஒப்பந்தமானது, 1950களில் நெகிழி காலம் அதிகரிக்கத் தொடங்கியது முதல் உற்பத்தி செய்யப்பட்ட 9 பில்லியன் டன் நெகிழிப் பொருட்களைச் சரியான முறையில் கையாள முயல்கிறது.
- தற்போது, இந்த நாடுகள் 2024 ஆம் ஆண்டுக்குள் இந்த ஒப்பந்தத்தினை எவ்வாறு அமல்படுத்துவது என்பது குறித்து பணியாற்றத் தொடங்கியுள்ளன.




## பெருந்தடுப்பு பவளப் பாறைப் பகுதியில் வாழும் மீன்களின் வண்ணம் குன்றுதல்

- பருவநிலை மாற்றத்தின் காரணமாக, கடல்கள் வெப்பமடைகின்றன.
- இதனால் பவளப் பாறைகள் தொடர்ந்து வெளுக்கப்படுவதால் ஆஸ்திரேலியாவின் பெருந்தடுப்பு பவளப் பாறைப் பகுதியில் வாழும் மீன்களின் வண்ணம் மங்குவதற்கும் அவற்றின் நிறத்தை இழப்பதற்கும் அவை காரணமாகின்றன.
- குளோபல் சேஞ்ச் பயாலஜி என்ற அமைப்பினால் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையில் இது கூறப்பட்டுள்ளது.
- ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தில் உள்ள ஜேம்ஸ் குக் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த டாக்டர் ஹெமிங்சன் இந்த ஆய்வறிக்கையினை வெளியிட்டார்.
- சமீபத்தில் வெளியிடப்பட்ட இந்த ஆய்வறிக்கையானது, மீன்களின் நிறம் மற்றும் அவற்றின் வாழ்க்கைச் சூழலில் காணப்படும் மாற்றங்களைக் கண்காணித்துள்ளது.
- ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப் படி, மீன்களின் நிற வேறுபாடு என்பது உள்ளூர் சூழல் அமைப்புடன் இணைக்கப் பட்டுள்ளது.



## வருடாந்திர எல்லை அறிக்கை 2022




- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர எல்லை என்ற அறிக்கையினை சமீபத்தில் வெளியிட்டது.
- இரைச்சல், பிழம்புகள், பொருத்தமின்மைகள் : அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் (Noise, Blazes, and Mismatches: Emerging Issues of Environmental Concern) என்று இந்த அறிக்கைக்குத் தலைப்பிடப் பட்டது.
- இந்தப் புதிய அறிக்கையில், காட்டுத்தீ, ஒலி மாசுபாடு மற்றும் பிற சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்கள் பரவலான சுற்றுச்சூழல் சேதத்தினை ஏற்படுத்தும் எனவும் அவற்றை விரைவாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு கூறியுள்ளது.
- பருவநிலை மாற்றம், மாசுபாடு மற்றும் உயிரிப் பல்லுயிர்ப் பெருக்க இழப்பு போன்ற புவியின் மூன்று நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண்பதற்கான அவசியத் தேவையினை இது எடுத்துரைக்கிறது.
- ஒலி மாசுபாடானது "ஒரு கொடூரமானக் கொலையாளி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 2002 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்கிடையில், சராசரியாக 423 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்புகள் காட்டுத்தீ காரணமாக எரிந்து நாசமானதாக இந்த அறிக்கை கூறுகிறது.


# மாநிலச் செய்திகள்

## பயஞ்சனா துவாதசி

- இது மகாபாரதத்தில் கிருஷ்ணன் பங்கு பெறும் அத்தியாயத்தை நினைவு கூறும் ஒரு வைணவத் திருவிழாவாகும்.
- இது ஒடிசாவில் கொண்டாடப்படும் 500 ஆண்டுகள் பழமையான ஒரு திருவிழாவாகும்.
- இந்தத் திருவிழாவில் குறைந்தபட்சம் 701 உணவுப்பொருட்கள் தயாரிக்கப்படுகிறது.



## பத்ரா மேல்நிலை நீர்ப்பாசனத் திட்டம்




- கர்நாடகா முதல்வர் பசவராஜ் பொம்மை மத்திய அரசின் உயர் அதிகாரக் குழுவானது பத்ரா மேல்நிலை நீர்ப்பாசனத் திட்டத்திற்குத் தேசிய அளவிலான திட்ட அந்தஸ்தினை வழங்கியுள்ளதாக அறிவிதார்.
- கர்நாடக மாநிலத்தில் இந்த அந்தஸ்தினைப் பெற்ற முதல் திட்டம் இதுவாகும்.
- இந்தத் திட்டமானது நீர்ப்பாசனத் திட்டத்தினை விரைவுபடுத்தச் செய்வதோடு, நீர்ப் பற்றாக்குறை மிக்க மத்திய கர்நாடகப் பகுதியினை நீர்வளமிக்கதாக மாற்றும் ஒரு முயற்சியிலும் உதவும்.

## கொச்சின் சர்வதேச விமான நிலைய நிறுவனம்

CIAL
COCHIN INTERNATIONAL AIRPORT LIMITED

- கொச்சின் சர்வதேச விமான நிலைய நிறுவனமானது கேரளாவின் கண்ணூர் மாவட்டத்திலுள்ள பையனூர் அருகே 12 MWp திறனடைய சூரியசக்தி ஆலையை நிறுவ உள்ளது.
- 2015 ஆம் ஆண்டில் இந்த விமான நிலைய நிறுவனம் முழுவதும் சூரிய சக்தியினால் இயங்கும் உலகின் முதல் விமான நிலையம் என்ற பெருமையைப் பெற்றது.

## லச்சத் போர்புகன்

- லச்சித் போர்புகனுடைய 400வது பிறந்தநாளையொட்டி அசாம் முதல்வர் பல நலத் திட்டங்களை அறிவித்திருந்தார்.
- லச்சித் போர்புகன் என்பவர் அஹோம் (Ahom) படையின் தளபதியாகவும் அசாமிய தேசிய வாதத்தின் அடையாளமாகவும் திகழ்ந்தவர் ஆவார்.
- முந்தையப் போர்களில் அஹோம்களால் கைப்பற்றப்பட்டப் பிரதேசங்களை 1669 ஆம் ஆண்டில், மீண்டும் கைப்பற்றுவதற்காக வேண்டி ராஜ்புத் மன்னர் முதலாம் ராஜாராம் சிங்கினை அவுரங்கசீப் அனுப்பினார்.
- எனவே, அஹோம் மற்றும் முகலாயர்களுக்கு இடையில், வடக்கு கவுகாத்தியிலுள்ள அலபோய் மலையில் அலபோய் போரானது நடைபெற்றது.
- அலபோய் போரில் பெரும் தோல்வியைச் சந்தித்த பிறகு, லச்சித் போர்புகன் 1671 ஆம் ஆண்டில், (வெறும் 2 ஆண்டுகளுக்குள்) முகலாயர்களை அழித்தார் (சராய்காட் போரில்).
- பிரம்மபுத்திரா நதியில் நடந்த சராய்காட் போரில் (கடற்படை போர்) லச்சித் வெற்றி பெற்றார்.
- அஹோம் இராஜ்ஜியமானது 13 ஆம் நூற்றாண்டின் அரசரான சாவ்லங் சுகாபாவினால் நிறுவப் பட்டதாகும்.



## கின்னஸ் சாதனை – உஜ்ஜைன்



- மத்தியப் பிரதேசத்தில் உள்ள உஜ்ஜைன் நகரம், 10 நிமிடங்களில் 11.71 லட்சம் களிமண் விளக்குகளை( தியாஸ்) ஏற்றி கின்னஸ் சாதனை ஒன்றைப் படைத்துள்ளது.
- மகா சிவராத்திரியை முன்னிட்டு ‘சிவ ஜோதி அர்ப்பணம் மஹோத்ஸவ்’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக இந்த தீபங்கள் ஏற்றப்பட்டன.
- இதன் மூலம், 2021 ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் 9.41 லட்சம் தீபங்கள் ஏற்றப்பட்ட முந்தைய ஒரு சாதனையை உஜ்ஜைன் முறியடித்தது.
- உஜ்ஜைன் ‘மஹாகல் பூமி’ (Land of Mahakal) என்றும் அழைக்கப்படுகிறது.

## ஹேரத் திருவிழா




- ஹேரத் அல்லது 'ஹர (சிவன்) இரவு' ஆனது பொதுவாக மகா சிவராத்திரி என்று அழைக்கப் படுகிறது.
- இது ஜம்மு மற்றும் காஷ்மீர் முழுவதும் உள்ள காஷ்மீரி பண்டிட்களால் கொண்டாடப் படும் ஒரு முக்கியத் திருவிழாவாகும்.
- இந்தத் திருவிழா சிவன் மற்றும் உமா (பார்வதி) தேவியின் திருமண நாள் நினைவினைக் குறிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டின் ஹேரத் திருவிழா பிப்ரவரி 28 அன்று கொண்டாடப்பட்டது.
- ஹேரத் திருவிழா "திரயோதசி" அல்லது பால்குணா மாதத்தின் (இந்து நாட்காட்டி) அமாவாசை பகுதியின் 13வது நாளில், பிப்ரவரி மற்றும் மார்ச் இடையே கொண்டாடப் படுகிறது.

- தேசத்தின் பிற பகுதிகளில் சதுர்த்தசி அல்லது பால்குணாவின் 14வது நாளன்று மகா சிவராத்திரி கொண்டாடப்படுகிறது.

## ஒட்டகப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக் கொள்கை

- ராஜஸ்தான் மாநில அரசானது தனது 2022-23 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 'ஒட்டகப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக் கொள்கையை' அறிவித்துள்ளது.
- அம்மாநில அரசின் புள்ளிவிவரங்களின் படி, ராஜஸ்தானில் இரண்டு லட்சத்திற்கும் குறைவான ஒட்டகங்களே உள்ளன.
- மேலும், 2012 ஆம் ஆண்டிலிருந்து நாடு முழுவதும் உள்ள ஒட்டகங்களின் எண்ணிக்கை 1.5 லட்சம் வரை குறைந்துள்ளது.
- கடந்த 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டக் கணக்கெடுப்பின்படி சுமார் 2.5 லட்சம் ஒட்டகங்கள் இருந்தன.
- ஒரு பெரிய மக்கள் சமூகத்தின் வாழ்வாதாரத்திற்கு ஒட்டகங்கள் ஆற்றும் பங்கின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 22 அன்று உலக ஒட்டக தினம் அனுசரிக்கப்படுகிறது.

## மத்தியப் புலனாய்வு அமைப்பிற்கான இசைவு திரும்பப் பெறல்

- தனது மாநிலத்தில் வழக்குகளை விசாரிப்பதற்கு மத்தியப் புலனாய்வு அமைப்பிற்குக் கொடுக்கப்பட்ட ஒரு இசைவினை திரும்பப் பெறும் 9வது மாநிலமாக மேகாலயா மாறி உள்ளது.
- அதாவது, ஒரு மாநில அரசின் ஒப்புதல் இன்றி, அம்மாநிலத்திலுள்ள மத்திய அரசு அதிகாரிகள் அல்லது தனிநபர்கள் மீது எந்தவொருப் புதிய வழக்குகளையும் மத்தியப் புலனாய்வு அமைப்பு பதிவு செய்ய இயலாது.
- மேகாலயாவிற்கு முன்பாக மத்தியப் புலனாய்வு அமைப்பிற்கு வழங்கிய இசைவினைத் திரும்பப் பெற்ற இதர 8 மாநிலங்களாவன; பஞ்சாப், மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், மிசோரம் மற்றும் கேரளா ஆகியனவாகும்.
- 2015 ஆம் ஆண்டில் முதன்முதலாக இந்த இசைவினைத் திரும்பப் பெற்ற மாநிலம் மிசோரம் ஆகும்.

## உயர்நீதிமன்றம் மற்றும் ஆந்திரப் பிரதேசம்

- ஆந்திரப் பிரதேசம் உயர்நீதிமன்றமானது, அமராவதியை அம்மாநிலத் தலைநகரமாக மாற்றுமாறும் 3 தலைநகரங்களை உருவாக்குவதற்கானப் புதிய ஒரு சட்டத்தினை இயற்றுவதற்கு அம்மாநில அரசிற்கு உரிமை இல்லை என்றும் தீர்ப்பளித்தது.
- ஒரு மாநிலத்தின் சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை அமைப்புகளை நிறுவச் செய்வது தொடர்பாக முடிவெடுப்பதற்கு பாராளுமன்றத்திற்கு மட்டுமே தகுதி உள்ளது எனவும், இது அரசியலமைப்புச் சட்டத்தின் 4வது சட்டப்பிரிவில் மறைமுகமாகக் கூறப் பட்டுள்ளதாகவும் அந்த நீதிமன்றம் கூறியது.

## கோனார்க் கோவில் நகரம்




- கோனார்க் கோவில் நகரினை 100% சூரிய நகரமாக மாற்றுவதற்கு ஒடிசா திட்டம் இட்டுள்ளது.
- இது கங்கை வம்சத்தின் ஒரு மாபெரும் அரசரான முதலாம் நரசிம்ம தேவரால் கட்டமைக்கப் பட்டது.
- இந்தக் கோவிலானது 1984 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டது.
- இக்கோவிலானது ‘பிளாக் பகோடா’ (கறுப்பு கோவில்) எனவும் அழைக்கப்படுகிறது.
- அதே போல, பூரி நகரிலுள்ள ஜகன்னாதர் கோவில் வெள்ளை கோவில் என அழைக்கப் படுகிறது.

## மைக்ரோசாஃப்ட் தரவு மையம்

- மைக்ரோசாஃப்ட் நிறுவனமானது இந்தியாவில் தனது 4வது தரவு மையத்தினை தெலுங்கானாவின் ஹைதராபாத் நகரில் அமைக்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- ஹைதராபாத் தரவு மையமானது இந்தியாவிலுள்ள மிகப்பெரிய தரவு மையங்களுள் ஒன்றாக திகழும்.
- இது 2025 ஆம் ஆண்டில் செயல்பாட்டுக்கு வரும்.
- மைக்ரோசாஃப்ட் நிறுவனமானது, புனே, மும்பை, மற்றும் சென்னை ஆகிய மூன்று இடங்களில் ஏற்கனவே தனது தரவு மையத்தினைக் கொண்டுள்ளது.



## கௌசல்ய மாத்ரித்வ யோஜனா




- சத்தீஸ்கர் முதலமைச்சர் பூபேஷ் பாகேல் 'கௌசல்ய மாத்ரித்வ யோஜனா' என்ற ஒரு திட்டத்தினை அறிமுகம் செய்தார்.
- ஒரு பெண்ணிற்கு 2வது குழந்தை பிறந்தால், அவருக்கு இத்திட்டத்தின் கீழ், 5000 ரூபாய் உதவித் தொகை வழங்கப் படுவதற்கு அவர் தகுதி பெறுகிறார்.
- இத்திட்டமானது பெண் குழந்தைகளின் வளர்ப்பு மற்றும் கல்விக்கு உதவும்.

## ஆமா யோஜனா மற்றும் பாகினி திட்டம்


- சிக்கிம் முதல்வர் பிரேம் சிங் தமாங், 'ஆமா யோஜனா மற்றும் பாகினி திட்டத்தினை' அரசு விரைவில் செயல்படுத்தும் என அறிவித்துள்ளார்.
- ஆமா யோஜனா திட்டத்தின் கீழ் மாநிலத்தில் உள்ள பணிக்குச் செல்லாத தாய்மார்கள் மத்தியில் சேமிக்கும் பழக்கத்தினை ஊக்குவிக்கும் ஒரு நோக்கத்துடன், அவர்களின் வங்கிக் கணக்கில் ஆண்டுக்கு ரூ.20,000 தொகையை அரசு வழங்க உள்ளது.
- பாகினி திட்டமானது மாதவிடாய்க்கான துப்புரவுத் துணிகள் எளிதில் கிடைக்காமல் போவது/பெற இயலாதது போன்ற சில காரணங்களால் பெண் குழந்தைகள் பள்ளிப் படிப்பிலிருந்து இடைநிற்றலைக் குறைப்பதையும் மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தினை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பால் – தத்வவ் படுகொலை

- குஜராத் அரசானது, 2022 ஆம் ஆண்டு மார்ச் 07 அன்று பால் – தத்வவ் படுகொலையின் 100 ஆம் ஆண்டு நிறைவினை அனுசரித்தது.
- பால் – தத்வவ் படுகொலை என்பது, ஆங்கிலேயர்களால் சுமார் 1,200 பழங்குடியினப் போராளிகள் (பில் பழங்குடியினர்) கொல்லப்பட்ட ஒரு நிகழ்வாகும்.
- இது 1922 ஆம் ஆண்டு மார்ச் 07 அன்று, அப்போதைய இடார் மாகாணத்தின் (இன்றைய குஜராத் மாநிலம்) சபர் கந்தா மாவட்டத்தின் பால் – சித்தரியா மற்றும் தத்வாங் ஆகிய கிராமங்களில் நடைபெற்றது.

## மாத்ருசக்தி உதய்மிதா திட்டம்

- தொழில் முனைவோருக்கு உதவி வழங்கச் செய்வதற்காக ஹரியானா மாநில அரசு, மாத்ருசக்தி உதய்மிதா என்ற ஒரு திட்டத்தினை அறிவித்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், பரிவார் பெச்சான் பத்ராவின் சரிபார்க்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், 5 லட்சம் ரூபாய்க்கும் குறைவான அளவிலான வருடாந்திரக் குடும்ப வருமானத்தினைக் கொண்டுள்ள பெண்களுக்கு, 3 லட்சம் ரூபாய் வரையிலான மென் கடன்கள் நிதி நிறுவனங்களால் வழங்கப்படும்.




## இந்திர தனுஷ் திட்டம்




- இந்திய அரசின் இந்திர தனுஷ் திட்டமானது ஒரு சுகாதார நல முன்னெடுப்பாகும்.
- இத்திட்டமானது முதலில் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 15 அன்று தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது, இந்தியாவில் 90% முழு நோய்த்தடுப்புத் திறன் பரவலை எட்டச் செய்வதையும், 2022ஆம் ஆண்டில் இதனை நிலைபெறச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வெற்றிகரமான கோவிட் – 19 தடுப்பூசி வழங்கீடு மட்டுமல்லாமல், 90.5% பரவலுடன் முழு நோய்த் தடுப்புத் திறன் வழங்கீட்டில் இந்தியாவிலேயே அதிகப் பரவல் கொண்ட மாநிலமாக ஒடிசா திகழ்கிறது.

## முந்தைய ஒய்வூதியத் திட்டம்

- இராஜஸ்தானுக்கு அடுத்தப்படியாக, அரசு ஊழியர்களுக்கான பழைய ஒய்வூதியத் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்திய 2வது மாநிலமாக சத்தீஸ்கர் மாறியுள்ளது.
- இந்தத் திட்டமானது 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல், அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசால் கைவிடப்பட்டு, சந்தை சார்ந்த ஒய்வூதியத் திட்டமானது (market-driven pension scheme) அறிமுகப்படுத்தப்பட்டது.

## துதாலா கிராமம் – குஜராத்

- கோல்டி சோலார் என்ற நிறுவனமானது, ஸ்ரீராமகிருஷ்ணா அறிவு அறக்கட்டளையுடன் இணைந்து தெற்கு குஜராத்திலுள்ள துதாலா என்ற ஒரு கிராமத்தினை சூரிய சக்தி மயமாக்கும் ஒரு திட்டத்திற்கான அடிக்கல்லினை நாட்டியுள்ளது.
- 450 Kw திறனுள்ள சூரியசக்தி கூரைத்தகடுகள் அமைக்கும் இத்திட்டமானது சுமார் 350 வீடுகளிலும் அங்கன்வாடிகள் மற்றும் கிராமப் பஞ்சாயத்து போன்ற சில பொது இடங்களிலும் ஆற்றல் வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும்.
- இது நிறைவடைந்தால் இந்த அறக்கட்டளையினால் வழங்கப்பட்ட சூரிய மின் தகடுகள் மூலம் முழுவதும் ஆற்றல் வழங்கப்பட்ட முதல் கிராமமாக இது மாறும்.

srk knowledge foundation
enabling the future

## சிறுத்தைகள் சரணாலயம்




- இந்திய நாட்டிலேயே சிறுத்தைகளை அறிமுகப்படுத்தும் முதல் மாநிலமாக மத்தியப் பிரதேசம் மாற உள்ளது.
- ஷியோபூரில் உள்ள குனோ பால்பூர் என்ற சரணாலயம் 12 முதல் 15 சிறுத்தைகளைக் கொண்டிருக்கும்.
- இந்திய நாட்டில் கடைசிச் சிறுத்தை கொல்லப் பட்டு 74 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## முக்கிய மந்திரி சா ஸ்ராமி கல்யாண் பிரகல்பா திட்டம்


- திரிபுரா அரசானது, தேயிலைத் தொழிலாளர்களுக்காக 'முக்கிய மந்திரி சா ஸ்ராமி கல்யாண் பிரகல்பா' என்ற ஒரு சிறப்புத் திட்டத்தை அறிவித்துள்ளது.
- திரிபுராவின் 7000 தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைச் சமூகப் பாதுகாப்பு வலை அமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கான ஒரு நடவடிக்கையாக இந்தத் திட்டமானது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தச் சிறப்புத் திட்டம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு, நியாய விலைப் பொருட்கள் மற்றும் நிதியுதவி ஆகியவை கிடைப்பதை உறுதி செய்யும்.

## ஆளில்லா விமானப் பயிற்சிப் பள்ளி - குவாலியர்

- மத்தியப் பிரதேச மாநிலத்தின் குவாலியரில் முதல் ஆளில்லா விமானப் பயிற்சிப் பள்ளியை மத்தியப் பொது விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா மற்றும் மத்தியப் பிரதேச மாநில முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர்.
- மத்தியப் பிரதேசத்தின் பல்வேறு நகரங்களில் திறப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள ஐந்து ஆளில்லா விமானப் பயிற்சிப் பள்ளிகளில் இதுவும் ஒன்றாகும்.
- மற்ற நான்கு நகரங்கள் போபால், இந்தூர், ஜபல்பூர் மற்றும் சத்னா ஆகியனவாகும்.

## சிறார்களுக்கான நிதிநிலை அறிக்கை - மத்தியப் பிரதேசம்

- மத்தியப் பிரதேச மாநில அரசு, தனது ஆண்டு நிதித் திட்டத்தின் ஒரு பகுதியாக முதல் முறையாக 'சிறார்களுக்கான நிதிநிலை அறிக்கையை' தாக்கல் செய்தது.
- இது குழந்தைகளுக்குப் பிரகாசமான எதிர்காலம் இருப்பதை உறுதி செய்யும்.
- குழந்தை இறப்பு மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடுகள் உள்ளிட்டவற்றிற்கான, குழந்தைகளை மையமாகக் கொண்ட பல திட்டங்களைக் கையாள்வதற்கு வேண்டி, சிறார்களுக்கான இந்த நிதிநிலை அறிக்கை அரசாங்கத்திற்கு உதவும்.



## இந்திரயானி மருத்துவ நகரம்

- மகாராஷ்டிரா மாநில அரசானது, புனேவில் 'இந்திரயானி மெடிசிட்டி' என்ற பெயரில் இந்திய நாட்டின் முதல் மருத்துவ நகரத்தை அமைக்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- இது அனைத்து வகையான பல்வேறு சிறப்புச் சிகிச்சைகளையும் ஒரே இடத்தில் வழங்கச் செய்வதற்கான இடமாக விளங்கும்.
- இந்திரயானி மெடிசிட்டியில் (மருத்துவ நகரத்தில்) மருத்துவமனைகள், மருத்துவ ஆராய்ச்சி மையங்கள், மருந்துத் தயாரிப்பு, ஆரோக்கியம் மற்றும் பிசியோதெரபி (உடலியக்க மருத்துவம்) ஆகியவை இடம் பெறும்.

## செயற்கை நுண்ணறிவு & எந்திரனியல் தொழில்நுட்பப் பூங்கா

- நாட்டின் முதலாவது செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் தொழில்நுட்பப் பூங்காவானது (ARTPARK) கர்நாடகாவின் பெங்களூரு நகரில் தொடங்கப்பட்டது.
- செயற்கை நுண்ணறிவு & எந்திரனியல் தொழில்நுட்பப் பூங்கா ஆனது AI Foundry என்ற அமைப்புடன் இணைந்து இந்தியாவில் மேற்கொள்ளப்படும் செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் கண்டுபிடிப்புகளுக்கு ஆதரவளிப்பதற்காக $100 மில்லியன் அளவிற்குத் துணிகர நிதியை வழங்க உள்ளது.




## எண்ணிம தண்ணீர் வங்கி



- 'அக்வேரியம் (AQVERIUM) எனப்படும் இந்தியாவின் முதல் எண்ணிம தண்ணீர் வங்கி என்பது கர்நாடகாவின் பெங்களூரு நகரில் தொடங்கப்பட்டுள்ளது.
- இது சிறந்த நீர் மேலாண்மையை நோக்கமாகக் கொண்ட ஒரு புதுமையான முயற்சி ஆகும்.
- இது அக்வாக்ராப்ட் குரூப் வென்ச்சர்ஸ் என்ற நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.
- எண்ணிம தண்ணீர் வங்கி என்பதனை சில பொதுவான மேம்பாட்டு சவால்களைச் சமாளிப்பதில் மேலும் சில உதவிகளை வழங்கக் கூடிய, அனைத்து நிறுவனங்கள் மற்றும் ஆதாரங்களில் இருந்து பெறப்படும் நீர்வளத் தரவுகளின் ஒரு தொகுக்கப்பட்ட பட்டியல் என்று கொள்ளலாம்.

## மும்பை பருவநிலை செயல் திட்டம்




- பிருஹன் மும்பை மாநகராட்சிக் கழகம் தயாரித்த மும்பை பருவநிலை செயல் திட்டம் என்பது வெளியிடப்பட்டது.
- பருவநிலை மாற்றத்தின் சவால்களைச் சமாளிப்பதற்காக மும்பை நகரத்திற்கான 30 ஆண்டு கால ஒரு செயல்திட்டத்தினை மும்பை பருவநிலை செயல் திட்டம் வகுத்து உள்ளது.
- 2050 ஆம் ஆண்டிற்குள் நிகரப் பூஜ்ஜிய உமிழ்வு என்ற ஒரு இலக்கை அடைய குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலப் பருவநிலை இலக்குகளை இத்திட்டம் நிர்ணயித்துள்ளது.
- அடுத்த 30 ஆண்டுகளில் மிகப்பெரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய ஆறு மூலோபாயப் பகுதிகளை இத்திட்டம் அடையாளம் கண்டுள்ளது.
- இதன் மூலம் 2050 ஆம் ஆண்டுக்குள் கார்பன் உமிழ்வை அகற்றச் செய்வதற்கான திட்டங்களை உருவாக்கும் முதல் தெற்காசிய நகரமாக மும்பை திகழ்கிறது.
- மும்பை பருவநிலை செயல் திட்டத்தின் முக்கிய நோக்கமானது, மும்பையின் எரிசக்தி கட்டமைப்பினைக் கார்பன் நீக்கம் செய்வதாகும்.

## பயிர் பல்வகைப்படுத்தல் முறைகள்

- தனது பயிர் பல்வகைப்படுத்தல் முறைகளை குறியீட்டு வடிவில் பதிவு செய்துள்ள முதல் இந்திய மாநிலமாக தெலுங்கானா மாறியுள்ளது.
- பயிர் பல்வகைப்படுத்தல் குறியீடு ஓர் அடிப்படை மதிப்பைக் கொண்டுள்ளது.

- இது ஒரு பயிருக்கென ஒதுக்கப்பட்ட மொத்தச் சாகுபடி பரப்பின் சதவீதத்தைக் குறிக்கிறது.
- இதில் குறியீட்டு மதிப்பு அதிகமாக இருந்தால், பயிர்கள் மிகவும் பல்வகைப் படுத்தப் பட்டுள்ளன என்பதைக் குறிக்கிறது.
- தெலுங்கானாவில், பல மாவட்டங்கள் 0 முதல் 5 வரையிலான குறியீட்டு மதிப்புகளைக் கொண்டுள்ளன.
- பயிர் பல்வகைப்படுத்தல் குறியீடானது அம்மாநிலத்தில் எதிர்காலப் பயிர் பல்வகைப் படுத்தலுக்கு ஓர் அடிப்படை மதிப்பீடாக இருக்கும்.


NIRMAL, VIKARABAD MORE DIVERSE IN T

- According to crop diversification index, the state grows 77 varieties
- Three least diverse areas were Peddapalli, Karimnagar and Suryapet
- According to officials, the index would serve as a baseline for future crop diversification

| TOP TEN DISTRICTS (CROP DIVERSIFICATION VALUE) | |
|---|---|
| Nirmal | 0.8 |
| Vikarabad | 0.78 |
| Sangareddy | 0.76 |
| Rangareddy | 0.75 |
| Jogulamba Gadwal | 0.74 |
| Warnagal Rural | 0.71 |
| Naryanpet | 0.71 |
| Mahbubnagar | 0.69 |
| Nagarkurnool | 0.68 |
| Khammam | 0.68 |
| Kamareddy | 0.66 |

## மாத்ருபூமி




- மலையாள நாளிதழான மாத்ருபூமியின் நூற்றாண்டு விழாவின் முழு ஆண்டு அளவிலானக் கொண்டாட்டங்களைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- 1923 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் தேதியன்று மாத்ருபூமி நாளிதழ் நிறுவனம் இயங்கத் தொடங்கியது.
- இது சமூகச் சீர்திருத்தங்கள் மற்றும் மேம்பாட்டுச் செயல் நிரல்களைக் கடந்து, தேசிய நலன் சார்ந்த பிரச்சினைகளைத் தொடர்ந்து முன்னிலைப்படுத்தச் செய்வதில் முன்னணியில் உள்ளது.


## நில உரிமையைக் கண்காணிப்பதற்கான இயக்க வரைபடம்

- கிராமங்களில் இயக்க (மாறுநிலை) வரைபடம் (dynamic map) என்ற கருத்தாக்கத்தினை அறிமுகம் செய்த முதல் மாநிலமாக பீகார் மாற உள்ளது.
- இந்த வரைபடமானது ஒவ்வொரு முறை நில உரிமை கைமாறும் போதும் தானாகவே புதுப்பிக்கப் படும்.
- சட்ட மோதல்களைக் குறைப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் ஆகும்.

## ஹரியானா மதமாற்ற எதிர்ப்பு மசோதா


- ஹரியானா சட்டசபையானது, "2022 ஆம் ஆண்டு ஹரியானா சட்டவிரோத மதமாற்றத் தடுப்பு மசோதாவினை" நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது பலாத்காரம், மோசடி முறைகள், வசியம் (அ) திருமணம் என்ற பெயரில் மதம் மாறுவதைத் தடை செய்ய விழைகிறது.
- இந்த வகையில் மத்தியச் சட்டம் எதுவும் இல்லை
- இது போன்ற ஒரு மசோதா உத்தரப்பிரதேசம் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய இடங்களில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது.
- மேலும் இது போன்ற முன்மொழிவுகள் மத்தியப் பிரதேசம் மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களில் உள்ளன.

## புதிய கடல் இனங்களை அடையாளம் காணுதல்



- மத்தியக் கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனமானது (CMFRI - Central Marine Fisheries Research Institute), கேரளாவின் இந்தியக் கடற்கரையில் ஒரு புதிய காரங்கிட் மீன் இனத்தினை அடையாளம் கண்டுள்ளது.
- புதிதாக அடையாளம் காணப்பட்ட இந்த மீன் 'ராணி (குயின்) மீன்' என்ற வகையைச் சேர்ந்தது.
- இந்த மீனின் அறிவியல் பெயர் ஸ்காம்பிராய்ட்ஸ் பெலாகிகஸ் (Scomberoides pelagicus) என்பதாகும்.
- உள்ளூர் மொழியில் இந்த மீன் 'பொல வட்டா' என்று அழைக்கப்படுகிறது.

### கஹிர்மாதா அரிபாடா




- சுமார் 2.45 லட்சம் ஆலிவ் ரெட்லி (சிற்றாமைகள்) முட்டையிடுவதற்காக ஒடிசாவின் கடற்கரையினூடே அமைந்துள்ள கஹிர்மாதா கடல்சார் சரணாலயத்தின் நாசி – II என்ற கடற்கரையை வந்தடைந்துள்ளன.
- இவை பசிபிக் ரெட்லி கடல் ஆமை (Lepidochelys olivacea - லெபிடோசெலிஸ் ஆலிவாசியே) என்றும் அழைக்கப்படுகின்றன.
- இது முதன்மையாக பசிபிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்களில் வெப்பமான மற்றும் வெப்பமண்டல நீர்ப்பகுதிகளில் காணப்படும் நடுத்தர அளவிலான கடல் ஆமைகள் ஆகும்.
- இந்தியப் பெருங்கடலில், ஒடிசாவிலுள்ள கஹிர்மாதா அருகேயுள்ள ருசிகுல்யா இனப் பெருக்க மையத்தில் இரண்டு அல்லது மூன்று குழுக்களாக ஆலிவ் ரெட்லி ஆமைகள் வலையமைக்கும்.
- இந்தியாவின் ஒடிசா மாநிலக் கடற்கரையானது உலகின் மிகப்பெரிய இனப்பெருக்க மையமாகும்.
- இதற்கு அடுத்த இடத்தில் மெக்சிகோ மற்றும் கோஸ்டா ரிகா ஆகியவை உள்ளன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


### மாதாபி பூரி புச்



- ICICI வங்கியின் முன்னாள் வங்கியாளர் மாதாபி பூரி புச், அஜய் தியாகி என்பவரை அடுத்து இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியத்தின் ஒரு புதிய தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இவர் இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியத்தின் முதல் பெண் தலைவரும், ஒரு ஒழுங்குமுறை அமைப்பிற்குத் தலைமையேற்ற முதல் குடிமைப் பணி சாராத ஒரு நபரும் ஆவார்.

## தீபம் சட்டர்ஜி எழுதிய புதிய புத்தகம்

- இந்திய இராணுவத்தின் முன்னாள் தலைவர் தீபம் சட்டர்ஜி, "The Millennial Yogi : A Modern – day parable about reclaiming one's life" என்ற ஒரு புதியப் புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- இந்தப் புத்தகமானது, ஜெய்சங்கர் பிரசாத் (அ) ஜெய் (அ) வினி என்ற ஒரு மாயத் துறவிப் பற்றி விவரிக்கிறது.
- இந்தப் புத்தகமானது பெங்குயின் ராண்டம் ஹவுஸ் அச்சகத்தின் ஒரு கிளையான எபுரி என்ற பதிப்பகத்தினால் வெளியிடப்படுகிறது.





## ஜுனாயத் கமல் அஹ்மத்

- உலக வங்கியின் இந்திய இயக்குநரான ஜுனாயத் கமல் அஹ்மத் சர்வதேச கடன் வழங்கீட்டு முகமையின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அஹ்மத் பன்னாட்டு முதலீட்டு உறுதி முகமையின் (Multilateral Investment Guarantee Agency) செயல் பிரிவின் துணைத் தலைவர் பொறுப்பினை வகிக்க உள்ளார்.
- இந்த வங்கிகளின் வரலாற்றில் இவ்வாறான ஒரு உயர்பதவிக்குத் தேர்வு செய்யப்பட்ட 2வது வங்காள இனத்தவர் இவரே தேசியர் ஆவார்.



## போல்ட்ஸ்மேன் பதக்கம்

- இயற்பியல் பேராசிரியர், தீபக் தார் போல்ட்ஸ்மேன் பதக்கத்தினைப் பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- புள்ளியியல் இயற்பியல் (statistical physics) துறையில் ஆற்றப்படும் பங்களிப்பிற்காக 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை, சர்வதேச தூய மற்றும் பயன்பாட்டு இயற்பியல் ஒன்றியத்தின் புள்ளியியல் – இயற்பியல் ஆணையத்தினால் இந்தப் பதக்கமானது வழங்கப் படுகிறது.
- இதற்கான விழாவானது இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் டோக்கியோ நகரில் நடைபெற உள்ள ஸ்டாட்பிஸ்28 (StatPhys28) மாநாட்டின் போது நடத்தப்படும்.
- பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் ஜான்.J. ஹோஃபீல்டு என்பவரும் இவருடன் சேர்ந்து இந்தப் பதக்கத்தினைப் பெற உள்ளார்.
- பேராசிரியர் தார் தற்போது புனேவிலுள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஓய்வு பெற்ற ஆசிரியராக உள்ளார்.





## ஷேன் வார்ன்

- ஆஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சு நாயகனான ஷேன் வார்ன் தனது 52வது வயதில் காலமானார்.
- 145 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 708 விக்கெட்டுகளை ஷேன் வார்ன் வீழ்த்தி உள்ளார்.
- இவரது கிரிக்கெட் வாழ்க்கையானது 1992 முதல் 2007 வரை நீடித்தது.
- இவர் 1999 ஆம் ஆண்டில் உலகக் கோப்பையை வென்ற ஆஸ்திரேலிய அணியில் ஒருவர் ஆவார்.

- ஷேன் வார்ன் ஆஷஸ் கிரிக்கெட்டில் மற்ற எந்தப் பந்து வீச்சாளரையும் விட அதிக விக்கெட்டுகளை (195) எடுத்தவர் ஆவார்.
- 2013 ஆம் ஆண்டில், இவர் ஐசிசி புகழரங்கில் (ICC Hall of Fame) சேர்க்கப் பட்டார்.
- ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் தலைவராக இந்தியன் பிரீமியர் லீக்கின் தொடக்கப் பதிப்பையும் இவர் வென்றார்.




## பத்திரிகையாளர் அமிதவ் குமார் எழுதிய புத்தகம்





- இந்திய எழுத்தாளரும் பத்திரிகையாளருமான அமிதவ் குமார் 'The Blue Book: A Writer's Journal' என்ற புதிய புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- இந்தப் புத்தகத்தை ஹார்பர்காலின்ஸ் இந்தியா என்ற பதிப்பகம் வெளியிட்டுள்ளது.
- ப்ளூ புக் என்பது பெருந்தொற்று காரணமாக பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்ட நேரத்தில் நூல் ஆசிரியரின் நாட்குறிப்புகளின் மூலம் தொகுக்கப்பட்டது.

## உஷா உதுப் வாழ்க்கை வரலாறு

- "The Queen of Indian Pop: The Authorised Biography of Usha Uthup" என்ற தலைப்பில் பாப் பாடகி உஷா உதுப்பின் வாழ்க்கை வரலாறு வெளியிடப்பட்டது.
- இந்தப் புத்தகம் முதலில் இந்தியில் "உல்லாஸ் கி நாவ்" என்ற தலைப்பில் எழுத்தாளர் விகாஸ் குமார் ஜாவ் என்பவரால் எழுதப்பட்டது.

- "The Queen of Indian Pop: The Authorized Biography of Usha Uthup" என்பது அந்தப் புத்தகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பாகும்.
- இதனை இப்புத்தகத்தின் எழுத்தாளரின் மகள் சிருஷ்டி ஜா மொழிபெயர்த்துள்ளார்.
- இந்தப் புத்தகத்தை பென்குயின் ரேண்டம் ஹவுஸ் இந்தியா பதிப்பகம் வெளியிட்டு உள்ளது.




## 23வது இந்தியப் பெண் கிராண்ட் மாஸ்டர்

- MPLயின் 47வது தேசிய மகளிர் சதுரங்க சாம்பியன்சிப் போட்டியில் 19 வயதான பிரியங்கா நுட்டாகி தனது பெண் கிராண்ட் மாஸ்டருக்கான ஒரு இறுதிக் கட்ட விதி முறையையும் நிறைவு செய்துள்ளார்.
- இவர் இந்தியாவின் 23வது பெண் கிராண்ட் மாஸ்டர் ஆனார்.
- இவர் ஆந்திரப் பிரதேசத்தின் விஜயவாடா நகரைச் சேர்ந்தவராவார்.



## நாரிசக்தி புரஷ்கர்

- புதுடெல்லியிலுள்ள ராஷ்டிரபதி பவனில் 2022 ஆம் ஆண்டு மார்ச் 08 அன்று சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான நாரிசக்தி புரஷ்கர் விருதுகளை வழங்கினார்.
- ஒட்டு மொத்தமாக 29 பெண்களுக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- பெண்களுக்கு, குறிப்பாக பாதிக்கப்படக் கூடிய மற்றும் விளிம்பு நிலையிலுள்ள பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்காக ஆற்றிய சிறப்பான மற்றும் தனித்துவமிக்க பணிகளைப் பாராட்டி இவர்களுக்கு இந்த விருதானது வழங்கப்பட்டது.
- நீலகிரியின் பழமை வாய்ந்த மற்றும் சிக்கல் மிகுந்த தோடா சித்திர வேலைப் பாடுகளைப் பாதுகாத்து மேம்படுத்தியதற்காக நீலகிரியைச் சேர்ந்த ஜெயா முத்து மற்றும் தேஜம்மா ஆகியோருக்கு 2020 ஆம் ஆண்டிற்கான நாரிசக்தி புரஷ்கர் விருதானது வழங்கப்பட்டது.
- மனநலக் குறைபாடு மற்றும் அதன் சிகிச்சை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக ஆற்றிய புதுமைமிக்க மற்றும் இடைவிடா முயற்சிகளுக்காக வேண்டி சென்னையைச் சேர்ந்த தாரா ரங்கசாமிக்கு 2021 ஆம் ஆண்டிற்கான நாரிசக்தி புரஷ்கர் விருதானது வழங்கப்பட்டது.




## நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் புதியத் தலைவர்




- நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் (Financial Action Task Force) புதியத் தலைவராக சிங்கப்பூரைச் சேர்ந்த T. ராஜா குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

- நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவானது உலகின் பண மோசடி மற்றும் பயங்கரவாத எதிர்ப்பிற்கான நிதித் தடுப்பு நிறுவனமாகும்.
- இவரது 2 ஆண்டுக்கால பதவிக் காலம் ஜூலை 01 அன்று தொடங்குகிறது.
- ராஜாவின் நியமனமானது, சிங்கப்பூர் இந்த அமைப்பின் ஒரு தலைமைத்துவத்தினை முதன் முறையாக ஏற்கும் நிகழ்வைக் குறிக்கிறது.

## விஷ்வகர்மா ராஷ்டிரிய புரஷ்கர் மற்றும் தேசியப் பாதுகாப்பு விருதுகள்

- மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், விஷ்வகர்மா ராஷ்டிரிய புரஷ்கர் மற்றும் தேசியப் பாதுகாப்பு விருதுகளை வழங்கி உள்ளார்.
- இந்த விருதுகளானது 1965 ஆம் ஆண்டு முதல் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகத்தினால் வழங்கப்படுகிறது.
- விஷ்வகர்மா ராஷ்டிரிய புரஷ்கர் என்ற விருதானது இதற்கு முன்பாக ஷ்ரம் வீர் தேசிய விருதுகள் என அழைக்கப்பட்டது.
- முந்தைய ஆண்டில் ஊழியர்களால் வழங்கப்பட்டு, ஒரு தொழிற்சாலை நிர்வாகத்தால் அமல்படுத்தப் பட்ட சிறந்த பரிந்துரைகளை அங்கீகரிக்கும் விதமாக இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- தேசியப் பாதுகாப்பு விருதுகளானது, அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் கீழான தொழில்துறை நிறுவனங்கள், கட்டுமானத் தளங்கள், துறைமுகங்கள் மற்றும் நிறுவனங்களின் சிறப்பான பாதுகாப்புச் செயல்பாடுகளுக்கு வேண்டி அங்கீகாரம் அளிக்கும் விதமாக வழங்கப் படுகின்றன.
- விபத்துகளைத் தடுப்பதில் நிர்வாகம் மற்றும் ஊழியர்கள் ஆகியோரின் ஈடுபாடுகளை ஊக்குவித்து அவர்களை மேம்படுத்தச் செய்வதே இந்த விருது வழங்கப்படுவதன் ஒரு நோக்கமாகும்.




## பருவநிலைப் படைப்பிரிவு – அண்டார்டிகா ஆய்வுப் பணி

- 2041 ஆம் ஆண்டு பருவநிலைப் படைப் பிரிவு அண்டார்டிகா ஆய்வுப்பணியில் இடம் பெறுவதற்கு இந்தியா சார்பாக ஆருஷி வர்மா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இவர் டெல்லியைச் சேர்ந்த தேசிய அளவில் புகழ்பெற்ற ஒரு துப்பாக்கிச் சுடும் வீரர்

மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர் ஆவார்.

❖ இவருக்கு ஹன்ஸ் அறக்கட்டளை முழு ஆதரவினையும் நிதி உதவியையும் வழங்க உள்ளது.



## Role of Labour in india's Development புத்தகம்

❖ மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், 'Role of Labour in India's Development' என்ற புத்தகத்தினை வெளியிட்டார்.

❖ இந்தப் புத்தகமானது, இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் தொழிலாளரின் பங்களிப்பினை எடுத்துரைக்கும் 12 கட்டுரைகளைக் கொண்டுள்ளது.

❖ இந்தக் கட்டுரைகளானது இத்துறையின் நிபுணர்களால் எழுதப்பட்டது.

❖ V.V. கிரி தேசிய தொழிலாளர் நிறுவனமானது இப்புத்தகத்தினை வெளியிடுகிறது.



## ஃபார்ச்சூன் இந்தியா 2021 ஆம் ஆண்டு ஆண்டின் மிக அதிகாரம் வாய்ந்த 50 பெண்மணிகள் பட்டியல்

❖ இப்பட்டியலில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் முதல் இடத்தைப் பிடித்து உள்ளார்.

❖ இவரைத் தொடர்ந்து ரிலையன்ஸ் பவுண்டேசனின் தலைவர் மற்றும் நிறுவனரான நீதா அம்பானி இடம் பிடித்துள்ளார்.

- ஃபார்ச்சூன் இந்தியா அமைப்பினால் வெளியிடப்படும் இந்தப் பட்டியலானது, உலக சுகாதார அமைப்பின் தலைமை அறிவியலாளர் சௌமியா சுவாமிநாதன், மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கீதா கோபிநாத் ஆகியோரையும் உள்ளடக்கியது.
- இந்தப் பட்டியலில் இடம் பெற்ற பிற நபர்கள் டெசி தாமஸ், சுசித்ரா எல்லா, கிரண் மசூம்தார் சா, ரெட்டி சகோதரிகள் மற்றும் ஈசா அம்பானி ஆகியோராவர்.





## சர்வதேச தைரியமிக்க பெண்கள் விருது





- வங்காளதேச சுற்றுச்சூழல் வழக்கறிஞர் ரிஸ்வானா ஹசன், 2022 ஆம் ஆண்டிற்கான சர்வதேச தைரியமிக்க பெண்கள் (IWOC) விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அமெரிக்க வெளியுறவுத் துறையால் விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ள உலகின் 12 பெண்களில் இவரும் ஒருவராவார்.
- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும், ஒடுக்கப்பட்ட வங்கதேச மக்களின் கண்ணியம் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்குமான தனது பணியில் இவர் தனித்துவமான தைரியத்தையும் தலைமைத்துவத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

## அபினவ் சந்திரசூட் எழுதிய புத்தகம்




- ❖ சோலி சொராப்ஜியின் 92வது பிறந்தநாளின் போது, "Soli Sorabjee: Life and Times" என்ற தலைப்பிடப்பட்ட ஒரு புதிய சுயசரிதை புத்தகம் குறித்து அறிவிக்கப்பட்டது.
- ❖ இது வழக்கறிஞரும் சட்ட அறிஞருமான அபினவ் சந்திரசூட் என்பவரால் எழுதப்பட்டது.
- ❖ இந்தப் புத்தகம் சோலி சொராப்ஜியின் வாழ்க்கையின் தனிப்பட்ட விவரங்கள், அவரது குடும்பப் பின்னணி ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைக்கிறது.
- ❖ சோலி சொராப்ஜி இந்தியாவின் முன்னாள் அரசுத் தலைமை சட்ட அதிகாரியாக 1989-90 மற்றும் 1998-2004 ஆகிய காலக் கட்டங்களில் பணியாற்றினார்.

## Tomb of Sand புத்தகம்




- ❖ எழுத்தாளர் கீதாஞ்சலி ஸ்ரீ என்பவரின் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு இந்திப் புனைவுக் கதையான "Tomb of Sand" (மணல் கல்லறை) என்ற ஒரு புத்தகமானது சர்வதேசப் புக்கர் பரிசுக்காக பட்டியலிடப்பட்ட 13 புத்தகங்களில் ஒன்றாகும்.

- இந்த மதிப்புமிக்க இலக்கியப் பரிசின் நீண்டகாலப் பட்டியலில் இடம் பிடித்த முதல் இந்தி மொழிப் புனைவுக் கதை இதுவாகும்.
- இந்தப் புத்தகமானது, முதலில் 'ரெட் சமாதி' (Ret Samadhi) என்ற பெயரில் வெளியிடப் பட்டது.
- இது டெய்சி ராக்வெல் என்பவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

## பிரபா நரசிம்மன்





- பிரபா நரசிம்மன், கோல்கேட்-பால்மோலிவ் (இந்தியா) லிமிடெட் என்ற நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- இவர் ராம் ராகவன் என்பவரையடுத்து அந்தப் பதவியினை ஏற்றுள்ளார்.
- கோல்கேட்-பால்மோலிவ் (இந்தியா) நிறுவனமானது, 'கோல்கேட்' என்ற வர்த்தகப் பெயரில் வாய்க்கான ஆரோக்கியப் பராமரிப்புப் பொருட்களை விற்பனை செய்து வருகிறது.
- மேலும், இது 'பால்மோலிவ் என்ற ஒரு வர்த்தகப் பெயரின் கீழ் தனிமனிதப் பராமரிப்பு பொருட்களையும் விற்பனை செய்து வருகிறது.

## BAFTA விருதுகள் 2022

- BAFTA விருது எனப்படும் 75வது பிரிட்டிஷ் அகாடமி திரைப்பட விருது விழாவானது லண்டனில் உள்ள ராயல் ஆல்பர்ட் மன்றத்தில் நடத்தப் பட்டது.
- 2021 ஆம் ஆண்டின் சிறந்த தேசிய மற்றும் வெளிநாட்டுத் திரைப்படங்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.
- இந்த விழாவை ஒரு நடிகையும் நகைச்சுவை நடிகையுமான ரெபெல் வில்சன் என்பவர் தொகுத்து வழங்கினார்.
- இந்த விருதிற்கு அதிகபட்சமாகப் பரிந்துரைக்கப்பட்ட (11 பரிந்துரைகளுடன்) ஒரு திரைப்படம் டூன் (Dune) ஆகும்.
- 5 விருதுகளுடன், அதிகபட்ச விருதுகளைப் பெற்ற திரைப்படமாகவும் டூன் திரைப்படம் புகழ்பெற்றது.

| Category | Winners |
|---|---|
| Best Film | The Power of the Dog |
| Best Director | Jane Campion, The Power of the Dog |
| Best Actress in Leading Role | Joanna Scanlan, After Love |
| Best Actor in Leading Role | Will Smith, King Richard |
| Best Supporting Actress | Ariana DeBose, West Side Story |
| Best Supporting Actor | Troy Kotsur, CODA |
| EE Rising Star Award | Lashana Lynch |
| Outstanding British Film | Belfast |
| Outstanding Debut By A British Writer, Director, Or Producer | The Harder They Fall |
| Best Film Not In The English Language | Drive My Car |
| Best Documentary | Summer of Soul (Or, When The Revolution Could Not Be Televised) |
| Best Animated Film | Encanto |
| Best Short Animation | Do Not Feed the Pigeons, Vladimir Krasilnikov, Jordi Morera and Antonin Niclass |
| Best Short Film | The Black Cop, Cherish Oleka |
| Original Screenplay | Licorice Pizza, Paul Thomas Anderson |
| Adapted Screenplay | CODA, Sian Heder |
| Original Score | Dune, Hans Zimmer |
| Casting | West Side Story, Cindy Tolan |

## K அபய் எழுதிய புத்தகம்




- இந்தியத் தேசிய எழுத்துக் கழகமான சாகித்திய அகாடமி, இந்தியக் கவிஞர் மற்றும் ஒரு ராஜதந்திர அதிகாரியான அபய் K எழுதிய 'Monsoon' என்ற புத்தக அளவிலானக் கவிதையை வெளியிட்டுள்ளது.
- பருவக் காற்று (Monsoon) என்பது 4 வரிகள் உடைய மற்றும் 150 சரணங்கள் கொண்ட ஒரு கவிதையாகும்.
- சாகித்திய அகாடமியானது 1954 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.

- இதன் முத்திரையானது சத்யஜித் ரே அவர்களால் வடிவமைக்கப்பட்டது.
- பண்டித ஜவஹர்லால் நேரு இந்த அகாடமியின் முதல் தலைவர் ஆவார்.
- இந்த அகாடமி வெளியிட்ட முதல் புத்தகமானது 1956 ஆம் ஆண்டில் D.D. கோசாம்பி என்பவர் எழுதிய பகவான் புத்தர் என்பதாகும்.
- இது மராத்திய மொழியில் இருந்து இந்தி மொழியில் மொழிபெயர்க்கப் பட்டது.

## ரோசா போன்ஹூயர்

- பிரெஞ்சு ஓவியரான ரோசா போன்ஹூயரின் 200வது பிறந்தநாளை மார்ச் 16 ஆம் தேதியன்று அழகான இயக்கப்படக் கிறுக்கெழுத்தினை (animated Doodle) வெளியிட்டு கூகுள் நிறுவனம் கொண்டாடியது.
- ரோசா போன்ஹூயர் 1822 ஆம் ஆண்டில் பிரான்சில் உள்ள போர்டோவில் இந்த தினத்தில் பிறந்தார்.
- இவரது வெற்றிகரமான வாழ்க்கையானது கலைத்துறையில் எதிர்கால தலைமுறைச் சந்ததியினருக்கு உத்வேகம் அளித்தது.



## ஆண்டின் சிறந்த ஆசிய வங்கி




- இந்தியாவின் 3வது பெரிய தனியார் துறை வங்கியான ஆக்சிஸ் வங்கிக்கு சர்வதேச நிதி மதிப்பீடு ஆசிய அமைப்பின் ஆண்டின் சிறந்த ஆசிய வங்கி விருதானது வழங்கப் பட்டுள்ளது.


- ஆசிய முதலீட்டு வங்கிப் பிரிவில் இந்த வங்கி ஆற்றிய பரந்த அளவிலான பரவல் மற்றும் ஆழ்ந்த நிபுணத்துவத்திற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- இந்த விருதானது அனைத்து முக்கியத் தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளின் பங்கு மற்றும் கடன் வழங்கீடுகளில் வங்கிகள் ஆற்றும் சிறப்பான செயல்திறனை அங்கீகரிக்கிறது.
- இந்த வங்கியானது, இந்த ஆண்டில் நிதி ஆசிய அமைப்பின் தேசிய விருதுகளில் 'இந்தியாவிலுள்ள சிறந்த DCM மையம்' என்ற விருதினையும் வென்றுள்ளது.

## உலக அழகி 2021





- புயூரிட்டோ ரிக்கோ என்ற நாட்டின் சான் சுவான் பகுதியில் நடைபெற்ற 70வது அழகிப் போட்டியில் போலந்து நாட்டினைச் சேர்ந்த கரோலினா பியெலாவாஸ்கா 2021 ஆம் ஆண்டின் உலக அழகிப் பட்டத்தை வென்றார்.
- இப்போட்டியில் அமெரிக்காவின் ஸ்ரீசாய்னி மற்றும் கோட்டி டி ஐவரி நாட்டினைச் சேர்ந்த ஒலிவியா யாஷ் ஆகியோர் முறையே இரண்டாவது இடத்தைப் பிடித்த இருவர் ஆவர்.

## ராகுல் பஜாஜின் வாழ்க்கை வரலாறு



- பஜாஜ் குழுமத்தின் முன்னாள் தலைவரும் மறைந்த பிரபல தொழிலதிபருமான ராகுல் பஜாஜினுடைய முதலாவது அங்கீகாரம் பெற்ற சுயசரிதைப் புத்தகமானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- இது பெங்குயின் ராண்டம் ஹவுஸ் என்ற பதிப்பகத்தினால் வெளியிடப்படுகிறது.
- "Rahul Bajaj : An Extraordinary Life" எனத் தலைப்பிடப்பட்ட இப்புத்தகத்தினை புகழ்பெற்ற வர்த்தக வரலாற்றாசிரியரான கீதா பிரமல் எழுதியுள்ளார்.

## இந்தியாவை மாற்றியமைக்கும் பெண்மணிகள் விருது




- நிதி ஆயோக் அமைப்பின் மகளிர் தொழில் முனைவுத் தளமானது 2022 ஆம் ஆண்டு மார்ச் 21 அன்று '5வது இந்தியாவை மாற்றியமைக்கும் பெண்மணிகள் விருது' என்ற ஒரு விருது வழங்கும் விழாவினை ஏற்பாடு செய்தது.
- இந்த விருதுகளானது "சாசக்த் ஔர் சமர்த் பாரத்" என்பதற்கான ஒரு பங்களிப்பினை ஆற்றிய 75 பெண் சாதனையாளர்களுக்குக் கௌரவம் அளிக்கும் விதமாக வழங்கப் பட்டது.
- இது இந்தியாவின் பெண் தலைவர்கள் மற்றும் மாற்றத்தை உண்டாக்குபவர்களின் பாராட்டத் தக்க மற்றும் அற்புதமான முயற்சிகளை முன்னிலைப்படுத்துவதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.


## ஜெயதி கோஷ்



- ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமைச் செயலாளர் அன்டோனியா குட்டெரஸ், ஐக்கிய நாடுகளால் புதிதாக அமைக்கப்பட்ட பயன்மிகுப் பலதரப்பு ஆலோசனை வாரியத்தின் ஒரு உறுப்பினராக இந்திய மேம்பாட்டுப் பொருளாதார வல்லுநர் ஜெயதி கோஷ் என்பவரை நியமிப்பதாக அறிவித்துள்ளார்.
- ஜெயதி கோஷ் அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் ஆம்ஹெர்ஸ்ட் என்ற பல்கலைக் கழகத்தின் ஒரு பேராசிரியர் ஆவார்.

## G.R. விஷ்வநாத் எழுதிய புத்தகம்

- இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவரான குண்டப்பா ரங்கநாத விஷ்வநாத் "Wrist Assumed : An Autobiography" என்ற பெயரில் தனது சுயசரிதையை எழுதியுள்ளார்.
- இதனை மூத்தப் பத்திரிக்கையாளர் R. கௌசிக் அவருடன் இணைந்து எழுதியுள்ளார்.
- 1969 மற்றும் 1986 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்திய அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் 91 முறை விளையாடி 6000க்கும் மேல் ரன்கள் குவித்த குண்டப்பா விஷ்வநாத்தின் கிரிக்கெட் பயணத்தை இப்புத்தகம் விவரிக்கிறது.




## ஆஷ்லே பார்டி




- உலகின் முன்னணி டென்னிஸ் வீராங்கனையான ஆஸ்திரேலிய நாட்டின் ஆஷ்லே பார்டி தமது 25 வயதிலேயே ஓய்வு பெற உள்ளதாக அறிவித்துள்ளார்.


- இவர் 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற பிரஞ்சு ஓபன் போட்டி, 2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற விம்பிள்டன் போட்டி, 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் போட்டி ஆகிய 3 கிராண்ட் ஸ்லாம் ஒற்றையர் பிரிவுப் பட்டத்தினை வென்றுள்ளார்.
- டென்னிஸ் தவிர, 2014-16 ஆகிய ஆண்டுகளில் டென்னிஸ் போட்டியிலிருந்து ஒரு இடைவெளியினை மேற்கொண்ட போது பகுதியளவுத் தொழில்முறை கிரிக்கெட் போட்டிகளிலும் இவர் விளையாடியுள்ளார்.

## ஏபெல் பரிசு 2022

- ஓர் அமெரிக்கக் கணிதவியலாளரான டென்னிஸ் பார்னல் சுல்லீவன் 2022 ஆம் ஆண்டிற்கான ஏபெல் பரிசினை வென்றுள்ளார்.
- கட்டமைப்பியல் (topology), குறிப்பாக அதன் வடிவியல், இயற்கணிதம் மற்றும் இயக்கவியல் அம்சங்களில் அவர் ஆற்றியப் பங்களிப்புகளுக்காக வேண்டி இந்த விருதானது இவருக்கு வழங்கப்பட்டது.




## ரிச்சா மிஷ்ரா எழுதிய புத்தகம்




- ரிச்சா மிஸ்ரா எழுதிய "Unfilled Barrels: India's oil story" என்ற ஒரு புத்தகம் விரைவில் வெளியிடப்பட உள்ளது.

- ரிச்சா மிஸ்ரா தி இந்து பிசினஸ் லைன் என்ற பத்திரிகை நிறுவனத்தில் பணி புரியும் ஒரு பத்திரிகையாளர் ஆவார்
- 1970களில் எண்ணெய் தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்ற, பெட்ரோலிய அமைச்சராக இருந்த கேசவ் தேவ் மாளவியா ஆற்றிய ஒரு முக்கிய பங்கினைப் பற்றி இந்தப் புத்தகம் எடுத்துரைக்கிறது.
- ONGC உள்ளிட்ட பொதுத் துறை நிறுவனங்களில் இருந்து கடுமையான போட்டியினை ஏற்படுத்திய பிற தனியார் நிறுவனங்களான கெய்ர்ன் எனர்ஜி மற்றும் முகேஷ் அம்பானியின் RIL போன்ற இதர பிற பங்குதாரர் நிறுவனங்களின் தோற்றம் குறித்தும் இந்தப் புத்தகம் எடுத்துரைக்கிறது.

## தேவேந்திர ஜஜாரியா


- தேவேந்திர ஜஜாரியா பத்ம பூஷன் விருதைப் பெற்ற முதல் பாரா (மாற்றுத் திறனாளி) தடகள வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.
- இவர் 2004 ஆம் ஆண்டில் ஏதென்ஸ் நகரில் நடந்த போட்டி மற்றும் 2016 ஆம் ஆண்டு ரியோ நகரில் நடந்த போட்டி போன்றவைகளில் பெற்ற தங்கப் பதக்கம் மற்றும் 2020 ஆம் ஆண்டு டோக்கியோ நகரில் நடந்த போட்டியில் வெள்ளிப் பதக்கம் உட்பட பல பாராலிம்பிக் (மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக்) பதக்கங்களை வென்றுள்ளார்.
- அவனி லேகாரா (மாற்றுத் திறனாளி துப்பாக்கிச் சுடும் வீரர்) இந்த விளையாட்டுப் பிரிவில் பத்மஸ்ரீ விருதைப் பெற்ற மற்றொரு வீரராவார்.
- ஒரே விளையாட்டுப் போட்டியில் இரண்டு பாராலிம்பிக் பதக்கங்களை வென்ற முதல் இந்தியப் பெண்மணியும், பாராலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்தியப் பெண்மணியும் இவரே ஆவார்.




## "The Little Book of Joy" புத்தகம்

- 'The little Book of Joy" என்ற தலைப்பிடப்பட்ட ஒரு புத்தகமானது 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் வெளியிடப் பட உள்ளது.
- படங்களைக் கொண்ட இப்புத்தகத்தினை நோபல் பரிசு பெற்றவர்களான 14வது தலாய் லாமா (டென்சின் கியான்ட்சோ) மற்றும் பேராயர் டெஸ்மான்ட் டுட்டு ஆகியோர் இணைந்து எழுதியுள்ளனர்.

- ரஃபேல் லோபேஷ் மற்றும் ரேச்செல் நியூமேன் மற்றும் டௌக்லாஸ் ஆப்ராம்ஸ் ஆகியோர் வழங்கிய விளக்கப் படங்களும் இதில் இடம் பெற்றுள்ளன.
- இப்புத்தகமானது உண்மையான மகிழ்ச்சியானது உலகில் பொருளியலில் இல்லை, ஆனால் மனிதனின் இயல்பில் உள்ளது என்ற பொருளினைப் பற்றி எடுத்துரைக்கிறது.
- 2016 ஆம் ஆண்டில் "The Book of Joy: Lasting Happiness in a Changing World" என்ற ஒரு புத்தகத்தினையும் இவர்கள் இணைந்து எழுதியுள்ளனர்.




## ஸ்டீபன் வில்ஹைட்



- ஸ்டீபன் வில்ஹைட் கோவிட் – 19 தொடர்பான உடல்நலக் குறைவுக் காரணமாக தனது 74வது வயதில் காலமானார்.
- இவர் இயங்குபட உள்பரிமாற்ற வடிவத்தினை (Graphics Interchange Format - GIF) உருவாக்கியவர் ஆவார்.
- இவர் கம்பியூசெர்வ் எனும் நிறுவனத்தில் பணி புரியும் போது 1987 ஆம் ஆண்டில் இந்த வடிவத்தினை உருவாக்கினார்.
- ஆக்ஸ்போர்டு அமெரிக்க அகராதியானது GIF என்பதை 2012 ஆம் ஆண்டிற்கான வார்த்தையாக அறிவித்தது.
- இவர் 2013 ஆம் ஆண்டில் வெபி வாழ்நாள் சாதனையாளர் என்ற ஒரு விருது வழங்கப் பட்டுக் கௌரவிக்கப் பட்டார்.

## மேடெலின் ஆல்பிரைட்




- அமெரிக்காவின் முதல் பெண் அரசுத் துறைச் செயலர் மேடெலின் ஆல்பிரைட் தனது 84வது வயதில் காலமானார்.
- இவர் 1948 ஆம் ஆண்டில் ஓர் அகதியாக தனது குடும்பத்துடன் அமெரிக்கா வந்தார்.
- இவர் 1957 ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடிமகள் ஆனார்.
- இவர் கிளிண்டன் என்ற குடியரசுத் தலைவரின் கீழ் 1997 முதல் 2001 வரையில் பணி ஆற்றினார்

## ஸ்டாக்ஹோம் தண்ணீர் பரிசு 2022




- பேராசிரியர் வில்ஃப்ரைடு புரூட்சேர்ட் என்பவருக்கு ஸ்டாக்ஹோம் சர்வதேச தண்ணீர் வள நிறுவனத்தினால் 2022 ஆம் ஆண்டிற்கான ஸ்டாக்ஹோம் தண்ணீர் பரிசானது வழங்கப் பட்டுள்ளது.
- நமது கோளின் மீதான பருவநிலை மாற்றத்தின் விளைவுகளைப் புரிந்து கொள்வது குறித்து அவர் ஆற்றிய ஒரு முக்கியப் பங்களிப்பிற்காக வேண்டி இந்த விருதானது வழங்கப் படுகிறது.
- இவர் நியூயார்க் நகரிலுள்ள கார்னெல் பல்கலைக்கழகத்தில் கட்டிடத் துறை மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் துறையில் ஓய்வு பெற்ற ஒரு பேராசிரியர் ஆவார்.
- நிலத்தடி நீர்ச் சேமிப்பில் உள்ள மாற்றங்களைப் புரிந்து கொள்வதில் அவரின் முன்னோடியான ஒரு அணுகுமுறையினைப் பாராட்டி இந்தப் பரிசானது வழங்கப் பட்டு உள்ளது.

## கோவிட் சாம்பியன் விருது

- 2022 ஆம் ஆண்டு விங்ஸ் இந்தியா விருது விழாவில், கொச்சின் சர்வதேச விமான நிலையத்திற்கு கோவிட் சாம்பியன் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- பெருந்தொற்று காலத்தில் கொச்சி விமான நிலையத்தில் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதற்காக "பாதுகாத்தல் திட்டம்" என்ற ஒரு திட்டத்தை வெற்றிகரமாக அமல்படுத்தியதற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- பெங்களூருவிலுள்ள கெம்பகௌடா சர்வதேச விமான நிலையமானது பொதுப் பிரிவில் "சிறந்த விமான நிலையம்" என்ற விருதினையும் "வான்வழிப் போக்குவரத்தில் புத்தாக்கம்" விருதினையும் வென்றுள்ளது.
- மும்பையின் சத்ரபதி சிவாஜி மகராஜ் சர்வதேச விமான நிலையமானது தனது திறன் மிக்க பசுமை நடவடிக்கைகளுக்காக வேண்டி "வான்வழிப் போக்குவரத்து நிலைத் தன்மை மற்றும் சுற்றுச்சூழல் விருதினை" வென்றது.
- விங்ஸ் இந்தியா என்பது வணிகம், பொதுப் பயணம் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றை உள்ளடக்கிய வான்வழிப் போக்குவரத்து குறித்த ஆசியாவின் மிகப்பெரிய ஒரு நிகழ்ச்சியாகும்.




## 94வது அகாடமி (ஆஸ்கார்) விருதுகள்

- ரெஜினா ஹால், எமி ஸ்கூமர் மற்றும் வான்டா சைக்ஸ் ஆகியோர் இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர்.
- 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற 83வது விருது விழாவில் அனி ஹாத்வே மற்றும் ஜேம்ஸ் பிரான்கோ ஆகியோர் இணைந்து தொகுத்து வழங்கிய பிறகு, பல தொகுப்பாளர்கள் இந்த விருது வழங்கும் விழாவைத் தொகுத்து வழங்குவது இதுவே முதல்முறையாகும்.
- இதில் நெட்ஃபிளிக்ஸ் நிறுவனத்தின் "The power of Dog" என்ற திரைப்படம் 12 பரிந்துரைகளுடன் முன்னணியிலுள்ளது.
- இதனைத் தொடர்ந்து, அறிவியல் சார்ந்த புனைக்கதையான Dune எனும் திரைப்படம் உள்ளது.
- இந்திய ஆவணப்படமான "Writing with Fire" என்ற படமும் சிறந்த ஆவணப்படம் என்ற பிரிவில் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

**Check out the full list of winners**

- Best Actor in a Leading Role: **Will Smith**, "King Richard"
- Best Actress in a Leading Role: **Jessica Chastain** (The Eyes of Tammy Faye)
- Best Picture: **CODA**
- Best International Feature Film: **Drive My Car**
- Documentary Short Subject: The Queen of Basketball
- Best Directing: **Jane Campion** (The Power of the Dog)
- Best Actress in a Supporting Role: Ariana DeBose (West Side Story)'
- Best Actor in a Supporting Role: Troy Kotsur (CODA)
- Best Makeup & Hairstyling: The Eyes of Tammy Faye
- Best Cinematography: Dune
- Best Original Score: Hans Zimmer (Dune)
- Best Visual Effects: Dune
- Best Animated Feature Film: Encanto
- Best Animated Short Film: The Windshield Wiper
- Best Costume Design: Cruella
- Best Original Screenplay: Kenneth Branagh (Belfast)
- Best Adapted Screenplay: Sian Heder (Coda)
- Best Live Action Short Film: The Long Goodbye
- Best Sound: Dune
- Best Documentary Feature: "Summer of Soul (...Or, When the Revolution Could Not Be Televised)"
- Best Original Song: "No Time To Die" from "No Time to Die," music and lyric by Billie Eilish and Finneas O'Connell
- Best Production Design: Dune
- Best Film Editing: Dune

## TIME100 தாக்கம் (இம்பாக்ட்) விருதுகள் 2022



- ❖ பாலிவுட் நடிகை தீபிகா படுகோனுக்கு 2022 ஆம் ஆண்டின் TIME100 இம்பாக்ட் விருது வழங்கப்பட்டுள்ளது.
- ❖ இவரது லிவ்லவ்லாஃப் என்ற அறக்கட்டளையின் (LiveLoveLaugh Foundation) மூலம் மன நலப் போராட்டங்கள் குறித்த ஒரு விழிப்புணர்வைப் பரப்புவதில் இவர் ஆற்றியப் பணிக்காக இவர் இந்த விருதுப் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.
- ❖ தனது தொழில்துறைக்கு அப்பால் செயல்பட்டு உலகை முன்னோக்கி வழிநடத்துவதில் பணியாற்றும் உலகத் தலைவர்களை இந்த விருது அங்கீகரிக்கிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## அதிவேக அரைசதம் - ஒரு நாள் போட்டி

- மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ரிச்சா கோஷ் மகளிருக்கான ஒரு நாள் போட்டியில் அதி வேக அரைசதத்தினை அடித்த ஒரு இந்தியக் கிரிக்கெட் வீராங்கனை என்ற ஒரு பெருமையைப் பெற்றார்.
- நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் இவர் இந்தச் சாதனையைப் படைத்தார்.
- ஆனால் நியூசிலாந்து அணியே போட்டியில் வெற்றி வெற்றது.




## சர்வதேச சிங்கப்பூர் பளுதூக்குதல் போட்டி – 2022

- 2022 ஆம் ஆண்டு சர்வதேச சிங்கப்பூர் பளுதூக்குதல் போட்டியில் 6 தங்கம், ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலம் உட்பட 8 பதக்கங்களைச் சேர்த்து இந்தியா தனது பங்கேற்பினை முடித்துக் கொண்டது.
- சர்வதேச சிங்கப்பூர் போட்டிக்குப் பதிவு செய்த எட்டு இந்திய பளுதூக்கும் வீரர்களும் 2022 ஆம் ஆண்டு பர்மிங்காம் காமன் வெல்த் போட்டிகளில் பங்கு பெறுவதற்கான ஒரு வாய்ப்பினைப் பெற்றனர்.
- 2022 ஆம் ஆண்டு பர்மிங்காமில் நடைபெறவுள்ள காமன்வெல்த் போட்டிகளுக்கு இந்தியா சார்பாக பங்கேற்க மொத்தம் 12 பளுதூக்கும் வீரர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

## பனித்தள ஹாக்கி சாம்பியன்சிப் போட்டி 2022

- 15வது CEC கோப்பை ஆடவர் பனித்தள ஹாக்கி சாம்பியன்சிப் போட்டியானது (2022), லே நகரிலுள்ள NDS விளையாட்டு வளாகத்தில் அமைந்த பனித்தள ஹாக்கி அரங்கில் இந்திய-திபெத்திய எல்லைக் காவற்படை அணிக்கும் லடாக் சாரணர் அணிக்கும் இடையே நடைபெற்றது.
- இதில் லடாக் சாரணர் அணியானது சாம்பியன்சிப் பட்டத்தை வென்றது.

## மாற்றுத் திறனாளிகளுக்கான உலக வில்வித்தை சாம்பியன்சிப் போட்டி



- ஐக்கிய மரபு அமீரகத்தின் துபாய் நகரில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான உலக வில்வித்தை சாம்பியன்சிப் போட்டியின் தனிநபர் பிரிவில் வெள்ளி வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை பூஜா ஜத்யன் பெற்றுள்ளார்.
- இவர் இறுதிப் போட்டியில் இத்தாலியின் பத்ரில்லி வின்சென்ஷாவிடம் (Patrilli Vincenza) தோல்வியுற்றார்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான உலக வில்வித்தை சாம்பியன்சிப் போட்டியில் முதல் முறையாக இந்தியா 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.
- சியாம் சுந்தர் சுவாமி மற்றும் ஜோதி பாலியன் ஆகியோர் அடங்கிய கலப்பு இணை அணியினர் ஒரு வெள்ளிப் பதக்கத்தினை வென்று இந்தியாவின் பதக்கப் பட்டியலை மேலும் வலிமைப் படுத்தி உள்ளனர்.

## புரோ கபடி லீக்




- கர்நாடகாவின் பெங்களூரு நகரில் நடைபெற்ற 8வது புரோ கபடி லீக் போட்டியின் இறுதிப் போட்டியில் தபாங் டெல்லி KC அணி பாட்னா பைரேட்ஸ் என்ற அணியை வீழ்த்தியது.
- தபாங் டெல்லி அணியானது 3முறை சாம்பியன் பட்டம் வென்ற பாட்னா பைரேட்ஸ் அணியை வீழ்த்தியது.
- பவன் செஹ்ராவாத் என்பவருக்கு இத்தொடரின் ரைடர் நாயகன் என்ற ஒரு பட்டம் வழங்கப் பட்டது.

## ISSF உலகக் கோப்பை



- தற்போது எகிப்து நாட்டின் கெய்ரோ என்னுமிடத்தில் நடைபெற்று வரும் 2022 ஆம் ஆண்டின் சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் போட்டிக் கூட்டமைப்பின் உலகக் கோப்பைப் போட்டியின் ஆடவருக்கான 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியத் துப்பாக்கிச் சுடும் வீரர் சௌரப் சௌத்ரி தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- மகளிருக்கான 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் ஈஷா சிங் கிரீஸ் நாட்டின் அனா கோரகாகியிடம் தோல்வியுற்று வெள்ளிப்பதக்கத்தினை வென்றார்.

## ஸ்ட்ராண்ட்ஜா நினைவு குத்துச்சண்டைப் போட்டி




- பல்கேரியாவின் சோஃபியா நகரில் நடைபெற்ற 73வது ஸ்ட்ராண்ட்ஜா நினைவு குத்துச் சண்டை போட்டியில் இந்தியக் குத்துச்சண்டை வீராங்கனைகளான நிகாத் சரீன் (52 கிகி) மற்றும் நீது (48 கி.கி) ஆகியோர் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- 81 கி.கி. எடைப்பிரிவில் நந்தினி என்பவர் வெண்கலப் பதக்கத்தினை வென்றார்.
- இந்த 3 பதக்கங்களுடன் இந்திய வீரர்கள் தங்களது பங்கேற்பினை நிறைவு செய்தனர்.

## ICC மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பை – 2022

- இது 12வது ICC மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டியாகும்.
- இது நியூசிலாந்து நாட்டில் நடத்தப் பட்டு வருகிறது.
- இந்தப் போட்டியின் தொடக்க ஆட்டமானது மௌன்கனுயி (Mount Maunganui) என்ற மலையிலுள்ள பே ஓவல் மைதானத்தில் நடைபெற்றது.
- இதன் இறுதிப் போட்டியானது ஹேக்லி ஓவல் மைதானத்தில் நடைபெற உள்ளது.

- நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, இந்தியா, வங்காள தேசம், பாகிஸ்தான் மற்றும் மேற்கு இந்திய அணிகள் உள்ளிட்ட 8 அணிகள் இதில் பங்கேற்கின்றன.

ICC WOMEN'S
CRICKET WORLD CUP
NEW ZEALAND 2022

## இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் பொது மேலாளர்



- இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் பொது மேலாளராக கேரளாவின் அபய் குருவில்லா பொறுப்பேற்க உள்ளார்.
- இவர் 1990களின் மத்தியில் இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளராகத் திகழ்ந்தவர் ஆவார்.
- இவர் 2000 ஆம் ஆண்டில் அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெற்று பயிற்சிப் பணியை மேற்கொண்டார்.

## ரவிச்சந்திரன் அஷ்வின்

- ரவிச்சந்திரன் அஷ்வின் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 435வது விக்கெட்டினை தனது 85வது டெஸ்ட் போட்டியில் வீழ்த்தியதன் மூலம் அனில் கும்ப்ளேவினையடுத்து அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய 2வது இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்று உள்ளார்.
- சண்டிகரின் மொஹாலி எனுமிடத்திலுள்ள PCA கிரிக்கெட் அரங்கில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இலங்கை கிரிக்கெட் வீரர் பதும் நிசாங்கா என்பவரை வீழ்த்தியதன் மூலம் அஷ்வின் இந்தச் சாதனையைப் படைத்தார்.

- தற்போது இவர் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய ஒன்பதாவது வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.




## மிதாலி ராஜ்





- இந்திய மகளிர் கிரிக்கெட் அணித் தலைவர் மிதாலி ராஜ் 6 உலகக் கோப்பைப் போட்டிகளில் பங்கேற்ற முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- சச்சின் டெண்டுல்கர் மற்றும் ஜாவேத் மியான்தத் ஆகியோருக்குப் பிறகு ஆறு உலகக் கோப்பைப் போட்டிகளில் விளையாடிய மூன்றாவது கிரிக்கெட் வீரர் இவரே ஆவார்.
- இவர் 2000, 2005, 2009, 2013, 2017 ஆகிய ஆண்டுகளிலும் தற்போது 2022 ஆம் ஆண்டு ஐசிசி மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டியிலும் விளையாடியுள்ளார்.
- 2022 ஆம் ஆண்டிற்கான ஐசிசி மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டியானது நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது.

## ரவீந்திர ஜடேஜா

- இந்தியாவைச் சேர்ந்த ரவீந்திர ஜடேஜா ICC கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் ஆல் ரவுண்டர்களுக்கான தரவரிசையில் முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.
- மொஹாலியில் நடைபெற்றத் தொடக்க டெஸ்ட் போட்டியில் இலங்கைக்கு எதிரான போட்டியில் பெற்ற வெற்றியின் மூலம் இவர் இந்த மதிப்பைப் பெற்றார்.

- இவர் ஆட்டமிழக்காமல் 175 ரன்கள் குவித்ததன் மூலம் 54வது இடத்தில் இருந்த நிலையில் இருந்து 17 இடங்கள் முன்னேறி 37வது இடத்திற்கு முன்னேறினார்.
- இந்தப் போட்டியில் இவர் 9 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.



2 Times **Ravindra Jadeja** has taken 25 wickets or more in a Test series: 26 at 25.84 in the five-Test series against England in India in 2016-17 and 25 at 18.56 in the four-Test series against Australia in 2016-17.

1 **Jadeja** is the only allrounder to have scored 750-plus runs and taken 40 wickets or more in the World Test Championships between 2019 and 2022, his tally being 885 runs at 46.57 and 49 wickets at 26.61 in 17 matches.

1 Just one allrounder has a higher batting average and has taken more wickets at a lower average in a 30-Test span than **Ravindra Jadeja**, who has 1436 runs at 49.51 and 112 wkts at 25.24 from his last 30 Tests. Imran Khan scored 1585 runs (ave 52.83) and claimed 114 wickets at 23.37 in 30 consecutive Tests.

## மிதாலி ராஜ் தலைமைத்துவம்




- ஐசிசி மகளிர் உலகக் கோப்பையில் அதிகப் போட்டிகளுக்கு ஒரு அணித் தலைவராக இருந்து இந்திய அணித் தலைவர் மிதாலி ராஜ் சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.
- இவர் முன்னாள் ஆஸ்திரேலிய சக வீரர் பெலிண்டா கிளார்க்கின் சாதனையை முந்தி உள்ளார்.
- மிதாலி 24 உலகக் கோப்பைப் போட்டிகளில் இந்திய நாட்டின் சார்பாக பங்கு பெற்றார்.

## S. L. நாராயணன்

- இத்தாலியில் நடைபெற்ற கிராண்டிஸ்காச்சி கேட்டோலிகா என்ற சர்வதேச ஓபன் செஸ் (சதுரங்கம்) போட்டியில் எஸ்.எல்.நாராயணன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப் பட்டது.
- அதே சமயம் இதில் சகநாட்டவரான R. பிரக்ஞானந்தா இரண்டாவது இடத்தைப் பிடித்து உள்ளார்.
- திருவனந்தபுரத்தைச் சேர்ந்த 24 வயதான S.L.நாராயணன் 2015 ஆம் ஆண்டில் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தைப் பெற்றார்.

- இவர் இந்தியாவின் 41வது கிராண்ட்மாஸ்டர் ஆவார்.



## ஜெர்மன் ஓபன் சூப்பர் 30



- இந்திய ஷட்டில் (பூப்பந்தாட்ட வீரர்) வீரர் லக்சயா சென், ஜெர்மன் ஓபன் சூப்பர் 300 போட்யின் உலக முன்னணி ஆட்டக்காரர் விக்டர் அக்செல்செனை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தேர்வாகியுள்ளார்.
- இது வெஸ்டெனெர்ஜி ஸ்போட்ஹால்லே எனுமிடத்தில் நடைபெற்றது.
- இது விக்டர் அக்செல்சென்னுக்கு எதிராக லக்சயா சென் பெற்ற முதல் வெற்றியாகும்.
- இந்த இரு போட்டியாளர்களும் இதுவரை 5 முறை எதிர்த்துப் போட்டியிட்டுள்ளனர்.

## டியூப்ளான்டிஸ் உலகச் சாதனை



- ஸ்வீடனின் ஒலிம்பிக் போல் வால்ட் சாம்பியன் ஆன அர்மாண்ட் குஸ்தவ் "மான்டோ" டியூப்ளான்டிஸ் 6.19 மீட்டர் உயரம் தாண்டி தனது உலகச் சாதனையை ஒரு சென்டி மீட்டர் வித்தியாசத்தில் முறியடித்தார்.
- இது பெல்கிரேடில் நடைபெற்ற உலக உள்ளரங்கப் போட்டியின் ஒரு வெள்ளி விழாச் சந்திப்பில் நடத்தப்பட்டது.
- டியூப்ளான்டிஸ், கிளாஸ்கோவில் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற உள்ளரங்கப் போட்டிகளில் 6.18 உயரம் தாண்டி ஒரு சாதனையைப் படைத்தார்.

## ISSF உலகக் கோப்பை 2022

- கெய்ரோவில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டிற்கான ISSF உலகப் கோப்பைப் போட்டியின் பதக்க வரிசையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- இது சர்வதேசத் துப்பாக்கிச் சுடுதல் கூட்டமைப்பினால் நடத்தப்பட்டது.
- 4 தங்கம், 2 வெள்ளி, மற்றும் 1 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தம் 7 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் இந்திய அணி முதலிடத்தைப் பெற்ற நிலையில் இதில் நார்வே 2வது இடத்தைப் பெற்றுள்ளது.




## ஜூலன் கோஷ்வாமி




- இந்தியாவின் ஜூலன் கோஷ்வாமி, மகளிர் ஒரு நாள் போட்டியில் 250 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய ஒரு வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.

- ICC மகளிர் உலகக் கோப்பைப் போட்டியில் (2022) இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் டாமி பியூமாண்ட் என்பவரை வீழ்த்தியதன் மூலம் இவர் இந்தச் சாதனையைப் படைத்தார்.
- இவர் ஒரு வலதுகை வேகப் பந்து வீச்சாளர் ஆவார்.

## ரிசப் பந்த் - அதிவேக 50




- டெஸ்ட் போட்டியில் அதிவேக 50 ரன்கள் எடுத்த இந்திய வீரர் என்ற பெருமையை ரிசப் பந்த் பெற்றுள்ளார்.
- பெங்களூருவின் M.சின்னசாமி அரங்கில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இவர் கபில்தேவ் எடுத்த சாதனையை முறியடித்தார்.
- ரிசப் பந்த் 28 பந்துகளின் மூலம் இந்த 50 ரன்களை எடுத்தார்.
- இது உலகின் 13வது அதிவேக அரை சதமாகும்.

## R. அஷ்வின் - டெஸ்ட் போட்டிகளில் எடுத்த விக்கெட்டுகள்




- பெங்களூரு நகரில் இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்ற பிங்க் – பந்து டெஸ்ட் போட்டியில் R. அஷ்வின் தனது 440வது டெஸ்ட் போட்டி விக்கெட்டினை வீழ்த்தினார்.

- அஷ்வின் தனது 440வது டெஸ்ட் விக்கெட்டாக தனஞ்செய டி சில்வா என்பவரை வீழ்த்தினார்.
- ரெட் – பால் கிரிக்கெட் போட்டிகளின் வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய 8வது வீரராக அஷ்வின் மாறியுள்ளார்.
- 439 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய தென் ஆப்பிரிக்க வேகப் பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயின் என்பவரை இவர் விஞ்சினார்.

## ஆசியப் பில்லியர்ட்ஸ் பட்டம்

- 19வது ஆசிய 100 யுபி பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் (2022) என்ற போட்டியில் இந்தியக் கியூயிஸ்ட் வீரர் (cueist - மேடைக் கோற்பந்தாட்ட வீரர்) பங்கஜ் அத்வானி, துருவ் சித்வாலாவை வீழ்த்தி தனது எட்டாவது பட்டத்தை வென்றுள்ளார்.
- கத்தாரின் தோஹா நகரில் இந்தப் போட்டி நடத்தப் பட்டது.
- ஒட்டு மொத்தமாக இது அத்வானியின் 24வது சர்வதேச அளவிலான பட்டம் மற்றும் 8வது ஆசிய அளவிலான பட்டம் ஆகும்.



## சிறந்த விளையாட்டு வீரர் விருது




- 2022 ஆம் ஆண்டு மாலத்தீவு விளையாட்டு விருது வழங்கும் விழாவில் இந்தியாவில் முன்னாள் கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னாவிற்கு மதிப்பு மிக்க சிறந்த விளையாட்டு வீரர் விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- அவரது விளையாட்டுத் தொழில் வாழ்க்கை முழுவதும் அவர் ஆற்றியப் பல்வேறு சாதனைகளுக்காக வேண்டி இந்த விருதினை மாலத்தீவு அரசு இவருக்கு வழங்கி உள்ளது.

## ஸ்போர்ட் ஸ்டார் ஏசஸ் 2022

**Lovlina Borgohain** (Sportswoman of the Year, Individual Sports),

**Avani Lekhara** (Parathlete of the Year, Female),

**Pramod Bhagat** (Special Recognition award),

**Savita** (Sportswoman of the Year, Team Sports), and **Rupinder Pal Singh** (Sportsman of the Year, Team Sports).

**Arif Khan** wins Special Recognition Award at Sportstar Aces 2022.

Former Indian hockey team captain **Ajit Pal Singh** was conferred the 'Lifetime Achievement award.

Ajit was part of two Olympic bronze-winning teams, including one at the 1972 Munich Games.

- 2022 ஆம் ஆண்டு ஸ்போர்ட் ஸ்டார் ஏசஸ் விருது வழங்கும் விழாவில், டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற நீரஜ் சோப்ரா ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் (ஆண்) என்ற விருதினைப் பெற்றார்.
- டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் வெள்ளி வென்ற பளுதூக்கும் வீராங்கனை மீராபாய் சானு "ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் (பெண்)" என்ற விருதினைப் பெற்றார்.
- ஏசஸ் விருதுகளானது, விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குவோரைக் கொண்டாடுவதோடு, புதிய சாதனைகளைப் படைக்கவும் புகழின் புதிய உச்சங்களைத் தொட்டிடவும் தொடர்ந்து முயற்சிக்குமாறு நமது தடக ளவீரர்களையும் விளையாட்டு வீரர்களையும் ஊக்கமளிக்கின்றது.
- இது இந்துப் பத்திரிக்கைக் குழுமத்தினைச் சேர்ந்த ஸ்போர்ட் ஸ்டார் என்ற ஒரு பத்திரிக்கையால் வழங்கப் படுகின்றது

## Road to 1000 புத்தகம்





- ஸ்போர்ட் ஸ்டார் மற்றும் இந்துக் குழுமம் ஆகியவை இணைந்து "Road to 1000" என்ற ஒரு பெரியப் புத்தகத்தினை வெளியிட்டன.
- இது தாஜ் மஹால் பேலஸ் என்ற விடுதியில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு ஸ்போர்ட் ஸ்டார் ஏசஸ் விருது வழங்கும் விழாவில் வெளியிடப்பட்டது.
- இது இந்தியக் கிரிக்கெட் விளையாட்டின் பயணத்தை நினைவு கூறக் கூடிய 1000 படங்களுடன் கூடிய மற்றும் 520 பக்கங்களை கொண்ட ஒரு சிறப்புத் தொகுப்பாகும்.

## மாற்றுத் திறனாளிகளுக்கான உலக கிராண்ட் பிரிக்ஸ் போட்டி




- இப்போட்டியானது துபாய் நகரில் நடத்தப் பட்டு வருகிறது.
- 43 நாடுகளைச் சேர்ந்த 450 விளையாட்டு வீரர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்கச் செய்கின்றனர்.
- இந்தப் போட்டியில் பங்கேற்கும் தடகள வீரர்கள் ஹாங்சூவோ 2022 ஆசிய பாரா போட்டிகள் மற்றும் பர்மிங்காம் 2022 காமன்வெல்த் போட்டிகள் ஆகியவற்றிற்குத் தேர்வாகச் செய்வதை ஒரு இலக்காகக் கொண்டுப் பங்கேற்பர்.
- இந்தப் போட்டியில் பாரா ஒலிம்பிக் வீரர் தாராம்பிர் தலைமையில் 29 வீரர்கள் கொண்ட இந்திய அணியானது பங்கேற்க உள்ளது.
- தாராம்பிர் ஆடவருக்கான மரத்துண்டு (கிளப்) எறிதல் மற்றும் வட்டு எறிதல் F51 ஆகிய போட்டிகளில் பங்கேற்பார்.

## FIFA உலகக் கோப்பை மற்றும் BYJU's நிறுவனம்




- கல்வித் தொழில்நுட்ப நிறுவனமான BYJU'S இந்த ஆண்டு கத்தாரில் நடைபெறும் FIFA உலகக் கோப்பைப் போட்டியில் ஆதரவு வழங்குவதற்காகக் கூட்டு சேர்ந்த முதல் இந்திய நிறுவனம் என்ற ஒரு வரலாற்றினைப் படைத்துள்ளது.
- அதிக மக்கள்தொகை கொண்ட துணைக் கண்டத்தில் அதிகப் பங்கேற்பாளர்கள் மற்றும் அதிக ரசிகர்களைச் சென்றடைய FIFAவின் ஒரு பெரிய படியாகவும் மற்றும் ஒரு நேர்மறையான சமூக மாற்றத்தைச் செயல்படுத்த இரு நிறுவனங்களும் இணைந்து செயல்படுவதற்கான ஒரு படியாகவும் இந்த நடவடிக்கை புலப்படுகிறது.

## ஐபிஎல் போட்டி 2022




- 2022 ஆம் ஆண்டிற்கான ஐபிஎல் போட்டிகள் தொடங்குவதற்கு முன்னதாக, M.S. தோனி தான் வகித்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் பொறுப்பை ஆல்ரவுண்டர் வீரரான ரவீந்திர ஜடேஜாவிடம் ஒப்படைத்துள்ளார்.
- தோனியின் தலைமையின் கீழ், 2021, 2018, 2011 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நான்கு முறை ஐபிஎல் கோப்பையை வென்றது.
- சென்னை சூப்பர் கிங்ஸ் அணியானது இரண்டு சாம்பியன்ஸ் லீக் டி20 கோப்பைகளை வென்றதோடு, மொத்தம் 9 முறை ஐபிஎல் இறுதிப் போட்டிகளில் பங்கேற்றுள்ளது.


## ஸ்டீவ் ஸ்மித்




- டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிவேகமாக 8000 ரன்களை எட்டிய வீரர் என்ற ஒரு சாதனையை ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் படைத்துள்ளார்.
- இவர் இலங்கையின் சங்ககாராவின் சாதனையை மிஞ்சினார்.
- ஸ்மித் தனது 151வது இன்னிங்ஸிலும் அதே சமயம் சங்ககாரா தனது 152வது இன்னிங்ஸிலும் இந்த மைல்கல்லை எட்டினர்.
- லாகூரில் உள்ள கடாபி மைதானத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு போட்டியில் ஸ்டீவ் ஸ்மித் 7 ரன்களை எட்டிய போது 8000 ரன்களைக் கடந்தார்.

## புதிய உலக டிரிபிள் ஜம்ப் சாதனை

- பெல்கிரேடில் நடந்த டிரிபிள் ஜம்ப் போட்டியில் வெனிசுலாவின் யூலிமர் ரோஜாஸ் 15.74 மீட்டர் தூரம் வரை எட்டினார்.
- பிப்ரவரி 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மாட்ரிட்டில் நடந்த உள்ளரங்கப் போட்டியில் அவர் எட்டிய 15.43 மீட்டர் என்ற தனது முந்தையச் சாதனையை அவரே தற்போது முறியடித்துள்ளார்.




## SAFF U-18 மகளிர் கால்பந்து சாம்பியன்சிப் போட்டி




- 3வது SAFF 18 வயதிற்குட்பட்டவர்களுக்கான மகளிர் கால்பந்து சாம்பியன்சிப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- 18 வயதிற்குட்பட்ட மகளிர் தேசிய அணிக்கான 2022 ஆம் ஆண்டு சர்வதேசக் கால்பந்து போட்டியானது ஜார்க்கண்ட் மாநிலத்தின் ஜாம்செட்பூரிலுள்ள JRD டாடா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.
- இப்போட்டியில் அதிக புகழ்பெற்ற மற்றும் அதிக ஸ்கோர் எடுத்த வீரர் லின்டா கோம் என்பவராவார்.
- இவர் மொத்தம் 5 கோல்களை அடித்தார்.

# முக்கிய தினங்கள்

## பாகுபாடின்மை தினம் – மார்ச் 01




- எந்தவொரு தடையையும் பொருட்படுத்தாமல் கண்ணியத்துடன் ஒரு முழுமையான வாழ்வை வாழ்வதற்காக, சட்டம் மற்றும் கொள்கைகளில் எந்தவொரு பாகுபாடும் இல்லாமல் அனைத்து மக்களுக்கும் சமத்துவ உரிமை, உள்ளடக்கம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்வதை இத்தினமானது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "தீங்கு தரும் சட்டங்களை விலக்கி, அதிகாரமளிக்கும் சட்டங்களை உருவாக்குதல்" என்பதாகும்.

## ஜன் அவுசதி திவாஸ் 2022 – மார்ச் 01 முதல் மார்ச் 07 வரை


- இது 4வது ஜன் அவுசதி திவாஸ் ஆகும்.
- 4வது ஜன் அவுசதி திவாசின் கருத்துரு, "ஜன் அவுசதி-ஜன் உப்யோகி" (Jan Aushadhi-Jan Upyogi) என்பதாகும்.
- 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பிரதான் மந்திரி பாரதிய ஜன் அவுசதி கேந்திர மையங்களின் எண்ணிக்கையை 10,500 ஆக உயர்த்துவதற்கு இந்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.



- பிரதான் மந்திரி பாரதிய ஜன் அவுசதி பரியோஜனா திட்டமானது 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்திய அரசின் வேதிப் பொருட்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டது.
- அனைவருக்கும் மலிவு விலையிலான தரமான மரபியல் மருந்துகளை வழங்கச் செய்வதற்காக இத்திட்டமானது தொடங்கப்பட்டது.

## உலக குடிமைப் பாதுகாப்பு தினம் – மார்ச் 01

- குடிமைப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தினையும், அதற்கான தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்த பணியாளர்களைப் போற்றுவதற்காகவும் வேண்டி இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- குடிமைப் பாதுகாப்பு, குடிமை காவல் மற்றும் அவசர நிலை மேலாண்மை ஆகியவை குறித்துப் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “பேரிடர்கள் மற்றும் நெருக்கடி போன்ற நிலைகளின் காரணமாக இடம் பெயர்த்தப்பட்ட மக்களின் குடிமைப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை, பெருந்தொற்றிற்கு எதிராகப் போராட்டம் மற்றும் தன்னார்வலர்களின் பங்கு” (Civil defence and management of displaced populations in face of disasters and crises; role of volunteers and the fight against pandemics) என்பதாகும்.





## பொதுக் கணக்குகள் தினம் 2022 – மார்ச் 02

- 46வது பொதுக் கணக்குகள் தினமானது புதுடெல்லியின் ஜன்பாத்தில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் 2022 ஆம் ஆண்டு மார்ச் 02 அன்று கொண்டாடப் பட்டது.
- நிதித் துறை மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் ஆவார்.
- இதில் அமைச்சர் மின்னணு ரசீது வழங்கீட்டு அமைப்பு என்ற முக்கிய மின்னாளுகை முன்னெடுப்பினைத் துவக்கி வைத்தார்.
- இது வணிகம் செய்தலை எளிமையாக்குதல் மற்றும் டிஜிட்டல் இந்தியா சூழலமைவின் ஒரு பகுதியாகத் துவங்கப்பட்டது.




## உலக வனவிலங்கு தினம் – மார்ச் 03

- உலகின் வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- பலதரப்பட்ட பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் சார்ந்த தாக்கங்களை ஏற்படுத்தும் வகையில் வனவிலங்குகள் மீது இழைக்கப்படும் குற்றங்கள் மற்றும் மனிதர்களின் செயல்களால் உயிரினங்களின் எண்ணிக்கையில் ஏற்படும் சரிவு ஆகியவற்றிற்கு எதிராகப் போராட வேண்டியதன் ஒரு அவசியத்தை இத்தினம் நமக்கு நினைவூட்டுகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "சூழலமைவின் மறுசீரமைப்பிற்காக முக்கிய உயிரினங்களை மீட்டெடுத்தல்" (Recovering key species for ecosystem restoration) என்பதாகும்.
- இந்தத் தினமானது தாய்லாந்து நாட்டினால் முன்மொழியப் பட்டு, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 2013 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது.




## குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தின் நினைவுச் சின்ன வாரம் 2022 – பிப்ரவரி 28 முதல் மார்ச் 06 வரை

- சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா முன்னெடுப்பின் ஓர் அங்கமாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சகம் தனது நினைவுச் சின்ன வாரத்தினைக் கொண்டாடுகிறது.

- இந்த வாரத்தின் போது, இந்த அமைச்சகமானது சம்பவ் எனப்படும் தேசிய அளவிலான விழிப்புணர்வுத் திட்டத்தின் 2வது கட்டத்தினைத் தொடங்க உள்ளது.




## உலக செவித் திறன் (கேட்டல்) தினம் – மார்ச் 03

- இது உலக சுகாதார அமைப்பின் பார்வையின்மை மற்றும் காது கேளாமைத் தடுப்பு அலுவலகத்தினால் செயல்படுத்தப்படும் ஒரு பிரச்சாரமாகும்.
- காது கேளாமை பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதற்காகவும் இதனைத் தடுத்தல் மற்றும் மேம்படுத்தப் பட்ட காது சிகிச்சைகளை நோக்கிய சில நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்காகவும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "To hear for life, listen with care" என்பதாகும்.




## பணியாளர் மதிப்பேற்ற (பாராட்டு) தினம் – மார்ச் 04

- மார்ச் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையானது பணியாளர் பாராட்டுத் தினமாக அனுசரிக்கப் படுகிறது.
- பணியாளர்களின் கடும் உழைப்பினையும் அவர்களின் விடாமுயற்சியினையும் அங்கீகரிப்பதற்காகவும், அவர்களுக்கு வழங்க வேண்டிய ஒரு அங்கீகாரத்தினை வழங்குவதற்காகவும் இந்தத் தினமானது அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தத் தினமானது முதலாளிகளுக்கும் பணியாளர்களுக்கும் இடையில் ஒரு நேர்மறையான இணைப்பினை உருவாக்குவதற்கும் தனிநபர்களுக்கான ஒரு வளமான மனம் சார்ந்த மற்றும் இடம் சார்ந்த பணியிடத்தினை உறுதி செய்வதற்குமான ஒரு வாய்ப்பாகக் கருதப்படுகிறது.

## உலக உடல்பருமன் தினம் – மார்ச் 04




- உலக உடல்பருமன் நெருக்கடியைச் சமாளிப்பதற்காக வேண்டி நடைமுறை சார்ந்த தீர்வுகளை மேம்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது உலக உடல்பருமன் அறக்கட்டளையினால் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- இது உலக சுகாதார அமைப்புடன் அலுவல் சார்ந்த தொடர்பு கொண்டுள்ள ஓர் இலாப நோக்கமற்ற அமைப்பாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும்" (Everybody Needs to Act) என்தாகும்.

## தேசியப் பாதுகாப்பு தினம் – மார்ச் 04


- இந்திய தேசியப் பாதுகாப்புச் சபை நிறுவப்பட்டதனை நினைவு கூறும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- சாலைப் பாதுகாப்பு, பணியிடப் பாதுகாப்பு, மனித நலன் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து பாதுகாப்புக் கொள்கைகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- 2022 ஆம் ஆண்டில் 51வது தேசியப் பாதுகாப்பு தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "இளம் சிந்தனையாளர்களை மேம்படுத்துதல் – பாதுகாப்புக் கலாச்சாரத்தினை உருவாக்குதல்" என்பதாகும்.
- இத்தினமானது 1972 ஆம் ஆண்டில் முதன்முதலாக அனுசரிக்கப்பட்டது.

## தேசிய காத்தல் தினம் – மார்ச் 04

- இது ராஷ்டிரிய சுரக்சா திவஸ் எனவும் அழைக்கப்படுகிறது.
- நாட்டு மக்களின் பாதுகாப்பு மற்றும் அமைதியைக் காப்பதற்காக வேண்டி தங்களது உயிரையேத் தியாகம் செய்யும் காவலர்கள், துணை இராணுவப் படையினர், கமாண்டோக்கள், மெய்க்காவலர்கள், ராணுவ அதிகாரிகள் மற்றும் காப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இதர நபர்கள் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்புப் படையினருக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இது தவிர 2022 ஆம் ஆண்டின் தேசிய காத்தல் வாரமானது மார்ச் 04 முதல் மார்ச் 10 வரையில் அனுசரிக்கப்படுகிறது.




## ஜன் அவுசதி திவாஸ் - மார்ச் 07




- இத்தினமானது இந்திய மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் வாரியத்தினால் கொண்டாடப் படுகிறது.
- மரபியல் மருந்துகளின் பயன்பாடுகள் மற்றும் ஜன் அவுசதி பரியோஜனாவின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்காக இந்த தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு ,"ஜன் அவுசதி - ஜன் உபயோகி" என்பது ஆகும்.
- முதலாவது ஜன் அவுசதி திவாஸ் ஆனது 2019 ஆம் ஆண்டு மார்ச் 7 அன்று கொண்டாடப் பட்டது.

## சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 08

- இந்த தினமானது பெண்களின் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் சாதனைகளை அங்கீகரிக்கிறது.
- இந்த தினமானது பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுவதோடு, பெண்களின் சமத்துவம் மற்றும் அதிகரிக்கப்பட்ட பாலினச் சமத்துவத்திற்கான பரப்புரைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- 2022 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தின் கருத்துரு, "நிலையான நாளைக்காக இன்றைய பாலினச் சமத்துவம்" (gender equality today for a sustainable tomorrow) என்பது ஆகும்.

- சர்வதேச மகளிர் தினமானது முதன்முதலாக 1911 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.




## புகைப்பிடித்தல் தடை தினம் 2022 – மார்ச் 09




- இந்தத் தினமானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தின் 2வது புதன்கிழமையன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு இத்தினமானது மார்ச் 09 அன்று அனுசரிக்கப்பட்டது.
- புகைப் பிடிப்பதைக் கைவிட நினைக்கும் நபர்களுக்கு உதவுவதற்காகவும், புகைப் பிடிப்பதால் ஒருவரின் ஆரோக்கியத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்த ஒரு விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காகவும் வேண்டி இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது முதன்முதலாக ஐயர்லாந்து நாட்டுக் குடியரசில் 1984 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.

## 53வது மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படை நிறுவன தினம் – மார்ச் 10

- 1968 ஆம் ஆண்டு மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1969 ஆம் ஆண்டு மார்ச் 10 அன்று மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படை உருவாக்கப் பட்டு, 3 படைப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன.
- அதன்பிறகு, இத்தினமானது ஆண்டுதோறும் மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படையின் நிறுவன தினமாக அனுசரிக்கப்படுகிறது.

- இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் 6 துணை இராணுவப் படைப் பிரிவுகளுள் ஒன்றாகும்.




## சர்வதேச பெண் நீதிபதிகள் தினம் – மார்ச் 10





- இது இந்தத் தினத்தின் உலகின் முதலாவது வருடாந்திர அனுசரிப்பாகும்.
- இந்த நாளில்தான், நீதித்துறை மற்றும் நிறுவனங்களின் மேலாண்மை மற்றும் தலைமைத்துவ நிலைகளில் பெண்களின் முன்னேற்றத்தினை மேம்படுத்தும் சில பொருத்தமான மற்றும் பயனுள்ள உத்திகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்கி அதைச் செயல்படுத்துவதற்கான உறுதிப்பாட்டினை ஐக்கிய நாடுகள் மீண்டும் உறுதிப்படுத்தியது.
- இது தொடர்பான பொதுச் சபையின் ஒரு தீர்மானமானது கத்தார் அரசினால் 2021 ஆம் ஆண்டில் தயாரிக்கப் பட்டது.


## உலக சிறுநீரக தினம் – மார்ச் 10

- இத்தினமானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தின் 2வது வியாழக்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டில் இத்தினமானது மார்ச் 10 அன்று அனுசரிக்கப் பட்டது.

- இத்தினமானது நமது சிறுநீரகத்தின் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட ஒரு உலகளாவியப் பிரச்சாரமாகும்.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, “Kidney Health for All” என்பதாகும்.




## இணையத் தணிக்கைக்கு எதிரான உலக தினம் - மார்ச் 12




- இணைய தளத்தில் சுதந்திரமானப் பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டின் ஒரு முக்கியத்துவத்தை எடுத்துரைக்க ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் இணையத்தில் பேச்சுச் சுதந்திரத்தை எவ்வாறு முடக்குகின்றன என்பதையும் இந்த நாள் எடுத்துக் காட்டுகிறது.
- இணைய தளத் தணிக்கைக்கு எதிரான உலக தினம் இணைய தளத்தில் கருத்துச் சுதந்திரத்திற்கான சர்வதேச தினம் என்றும் அழைக்கப்படுகிறது.

## உலக ரோட்ராக்ட் தினம் - மார்ச் 13

- உலகம் முழுவதும் உள்ள ரோட்டரி குழுவினர் வழங்கும் சேவைகளை அங்கீகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "ரோட்டராக்ட்" என்பது "ரோட்டரி இன் ஆக்சன்" (ரோட்டரிச் சேவை) என்ற கருத்தைக் குறிக்கிறது.
- ரோட்டரி சங்கம் என்பது இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான ஒரு சமூக சேவை அமைப்பு ஆகும்.
- ரோட்டராக்ட் 1968 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் வடக்கு கரோலினாவில் ரோட்டரி சர்வதேச இளைஞர் திட்டமாகத் தொடங்கப்பட்டது.
- முதல் ரோட்ராக்ட் சங்கமானது 1968 ஆம் ஆண்டு மார்ச் 13 அன்று நிறுவப்பட்டது.

## சர்வதேச கணித தினம் – மார்ச் 14

- π எனும் கணித மாறிலியின் மதிப்பை 3.14 எனக் குறிப்பிடலாம் என்பதால் இத்தினம் π (பை) தினம் எனவும் அழைக்கப்படுகிறது.
- அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் கணிதத்தின் இன்றியமையாத பங்கினைப் பற்றி மக்களுக்குக் கற்பித்தல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரம் அளித்தல் மற்றும் நிலையான மேம்பாட்டிற்குப் பங்களித்தல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினத்திற்கான கருத்துரு, "கணிதம் ஒன்றிணைக்கிறது" (Mathematics Unites!) என்பது ஆகும்.





## நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினம் – மார்ச் 14

- நமது வாழ்வில் நதிகளின் முக்கியத்துவம் குறித்து இத்தினம் எடுத்துரைக்கிறது.
- மேலும் தூய்மையான மற்றும் பாய்ந்து ஓடும் நதிநீரை அனைவரும் சமமான முறையில் பெறுவது குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.
- இது 25வது நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினமாகும்.
- இந்த ஆண்டில் இந்தத் தினமானது "உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கத்தில் நதிகளின் முக்கியத்துவத்தினை" கொண்டாடுவதன் மூலம் அனுசரிக்கப் படுகிறது.





## உலக குளுக்கோமா தினம் - மார்ச் 12

- இது குளுக்கோமா (கண் அழுத்த நோய்) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், முடிந்த வரை சீக்கிரம் குளுக்கோமா பாதிப்பினைக் கண்டறிவதற்காக வழக்கமான கண் (மற்றும் பார்வை நரம்பு) பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அனைவரையும் எச்சரிப்பதற்குமான ஒரு தினமாகும்.
- மீளமுடியாத குருட்டுத் தன்மைக்கான முக்கியக் காரணங்களில் ஒன்று குளுக்கோமா ஆகும்.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் 6 முதல் 12 வரை உலக குளுக்கோமா வாரம் அனுசரிக்கப் பட்டது.




## தேசியக் குற்ற ஆவணப்பதிவு வாரியத்தின் நிறுவன தினம் - மார்ச் 12

- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, தேசியக் குற்ற ஆவணப்பதிவு வாரியத்தின் 37வது நிறுவனத் தினம் (எழுச்சித் தினம்) கொண்டாட்டத்தில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.
- தேசியக் குற்ற ஆவணப்பதிவு வாரியத்தின் நிறுவன தின விழாவில் கலந்து கொள்ளும் முதல் மத்திய உள்துறை அமைச்சர் இவரே ஆவார்.
- தாண்டன் குழு, தேசியக் காவல் ஆணையம் (1977-1981) மற்றும் உள்துறை அமைச்சகத்தின் பணிக்குழு (1985) ஆகியவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1986 ஆம் ஆண்டில் தேசியக் குற்ற ஆவணப் பதிவு வாரியம் நிறுவப்பட்டது.




## உலக நுகர்வோர் உரிமைகள் தினம் - மார்ச் 15

- அனைத்து நுகர்வோரின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு அவை பாதுகாக்கப் பட வேண்டும் என்று வலியுறுத்தச் செய்வதற்கும், சந்தையில் மேற்கொள்ளப் படும் துஷ்பிரயோகங்கள் மற்றும் நுகர்வோர் உரிமைகளைப் பாதிக்கக்கூடிய பல சமூக அநீதிகளுக்கு எதிராகப் போரிடச் செய்வதற்கும் வேண்டி இந்த தினம் ஒரு வாய்ப்பாகக் கருதப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நியாயமான எண்ணிம நிதி வழங்கீடு" என்பதாகும்.




## நிலையான மேம்பாட்டிற்கான உலகப் பொறியியல் தினம் - மார்ச் 04

- நமது நவீன உலகில் பொறியாளர்கள் மற்றும் பொறியியலின் சாதனைகளை முன்னிலைப் படுத்துவதற்கு இத்தினமானது ஒரு வாய்ப்பை வழங்குகிறது.
- நவீன வாழ்க்கை மற்றும் நிலையான மேம்பாடு ஆகியவற்றில் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை எந்த அளவிற்கு ஒரு முக்கியத்துவத்தினைக் கொண்டு உள்ளன என்பதைப் பற்றிய ஒரு புரிதலைப் பொது மக்களிடையே மேம்படுத்தச் செய்வதையும் இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## உலகத் தொடர்பு தினம் - மார்ச் 15

- இது வேற்றுக் கிரக உயிரினங்களைத் தொடர்பு கொள்ளும் ஒரு முயற்சியில் ஈடுபட்டு உள்ள வேற்றுக் கிரக உயிரின ஆர்வலர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் தினம் ஆகும்.
- இது சர்வதேசப் பறக்கும் தட்டு பணியகத்தினால் (I.F.S.B. - International Flying Saucer Bureau) 1952 ஆம் ஆண்டில் ஆல்பர்ட் K. பெண்டர் என்பவரால் தொடங்கப்பட்டது.

## தேசியத் தடுப்பூசி தினம் - மார்ச் 16

- தடுப்பூசியின் முக்கியத்துவத்தை ஒட்டு மொத்த தேசத்திற்கும் உணர்த்துவதற்காக இந்தத் தினமானது கடைபிடிக்கப்படுகிறது.

- இது தேசிய நோய்த் தடுப்பு தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது 1995 ஆம் ஆண்டில் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- 1995 ஆம் ஆண்டில் தான் இந்தியா போலியோ சொட்டு மருந்து என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி, வாய்வழியிலான போலியோ தடுப்பு மருந்தின் முதல் தவணையினை வழங்கியது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, " Vaccines Work for all" என்பதாகும்.

## இஸ்லாமோஃபோபியாவை எதிர்ப்பதற்கான சர்வதேச தினம் - மார்ச் 15

- 2022 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 15 ஆம் தேதியினை இஸ்லாமோ ஃபோபியாவை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு சர்வதேச தினமாக அறிவிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை ஒப்புதல் அளித்தது.
- இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் (OIC - Organisation of Islamic Cooperation) சார்பில் பாகிஸ்தான் தூதர் முனீர் அக்ரம் இந்தத் தீர்மானத்தை அறிமுகப்படுத்தினார்.
- நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச் எனுமிடத்தில் உள்ள இரண்டு மசூதிகளுக்குள் துப்பாக்கி ஏந்திய ஒருவர் நுழைந்து, 51 வழிபாட்டாளர்களைக் கொன்று, 40 பேரைக் காயப் படுத்திய பயங்கரவாதத் தாக்குதல் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டின் தினத்தினை இது குறிக்கிறது.

## உலக உறக்க தினம் 2022 – மார்ச் 18




- இத்தினமானது மார்ச் மாத சம இரவு பகல் நாளிற்கு முந்தைய வெள்ளிக்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- சரியான உறக்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதே இத்தினத்தின் நோக்கம் ஆகும்.
- இந்த ஆண்டில் இத்தினமானது மார்ச் 18 அன்று அனுசரிக்கப்பட்டது.
- இத்தினமானது உலக உறக்கச் சமூகத்தின் உலக உறக்க தினக் குழுவினால் ஏற்பாடு செய்யப் படுகிறது.
- “சரியான உறக்கம், நல்ல மனம், மகிழ்வான உலகம்” (Quality Sleep, Sound Mind, Happy World) என்பதே இந்த ஆண்டிற்கான கருத்துருவாகும்.

## உலக மறுசுழற்சி தினம் – மார்ச் 18




- நமது கோளின் எதிர்காலத்தினைப் பாதுகாக்கச் செய்வதில் மறுசுழற்சியின் மீதான முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு அதனைக் கொண்டாடுவதற்காக வேண்டி இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கவனம் "Recycling Fraternity" என்பதன் மீதானதாக இருக்கும்.

## ஆயுதத் தொழிற்சாலைகள் தினம் – மார்ச் 18




- இந்தியாவின் மிகப் பழமையான ஆயுதத் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கை 1802 ஆம் ஆண்டு மார்ச் 18 அன்று தொடங்கியது.
- இது கொல்கத்தாவின் காசிப்பூர் என்னுமிடத்தில் அமைந்து இருக்கின்றது.
- ஆயுதத் தொழிற்சாலை வாரியம் என்பது இந்தியப் பாதுகாப்புத் துறையின் 4வது பிரிவு மற்றும் ஆயுதப் படையின் பக்கபலம் என்பதாகும்.
- இந்திய ஆயுதத் தொழிற்சாலைகளானது இந்தியத் தரைப் படை, இந்தியக் கடற்படை மற்றும் இந்திய விமானப்படை போன்ற அனைத்து இந்திய ஆயுதப் படைகளுக்கும் ஆயுதங்களை விநியோகம் செய்கிறது.

## சர்வதேச மகிழ்ச்சி தினம் - மார்ச் 20

- ஐக்கிய நாடுகள் சபையானது இந்தத் தினத்தை 2013 ஆம் ஆண்டில் கொண்டாடத் தொடங்கியது.

- தேசிய மகிழ்ச்சியின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துரைக்கும் ஒரு தீர்மானமானது பூடான் நாட்டினால் தொடங்கப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டிற்கான மகிழ்ச்சி தினத்தின் கருத்துருவானது, 'அமைதியாக இருத்தல், புத்திசாலித்தனமாக செயல்படுதல் மற்றும் அன்பாக இருத்தல்' (Keep Calm, Stay Wise and Be Kind) என்பதாகும்.





## உலக சிட்டுக்குருவி தினம் - மார்ச் 20




- இந்த தினமானது சிட்டுக்குருவி பற்றியும், அது எதிர்கொள்ளும் ஆபத்துகள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு தினமாகும்.
- 2022 ஆம் ஆண்டிற்கான உலக சிட்டுக்குருவி தினத்தின் கருத்துரு, "குருவிகளை நேசியுங்கள்" என்பதாகும்.
- தி நேச்சர் ஃபாரெவர் சொசைட்டி என்ற அமைப்பின் நிறுவனர் முகமது திலாவர் என்பவரால் உலக சிட்டுக்குருவி தினமானது நிறுவப்பட்டது.

## உலக வாய் சுகாதார தினம் - மார்ச் 20

- ஆரோக்கியமான வாயின் நன்மைகள் பற்றியத் தகவலைப் பரப்புவதற்கும், வாய்வழி ஆரோக்கியம் தொடர்பான பிரச்சனைகள் குறித்து உலகளவில் ஒரு விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Be Proud of Your Mouth" என்பது ஆகும்.




## ஐ.நா. பிரெஞ்சு மொழி தினம் - மார்ச் 20

- இந்தத் தினமானது 2010 ஆம் ஆண்டில் ஐ.நா. அமைப்பின் பொதுத் தகவல் துறையால் நிறுவப் பட்டது.
- பன்மொழித்துவம் மற்றும் கலாச்சார பன்முகத் தன்மையைக் கொண்டாடச் செய்வதற்காகவும், ஐ.நா. அமைப்பு முழுவதும் ஆறு அதிகாரப்பூர்வ மொழிகளையும் சமமான முறையில் பயன்படுத்துவதை ஊக்குவிக்கச் செய்வதற்காகவும் வேண்டி இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- சர்வதேச லா ஃபிராங்கோஃபோனி என்ற அமைப்பின் 40வது ஆண்டு நிறைவை ஒட்டி வருவதால், பிரெஞ்சு மொழிக்கான ஒரு தேதியாக மார்ச் 20 ஆம் தேதியானது தேர்ந்து எடுக்கப் பட்டது.

## சர்வதேச இளம்பருவத்தினர் ஆரோக்கிய வாரம் - மார்ச் 20 முதல் 26 வரை


iAHW INTERNATIONAL ADOLESCENT HEALTH WEEK

- இது சுகாதாரப் பாதுகாப்பு வழங்கும் அமைப்புகள், கொள்கை வகுப்பாளர்கள், நிர்வாகிகள், ஊடகங்கள் மற்றும் இளம் பருவத்தினர் மற்றும் அவர்களது சமூகங்கள், இளமைப் பருவத்தினை எய்துவதற்கான ஒரு வெற்றிகரமான மாற்றத்திற்கு ஆதரவு அளிப்பதை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படும் சர்வதேச வாரமாகும்.
- இந்த ஆண்டுக்கான இத்தினத்தின் கருத்துரு, மாற்றம் (Transition) என்பதாகும்.

## மத்திய சேமக் காவல் படையின் 83வது எழுச்சி தினம் - மார்ச் 19

- ஜம்மு நகரில் உள்ள மௌலானா ஆசாத் மைதானத்தில் 83வது எழுச்சி தின அணிவகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- மத்திய சேமக் காவல் படை தனது எழுச்சி தினத்தை இந்தியாவின் தேசியத் தலைநகருக்குப் பதிலாக வேறு ஒரு நகரில் கொண்டாடியது இதுவே முதல் முறை ஆகும்.

- மத்திய சேமக் காவல் படை ஆனது 1939 ஆம் ஆண்டு ஜூலை 27 அன்று ஒரு அரசப் பிரதிநிதியின் காவல்துறைப் பிரிவாக நடைமுறைக்கு வந்தது.
- 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 28 அன்று மத்திய சேமக் காவல் படைச் சட்டம் அமலுக்கு வந்தவுடன் மத்திய சேமக் காவல் படை என்று பெயர் மாற்றப்பட்டது.





## சர்வதேச இனப் பாகுபாடு ஒழிப்பு தினம் - மார்ச் 21




- இனப் பாகுபாட்டிற்கு எதிரான அதன் எதிர்மறையான விளைவுகளைப் பற்றி மக்களுக்கு நினைவூட்டுவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான சர்வதேச தினத்தின் கருத்துரு, "இனவெறிக்கு எதிரான நடவடிக்கைக்காக குரல் கொடுங்கள்" என்பதாகும்.
- சர்வதேச இனப் பாகுபாடு ஒழிப்பு தினம் ஆண்டுதோறும் மார்ச் 21 அன்று அனுசரிக்கப் படுகிறது.
- 1960 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவின் ஷார்ப்வில்லி நகரில் நடைபெற்ற, நிறவெறி "அனுமதிச் சட்டங்களுக்கு" (pass laws) எதிராக அமைதியான முறையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தி 69 பேரைக் கொன்ற நாளினை நினைவு கூறும் வகையில் இது அனுசரிக்கப்படுகிறது.

## சர்வதேசக் காடுகள் தினம் - மார்ச் 21

- பல்வேறு வகையான காடுகளின் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2012 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது மார்ச் 21 ஆம் தேதியை சர்வதேச காடுகள் தினமாக அறிவித்தது.
- காடுகளின் மதிப்பை உணரவும் பாதுகாக்கவும் மற்றும் உயிரினங்களின் வாழ்வில் காடுகளின் முக்கியத்துவத்தைப் பற்றி மக்களுக்கு நினைவூட்டவும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "காடுகள் மற்றும் நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வு " என்பதாகும்.




## உலகப் பொம்மலாட்ட தினம் - மார்ச் 21

- பொம்மலாட்டத்தை உலகளாவிய அளவில் ஒரு கலை வடிவமாக அங்கீகரிப்பதே இந்த தினம் அனுசரிக்கப்படுவதன் ஒரு நோக்கமாகும்.
- இது உலகெங்கிலும் உள்ள பொம்மலாட்டக் கலை வல்லுநர்களுக்கு கௌரவம் செலுத்துவதற்கும் மரியாதை செய்வதற்குமான ஒரு முயற்சியாகும்.
- உலகப் பொம்மலாட்ட தினம் 2003 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## உலக மனநலிவு நோய் தினம் - மார்ச் 21




- இது 2012 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் அதிகாரப்பூர்வமாக கடைபிடிக்கப்படும் ஒரு உலகளாவிய விழிப்புணர்வுத் தினமாகும்.

- மனநலிவு நோய் என்பது ஒரு நபரின் மரபணுவில் கூடுதலாக ஒரு குரோமோசோம் இருக்கும் நிலை என்று நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் கூறுகிறது.
- இந்த ஆண்டு, உலக மனநலிவு நோய் தினத்தின் கருத்துரு, "உள்ளடக்க வழிமுறைகள்" (Inclusion Means) என்பதாகும்.

## உலக தண்ணீர் தினம் – மார்ச் 22

- நன்னீரின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதே இத்தினத்தின் முக்கிய நோக்கமாகும்.
- இது நன்னீர் (freshwater) வளங்களின் ஒரு நிலையான மேலாண்மைக்கு ஆதரவு அளிப்பதற்காக அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Groundwater, making the Invisible Visible" என்பதாகும்.

## பீகார் திவாஸ் - மார்ச் 22




- பீகார் மாநில மக்கள், அம்மாநிலம் உருவாக்கப்பட்ட தினத்தினை பீகார் திவாஸ் ஆக கொண்டாடுகின்றனர்.
- பீகார், 1912 ஆம் ஆண்டில் வங்காளத்திலிருந்துப் பிரிட்டிஷ் அரசினால் பிரிக்கப் பட்டது.
- இந்த ஆண்டு பீகார் தனது 110வது பீகார் திவாசினைக் கொண்டாடுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஜல் ஜீவன், ஹரியாலி" என்பதாகும்.

## உலக கவிதை தினம் – மார்ச் 21

- மனித உள்ளத்தின் படைப்பாக்க உணர்வை உள்ளீர்க்கும் கவிதையின் தனித்துவமான ஒரு திறனை அங்கீகரிப்பதற்காக வேண்டி ஒவ்வோர் ஆண்டும் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- 1999 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் நடைபெற்ற யுனெஸ்கோ அமைப்பின் 30வது கூட்டத்தில் யுனெஸ்கோ அமைப்பினால் இத்தினம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## உலக வானிலை தினம் – மார்ச் 23




- இந்தத் தினமானது உலக வானிலை அமைப்பின் நிறுவன தினமாகக் கொண்டாடப் படுகிறது.
- இது புவியின் வளிமண்டலத்தினுடையச் செயல்பாடுகள் குறித்த ஈடுபாடுகளைச் செலுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "முன்னெச்சரிக்கை மற்றும் முன்கூட்டிய நடவடிக்கை" என்பதாகும்.
- இத்தினமானது, 1950 ஆம் ஆண்டு மார்ச் 23 அன்று நிறுவப்பட்ட உலக வானிலை அமைப்பின் நிறுவன தினமாக அனுசரிக்கப்படுகிறது.

## தியாகிகள் தினம் – மார்ச் 23

- ஒவ்வொர் ஆண்டும் இந்திய நாடு தியாகிகள் தினம் (அ) சாஹீத் திவாஸ் (அ) சர்வோதயா தினத்தினை அனுசரிக்கிறது.
- இந்திய விடுதலைக்காக வேண்டி தங்களது உயிர்களைத் தியாகம் செய்த பகத்சிங், சுக்தேவ் தாபேர் மற்றும் சிவராம் ராஜ்குரு ஆகிய விடுதலைப் பேராளிகளின் நினைவு நாளினை அனுசரிக்கும் விதமாக இத்தினமானது கடைப்பிடிக்கப்படுகிறது.
- மேலும், ஜனவரி 30 ஆம் தேதியானது மகாத்மா காந்தி அவர்களின் நினைவாக வேண்டி அதுவும் தியாகிகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.



## பாகிஸ்தான் தினம் – மார்ச் 23




- 1940 ஆம் ஆண்டில் லாகூரில் முஸ்லிம் லீக் கட்சியால் பாகிஸ்தான் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப் பட்டதை நினைவு கூறும் விதமாக இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- இது உலக அரசியலில் மிகவும் சக்தி வாய்ந்த அரசியல் இயக்கங்களுள் ஒன்றாக கருதப் படுகிறது.

## உலக காசநோய் தினம் – மார்ச் 24

- உலகளாவிய காசநோய்ப் பெருந்தொற்று பற்றியும், இந்த நோயை ஒழிப்பதற்கான முயற்சிகள் பற்றியும் பொது மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது, 1882 ஆம் ஆண்டில் டாக்டர் ராபர்ட் கோச் அவர்கள், காசநோயை உருவாக்கும் ஒரு பாக்டீரியத்தைக் கண்டறிந்ததாக அறிவிக்கப்பட்ட தினத்தினைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Invest to End TB Save Lives" என்பதாகும்.




## சர்வதேச உண்மைக்கான உரிமை தினம் – மார்ச் 24

- ஒட்டு மொத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் பாதிக்கப் பட்டவர்களின் மரியாதை தொடர்பான உண்மைகளை அறிந்து கொள்வதற்கான உரிமைக்கான சர்வதேச தினமாக ஒவ்வோர் ஆண்டும் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

- அனைவருக்குமான மனித உரிமைகைளை மேம்படுத்துவதற்காகவும் பாதுகாக்கச் செய்வதற்காகவுமான போராட்டங்களில் தங்களது வாழ்வையே அர்ப்பணித்த நபர்களுக்கு மரியாதை செலுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- 1980 ஆம் ஆண்டு மார்ச் 24 அன்று படுகொலை செய்யப்பட்ட மான்சிங்னோர் ஆஸ்கார் அர்னுல்ஃபோ ரோமெரோ (Monsignor Oscar Arnulfo Romero) அவர்களுக்கு மரியாதை செய்யும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 24 அன்று இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- எல் சல்வெடார் நகரில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருந்த நபர்களின் மீதான மனித உரிமை மீறல்களைக் கண்டித்து விமர்சிப்பதில் இவர் தீவிரமாக ஈடுபட்டார்.

## கருவில் உள்ள குழந்தைக்கான சர்வதேச தினம் - மார்ச் 25

- கருவில் உள்ள குழந்தைக்கான சர்வதேச தினம் என்பது கருக்கலைப்புக்கு எதிரான ஒரு நாளாகக் கடைப்பிடிக்கப் படுகின்ற, பிறக்காத கருக்களின் வருடாந்திர நினைவு நாள் ஆகும்.
- இது போப் இரண்டாம் ஜான் பால் அவர்களால் நிறுவப்பட்டது.
- 1993 ஆம் ஆண்டில், பிறப்புரிமைத் தினத்தினை அதிகாரப் பூர்வமாக கொண்டாடிய ஒரு முதல் நாடு ஆக எல் சால்வடார் மாறியது.

## அடிமைத்தனம் மற்றும் அட்லாண்டிக் நாடுகளுக்கிடையிலான அடிமை வர்த்தகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு தினம் - மார்ச் 25

- இனவெறி மற்றும் பாரபட்சம் ஆகியவற்றின் ஆபத்துகள் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு : "தைரியத்தின் கதைகள்: அடிமைத் தனத்தினை எதிர்த்தல் மற்றும் இனவெறிக்கு எதிராக ஒன்றுபடுதல்" என்பதாகும்.




## புவி நேரம் 2022 - மார்ச் 26

- ஒவ்வோர் ஆண்டின் மார்ச் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று உலகம் முழுவதும் புவி நேரம் கொண்டாடப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான புவி நேரமானது மார்ச் 26 அன்று அனுசரிக்கப்பட்டது.
- இது பருவநிலை மாற்றத்திற்கு எதிரானப் போராட்டத்திற்கான ஆதரவையும், சிறந்த ஒரு கோளாக புவியை மாற்றுவது நோக்கிய ஒரு அர்ப்பணிப்பையும் காட்டுவதற்கான ஒரு முயற்சியாகும்.

- இரவு 8:30 முதல் 9:30 மணி வரை, ஒரு மணி நேரத்திற்கு அத்தியாவசியமற்ற மின் விளக்குகளை அணைக்குமாறு, தனி நபர்கள், சமூகங்கள் மற்றும் வணிகங்களை இந்த நிகழ்வு ஊக்குவிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Invest In Our Planet' என்பதாகும்.




## உலக நாடக தினம் - மார்ச் 27

- இது சர்வதேச நாடக நிறுவனத்தால் ஊக்குவிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கொண்டாட்டமானது இளைஞர்கள், அடுத்தத் தலைமுறை மற்றும் வளர்ந்து வரும் கலைஞர்களை மையமாகக் கொண்டதாகும்.

## உலக இட்லி தினம் – மார்ச் 30

- சென்னையைச் சேர்ந்த பிரபல இட்லித் தயாரிப்பாளரான இனியவன் என்பவர் இந்தத் தினத்தினைத் தொடங்கினார்.
- இது 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இட்லி, இந்தியாவின் ஒரு முக்கிய உணவாக இருந்தாலும், சில வரலாற்றாசிரியர்கள் அது இந்தோனேசியாவில் உருவாகியதாகக் கூறுகின்றனர்.
- இந்த நாடானது புளித்த உணவு வகைப் பாரம்பரியத்திற்குப் புகழ் பெற்றது.
- இந்தப் பாரம்பரியமானது கி.பி. 800–1200 என்ற காலத்தில் ஓர் அவிக்கப்பட்ட இட்லியாக இந்தியா வந்தது.
- இட்லி என்ற சொல், உளுந்து மாவிலிருந்து உருவாக்கப்பட்ட உணவான "இட்டாலிகே" என்ற ஒரு சொல்லிலிருந்து வந்ததாகக் கூறுகின்றனர்.
- இது கி.பி. 1130 ஆம் ஆண்டைச் சேர்ந்த சமஸ்கிருத மனசோலசா (Manasollasa) என்ற நூலில் உளுந்துப் பருப்பிலிருந்து தயாரிக்கப்பட்ட உணவான "இட்டாரிகா" என்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
- 17 ஆம் நூற்றாண்டில், தமிழ் மக்கள் முதலில் இந்த உணவை "இட்லி" என்று குறிப்பிடச் செய்தனர்.

## திருநங்கையரைக் காணும் நிலையைக் கொண்ட சர்வதேச தினம் – மார்ச் 31

- இத்தினமானது திருநங்கையரைக் கொண்டாடுவதற்கும், அவர்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகள் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், சமூகத்திற்கு அவர்கள் ஆற்றியப் பங்களிப்பினைக் கொண்டாடுவதற்குமான ஒரு தினமாகும்.
- இந்தத் தினமானது 2009 ஆம் ஆண்டில் மிச்சிகனைச் சேர்ந்த அமெரிக்கத் திருநங்கை ஆர்வலரான ரேச்சல் கிராண்டல் என்பவரால் நிறுவப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★